உ

கடவுள் துணை

# கதாசிந்தாமணி.

சோழமண்டலத்தில் சோழமஹாராஜா நாளிலே மனு
நீதிதவராத நியாயாதிபதியாயிருந்த வைசியனென்கிற
சோழிய வெள்ளாளனாகிய மரியாதைராம வுடையானெ
ன்பவன் தீர்த்த தீர்ப்புக்கதைகளும், தொண்டமண்டல
த்தில் இராயவேலூரிலே வைசியனென்கிற துளுவவே
ளாளராயர்களில் கிருஷ்ணமஹாதேவராயர்களிலேமந்
திரியாக யிருந்த நியோகிப்பார்ப்பான் (அப்பாஜியின்)
யுக்திகதைகளும்; அக்காலத்திற்றானே விகடகவியாயிரு
ந்த நியோகிப்பார்ப்பான் தென்னாலிராமலிங்கையன்
ஆசியகதைகளும், கோமுட்டி உபாயக்கதைகளும், நா
னாவிதமாகியவேடிக்கைக்கதைகளும், ஒருகதையின் சா
ரமெல்லாம் ஒருவாக்கியத்திற் கட்டுப்பட்டிருக்கிறசுட்டு
வாக்கியக்கதைகளும், மூடர்களின் புத்திவிபரீதக்கதை
களும், யுக்திவார்த்தைகளும், தந்திரங்களும், மலைவுவா
க்கியங்களும், விடுகதைகளும் இன்னும் பலபுத்தகங்
களிலுமுள்ள வேடிக்கைக்கதைகளையும்,

இஃது.

செந்தமிழ்ப்புதுவை

**இராஜகோபாலமுதலியாரால்**

பார்வையிடப்பட்டு,

திருஅல்லிக்கேணியில்

கோயமுத்தூர்

ஸாவுகார்

**புவானிலால்** 1915

அவர்களது

வித்வரத்நாமிர்த அச்சுக்கூடத்தில்

பசுவசமுத்திரம் - சிற்றம்பலநாயகரால்

அச்சுசேர்த்து

பதிப்பிக்கப்பட்டது.

இராக்ஷச ௵ - கார்த்திகைமீ

உ

ஸ்ரீராமஜெயம்.

# விளம்பரம்.

இதனால் சகலமானபிரஜைகட்கும் தெரிவிப்பதியாதெனின், திருஅல்லிக்கேணியில் புலிப்போன் கடைத்தெருவு டாணாவுக்கடுத்த வெண்சர்வீதியில்-டோர்நெம்பர் ௬அ-வதுடைய வீட்டில்-[illegible]வாகஷாமிர்த அச்சுக்கூடத்தில் பதிப்பித்துக்கொண்டுவருந்தமிழ்ப்புத்தகங்கள் வேண்டியிருக்கின்றவர்களுக்கு விலைசரசமாய் விற்கப்படுமாகையால் தேவையானவர்கள் விலைகொடுத்துவாங்கிக்கொள்ளலாம். இஃதன்றியில் - தமிழ் முதற்கொண்டு தெலுங்குபாஷையிலும். இங்கிலீஷ்பாஷையிலும்ஜனங்களுக்கு உபயோகப்படும் புத்தகங்கள்பதிப்பிக்கப்படும் தேவையானவர்கள்விலைகொடுத்துவாங்கிக் கொள்ளலாம்.

உ

கடவுள் துணை.

# கதாசிந்தாமணி.

## முதலாமத்தியாயம்

## மரியாதைராமன்கதைகள்.

### முதலாவது - திருடர்கள் நால்வருள் ஒருவன்மற்றவரை மோசஞ்செய்தது.

நான்குபேர்திருடர்ஒருபட்டணத்தில் ஒரு கிழவியின்வீட்டிலே இறங்கித்தாங்கள் திருடிப்பொதுவில்வைத்திருந்த உடைமைகளையும்பணங்களையும்ஒருதவலையிலேபோட்டு மேலேமுத்திரையிட்டுநாங்கள்நாலுபேருமாகவந்துகேட்கும்போதுஇதைக்கொடுஅதுவரைக்கும் பத்திரமாகப்புதைத்துவையென்றுகொடுத்துச்சிலநாள்அவள்வீட்டிலே சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள், ஒருநாள் அந்தநாலுபேரும்-எதிர்வீட்டுத்திண்ணையில்பேசிக்கொண்டிருக்கையில்மோர்வாங்குதற்கு அந்தக்கிழவி வீட்டிலேபோய்த்தோண்டியெடுத்துக்கொண்டுவாவென்று தங்களுள் ஒருவனை அனுப்பினார்கள் அவன்போய்த்தோண்டியெடுத்துக் கொண்டு வரச்சொன்னார்களென்றுசொன்னான்அதற்குஅவள்புதைத்துவைத்திருக்கிறதவலையைத்தோண்டியெடுத்துவரச் சொன்னதாகநினைத்துக்கொண்டு தெருவில்வந்து அவனைத்தோண்டியெடுத்துவரச் சொன்னீராவென்று கேட்டுஅவர் ஆமென்றுசொல்லுதலால் உள்ளேபோய்க் கட்டப்பாறையைக்கொடுத்துச்சுகமாகத் தோண்டி எடுத்துக்கொண்டுபோவென்று சொன்னாள் அவன்அதிகசந்தோஷத்துடனே சீக்கிரத்திலேதோண்டித் தவலையை எடுத்துக்கொண்டு புறக்கடைவழியாலே ஓட்டம்பிடித்தான் மற்றமூன்றுபேரும்ஒருநாழிகைவரைக்கும்பார்த்து அவனைக்காணாமையாலேஉள்ளேபோய்நடந்தமோசத்தைஅறிந்துகிழவியின்மேலேசோழராஜனிடத்திலிருந்தநியாயாதிபதியினிடத்தேபிரியாதுசெய்தார், அவன்கிழவியைஅழைப்பித்துவிசாரணைசெய்து அவ்வுடைமையைக் கிழவி கொடுக்கும்படியாகத்தீர்ப்புசெய்தான்- அந்தக்கிழவி நான்என்னசெய்வேன்தெய்வமேயென்று அழுதுகொண்டேவருகையில் நடுவழியிலே சிறுபிள்ளைகளுடன்கெச்சக்காய் ஆடிக்கொண்டிருந்தமிகுந்தபுத்திசாலியாள ராமன் என்பாட்டிஅழுகிறாயென்றான் அதற்குஅவள்நடந்தசங்கதியையெல்லாஞ்சொன்னாள், அதைக்கேட்டுஇந்த அநியாயத்தீர்ப்பைச்செய்தவன்வாயிலேமண்விழுவதுபோலேஇதுகள்குழியிலேவிழக்கடவதுகளென்று தன்கையிலிருந்த கெச்சக்காய்களைவிட்டெறிந்தான் -

அதைக்கேட்டுக்கொண்டிருந்தசிலர்போய் அரசனுடனே சொல்ல அரச
னவன் அந்தராமனை அழைப்பித்து நியாயாதிபதிசெய்ததீர்ப்பை அநி
யாயதீர்ப்பென்று சொல்லினமையே நீநியாயமாகத் தீர்ப்புசெய்யென்று
சொன்னான் உடனே அந்தராமன் உடைமைக்காரனையுங்கிழவியையும் அ
ழைப்பித்துவிசாரணைசெய்து உடைமைக்காரனைப்பார்த்து உங்கள்வாக்
குமூலப்படியே நீங்கள்மூன்றுபேர்மாத்திரங்கேட்டால்கொடுக்கக்கூ
டாது நாலுபேருஞ்சேர்ந்துகேட்டால் அப்போது உங்கள்பொருளைக்கொ
டுப்பாளென்று கிழவிபட்சம் தீர்ப்புசெய்தான்- (பொருள்போனவழி
யே துக்கம்போமென்கிறபடியே) கிழவிக்குண்டாகிய துக்கம்போய்
விட்டது அதுகேட்டு இராஜா சந்தோஷித்து அவனுக்கு மரியாதைராமன்
என்றுபெயரிட்டு நியாயாதிபதியாக ஏற்படுத்திச் சகலவெகுமானமுஞ்
செய்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டான்.

௨ - வது - தன்குழந்தையைக்கொன்றுவிட்டு
சக்களத்தியின்மேலே பழிபோட்டது.

தன்குமாரனுக்கு மரியாதைராமனென்கிறபெயரும் நியாயாதிப
தி உத்தியோகமுங்கிடைத்தசமாச்சாரத்தை அவன்தகப்பன்கேள்விப்ப
ட்டு அவனிடத்திற்குவந்து ஓகோபிள்ளாய் என்னகாரியஞ்செய்தாய் இப்
படி மகிமோசம்போகலாமா நியாயசூட்சம்அறிகிறது தேவர்களுக்கும் எ
ளிதல்லவே சற்றேபிசகினால் அதிகபாவம்விளையுமே நீஇந்தநியாயாதிப
த்தியத்தைவிட்டுவிடென்று சொன்னான் அதைக்கேட்டுமரியாதைராமன்
ஓஎன்பிதாவே கோபஞ்செய்யவேண்டாம் கடவுளானவர் எப்படிப்பட்
டநியாயசூட்சமத்தையுங்கண்டுபிடிக்கத்தக்கபுத்தியையுங்கொடுத்து அதி
லேஎவ்வளவுங்குற்றம்வராமல்என்னைக்காப்பாற்றுவார். - (தானாகவந்த
சீதேவியைக்காலாலுதைத்துத்தள்ளுவதுபோல) உலகத்தையெல்லாம்
ஆளும் அரசனாலேகிடைத்த இந்தநியாயாதிபதித்தனத்தைவிட்டுவிடச்
சொல்லாதிருக்கும்படி உம்மைப்பிரார்த்திக்கிறேனென்றான். இந்தச்
சொற்களைக்கேட்டு மறுத்துச்சொல்லுதற்கு இடமில்லாமல் உன்னிஷ்
டப்படிச்செய்யென்றுசொல்லிவிட்டுப்போய்ப்பின்பு நான்இனிஇவனு
டனேசகவாசஞ்செய்வேனேயானால் இவனுக்குவருகிறகுற்றத்திற்குப்ப
ழிக்கும்ஆளாகவேண்டும் ஆகையால் தேசாந்திரம்போகிறதேஉத்தமமெ
ன்றுநினைத்துக்கொண்டுதன்மகனுடனேசொல்லாமல் பிரயாணஞ்செ
ய்துகொண்டுபோகிறபோது அன்றிராத்திரி ஒரூரில்ஒருவீட்டிலேஇறங்
கினான். அந்தவீட்டுக்காரன் அன்றைக்குவெளியிலே போயிருந்தான்
அவனுமனைவிமார்கள் இரண்டுபேர்மாத்திரம் இருந்தார்கள் மூத்தவள்
நித்திரைபோய்விட்டாள் தலைக்கடைத்திண்ணையில்படுத்திருந்த மரியா
தைராமன்தகப்பன தன்பிள்ளைக்குநேர்ச்சம்பவித்ததைக்குறித்து, தூக்கம்
பிடியாமல் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான், ஆனால் நடுராத்திரியிலே
அவனும் தன் சக்களத்தியும் தூங்கிவிட்டார்களென்று நினைத்து

இளையவள் இதுவேநல்லதருணமென்று தன்சோரநாயகனை உள்ளே அ
ழைத்துக்கொண்டுபோய்ச்சரசத்துடனே இருக்கிறசமயத்திலே அதற்
குவிரோதமாகத்தன்குழந்தை விழித்துக்கொண்டுவீரிட்டு அழத்துவக்
கியதைக்கண்டு கழுத்தைப்பிசைந்துகொன்றுபிறகு அதையெடுத்தவள்ப
க்கத்திலே கிடத்திவிட்டு தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு விடி
யற்காலத்திலே கள்ளபுருஷனை அனுப்பிவிட்டு ஊரெல்லாம் அறியும்ப
டியாகத் தன்பிள்ளையைச்சக்களத்தி பொறாமையினாலே கொன்றா
ளென்று பழிபோட்டுக்கூவி அழுதுகொண்டு மரியாதைராமனிடத்தி
லேபிரியாதுசெய்யப்போனாள், இவைகளையெல்லாந்தப்பாமற்பார்த்து
க்கொண்டிருந்தமரியாதைராமன் தகப்பன்றனக்குள்ளே ஆச்சரியப்ப
ட்டுநல்லதுஇந்தவழக்கைக்குறித்து என் மகன்சரியாகத் தீர்ப்புப் பண்
ணுவானேயானால் மற்றவழக்குகளிலும் பிசகமாட்டானென்று நம்புவே
னென்றுமாறுவேஷங்கொண்டு நியாயஸ்தலத்திற்குச்சமீபத்திலே வந்
திருந்தான். மரியாதைராமன் அந்தவியபசாரிசெய்தபிரியாதைக்கேட்டு
ச்சேவகனைவிட்டு மூத்தவளை அழைப்பித்து நீயேன்இப்படிப்பட்ட சிசு
ஹத்திசெய்தாயென்றுகேட்டான் இறைவனே நரகத்திற்கு ஆளாகத்த
க்கஇந்தமகாபாதகத்தைக்கடவுளறிய நான்செய்ததில்லையென்றாள். அந்
தச்சொல்லைக்கேட்டமாத்திரத்திலே இளையவள் ஒப்புநியாயாதிபதியேஇ
வளைமிகவும்மோசக்காரி கொலைசெய்தாளென்பதில் நீரெவ்வளவுஞ் சந்
தேகப்படாதேயுமென்றாள், இவ்விருவர்சொல்லையுங்கேட்டுச் சந்தேக
ப்பட்டு இதற்குச்சாட்சியுண்டாவென்றுகேட்டான் அதற்கு இளையவள்
என்கண்களேயல்லாமல்வேறேசாட்சி இல்லையென்றாள், நியாயாதிபதி
தெய்வத்தைத்தியானித்துக்கொண்டு உண்மையைவெளிப்படுத்தத்தக்க
ஒருயோசனைதனக்குள்செய்து அவ்விரண்டுபெண்களையும்பார்த்து உங்
களுக்குவேறேசாட்சியில்லாமையால் புடவையையவிழ்த்துவைத்து வி
ட்டுத்திறவாணமாகஇந்தமகாசபையைமூன்றுசுற்றுவந்துசத்தியஞ்செய்
யுங்களென்றான், இந்தச்சொல்லைக்கேட்டமாத்திரத்திலேசிறியவள்அப்
படியேசெய்யஎத்தனித்தாள், பெரியவளோவென்றால் என் உயிர்போ
னாலும்போகட்டும்இப்படிப்பட்டமானக்கேடான காரியத்திற்கு உட
ன்படமாட்டேனென்றுதனக்குள்ளேநிச்சயித்துக்கொண்டு ஓ நியாயா
திபதியே அந்தக்குழந்தையைக்கொன்றவள்நானேயென்னை அதற்குத்தகு
தியானதண்டனைசெய்யலாம் இப்படிப்பட்டமானபங்கஞ்செய்யாதேயு
மென்றாள், நியாயாதிபதி இவ்விருவர்செய்கையுங்கண்டு இளையவள்மு
ழுமோசக்காரியென்றறிந்து சிலஅடிகள் அவளை அடிப்பித்து அவள்வா
யைக்கொண்டேநிஜத்தைவெளிப்படுத்தி அவளைத்தூக்கிற்போட உத்தர
வுகொடுத்தான் இளையவளுக்குத் (தானொன்றுநினைக்கத்தெய்வமொன்
றுநினைக்கும்) என்கிறபழமொழிப்படிநேரிட்டது இவைகளையெல்லா
ம்பார்த்துக்கொண்டிருந்தமரியாதைராமனதகப்பன் அளவற்றசந்தோ,

ஷித்தையடைந்து புத்திரனிடத்திற்குப்போய் மரியாதைராமன் என்கி
றபெயரும் இந்தத்தொழிலும் உனக்கேதகும், இப்படிப்பட்ட புத்தி
யுக்திகளை உனக்குக்கொடுத்த கடவுளுக்கு நான் வந்தனஞ்செய்கிறே
ன். நீ தீர்க்காயுசு உள்ளவனுகச்சுகத்தோடேவாழ்கவென்று ஆசீர்வாத
ஞ்செய்து தன்வீட்டுக்குப்போய்ச்சேர்ந்தான்.

௩-வது- பஞ்சுவர்த்தகர்க்கு- ஒரு பூனையால் வழக்குநேரிட்டது.

நான்குபேர்பங்காகப்பஞ்சுவர்த்தகம்பண்ணினூர்கள், பஞ்சுமூட்
டைகளை எலிகள்கடிக்காதிருக்கும்பொருட்டு அவர்கள்ஒரு பூனையைவ
ளர்த்தார்கள்- வளர்க்கும்போது அதனுடைய நாலுகால்களையும் ஆளுக்
குஒவ்வொருகாலாகப்பங்குவைத்துக்கொண்டு அவனவன் தன்தன்பங்காகி
யகாலுக்குத்தண்டைகொலுசுசதங்கைமுதலானதுகளால் அலங்கரித்துச்சி
றப்பாகவைத்திருந்தார்கள். அப்படியிருக்கையில அந்தப்பூனைக்கு ஒரு
காலிலேகாயம்பட்டது, அந்தக்காலுக்குச்சுதந்தரக்காரன் எண்ணெய்
ச்சீலைசுற்றிவைத்தான் அது அடுப்பண்டையில்லபோனபோது அடுப்
புத்தீயினுல்பற்றிக்கொண்டது அதனுடனே அந்தப்பூனையானது பஞ்
சுமூட்டைகளில்மேல்விழுந்து ஓடிப்போகையில், அம்மூட்டைகள்ப
ற்றிக்கொண்டுவெந்துபோய்விட்டதுகள் அதைக்கண்டு எண்ணெய்ச்
சீலைசுற்றினகூட்டாளிகையில் மற்றமூன்றுபேரும் தங்களுக்குவந்தந
ஷ்டத்தைவாங்கிக்கொடுக்கும்படியாகமரியாதைராமனிடத்திலேபிரியா
து அர்ஜிகொடுத்தார்கள், அந்தநியாயாதிபதிபிரதிவாதியை அழைப்பித்து
விசாரணைசெய்து அவன்மனமறிந்துசெய்ததல்லாமையினுலே வாதிகள்
செய்தபிரியாது அநியாயமென்றறிந்து அந்தவாதிகளைப்பார்த்து பிர
திவாதிபூனைக்குஎண்ணெய்ச்சீலைசுற்றிவைத்தகால்காயமுள்ளதாயிருக்கி
றபடியால் நடக்கிறதற்குஉதவாதே காயமில்லாதஉங்கள் மூன்றுபேர்க
ளுடையகால்களினுலேநடந்துபோகையால் இப்படிப்பட்டசேதம்வந்
ததுஆகையால்நீங்கள்மூன்றுபேருமேபிரதிவாதியினுடையநஷ்டத்தை
க்கொடுக்கவேண்டுமென்றுதீர்ப்புசெய்தான், வாதிகள்மூன்றுபேரும்
(யானைதன்தலையிலேதானேமண்போட்டுக்கொள்ளுகிறதுபோலத் தங்க
ளுக்குத்தாங்களே மூன்வந்தத்தோடு பின்னும் நஷ்டந் தேடிக்கொண்
டார்கள். (திக்கற்றவனுக்குத் தெய்வமேதுணை) என்கிறபழமொழிப்
படி, அதிகவிசனமடைந்தபிரதிவாதி தெய்வசகாயத்தினுலே தனப
ட்சந் தீர்ப்பானதுகண்டு அதிக சந்தோஷத்தை அடைந்தான்.

௪-வது-ஒருவன் தன்னிடத்துவைத்த முத்துக்களில்லையென்றது.

ஒருவன் விலையுயர்ந்தஇரண்டுமுத்துகளைச்சம்பாதித்துத் தன்
னிடத்தில்லவிசுவாசமுள்ளவனைப்போலிருந்த மற்றொருவன்கையிலே
கொடுத்து இதுகளை நான்வருமளவுங்காப்பாற்றிலவையென்றுசொல்லி

ட்டுச்சிலகாலந்தேசசஞ்சாரஞ்செய்துதிரும்பிவந்து அவனை அந்தமுத்துக்களைக்கொடுவென்றுகேட்டதற்கு அவன்நான்உன்கையில் வாங்கினதேயில்லையென்றுசாதித்தான் பின்புகொடுத்தவன் மரியாதைராமனிடத்திற்குப்போய்ப் பிரியாதுபண்ணினான் அப்போது மரியாதைராமன் அவனை அழைப்பித்து அவன்வாய்விசேஷங்களைக்கேட்டுமோசத்தைமுகக்குறிப்பினால்அறிந்துகொண்டு தீர்ப்புக்கொடுக்காமல் அவர்களைப்போகச்சொல்லிச் சிலநாள்பொறுத்து வாதியைக்கொண்டு அந்தமுத்துக்களின்மாதிரியைத்தெரிந்துகொண்டு பிரதிவாதிகையிலே அந்தமாதிரியாகத்தொண்ணூற்றெட்டுமுத்துக்களை ஒருநந்தசரட்டிலேகோத்துக்கொடுத்து இச்சரம் நூறுமுத்துக்களுள்ளது சரடுநைந்திருக்கிறபடியால் வேறொருசரட்டிலே கோத்துக்கொண்டுவா நீயோக்கியனாகக் காணப்படுகிறபடியினாலே உன்னைநம்பிக்கொடுக்கிறேனென்றுசொல்லிக் கொடுத்து அனுப்பினான். அந்தமோசக்காரன முத்துக்களைத்தன்வீட்டுக்குக்கொண்டுபோய்க்கோர்த்து எண்ணிப்பார்த்தபோது இரண்டுமுத்துக்கள்குறைப்பக்கண்டு அவ்விரண்டையும் தான்போக்கடித்ததாகவேநினைத்துத்திகிலடைந்து தான் அபகரித்துவைத்திருந்த இரண்டு முத்துக்களையுங் கூடச்சேர்த்து கோத்துக்கொண்டுபோய்க்கொடுத்துச் (சனப்பன்வீட்டுக்கோழி தானேவிலங்கிட்டுக்) கொண்டதுபோலத் தன்திருட்டைத்தானேவெளிப்படுத்தினான், அப்போது நியாயாதிபதி அவன்திருட்டைஅறிந்து இரண்டுமுத்துக்களையும் உடைமைக்காரனுக்குச்சேர்த்துவிட்டு அவனுக்கு ஏற்றதண்டனையுஞ்செய்தான்.

௫-வது- ஒருவன் தன்னிடத்தில்வைத்த இரும்பை எலிதின்றதென்றது.

ஒருவன்பத்துப்பாரம் இரும்புவாங்கி ஒருவனிடத்திலேவைத்துமற்றொருதேசத்திற்குப்போய்ச்சிலவருடங்கள்கழிந்தபின்புவந்து அவனைஇரும்பைக்கொடுமென்றுகேட்டான் அவன் உன்னிரும்பையெலிதின்றுவிட்டதென்றுசொன்னான், அந்தச்சொல்லைக்கேட்டு இரும்புக்காரன்மரியாதைராமனிடத்திலேபோய்ப்பிரியாதுசெய்தான் மரியாதைராமன்பிரியாதுசெய்தவனுக்கு ஒருஉபாயங்கற்பித்தான் அந்தஉபாயத்தின்படியே வாதிதன்னைமோசஞ்செய்தவனுடனே (பகையாளிகுடியை உறவாடிக்கெடுக்கவேண்டு) மென்றுநினைத்து அதிக சிநேகஞ்செய்து ஒருநாள்தன்வீட்டிலே பிரயோசனமென்று மோசக்காரன்மகனை அழைத்துக்கொண்டுபோய்த் தன்வீட்டில் ஓரறைக்குள்ளே ஒளித்துவைத்துமறுநாள்மோசக்காரன் என்பிள்ளை எங்கேயென்றுகேட்டதற்கு அந்தப்பையனைப்பருந்துஎடுத்துக்கொண்டுபோய்விட்டதென்றான் அதுகேட்டுஉடனேபிள்ளைக்காரன்மரியாதைராமனிடத்திற்குப்போய் இன்னான்என்பிள்ளையைத் தன்வீட்டுப்பிரயோசனத்திலே சாப்பாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்த்திருப்பி அனுப்பாமல் ஒளித்துவைத்திரு

க்கிறான் அனுப்புமென்றுகேட்டால் பருந்தெடுத்துக்கொண்டுபோச்
சுதென்றுசொல்லுகிறானென்றுசொன்னான், நியாயாதிபதிபிள்ளைமோ
சஞ்செய்தவனை அழைப்பித்து பிள்ளையைப்பருந்து எடுத்துக்கொண்டு
போமாவென்றுகேட்டான் அதற்கு அவன் இவனிடத்திலே நான்வைத்
திருந்தபத்துபாரம்இரும்பை எலிதின்றுவிட்டதென்று சொல்லுகிறா
னே இரும்பை எலிதின்னுமாவென்றான். மரியாதைராமன் அவ்விருவ
ரையும்பார்த்து நீங்கள் ஒருவரையொருவர் (முழுப்பூசினிக்காயைச்சோற்றோ
டே) மறைக்கிறதுபோல மோசஞ்செய்கிறது நியாயத்துக்குவிரோத
மென்று கண்டித்து பிள்ளைக்காரன் இரும்பைக்கொடுக்கும் படியாக
வும் இரும்புக்காரன் பிள்ளையைக் கொடுக்கும்படியாகவுந் தீர்ப்புசெ
ய்தான்.

௮-வது. ஒருத்தி கடன்வாங்கின நெய்யை வாங்கவில்லையென்றது

ஓரிடைச்சி இரண்டுபசுவைத்துக்கொண்டிருந்தாள் அவளுக்கு எதி
ர்வீட்டுக்காரியாகியமற்றொருவிடைச்சி இருபதுபசுவைத்துக்கொண்டி
ருந்தாள். இருபதுபசுக்காரி இரண்டுபசுக்காரிகையில் ஒருவீசைநெய்க
டனாகவாங்கிக்கொண்டாள், கொடுத்தவள் கெடுவிற்போய்அதைக்கேட்
டதற்கு வாங்கினவள்நான் உன்கையிலே வாங்கினதில்லையென்றுசாதித்
தாள் கொடுத்தவள் மரியாதைராமனிடத்திலே போய்ப்பிரியாதுபண்
ணிக்கொண்டாள். அவன்பிரதிவாதியை அழைப்பித்து விசாரணைபண்
ணும்போது எனக்குஇருபதுபசுக்கள் இருக்கிறதுகள். என்வாதிக்கு
இரண்டுபசுக்கள்யிருக்கிறதுகள் என்னிடத்தில் அதிகபசுக்கள்இருக்கி
றதுகளென்றபொறாமையினாலேநிடம்போடுகிறாளென்றுசொன்னாள்
நியாயாதிபதிக்குச் சந்தேகமபிறந்து மறுநாள் வரச்சொல்லி அவர்
களை அனுப்பிவிட்டு அவர்கள் வருகிறதற்கு முன்னே நியாயஸ்தலத்
துக்குச்சமீபத்திலே சேறாக்கிவைத்தான் மறுநாள்அவ்விருவரும் அந்
தவழியாக நடந்து வந்தார்கள். சமீபத்தில் வந்தவுடனே அளவுசரி
யாகயிருக்கிற இரண்டுசெம்புகளில் நிறைய நீர்கொண்டுவரச்சொல்லி
ப்பேருக்கு ஒவ்வொருசெம்புநீர் கொடுக்கச் சொன்னான் இரண்டுபசு
க்காரி அந்தநீரிலே பாதியினாலே கால்களை செவ்வையாகக் கழுவிக்கொ
ண்டு பாதிமீதியாகவைத்தாள் இருபதுபசுக்காரி ஒருசெம்புநீருமவார்
த்துக்கழுவியும் பாதிசேறுகூடப் போகவில்லை அதைமரியாதைராம
ன்பார்த்துக் கடன்வாங்கினவளை அழைத்து நீஇருபதுபசு வைத்துக்
கொண்டிருந்தாலும் குடித்தனத்திறமையில்லாதவளென்று அறிந்தே
ன். அதெப்படியென்றால் ஒருசெம்புநீர் முழுதுமவிட்டுக் கழுவியு
ம்பாதிசேறுயினும் உன்காலிலே போகவில்லை அவளோவென்றால் அ
ரைசெம்புநீராலே தன்காலிலே எவ்வளவுஞ் சேறில்லாமல் கழுவினதலா
ல்குடித்தனத்திறமை யுடையவளாயிருக்கிறாள். ஆகையால்நீ அவளிட
த்திலே நெய்கடன்வாங்கினதற்குச் சந்தேகமில்லையென் றமோசத்தை

வெளிப்படுத்திவாதிபக்ஷந் தீர்ப்புசெய்தான் (பள்ளமுள்ளவிடத்திலே தண்ணீர்நிற்கும் என்றபழமொழிப்படியேமோசஞ்செய்தவிடத்திலே தண்டனைசம்பவித்தது.

எ-வது; உனக்குஇஷ்டமானதைக்கொடுவென்றது.

ஒருவன் தன்மரணகாலத்திலேதன்னிடத்திலிருந்த பதினாயிரம்வராகன்களையும் தனக்குப்பழக்கமுள்ள ஒருசாவகாரிகையில் கொடுத்து என்புத்திரன்பெரியவனானபின்பு இந்தவராகன்களில் உனக்கு இஷ்டமானதைக்கொடுவென்றுசொன்னான், பின்புசாவகாரி அதுகளைத் தன்வீட்டிலேகொண்டுபோய்வைத்திருந்தான், பிள்ளை பெரியவனானபின்பு சாவகாரியிடத்திற்குப்போய் தன்தகப்பன் கொடுத்தபொருளைக்கேட்டான், அதற்குச்சாவகாரியானவன் உன்தகப்பன் எனக்கு இஷ்டமானதை உனக்குக் கொடுக்கச்சொன்ன படியினால் எனக்குஇஷ்டமானது இந்தத்தொகைதானென்று ஆயிரம்வராகன் கொடுக்கப்போனான் அந்தப்பிள்ளையாண்டான் வேண்டாமென்று விசனத்தை அடைந்து மரியாதைராமனிடத்திலே போய்பிரியாதுபண்ணினான் மரியாதைராமன்சாவகாரியை அழைப்பித்துவிசாரித்து அவன் வாய்ச்சொல்லைக்கொண்டே உனக்குஇஷ்டமானது ஒன்பதினாயிரம் வராகனாகையால் நீயெடுத்துக்கொள்ளநினைத்தாய், அந்த ஒன்பதினாயிரம்வராகனை இந்தப்பிள்ளைக்குக்கொடுத்துவிடு இந்தப்பிள்ளைக்குக் கொடுக்கநினைத்த உனக்கு இஷ்டமாகாத ஆயிரம்வராகனை நீஎடுத்துக்கொள்ளென்று தீர்ப்புப்பண்ணினான், (ஊராருடமைக்குப்பேயாய்ப்பறந்தால், வருமோவென்கிற பழமொழிப்படியே சாவகாரியினுடைய அதிகவாசைபயன்படாமற்போயிற்று.

அ-வது, வழியில்வித்துவான் திரவியத்தைப்பிடிங்கிக்கொண்டது

ஒருவித்துவான் தேசாந்திரம்போய்க்கொஞ்சந்திரவியஞ்சம்பாதித்துக்கொண்டு ஊரின்அருகே தனியாகவருகையில் ஒருவன்வந்து அவன் மூட்டையைப்பிடிங்கிக்கொண்டு இது என்மூட்டையென்று சொல்லிக்கொண்டுதன்வீட்டுக்குப்போய்விட்டான் வித்துவான் மரியாதைராமனிடத்திற்குப்போய்ப்பிரியாதுசெய்தான் மரியாதைராமன் அந்தத்திருடனை அழைப்பித்துக்கேழ்க்கத் திருடன்நானென்றும்அறியேனென்றுபொய்ச்சத்தியஞ்செய்தான், அதைக்கேட்டு நியாயாதிபதி திருடனைவீட்டுக்குப்போகஉத்திரவுகொடுத்துவிட்டு அவனுக்குத் தெரியாமல் அவன்பின்னேதானே இரண்டுபேர்வேவுகாரரை அனுப்பினான் திருடன்தன்வீட்டுக்குள்ளேபோனவுடனே அவன்பெண்சாதி நீபோனகாரியமெப்படிமுடிந்ததென்றுகேட்டாள் அதற்கு அவன் நானொன்றுமறியேனென்று ஏமாத்திவிட்டேனென்றுசொன்னான், அந்தச்சொல்லை அவ்வேவுகாரர் ஒளித்திருந்துகேட்டுப்போய் நியாயாதிபதியுடன்சொ

ன்னூர்கள் நியாயாதிபதி திருடனைப்பிடித்துக்கொண்டுவரச்சொல்லி அ
டிமேலடியடித்தால் (அம்மியும்நகரும்) என்கிறபடியே அடிப்பித்துந
ன்றாகவிசாரித்து அவன்வாயைக்கொண்டே நிஜத்தை வெளிப்படுத்தி
அவன்கைப்பற்றிய திரவியத்தை வித்துவானுக்கு வாங்கிக்கொடுத்துத்
திருடனுக்குசாஸ்திரப்படித்தண்டனையுஞ்செய்தான்.

### ௯-வது, தான்வாங்கிய கெம்புக்கல்லை அறியேனென்றது.

ஒருவன்ஒருவர்த்தகனிடத்தில் விலையுயர்ந்த ஒரு கெம்புக்கல்லைக்கொடுத்
து இதைவைத்திருவையும் நான்யாத்திரைபோய் வந்துவாங்கிக் கொள்ளு
கிறேனென்றுசொல்லிப்போய் நாலுவருஷங்கழிந்தபின்பு வந்துகெம்பு
க்கல்லைக்கேட்டான் என்னிடத்திலே அதை முன்னேதானே நீவாங்கிக்
கொண்டுபோய்விட்டாயென்றுசாதித்துஅப்போதுதன் வீட்டிலேசோ
றெடுக்கவந்தவண்ணான் அம்பட்டன் குயவன் இம்மூன்றுபேரையும்
பொய்சாக்ஷிசொல்லஏற்படுத்தினான் கெம்புக் கல்லுக்காரன் அதைஅ
றிந்துமரியாதைராமனிடத்திலேபோய்த் தன்கெம்புக்கல்லை அபகரித்த
தையும்பொய்ச்சாக்ஷிகளை ஏற்படுத்தினதையுஞ் சொல்லிக் கொண்டா
ன், மரியாதைராமனானவன் அந்தமர்மந்தெரிந்துகொண்டு வர்த்தக
னையும் அவன்சாக்ஷிக்காரரையும் அழைப்பித்து விசாரணைசெய்து அத
ன் பின்புவாதி பிரதிவாதிசாக்ஷிக்காரனென்னும் முத்திறத்தாராகிய ஐந்
துபேரையும் ஒருவனோடொருவன்பேசாமல் இருக்கும்படியாகத் தனித்
தனியே சேவகர்கைவசப்படுத்திக் காவலிலேவைத்துக் களிமண்ணினா
லே அந்தக்கெம்புக்கல்லைப்போல உருவஞ் செய்துகொண்டு வரும்ப
டியாக உத்தரவுகொடுத்தான், வாதியும் பிரதிவாதியும் அந்தக்கெம்புக்
கல்லுக்குத்தகுந்த அளவாகவுஞ்செய்துக்கொண்டு வந்தார்கள், கெம்பு
க்கல்லினுடையஉருவமேஎன்றும் பார்த்திராதசாக்ஷிக்காரர் மூன்றுபே
ருக்குள்ளே வண்ணான்தோய்க்கிற கல்லைப் போலவும் அம்பட்டன் தீ
ட்டுங்கல்லைப்போலவும் குயவன்பிடிகல்லைப்போலவும் வேறுவேறுமா
திரியாகச்செய்துகொண்டுவந்தார்கள் அந்தவித்தியாசத்தினாலே நியா
யாதிபதிக்கு உண்மைதெரிந்து உடைமைக்காரனுக்கு அந்தக்கெம்புக்க
ல்லும் மற்றவர்களுக்குத்தகுதியான தண்டனையுங்கிடைக்கும்படி செய்
தான் (எட்டியுடன்சேர்ந்தஇலவந்தீப்பட்டது) என்றபடிமோசஞ்
செய்த பிரதிவாதியுடன்சேர்ந்த சாக்ஷிக்காரரும் அவனுக்குவந்ததுன்ப
த்தை அநுபவித்தார்கள்.

### ௰-வது, அபலான்பெண்சாதியைத் தன்பெண்சாதி யென்றது.

ஒருவன் தன்பெண்சாதியை அழைத்துக் கொண்டு ஊர்பய
ணம்போகையில் வழியிலிருக்கிற ஆற்றிலே புருஷன் முன்னும் பெ
ண்சாதிபின்னுமாகப்போகிறபோது மற்றொருவன்யிவர்கள் பின்னா
லே இறங்கிவந்தான் இவன் வருகிறத்தை அவர்கள்பாராமல் போகிற

போது தண்ணீர் ஆழமாயிருக்கிறஇடத்திலே அந்தஸ்த்ரீயானவள் புடைவையை நனையாமல் தூக்கிக்கொண்டுபோகையால் பின்னேவருகிறவன் அவள்அடித்துடையிலேயிருக்கிறஒருமச்சத்தை அடையாளமாகப்பார்த்துக்கொண்டுகரையேறினவுடனே அந்தஸ்த்ரீயைத்தன் பெண்சாதியென்றுசொல்லி அவள்புருஷனை அவளை அழைத்துக்கொண்டுபோகவொட்டாமற்றடுத்தான், அவ்விருவரும்வழக்காடிக்கொண்டுநியாயாதிபதியாகியமரியாதைராமனிடத்திற்குப்போனார்கள் அவள்புருஷன் என்பெண்சாதித்தன்பெண்சாதியென்று இவன் நிபந்தஞ்சொல்லுகிறானென்றுபிரியாதுசெய்தான், நியாயாதிபதி அந்தஅன்னியனைக்கேட்கும்போது அவளைத்தன்பெண்சாதியென்றுசாதித்தான் நியாயாதிபதிஉங்களிலேயாருக்காவதுசாக்ஷியுண்டோவென்றுகேட்டான். சொந்தபுருஷன் நாங்கள்நெடுந்தூரத்திலிருந்துவருகிறபடியால் எங்களுக்குச்சாக்ஷிஇல்லையென்றான் பழிபாவத்திற் கஞ்சாததுஷ்டனானவன் எனக்குஞ்சமீபத்திலேசாக்ஷிஇல்லை ஆனால் இவளைஎன்பெண்சாதியென்று ருசுகொடுக்கிறதற்கு ஒருதிருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன் அது என்னவென்றால் நான் அனுபோகசாலியாகையால் இவள் அடித்துடையிலே ஒருமச்சமிருக்கின்றது ஸ்திரீகளைவிட்டுச்சோதித்துஅறியலாமென்றான். அப்படியேசோதித்துஅறிந்தபின்பு அந்தஸ்திரீயைஉன்புருஷன்யாரென்றுகேட்டான் சொந்தபுருஷனையேகாட்டினாள் அதற்குமேலேசந்தேகம்பிறந்துமரியாதைராமன்அந்தஸ்திரீயைப்பெண்டுகள்காவலிலும் மற்றிரண்டுபேரையும் புருஷர்கள் காவலிலும்வைத்துமறுநாளுதயத்திலேஅவ்விருவரையும் ஓரிடத்திற்கு அழைத்துக்கொண்டுவரச்சொல்லி கொலைசெய்வோனைஅழைத்து இவ்விருவருக்குள்ளே ஒருஸ்திரீயின்கற்பைஅழிக்கப்பிரயாசைப்படுகிற மஹாபாதகன் இன்னானென்று உனக்குமுன்னேஅறிவித்தேனல்லவா இன்னும் அவன நிஜத்தைச்சொல்லாமையால் அவனை இப்போதே வெட்டிப்போடென்று உத்திரவுகொடுத்தான், அவன்கத்தியைஉருவிக்கொண்டுபோகையில் மோசக்காரன்பயந்துஉண்மையைச்சொல்லிவிடுகிறேன் என்னைவெட்டவேண்டாமென்று ஆற்றிலே தான் கண்டமச்சத்தைக்கொண்டு வியாச்சியமாடத்தொடங்கியதை உண்மையாகச்சொல்லிவிட்டான். நியாயாதிபதி துஷ்டனுக்குத்தகுதியானதண்டனைசெய்வித்து அந்தஸ்திரீயைசொந்தபுருஷனிடத்தில்ஒப்பித்தான், (அடாதகாரியஞ்செய்தாற்படாதபாடுபடவேணுமென்கிற) பழமொழியை அந்தத்துஷ்டன் அப்போதுதான்மெய்யென்றறிந்தான்.

௰௧ - வது, யானைக்கும் பானைக்குஞ்சரியென்றது.

ஒருதுலுக்கனிடத்தில் ஒருவேளாளன் தன்பிள்ளைகலியாணத்திலே ஊர்க்கோலங்காட்ட யானையிரவலாகவாங்கிக்கொண்டுவந்தான்.

அந்தயானைவளர்க்கோலம்வந்துக்கொண்டிருக்கும்போது ஆகஸ்மீக மாகச்செத்துப்போச்சுது. அந்தவேளாளன் உடனே துலுக்கனிடத் திற்குப்போய் தெய்வீகமாகஉன்னுடைய யானைசெத்துப்போச்சுது, அதற்குவிலையானாலும் பதிலகயானையானாலும்உனக்குக்கொடுக்கிறே னென்றான் அதற்குத்துலுக்கன் நீசொன்னஇரண்டுக்கும் நான்சம்ம திக்கிறதில்லை என்யானையே எனக்குவேண்டுமென்றுசொல்லிப் பின்பு மரியாதைராமனிடத்திலேசொல்லிக்கொண்டான், மரியாதைராமன் பிரதிவாதியை அழைப்பித்துக்கேட்கும்போது அவன் நடந்தஉண்மை யைச்சொன்னான், மரியாதைராமன் துலுக்கனைப்பார்த்துதெய்வீகமா கநேரிட்டபடியால் பதிலாகயானையாகிலும்வாங்கிக்கொள்ளு அல்லது விலையானாலும்வாங்கிக்கொள் என்றுபலவிதத்திலுஞ்சமாதானஞ்சொ ன்னான், அதற்கு அந்தமுரட்டுத்துலுக்கன் இரண்டுக்கும்நான் சம்மதிக் கமாட்டேன் அந்தயானையேஎனக்குவேண்டும் வேறொன்றும்வேண்டே னென்றுகடவுள்பேரால்ஆணையிட்டான் அதைக்கேட்டுவேளாளன் க லங்கினான் பின்புமரியாதைராமன் ஆலோசித்து நீங்கள் நாளையத்தின ம்வாருங்களென்றுஅனுப்பிவிட்டு ரகசியமாக வேளாளனைஅழைப்பி த்துநாளையத்தினம் நீவரவேண்டாம் உன்வீட்டுநடையிலே சதவோர மாகப்பழம்பானைகளை அடுக்கிவைத்துக்கதவைசும்மாய்சாத்திவைத்து க்கொண்டிரு துலுக்கன் வந்தவுடனே உன்னைதிரிகரவில்லை. ஆகை யால் நீபோய்அழைத்துக்கொண்டுவாவென்று அனுப்பிவிக்கிறேன். அவன்அவசரமாகவந்துகதவைத்திறப்பான், அப்போதுபானைகளெல் லாம்நொரிந்துபோம். பின்புஎங்கள்பெரியோர்கள் நல்முதற்கொண் டு ஆப்பந்தபானைகளை உடைத்துப்போட்டானென்று அழுது அயல் வீட்டாருடனேகூச்சலிட்டுச்சொல்லிக்கொள்ளு அதற்காகஅவன் என் னசமாதானஞ்சொன்னாலும் என்பானையேஎனக்குவேண்டுமென்றுநீ வந்துபிரியாதுபண்ணிக்கொள்ளென்றுசொல்லிஅனுப்பிவிட்டான் ம றுநாள் அந்தப்படியேநடந்தபின்பு வேளாளன்வந்துவெகுசாலமாக ஆப்பந்தஎன்பானைகளைஉடைத்துப்போட்டான் என்பானைகளேஎன க்குவேண்டுமென்றான். மரியாதைராமன் அந்தத்துலுக்கனைப்பார்த் து நீஇதற்குஎன்னசொல்லுகிறாயென்றான். அதற்குதுலுக்கன் யானை க்கும்பானைக்குஞ்சரியாய்ப்போச்சுதேயென்றான். களவுடன்கை ப்பொருளிழப்பானென்கிறதை துலுக்கனிடத்திலேகாட்டினான்.

௰௨ - வது, சீட்டைக்கிழித்துவாங்கினகடனையில்லையென்றது.

ஒருகுடியானவன்ஒருசெட்டியினிடத்தில் சீட்டெழுதிக்கொ டுத்துநூறுவராகன்கடன்வாங்கியிருந்தான், சிலநாள்போனபிற்பாடு செட்டியானவன்கடனைக்கேட்டான். குடியானவன் நாளையுதயத்திற் குஊருக்கப்புறத்துக்கொல்லைமேட்டிலே யிருப்பேன் அவ்விடத்திலிட்

டைக்கொண்டுவந்தால் முதலும்வட்டியுங் கொடுத்துவிடுகிறேனென்
றுசொன்னான், அந்தப்படியேசீட்டைக்கொண்டுபோனான் அதைவா
ங்கிப்பார்க்கிறதுபோலக்கிழித்துப் பக்கத்திலேமூட்டம்போட்டிருக்கி
ற நெருப்பிலேபோட்டுவிட்டு உனக்குக்கொடுக்கவேண்டியதில்லையெ
ன்றுபோகச்சொன்னான், செட்டிதுன்பத்துடன் மரியாதைராமனிட
த்திலேசொல்லிக்கொண்டான். அவன்குடியானவனையழைப்பித்து ஏ
ன்சீட்டைக்கிழித்துப்போட்டாயென்றுகேட்டான், அதற்குஅவன்நா
ன் இவனிடத்திற்கடன்வாங்கினதுமில்லை சீட்டைக்கிழித்ததுவுமில்லை
யென்றுசொன்னான். செட்டியைத்தனியேயழைத்துசீட்டுயெவ்வளவு
நீளமென்றுநியாயாதிபதிகேட்டான்சாண்நீளமென்றுசொன்னான் உன்
னைக்கேட்கும்போது முழநீளஞ்சொல்லென்றுசொல்லிவைத்து நியா
யஸ்தலத்தில்அழைப்பித்துச்செட்டியைப்பார்த்து நீ பொய்சொல்
லாதே அந்தச்சீட்டுஎவ்வளவுநீளமென்றுகேட்டான். ஐயா நான்மெய்
யாகச்சொல்லுகிறேன் அது ஒருமுழநீளச்சீட்டு அதையுங்கிழித்துப்
போட்டுபணமும் வாங்கினதில்லையென்றுபொய்சொல்லுகிறானென்றா
ன். குடியானவனுக்குக்கோபம்பிறந்து அவசரத்திலே ஐயாஉங்களிட
த்திலேதானே சாண்சீட்டை முழச்சீட்டென்று பொய்சொல்லுகிறா
னே மற்றவிடத்திலேஎத்தனைபொய்சொல்லமாட்டானென்றான், அ
தைக்கேட்டுநியாயாதிபதி நீ அவனிடத்திற்சீட்டெழுதிக்கொடுத்துக
டன்வாங்காதிருந்தாயாகில் சாண்சீட்டென்றுஎப்படிஅறிந்தாயென்று
சொல்லிப் பொய்சொன்னதற்காக அவனைத்தண்டித்துச் செட்டிக்குவ
ட்டியும் முதலுங்கொடுத்துவிடும்படிகட்டளையிட்டான் (ஆத்திரக்கா
ரனுக்குபுத்திமட்டென்பதற்குக்)குடியானவன்திருஷ்டாந்தமானான்.

### ௰௯ - வது, எலுமிச்சங்காயவ்வளவுசாதம்போடச்சொன்னது.

ஒருவன்வழிப்பயணம்போம்போது ஒருசத்திரத்திலிருக்கும்
பிராமணத்திகையில் நாலுபணங்கொடுத்து எனக்குமிகவும் பசியாயிரு
க்கிறது எலுமிச்சங்காயத்தனைசாதஞ்சீக்கிரமாகப்போடென்றான். அ
ந்தப்படியேஅவள்எலுமிச்சங்காயத்தனைசாதம்இலையில்வைத்தாள் அந்
தமனிதன் அவளைநோக்கி நான்நாலுபணங்கொடுத்து உபசாரவார்த்
தையாக எலுமிச்சங்காயத்தனைசாதம்போடென்றேன் அதற்குநீஇப்ப
டிசெய்தாயேஇதுவயிற்றிற்குப்போதுமாவென்றான். அதற்கு அவள்
எலுமிச்சங்காயத்தனைசாதந்தான்கேட்டாய் ஆகையால் அதற்குமேல்
நான்அதிகமாகப்போடமாட்டேனென்றாள். பின்பவன் மரியாதைரா
மனிடத்திற்போய் இந்தச்சங்கதிகளைச்சொல்லிக்கொண்டு தன்பணத்
தைவாங்கிக்கொடுக்கவேணுமென்றுபிரியாதுசெய்தான். நியாயாதிப
தி அவளைஅழைப்பித்துஇவன்கேட்டபடியேஎலுமிச்சங்காயத்தனை
சாதம்போடுகிறேனென்று ஒத்துக்கொண்டாயாவென்றான். அவள் ஆ

மென்றாள், ஆனால்நீ அப்படியேசெய்தயாவென்றான். நான் அப்படியேசெய்தேன் அவன்வீணாகவழக்காடுகிறானென்று அந்தச்சாதமும் இலையில் அப்படியேயிருக்கிறதென்றுசொல்லிச்சீக்கிரத்திலோடி இலையோடே அந்தச்சாதத்தைஎடுத்துவந்துகாண்பித்தாள், மரியாதைராமன் ஒகோஒருசாதமாவதுஎலுமிச்சங்காயத்தனைபருமன் இல்லாதபடியால் இவன்பணத்தையாவதுகொடுத்துவிடு எலுமிச்சங்காயத்தனை பருமனுள்ளஒருசாதமாவதுபோடென்றான் அவள் அந்தத்தீர்ப்பைக்கேட்டுப்பயந்து அவன்கொடுத்தநாலுபணத்தையும் யாதொருதடையுஞ்சொல்லாமல்கொடுத்துவிட்டாள் (மரத்தில்பழம்மரத்தண்டையேவிழும்) என்றபடியே பணத்திற்குரியவனிடத்தேபணஞ்சேர்ந்தது.

௰௪ - வது, இரவல்வாங்கினமோதிரத்தை அறியேனென்றது.

ஒருவன்ஒருகல்யாணத்திற்குப்போகும்பொருட்டு மற்றொருவனிடத்தில்இரவலாகஒருபொன்மோதிரம்வாங்கிக்கொண்டுபோனான், சிலநாள்போனபின்புமோதிரக்காரன்இரவல்வாங்கிக்கொண்டவனுடையகைவிரலிலேதன்மோதிரத்தைக்கண்டுகேட்கும்போது இதுஎன்மோதிரமாச்சுதே உன்னிடத்தில்இரவலாகவாங்கினதென்றுஏன்பொய்சொல்லுகிறாய்போவென்றான். சொந்தக்காரன்விசனத்துடனேமரியாதைராமனிடத்திலேபோய்ச்சொல்லிக்கொண்டான் அந்தநியாயாதிபதிபிரதிவாதியை அழைப்பித்துவிசாரித்தவிடத்திலே நான்இரவலாகவாங்கினதில்லை என்சொந்தவுடைமைதானென்றுசாதித்தான் சாக்ஷியில்லாமையினாலே உண்மையைவெளிப்படுத்தவேண்டி ரகசியத்திலே ஒருமத்தியஸ்தனை அழைப்பித்துவைத்து நான்அனுப்புகிறமோதிரத்தை அதிகமாக உரைத்து மாற்றையும்விலையையுங்குறைத்துச்சொல்லென்று அனுப்பிவிட்டு வாதிபிரதிவாதிகளையும் மோதிரத்தையும் சேவகனிவசப்படுத்தி மத்தியஸ்தனிடத்திலேபோய் விலைமதித்துக்கொண்டுவா இவ்விரண்டுபேருக்கும் பேர்பாதியாகக்கொடுத்துவிடுவோமென்று அனுப்பினால், மத்தியஸ்தன்உரைக்கிறபோது சொந்தக்காரன்பொன்னை அதிகமாகஉரைக்கிறாயென்றுபதைத்தான், மாற்றுச்சொல்லுகிறபோது குறைத்துச்சொல்லுகிறாயென்றுகூவினான், விலைசொல்லுகிறபோது என்னுடைமையை இப்படிஅநியாயமாகவிலைமதிக்கவும்நேரிட்டதாவென்று அழுதான். மற்றொருவன்சும்மாயிருந்தான். இதனாலே அழுதவனே உடைமைக்காரனென்று அறிந்துகொண்டு அவன்பக்ஷந் தீர்ப்புசெய்தான். (தான்தேடாப்பொன்னுக்குமாற்றுமில்லையுரையுமில்லை) யென்பதை அந்தமோசக்காரன் தன்னிடத்திலேகாட்டினான்.

௰௫ - வது, கோழிதிருடி அறியேனென்றது.

ஒருத்தியினுடையகோழியை அண்டைவீட்டுக்காரிதிருடிக்கொன்றுதின்றுவிட்டாள், அவள்வீட்டுக்குள்ளேபோனகோழிமறுபடியும்

வராமற்போனதைப்பார்த்துக்கொண்டிருந்தசொந்தக்காரி அந்தத்திரு
டியினிடத்திற்குப்போய் என்கோழிஉன்வீட்டுக்குள்ளேவந்ததே அ
துஎதோவென்றுகேட்க அவள் நான்பார்க்கவேயில்லையென்றுசாதித்த
படியால் மரியாதைராமனிடத்திற்குப்போய்பிரியாதுசெய்தாள், அந்
தத்திருடியையழைப்பித்துக்கேட்டபோது நான் அந்தக்கோழியைப்
பார்க்கவேயில்லையென்றுசாதித்தாள், நியாயாதிபதி சாக்ஷியில்லாமை
யினாலே அவ்விரண்டுபேருக்கும் வீட்டிற்குப்போகஉத்திரவுகொடுத்
துவிட்டு கொஞ்சந்தூரத்திலேபோகிறபோது கிட்டவிருக்கிறவர்களை
ப்பார்த்து ஒருஸ்திரீயானவள்கோழியைத்திருடித்தின்றுவிட்டு அதன்
மயிரையுந்தலையிலேவைத்துக்கொண்டு இந்தச்சபையிலேநின்று நான்
அறியேனென்றுசாதித்துவிட்டுப்போகிறாளே அவளுடையதைரியத்தை
ப்பார்த்தீர்களாவென்று அவளுக்குக்கேட்கும்படியாகச்சொன்னான்.
அந்தத்திருடிஇந்தச்சொல் தன்காதிலேவிழுந்தமாத்திரத்திலே கையி
னாலே மெள்ளத்தன்கொண்டையைத்தடவிப்பார்த்தாள் அதைக்கண்
டு நியாயாதிபதி அந்தத்திருடியைப்பிடித்துக்கொண்டுவரச்சொல்லி அ
வள்வாயைக்கொண்டே திருட்டைவெளிப்படுத்தி அதற்குத்தகுந்தஅப
ராதம்வாங்கிக்கோழிக்காரிக்குக்கோழிபதிலுக்குக்கொடுக்கும்படிஉத்
தரவுசெய்தான். (பொய்நின்றுமெய்யைவெல்லுமா)என்றதைஅந்தத்திரு
டி.அன்றைக்குத்தான் நிஜமென்றுநம்பினாள்.

௧௬ - வது, வைத்தபணத்தைதிருடிக்கொண்டஷறியேனென்றது.

ஒருபிராமணன் யாத்திரைபோகவேண்டியநிமித்தம் தான்நெ
டுநாளாகப்பிச்சையெடுத்துச்சம்பாதித்த ஆயிரம்பூவராகனையுமொரு
தபலைக்குள் அடியிலேபோட்டு மேலே துவரம்பருப்பை நிறையப்
போட்டு தனக்குவிசுவாசமாயும்நம்பிக்கையாயுமிருக்கிற ஒருகோமுட்டி
யினிடத்திலே தானுந்தன்பெண்சாதியுமாக எடுத்துக்கொண்டுபோய்
இந்தத்தபலைப்பானையிலிருக்கிறதுவரம்பருப்பைத்தொடாமல் பத்திர
மானஇடத்திலேவைத்துக்காப்பாற்றி நாங்கள்யாத்திரைபோய்வந்தபி
ற்பாடு எங்கள்கையிலேகொடுவென்றுசொல்லிவைத்துவிட்டுயாத்திரை
போய்விட்டான். ஒருநாளிரவில்கோமுட்டிவீட்டில் விருந்தாளிகள்
மிகுதியாகவந்தார்கள் அந்தவேளைக்குத்துவரம்பருப்பு எங்கும்அகப்
படாமையினாலே பிராமணன்வைத்ததுவரம்பருப்பையிப்போதுஎடு
த்துக்கொண்டால் பதிலுக்குக்கொடுத்துவிடலாமென்று கோமுட்டி
தன்பெண்சாதியை எடுத்துக்கொண்டுவரச்சொன்னான். அவள் தபலை
யை எடுத்துக்கொண்டுவந்து கொட்டுகிறபோது கீழேபருப்புமமே
லேபூவராகனுமாகவிழுந்ததுகள் அவ்விரண்டுபேருஞ்சந்தோஷித்தை
அடைந்துபருப்பையும்வராகனையும்எடுத்துக்கொண்டு மறுநாள்வே
றேதுவரம்பருப்புச்சம்பாதித்து தபலைநிறையப்போட்டுவைத்தார்கள்.

யாத்திரைபோன பிராமணன் தன்பெண்சாதியுடன் சிலமாதங்கழித்து வந்துகோமுட்டிவீட்டிலேவைத்த தப்லையைவாங்கிக்கொண்டுபோய்ச் சோதித்துதான்வைத்தபூவராகனைக்காணாமலிருந்தவிசனத்தையடைந்து கோமுட்டிவீட்டுக்குப்போய் அவனுக்கும் அவன்பெண்சாதிக்கும் வெகுஉபசாரஞ்சொல்லிப்பணத்தைக்கேட்டு அவர்கள் நீங்கள் வைத்த துவரம்பருப்புத்தப்லையைக்கொடுத்துவிட்டோம் மற்றொன்றும்நாங்களறியமாட்டோமென்று சொல்லியபடியினாலே மரியாதைராமனிடத்திற்குப்போய் பிரியாதுசெய்தார்கள். அவன்கோமுட்டியையும் அவன்பெண்சாதியையும் அழைப்பித்து அநேகவித உபாயங்களினாலேவிசாரணைசெய்தும் உண்மையைவெளிப்படாமையினாலே தனக்குள்ளே ஒருயுக்திசெய்துகொண்டு பூதத்தைப்போலஒருகூண்டுசெய்து அதற்குள்ளே ஒருஆளைஒளித்துவைத்து கோமுட்டியையும்அவன்பெண்சாதியையும் அந்தக்கூண்டையெடுத்துக்கொண்டு ஒருபெரியதேவாலயத்தைப் பிரதக்ஷணமாகவந்து சத்தியஞ்செய்யும்படியாக உத்தரவு கொடுத்தான். அவர்கள் தலைமுழுகி அந்தபூதத்தையெடுத்துக்கொண்டுபாதிதூரம்போகையில் கோமுட்டி தன்பெண்சாதியைப்பார்த்து ஓகோ என்னகாரியஞ்செய்துவிட்டோம் நாம்பொய்ச்சத்தியஞ்செய்யும்படியாகவந்துநேரிட்டதே இதனாலே என்னஅபாயம் வருமோவென்று சொல்லிக்கொண்டுவந்தான் அந்தக்கூண்டுக்குள்ளே இருந்தவன் அதைக்கேட்டு நியாயாதிபதிக்குத்தெரியப்படுத்தினான் நியாயாதிபதியும் அறத்தி அவர்கள்வாயைக்கொண்டே நிஜத்தைவெளிப்படுத்தி பிராமணனுக்கு அவன்வைத்தஆயிரம்பூவராகனையும் வாங்கிக்கொடுத்துக்கோமுட்டிக்குத்தகுதியான தண்டனையுஞ்செய்தான். (தீராவழக்கிற்குத் தெய்வமேசாக்ஷி) என்பது இந்தவழக்கிலேவிளங்குகிறது.

௧௫-வது, நெல்லைப்பந்தக்காரன்விலைமோசஞ்செய்தது.

ஒருவர்த்தகன் ஒருகுடித்தனக்காரனிடத்திலேபோய்நெல்லு வாங்கிக்கொள்ளுகிறேன் மாதிரிவாங்கிக்கொண்டுவாவென்றான் அவன் ஒருசின்னகூடையில் குறுணிநெல்லைக்கொண்டுவந்துகாண்பித்தான், இதல்லாமல் இன்னம்வேறேஉண்டாவென்றுகேட்டான் வேறேகிடையாது, ஒருவராகனுக்குவாங்கினாலும் இதுதான் பத்துவராகனுக்குவாங்கினாலும் இதுதானென்றான் வர்த்தகன் பத்துவராகனைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குப்போய் பொதிமாட்டை ஓட்டிக்கொண்டுவந்து என்பத்துவராகனுக்கும்நெல்லளவென்றுகேட்டவிடத்தில் முன்மாதிரிகாட்டின ஒருகூடைநெல்லைக் கொண்டுவந்துகொட்டி எடுத்துக்கொண்டுபோவென்றான், என்னுடையபத்துவராகனுக்கும் இந்தநெல்லுதானோவென்றுகேட்டான் நானப்போதுதானே நீ எவ்வளவு தொகைக்குவாங்கினாலும் இதுதானென்றுசொன்னேனே அதற்குச்

சம்மதிப்பட்டுத்தானேபத்துவராகனைகொடுத்தாய்ஆகையால்இதை எடுத்துக்கொண்டுபோவென்றான். வர்த்தகன் மரியாதைராமனிடத்தி லேபிரியாதுசெய்துக்கொண்டான் அந்தநியாயாதிபதிகுடித்தனக்கார னை அழைப்பிவைத்துவிசாரித்தவிடத்திலே தான்சொன்னபிரகாரஞ் ச ரியாட்டநடந்ததாகச்சொன்னான், நியாயாதிபதி இதற்குத்தீர்ப்புச்சொ ல்ல ஒருமாதஞ்செல்லும் அதுவரைக்கும் நீங்கள்இரண்டுபேரும் ஒரு வீட்டிலேசாப்பிட்டுக்கொண்டிருங்களென்று திட்டஞ்செய்து வர்த்த கனைப்பார்த்துச் சமையல்பண்ணுகிறசாதத்திலேவேளைக்குவேளை நீயுஞ் சாப்பிட்டுச்குடித்தனக்காரனுக்கும் பாதிசாதம்போடென்றுசொல்லி அப்புறம் ரகசியத்திலேநீவயிறுநிறையச்சாப்பிட்டுவிட்டு அவனுக்கு ஒருசாதத்திலேபாதிசாதம்பிடுவையென்று யுக்திசொல்லிக்கொடுத் தனுப்பிவிட்டான, அவன் அப்படியேசெய்தபடியால் இரண்டுவே ளை பட்டினிஇருந்துபார்த்து பசிவேதனை பொறுக்கமாட்டாமல் நி யாயாதிபதியிடத்திலேசொல்லிக்கொண்டான அவன் வர்த்தகனை அ ழைப்பிவைத்து நீஎன் அவனுக்குச் சாப்பாடுபோடவில்லையென்றுகே ட்க உங்கள்உத்திரவின்படியே நானபாதிச்சாதம்போட்டேன ஆனால் இவன்சாப்பிடவில்லையென்றான, அதற்குக்குடியாளவனஇவன்ஒருசா தத்திற் பாதிகிள்ளிவைத்து சாப்பிடசொன்னால் எப்படிசாப் பிடுகிறதென்றான் அவன்ஒருகூடையிலேகொண்டுவந்தஎவ்வளவுதொ கைக்குமாங்கினாலும் இதுதானென்றுமாதிரிகாட்டினநெல்லைப்பத்து வராகனுக்குக்கொடுக்கவந்தானே ஆகையால் நீங்கள்சொன்னபடிக்கு இப்படியேபாதிசாதந்தான்போடுவேனென்றான், அதைக்கேட்டுநியா யாதிபதிபிரதிவாதியைப்பார்த்து ஊர்விலைப்படி அவனுக்குப்பத்துவ ராகனுக்குமநெல்லையாகிலுங்கொடு இல்லாவிட்டால் ஒருமாதம்வரை க்கும்அவன்போடுகிற பாதிசாதத்தையாகிலுஞ் சாப்பிட்டுக்கொண்டி ருவென்றான். அதைக்கேட்டுப்பிரதிவாதி எதிர்உத்திரவுகொடுக்கவழியி ல்லாமல் ஊர்விலைப்படி நெல்லைக்கொடுக்கவே ஒத்துக்கொண்டான. (அழுக்கையழுக்குக்கொல்லும் - இழுக்கையிழுக்குவெல்லும்) என்கி றது இவ்வழக்கிலேநிசமாகாரம்பப்பட்டது.

௰௮ - வது, ஒருவன்காதுக்கடுக்கனை மற்றொருவன்திருடியது.

ஒருசத்திரத்தில் இரண்டுபேர்வழிப்போக்கர்ஒருவனுக்கொரு வன்எதிர்முகமாகத்தலைவைத்துப்படுத்துக்கொண்டார்கள், நித்திரைவே ளையிலே வலதுகாதுகீழாகப்படுத்திருந்தவனுடைய இடதுகாதுகடுக் கனை இடதுகாதுகீழாகப்படுத்திருந்தவன் கழற்றித்தன்வலதுகாதிலே போட்டுக்கொண்டான், விழித்துக்கொண்டபிற்பாடு கடுக்கனையிழந் தவன் என்கடுக்கனை ஏன்கழற்றிக்கொண்டாயென்றுகேட்க அவனும் என்காதுக்கடுக்கனை நீதான்கழற்றிக்கொண்டாயென்றான் இப்படிக்கல

கப்பட்டுக்கடுக்கனை இழந்தவன் மரியாதைராமனிடத்திலேசொல்லிக்
கொண்டான். நியாயாதிபதிசமூஸ்தானத்தில்திருடனை அழைத்துக்கே
ட்டவிடத்தில் அவனும்அப்படியேசொன்னபடியினாலே நீங்கள்இரு
வரும்எப்படிப்படுத்துக்கொண்டீர்களோ அப்படிபடுத்துக்கொண்டு
காண்பியுங்களென்றான், அப்படியேகாண்பித்தபோது திருடனைப்பா
ர்த்து உன்யிடதுகாதுகீழேயிருந்தபடியால் அதிலிருந்துஎப்படிகழற்
றலாம் அவன்இடதுகாதுமேலேயிருந்தபடியால் எளிதாகக்கழற்றிக்
கொண்டாய் நீதான்திருடனென்றுசொல்லி உடமைக்காரனுக்குக் கடு
க்கனைவாங்கிக்கொடுத்து திருடனைஇருபத்துநாலுஅடிஅடிப்பித்து ஆ
றுமாதங்காவலிலிருக்கச்செய்தான. அத்திருடனபொய்சொனனாலும்
பொருந்தச்சொல்லவேணும் எனறபடி கத்துக்கொள்ளவும் தெரியா
மற்போயிற்றேயெனறு துனபமடைந்தான.

௧௬-வது, ஒருவனமற்றொருவனபசுவினகனறுகளை மாற்றியது.

ஒருசமுசாரிக்கு ஒருபசுமந்தைஇருந்தது அதனபக்கத்தில்ம
ற்றொருசமுசாரிக்குப்பத்துபசுக்களிருந்ததுகள் மந்தைவைத்துககொ
ண்டிருந்தசமுசாரி தானில்லாதபோதெல்லாந் தனமந்தையை பத்து
ப்பசுக்களைவைத்துக்கொண்டிருக்கிறவனைப் பார்த்துக்கொள்ளச்சொ
ல்லுவான, இப்படியிருக்கையிலே அவனிவனில்லாததருணம்பார்த்துத
னமூனறுசேங்கன்றைமந்தைப்பசுக்களில் ஊட்டவிட்டு அதுகளின்மூ
னறுகிடாரிக்கனறுகளை மாற்றிக்கொண்டானபினபுசிலநாளுக்குள்ளே
நோவுவந்து அந்தமந்தைப்பசுக்களெல்லாம் இறந்துப்போச்சுதுகள்
பத்துப்பசுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறவன மாற்றிக்கொண்டமூ
னறுகிடாரிகளும் பெரியதுகளாய்க் கனறுபோட்டுக்கறந்துகொண்டி
ருந்ததுகள் இப்படியிருக்கிறகாலத்திலே ஒருநாள் மந்தைப்பசுவைத்
துக்கொண்டிருந்தவன பால்மோரில்லாமையினாலே எனக்குக்கொஞ்
சம்பால்வார்க்கவேண்டுமெனறு பத்துப்பசுக்கள் வைத்துக்கொண்டி
ருக்கிறவனைக்கேட்டான அவனஒருபசுவினபாலைக் கறந்துகொடுத்தா
ன அதைச்சாப்பிட்டவுடனே இப்போது பால்கறந்தபசு எனபசுவெ
னறு வழக்கிட்டுமரியாதைராமனிடத்திற்குப்போய்ப் பிரியாதுசெய்தா
ன அந்தநியாயாதிபதி அவனைஅழைப்பித்து இவனபசுவை நீஎனஅப
கரித்தாயெனறுகேட்டான, பிரதிவாதிஅப்படிநானசெய்யவில்லை, செ
ய்ததாகச்சாக்ஷிகளைக்கொண்டு வாதிநிஜப்படுத்தினால் தண்டனைக்கு
ள்ளாவேனெனறான நியாயாதிபதிவாதியைப்பார்த்து உனபசுவெனகி
றதற்கு காரணமென்னவெனறுகேட்டான, எனபசுவினபாலினுடை
யருசி எனக்குத்தெரியுமெனறான. அதைக்கேட்டவுடனே நியாயாதி
பதி இருவரையும் பதினைந்துநாள்பொறுத்துவாருங்களென்று அனு
ப்பிவிட்டு ஆட்டெருவும்மாட்டெருவும் குப்பையெருவும் இம்மூன

றையுந்தனித்தனியே மூன்றுகீரைப்பாத்தியிலேபோட்டுக் கீரைவிரை யைவிதைத்துப்பயிராக்கிக்கொண்டு அவ்விருவரையும்அழைப்பித்து இந்தமூன்றுகீரைப்பாத்தியிலிருக்கிற கீரைகளைப்பிடுங்கி ஒன்றாய்க்கலந்து சமையலுஞ்செய்து பசுவின்தயிர்எருமைத்தயிர்ஆட்டுத்தயிர் மூன்றையும்ஒன்றாய்க்கலந்து இருவருக்கும விருந்துசெய்விக்கிறபாவனையாய் சாப்பிடச்சொல்லி இதுகளைவட்டித்தார்கள் அப்போதுபிரதிவாதி சீக்கிரமாகச்சாப்பிட்டுப்போனான் நியாயாதிபதி அவனைப்பார்த்துச்சாப்பாடு எப்படியிருந்ததென்றுகேட்க நன்றாயிருந்ததென்றான் அதன்பின்பு வாதிசற்றுநேரம்பொறுத்துச்சாப்பிட்டுப்போனான் அந்தவாதியைப்பார்த்து சாப்பாடெப்படியிருந்ததென்றுகேட்க மூவொருவிண்கீரையோடு முப்பாலினற்றயிரும் நாவுருசிகண்டேனிந்நாள் என்றான் நியாயாதிபதி இவன் சொன்ன புத்தியுக்திகளினாலே நிஜத்தைஅறிந்துகொண்டு பிரதிவாதியைப்பார்த்து நீ உண்மையைச்சொல்லாவிட்டால் தண்டனைக்குள்ளாவாயென்றுகேட்க பிரதிவாதிமந்தைப் பசுக்களிலே மூன்றுசேங்கன்றைஉளட்டவிட்டு மூன்றுபீடாரிக்கன்றைமாற்றிக்கொண்டேனென்றான். அதுகேட்டு நியாயாதிபதி வாதபக்ஷந்தீர்ப்புசெய்தான் (அறிவுள்ளவனுக்கரியதொன்றில்லை) என்கிறபடி வாதிஅதிகபுகழ்பெற்றான்.

௨௰-வது, நால்வர்பொதுவிலிருந்த இரத்
தினத்தை அவர்களிலொருவன்திருடியது.

ஒருவன்தன்மரணகாலத்திலேதன்புத்திரர்நால்வருக்கும்பொதுவிலேநாலாயிரம்வராகனையும் சமமானநாலுரத்தினங்களையும் ஒருபெட்டியிலேவைத்துப்பூட்டி தன்பெண்சாதியிடத்திற்சாவியைக்கொடுத்து ஒருமையாயிருக்கிறவரைக்குமிருக்கட்டும் விரோதிக்கிறகாலத்திலேபங்கிட்டுக்கொள்ளவேணுமென்றுசொன்னான் பிற்காலத்திலேபிள்ளைகள் தங்களுக்குச்சிலவுக்குவேண்டியபோதுநாலுபேருமாகச்சேர்ந்துசாவியைவாங்கித்திறந்து எடுத்துக்கொள்ளுவார்கள் அப்படிசெய்யும்போது ஒருதடவையில் இளையவன் ஓர்ரத்தினத்தைத்திருடிக்கொண்டான் அதைக்குறித்துநாலுபேருஞ்சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்திற்போய்சொல்லிக்கொண்டார்கள் அந்தநியாயாதிபதிஇவர்களைச்சிலநாள்தன்வீட்டிலேவைத்துக்கொண்டிருந்து ஒருநாளிராத்திரிவேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்துஒருகதைசொன்னான் அதாவது ஒருராசகன்னிகைதான்படித்துமுடிந்தவுடனே வித்தியாகுருவுக்குத்தக்ஷணைகொடுக்கப்போனாள் அவளதிகரூபவதியாகையால் அந்தவித்யாகுரு அவள்மேலாசைகொண்டு நானுன்னைக்கேட்பதற்கு நீயாதொருதடையுஞ்சொல்லுகிறதில்லையென்றுவாக்குக்கொடுத்தால் தக்ஷணைபெறுப்பேனென்றான் அப்படியே ஆகட்டுமென்றாள் அதற்கு

அவன் உன்னோடொருதரங்கூடவேண்டுமென்றான் நீர்வித்யாகுருவானையால்உமதுகருத்தின்படி நடந்துகொள்வது எனக்குக்கடமைதான் ஆனால் எனக்குச்சோபனஞ்செய்யும்போது முன்னே உமதுயிஷ்டத்தைநிறைவேற்றாமல் நான்என்புருஷனைத்தொடுவதில்லையென்றாள் அப்படியே அவளுக்குச்சோபனஞ்செய்யும்போது இராத்திரிபடுக்கைக்குப்போனவிடத்தில் புருஷன் சரசம்செய்யத்தொடங்கியதைக்கண்டு தான்வித்திய குருவுக்கு வாக்குகொடுத்திருக்கிறதைச்சொல்லித்தடுத்தாள் புருஷன் அவளுடையசத்தியநிலையைக்கண்டுயோக்கியவதியென்றுசந்தோஷிப்பட்டுசொன்னசொல்லைக்காப்பாற்றும்படியாகஉத்திரவுகொடுத்து அனுப்பினான் அவள்போம்போதுவழியிலே திருடன் மடக்கிக்கொண்டான் அவனுக்குத்தான்போகிறகாரியத்தைநிறைவேற்றிக்கொண்டுவரும்போதுதன்னுடைமை களையெல்லாங்கழற்றிக்கொடுக்கிறேனென்றுபரவசஞ்செய்துகொடுத்துவிட்டுப்போய் வித்யாகுருவைக்கண்டு உமதிச்சையைநிறைவேற்றவந்தேன் தயவுசெய்துஎன்னைச்சீக்கிரத்தில்அனுப்பவேண்டுமென்றாள். குருவானவர் அவளுடையநிலையைக்கண்டு அஞ்சிஅம்மாநீஎன்புத்திரி குருபக்தி உனக்குஇருக்குதோ வில்லையோவென்றுசோதிக்கும்பொருட்டு அப்படிப்பட்டகாரியத்தை உனக்குச்சொன்னதேயல்லாமல் வேறில்லை நீ சுகமாகப்போய் உன்புருஷனிடத்திற்சென்றுஆசீர்வாதஞ்செய்து அனுப்பிவிட்டார் அப்படியேவரும்போது திருடனிடத்தில்வந்து தன்னுடைமைகளையெல்லாங் கழற்றிக்கொடுத்தாள் அவன்பயந்துஇப்பேர்ப்பட்டகற்புடையஉத்தமியை உலகத்திலே கண்டதில்லையென்று அதிசயப்பட்டு அந்தஉடைமைகளுடனே தன்னிடத்திருந்த உடைமைகளில் சிலதைகொடுத்து அனுப்பிவிட்டான்பின்பு புருஷனிடத்தில்வந்து போனவிடத்தில் நடந்தவர்த்தமானமெல்லாஞ்சொல்லப்புருஷன் அதிகசந்தோஷமுற்றான் பின்புயிருவருங்கூடிச்சுகத்திலேயிருந்தார்கள். இவர்கள் நாலுபேருக்குள்ளே யார்யோக்கியனென்று கேட்டான் மூத்தவன்குருயோக்கியனென்றான் அவனுக்கிளையவன் ராஜகுமாரனே யோக்கியனென்றான். அவனுக்கிளைய வன் ராஜகுமாரத்தியே யோக்கியவதியென்றான் அவனுக்கிளையவன் திருடனேயோக்கியனென்றான் இதைக்கேட்டவுடனே நியாயாதிபதி பாலைக்குடித்தவனுக்குப்பாலேப்பம்வரும் கள்ளைக்குடித்தவனுக்கு கள்ளேப்பம்வரு மென்கிறபழமொழிப்படியேதிருட்டிவிச்சையுள்ளவன் திருடனையோக்கியனென்று சொன்னானென்று அறிந்து இளையவன்வாயைக்கொண்டே உண்மையைவெளிப்படுத்தி இரத்தினத்தைவாங்கி மற்றவர்களிடத்திற் கொடுத்துத் திருடியவனுக்குத் தகுந்ததண்டனையுஞ்செய்தான்.

---

## ௨௧-வது, நவமிபுருஷனுடையபெருமையைத்தெரிவிக்குதல்.

ஒருகுடியானவன் நாட்டுப்புரத்தில் ஒருபெண்ணை விவாகஞ்செய்து இருவரும்வாழ்ந்துக்கொண்டிருக்கையில் அந்தப்பெண்ணுக்குத் தாயானவள்வந்து பெண்ணை அழைத்துக்கொண்டுபோய் திரும்ப பத்துதினத்துக்குள்ளே அனுப்புகிறேனென்றுசொல்லித்தன்பெண்ணை அழைத்துக்கொண்டுபோனாள், ஒரு மாதபரியந்தம் அனுப்பாததினாலே மேற்சொல்லியகுடியானவன் தன்பெண்சாதியை அழைத்துக்கொண்டுவருகிறநிமித்தியம் மாமியார்வீட்டுக்குப்போய் தன்பெண்சாதியை அனுப்பும்படிகேட்டான், இன்றையத்தினம் - நவமிதிதி- யாகையால் ஊர்ப்பிராயணம்போகக்கூடாதுஎன்றுபுரோகிதன்சொல்ல மாமியானவள்ப்படியேவேண்டியமட்டுக்குஞ்சொன்னாள் என் பெண்சாதியைநானழைத்துக்கொண்டுபோக - நவமி-என்னபண்ணுமென்றுசொல்லி உதாசீனமான வார்த்தைகள்பேசிதான் உரோஷர்க்கமாய்த் தன்பெண்சாதியைஅழைத்துக் கொண்டுபோனான வழியில்வரும்போது மலபாதைநொந்தரவினால் தன் பெண்சாதியை மரத்தடியில் வைத்துவிட்டுக் குளத்தருகேபோனான் அத்தருணம் நவமிபுருஷன் அவனைப்போலே ரூபங்கொண்டு பெண்ணை அழைத்துக் கொண்டு போனான் அப்படி போய்க்கொண்டிருக்கையில் சொந்தப்புருஷன்வந்து மரத்தடியில்இருந்த பெண்சாதியைக்காணாமல் திகைத்துவழியேபார்க்க ஒருபுருஷன் பின்னேபோகக்கண்டு-ஓடி அருகில்வந்து ஏண்டா என்பெண்சாதியை யிட்டுக்கொண்டுபோகிறாயென்று கேட்டான்-அவன் என்பெண்சாதியாச்சேநீயாரடாவென்று கேட்டான்-இவ்விருவரையும் பார்த்து அந்த ஸ்திரீயானவள்இவர்களிரு வரும்ஏகரூபமாயிருக்கப்பார்த்து- தன்புருஷனையின்னானென்று குறிப்புகாணமாட்டாமல் திகைத்துநின்றுவிட்டாள்இவர்களிருவரும்சச்சரவுபட்டு மரியாதைராமனிடத்திற்பிரியாதுபண்ணிக்கொண்டார்கள், அவன்இந்தவுபயவாதிகளைப்பார்த்து அவயவங்களும் வர்ணங்களும்சுரூபங்களும் ஏகரூபமாயிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டுஅந்தஸ்திரியைப்பார்த்துஇவ்விருவர்களிலே உன்புருஷனையாரென்றுகேட்டான் அந்தஸ்திரீயானவள்-அய்யா-நியாயாதிபதியேஇவ்விருவர்கள் ஒரேரூபமாயிருக்கிறபடியால் நான்-எப்படிகண்டுபிடிப்பேன், தமதுநீதிநெறியினாலேஇந்தஆச்சரியத்தைக்கண்டுபிடித்து என்புருஷனை என்னோடேகூடச்சேர்க்கவேணுமையாவென்றுமிகவும்பிரார்த்தித்தாள் அதற்கு நியாயாதிபதிதன்புத்தியினாலேஆலோசித்து இது தெய்வமாய்கையென்று கண்டுகொண்டுயிவர்களை நாளையத்தினம்வரும்படி திட்டஞ்செய்து அனுப்பிவிட்டுத் தன் இஷ்டதெய்வத்தைதியானித்து ஒருமண்பானைசுட்டு விரல்பருமன்மூக்குகரகமுள்ளதாய்செய்துகொண்டுவரச்சொல்லிகுசவனுக்குஉத்தரவுபண்ணினான் அவன்

அப்படியேசெய்து கொண்டுவந்து கொடுத்தான் மறுநாள்காலமே நியாயாதிபதிசபாஸ்தலத்தில்உட்க்கார்ந்துகொண்டு இம்மூவரையும் அழைத்துவரும்படிசெய்து உபயவாதிகளைப்பார்த்து ஓய் புருஷர்களே யிந்தஸ்திரீக்கு புருஷன் நான் நானென்று பெருவழக்கிட்டுச்சொல்லுகிறபடியால்இதோசபையில்வைத்திருக்கிறகரகபாண்டத்தில் நுழைந்து கரகமூக்கு வழியாக வருகிற புருஷனாரோ அவன்இந்தஸ்திரீக்கு புருஷனென்று நிச்சயித்துச் சொல்லினான் சொந்தபுருஷனானவன் இதுசாகசமான காரியமென்றுபேசாமல் சபையிலே தலையிறங்கிக்கொண்டு சும்மாவிருந்தான்-நவமி-புருஷனானவர் எழுந்திருந்து நான்புகுந்துவருகிறேனென்று கரகத்துமூக்கினவழியே வெளியிலே வந்துநின்றார் அப்போதுமரியாதைராமன்சிம்மாசனத்தைவிட்டிறங்கிஅந்தமகா புருஷனை பிரதக்ஷணநமஸ்க்காரம்செய்துநீஎந்ததேவனோஓய்மகா புருஷர்வுமதுநிக்ஷயத்தைவெளிப் படுத்துமையாவென்று பிரார்த்தித்தான் அப்போதுநான்நவமிபுருஷன் இவன்தன் பெண்சாதியையிட்டுக்கொண்டுவரச்சேபுரோகிதன்இன்றைக்குநவமிபிரயாணமாகாதென்று சொல்லஎன்பெண்சாதியைநவமியென்னசெய்யலாமென்றுதுராக்கிரதமாய்இட்டுக்கொண்டுவந்தான் ஆகையால்நான்பரிக்ஷைசெய்யவந்தேன் இந்தசூதைஅறிந்துநியாயத்தைககண்டு பிடித்தையே நீயேசத்தியவாதி யினிமேலேஇம்மையிலேசவுக்கியமும் மறுமையிலேமுத்தியும் பெறுவாயென்றுஆசீர்வாதஞ்செய்து தன்னிருப் பிடத்துக்கு எழுந்தருளினார் பின்பு நியாயாதிபதி அவனைப்பார்த்து நீபெரியோர்கள்வார்த்தையைத்தட்டிமுரட்டுத்தனமாய்நடந்தபடியினாலேயிந்தஅவஸ்தைவந்தது இனிமேல்அப்படி துராக்கிரதம் செய்யாதே யென்று புத்திசொல்லி அவன்பெண்சாதியையவனுடன்கூட்டிஅனுப்பிவிட்டான். (நாள்செய்வது நல்லார் செய்யமாட்டார்கள்) என்கிறபழமொழிக்கு அத்தாக்ஷியாயிற்று.

அத்தியாயம்-௧-இ-கதைகள் இருபத்தொண்ணு.

---

## மரியாதைராமன்கதை

## முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# கதாசிந்தாமணி.

இரண்டாமத்தியாயம்.

# இராயர் அப்பாஜிகதைகள்.

முதலாவது.

## அப்வாஜிக்குமுதன்மந்திரிபட்டங்கொடுத்தது.

இராயர்ராஜரீகம்பண்ணுகிறகாலத்திலேதமக்குள்ளடங்கியகுறுநிலமன்னர்களை யெல்லாம் வரச்சொல்லிஉத்தரவுசெய்தார் ஒருவன் தவிரமற்றவர்களெல்லாரும் வந்தார்கள் அவ்வொருவனுக்குப் பதிலாகஅவனிடத்தில்மந்திரியாயிருந்த அப்பாஜிவந்தான். எல்லாரும் இராயர்தரிசனத்திற்குச் சென்றபோது தனித்தனியே அவரவர்பேரைக்கேட்டுத் திட்டவட்டஞ்செய்து வருகையிற் கடைசியில்அப்பாஜிவந்தான உன்பேரென்ன வென்றுகேட்கும் போது என்பேர்அப்பாஜி என்னெஜமானனுக்குப்பதிலாக வந்தேனென்றான்முதலாளிவராமல் தன்மனுஷனை அனுப்பினானென்று கோபங்கொண்டு அதைக்காட்டாமல் இராயர்உன்னெஜமானனை அழைப்பியென்று உத்தரவுசெய்தார். அப்படியே அழைப்பித்து நாலுநாழிகைவழிக்கு அப்புறம் ஒரூரில்நிறுத்தி வைத்தான் இப்படியிருக்கச்சே ஒருநாள் இராயர்கசாப்புக்கடைமார்க்கமாகச் சவாரிபோகிறபோது அந்தக்கடைக்காரன் ஆட்டைக்கட்டி உரிக்கிறதைப்பார்த்து உன்னெஜமானனைச் சீக்கிரத்தில் அழைப்பியென்று அப்பாஜியுடனேசொன்னார். கசாப்புக்கடையண்டையிலேபோகிறபோது உத்தரவுசெய்தபடியினாலே ஆட்டைக்கட்டி யுரிக்கிறதுபோலத் தன்னெஜமானனைக்கட்டியுரிக்க நினைத்திருக்கிறதாகத் தோன்றி அப்பாஜிசீக்கிரத்தில்தன்னெஜமானனை ஊருக்குப்போய் விடச்சொல்லி சமாசாரமெழுதிப்போட்டான் அப்படியே அவன்போய்ஊரிலேசேர்ந்தான் கொஞ்சநாள்போனபிறகு இராயர்சந்தோஷமாயிருக்கிறகாலத்தில் அப்பாஜியைப்பார்த்து உன்னெஜமான் வந்தானோவென்று கேட்டார் இன்னமவரயில்லையென்றுசொன்னான் என்னத்தினாலேஆலசியமென்று கேட்டார்ஐயா என்னெஜமானனைரக்ஷிக்கிறேனென்றுவாக்குகொடுத்தால்ஆலசியத்திற்குக்காரணஞ் சொல்லுகிறேனென்றான் உன் இஷ்டப்படியே வாக்குக்கொடுத்தேன்சொல்லென்றார் என்னெஜமான் சமீபத்தில்வந்திருந்தார் தாங்கள்கோபங்கொண்டிருக்கிறதைக்கண்டு ஊருக்குப்போகச் சொல்லி எழுதியனுப்பிவிட்டேனென்றான் எனக்குக்கோபம்வந்தது உனக்கெப்படிதெரிந்ததென்றார்கசாப்புக்கடை யண்டையிலேபோகிற

போதுஆட்டைஉரித்துக் கொண்டிருக்கிறதுதங்கள் பார்வையில்பட்ட மாத்திரத்தில்அழைப்பிக்கச்சொல்லிஉத்தரவுசெய்தபடியினாலே ஆட்டை உரிக்கிறதுபோலே என்எஜமானைக் கட்டியுரிக்கநினைத்ததாக என் புத்தியில்தோன்றினதென்றான் இராயர் அதுகேட்டுமெத்த ஆச்சரியப்பட்டு அப்பாஜியைத்தன்னிடத்தில் மந்திரியாகவைத்துக்கொண்டு அவன்எஜமானனையும்ரக்ஷித்தார் ஆகையினாலேபுத்தியுள்ளவர்களுக்குச் சித்தியாததொன்றில்லையென்றறிக.

௨-வது, உத்தியோகத்துக்குத்தக்கசுகமென்றது:

ஒருநாள்ராத்திரிமெல்லாம்விடாமழையாகப்பெய்துகொண்டிருந்தது விடியற்காலத்திலேமழைவிட்டபின்பு இராயரும் அப்பாஜியும்புறப்பட்டு ஊருக்குப்புறத்தில் காட்டுவெளியிலே வெள்ளத்தின்சிறப்பைப் பார்க்கப்போனார்கள் அங்கேஒரிடையன் தன்மந்தைபண்ணையிலே தலைப்பக்கத்திலேஒருகல்லும இடுப்பின்கீழே ஒருகல்லும்கால்பக்கத்திலே ஒருகல்லும் வைத்துக்கொண்டு சம்பங்கூடையைமேலேமூடிக்கொண்டு தன்கீழேஓடுகிறவெள்ளத்திலேதலைமயிர் அலையநித்திரைசெய்துக்கொண்டிருந்தான் இராயர்பார்த்து ஆச்சரியப்பட்டுஇவன் உயிரோடிருக்கிறானோவென்றுகேட்டார் அதற்கு அப்பாஜிஇறந்துபோகவில்லைஅதிகநித்திரையிலிருக்கிறானென்றான் அதைக்கேட்டுஇடையனுக்கு இப்படிப்பட்ட மழைவெள்ளத்திலே தலைமயிர்நீரில்அலையக்கீழேவெள்ளமோடக் கல்லுகள்உடம்பிலேவுறுத்த நித்திரைபிடிக்குமாமென்று கேட்டார்அதற்கு அப்பாஜி உத்தியோகத்துக்குத் தக்கசுகமென்றான் இராயர் அதைசோதிக்கும் படியாக அந்தமூறட்டிடையனைத் தன்னரமனைக்கு அழைப்பித்து பெரிய உத்தியோகங் கொடுத்துப் போஜனம்வஸ்திரம் ஆபரணம் வாகனம் இவைமுதலாகியராஜோபசாரங்கள் தனக்குநடந்துவருகிறதிலும் அவ்விடையனுக்குநாளுக்குநாள் அதிகமாகநடந்து வரும்படியாகத் திட்டஞ்செய்து வெயில் காற்று மழை பனி இதுகளால்யாதொரு வருத்தமுமில்லாமல் அவனைச் சிலகாலம் வைத்திருந்து அதின்பின்பு அவன்வீட்டுவாசற்படியிலே பச்சை வாழைப்பட்டைசல்லைப்போடுவித்தார்அவன் அதன்மேல்நடந்துஉள்ளே போனமாத்திரத்திலே அவனுக்குஜலதோஷமும்காய்ச்சலுங்கண்டுமிகவும்வருத்தப்பட்டான் இராயர் அப்பாஜிசொன்னது சரிதானென்று சந்தோஷப்பட்டு ஒருவயித்தியனைக்கொண்டுகுணப்படுத்திவிட்டார்.

௩-வது. இவளுக்கும்ஒருபுருஷன் இருப்பானென்றது.

இராயரும்அப்பாஜியும்ஒருநாள் சாயங்காலம்ஒரு வீதியிலே வேடிக்கையாகப் போகையில் ஒருதிண்ணையின்மேலே ஒருத்திகுரூபியாயும் சமீபத்தில்வந்தவரெல்லாம் அசங்கியப்படத்தக்க கெட்டதுர்க்கந்தமுடையவளாகியும் பூரணகருப்பமுடையவளாகியும் படுத்துக்

கொண்டிருக்கிறதை இராயர்கண்டு இவளிடம் ஒருவன் சேருவானோவென்றுகேட்டார் அதற்குஅப்பாஜி இவளுக்கும் ஒருபுருஷன்இருப்பானென்று சொன்னான் அவன் எப்படிப் பட்டவனோ அவனைப் பார்க்க எனக்கு இச்சையுண்டாயிருக்கிறதென்றுசொன்னார் அப்புறம் கொஞ்சதூரமபோகையில் நல்லவேஷ்டியும் தலைப்பாகையும் சொக்காயும் உத்தரீயமும் உடைய ஒருகக்கையிலே வெற்றிலைபாக்கு எடுத்துக்கொண்டுவருகிற ஒருவன் கையிலிருந்த உலர்ந்த சுண்ணாம்புக்கு ஈரமுண்டாக்கத் தெருச்சாக்கடை நீரை அருவருப்பில்லாமல் அள்ளிவிட்டுக்கொண்டான் அதை அப்பாஜிபார்த்து சுவாமியிவன்தான் அவளுக்கு நாயகனென்றான் அதைசோதிக்க அவனுக்குப்பின்னாலே திரும்பி வந்தார்கள் அவன்சரோலென்று போய் அவள்பக்கத்திலே உட்கார்ந்து அவளுக்கு வெற்றிலைப்பாக்குக் கொடுத்து சரசஞ்செய்துக் கொண்டிருந்தான் அதைக்கண்டு இராயர் அப்பாஜியின்புத்திநுட்பத்தை மிகவும் மெச்சினார்.

௪-வது, உமிழ்ந்தவாய்க்குமுத்தமும் உதைத்தகாலுக்குத் தண்டை சதங்கையும் இடவேண்டுமென்றது.

ஒருநாள் இராயர்பெண்சாதி அப்பாஜி உத்தியோகத்திற்குமற்றொருவனைக் கொண்டுவந்துவிட்டு இராயருக்குச்சிபாரிசு செய்தாள் இராயர் அப்பாஜிவல்லமை இவனுக்குண்டாவென்றுகேட்டார் அதற்கு அவள் அதிகமாகவே யிருக்கலாமென்று நினைக்கிறேனென்றாள் ஆனாலிப்பரிக்ஷைசெய்வோமென்றுசொல்லி அவனுக்குப்போகும்படியாக உத்தரவுகொடுத்தார் பின்பு ஒருநாள்ராத்திரி அந்தப்புரத்திலே ராயர் குழந்தை அவர்மார்பிலும்முகத்திலும் காறிஉமிழ்ந்துகால்களால் உதைத்துவிளையாடிக் கொண்டிருந்தது சூரியோதயமானபின்பு இராயர் அப்பாஜி உத்தியோகத்திற்குவந்தமனுஷனை அழைப்பித்து அவனைப்பார்த்து ராத்திரி ஒருவன்வந்து என்முகத்திலும்மார்பிலும் காறிஉமிழ்ந்துகாலால் உதைத்தான் அவனுக்கு என்னசெய்யலாமென்றார் அவன் உலகத்துக்கெல்லாம் தலைவனாயிருக்கிறஉங்களை இப்படி அலக்ஷியம்செய்தவன் வாயில் ஈயத்தை உருக்கிவார்த்து கால்களை வெட்டிவிடவேணுமென்றான் அவனை அப்புறம் போகச்சொல்லி அப்பாஜியை அழைப்பித்து முன் அவனைக்கேட்டப்படியே கேட்டார் அதற்குஅப்பாஜி உங்களை உதைத்தபாதம் எதுவோ அதற்குப்பொற்சதங்கையும்தண்டையும் போட்டு உங்கள்மேலே உமிழ்ந்தவாயெதுவோ அதனைமுத்தமிட்டுக்கொள்ள வேணுமென்றான் அதன்பின்பு இராயர்நீசிபாரிசுசெய்தமனுஷனை அப்பாஜியிலும்வல்லவனென்று புகழ்ந்தாயே இவ்விருவர்விவேகத்தையும் பார்த்தாயாவென்று கேட்டார் அதற்குஅவள் ஒருபரிக்ஷையிலேதானோ எப்படிநிச்சயிக்கலாமென்றாள்.

## ரு-வது. இகழ்ச்சியாகக்கொண்டவைகளைப் புகழ்ச்சியாகக்காட்டியது

ஒருநாள் இராயர்சபையிலே ஆடல்பாடல்களிலே வல்லவர்க
ளாகியமூன்றுபேர்தாசிகள் தெற்கேயிருந்துவந்து தங்கள்வித்தையி
னுடையஅருமைபெருமைகளைக் காண்பித்தார்கள் இராயர்அவர்களை
ப்பார்த்து மெச்சிவெகுமதிகள்செய்தார் அந்தமூன்றுபேரில் ஒருத்
தி இந்தமகாராசாவின்குணம் வேரும்விறகுமடியென்றாள் மற்றொரு
த்திமுள்ளுமுறடுமடியென்றாள் வேறொருத்திகல்லுங்கறடு மடியென்
றாள் இராயர் தம்பெண்சாதிசிபாரிசுசெய்தமனுஷனை அழைத்துஇவர்
கள்சொன்னதற்கு நாம்செய்யவேண்டியதென்னவென்று கேட்டார்
இராஜாதிராஜராகியஉங்களைஇப்படிதூஷணமாகசொன்னபடியால்இம்
மூன்று பேரையும்மொட்டையடித்துத் துரத்திவிடவேண்டுமென்றான்
அப்பாஜியைஅழைத்துக்கேட்டதற்குச் சுவாமிஅவர்கள்சொன்ன வாக்
கியங்கள் தூஷணமல்ல வேரும்விறகுமென்றது விறகைப் போலவும்
வேருள்ளதாயுமிருக்கிற அடிக்கரும்பைப்போல மதுரமுள்ளகுணமெ
ன்றதாம். முள்ளுமுறடுமென்றது முள்ளையும்முறட்டு ரூபத்தையுமு
டையபலாப்பழத்தைப்போல ருசியுள்ளகுணமென்றதாம், கல்லுங்கற
டுமென்றது கல்லுருவமாகியும் கறடாயுமிருக்கிறகற்கண்டைப்போலு
ச்சுவையுள்ளகுணமென்றதாம் ஆகையால்உங்களுடையநிசமானகுண
த்தைப்புகழ்ந்ததற்காக அதிகவெகுமதிசெய்யவேண்டுமென்றான் இரா
யர்சந்தோஷித்து அவ்விருவர்சொன்னதுகளையும்பெண்சாதிக்கறிவி
த்தார் அவள் இன்னம்ஒருபரிக்ஷைபெரிதாகச்செய்தாலொழியஎனக்கு
ச்சந்தேகந்தீராதென்றாள்.

## ௬ வது, மயிரும்சாம்பலும்பிறவரசர்களுக்குக்கொடுத்தது.

ஒருநாள்ராயர்அந்தப்புறத்தில் தம்பெண்சாதியைப் பக்கத்தி
லேவைத்துக்கொண்டுமயிரும் சாம்பலும்வைத்தஇரண்டுபொட்டண
ங்களில் இவள்சிபாரிசு செய்தவன்கையில்ஒருபொட்டணத்தைக்கொ
டுத்துக் கன்னடதேசத்துராஜாகையிலேஇதைக்கொடுத்துக் கண்டுகொ
ண்டுவாவென்று அனுப்பினர் மற்றொருபொட்டணத்தை அப்பாஜிகை
யிலேகொடுத்து இதைத்தெலுங்கு தேசத்துராஜாகையிலேகொடுத்து
கண்டுகொண்டுவரச்சொல்லி அனுப்பினர் அந்தச்சிபாரிசுக்காரன் கன்
னடதேசத்துக்குப்போய் அதை அவ்வரசன் கையிலேகொடுத்துஇரா
யர் உமக்குக்கொடுத்துவரச்சொன்னாரென்றான் அதைஅந்தராஜாபிரித்
துப்பார்த்து இதென்னவென்றுகேட்டான்எங்கள் இராயர் எமதுஅர
சாக்ஷிக்குமுன்னே நீயும்ராஜாவென்று பேர்வைத்துக்கொண்டிருக்கி
றதைவிடச் சாம்பலைத்தொட்டுக் கொண்டு மயிரைப்பிடுங்கிச் சிவனஞ்
செய்ய லாகாதாவென்று தெரிவிப்பதற்குஅடையாளமாக அனுப்பி

யதுபோலத் தோன்றுகின்றதென்றான் அந்தச்சொல்லைக்கேட்ட மாத்
திரத்திலேகோபம்பிறந்துகண்கள்சிவந்து அந்தக்கன்னடதேசத்தரச
ன்தன்னுடையசேனைகளைக்கூட்டிக்கொண்டுசண்டைக்குவந்தான் அப்
பாஜிஅந்தபொட்டணத்தைப்பிரித்துப்பார்த்துரத்தினமிழைத்ததங்க
ப்பரணையில்வைத்து பட்டுச்சீலைசாத்திப்பல்லக்குமேல்வைத்துச் சத்
தரசாமர நிர்த்தகீதவாத்தியத்துடனே கொண்டுபோய் தெலுங்குதே
சத்து இராசாவைக்கண்டு இராயரவர்கள் ஒரு எக்கியம்பண்ணிவிபூதியு
ம் எக்கிய பசுரோமமும் ஆகியபிரசாதம் உம்முடைய க்ஷேமத்திற்கு
அனுப்பினாரென்றான் அதை அவன் வாங்கிக்கொண்டு சந்தோஷத்தை
யடைந்து அப்பாஜிக்குச் சகலவெகுமதிகளுஞ் செய்து இராயருக்கு
அனேகவெகுமதிகளுங் கொடுத்துத் தன்னுடைய ஆனைசேனைபரிவா
ரங்களையும் கூட்டி அப்பாஜியைக் கொண்டுபோய் இராயரிடத்தில் வி
ட்டுவரச்சொல்லி அனுப்பினான் அப்பாஜிவருகிறதற்குமுன்னே கன்ன
டதேசத்துஇராஜாவினுடைய தண்டுவந்துகோட்டையைச்சுற்றிக்கொ
ண்டு சண்டைக்கு ஆரம்பித்தது இராயர்இந்தத்தருணத்தில் அப்பாஜி
யில்லையேயென்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் அப்பாஜிவந்து
விட்டான் அவன்பின்னேவந்த சேனையையும் தமதுசேனையையும் கூ
ட்டிக்கொண்டு இராயர்சண்டைபண்ணிக் கன்னடதேசத்து ராசாவை
த்துரத்திவிட்டார் இராயர்பெண்சாதிநடந்தவர்த்தமானங்களைக் கேட்
டுவெட்கப்பட்டு இராயனைப்பார்த்து நான் ஒருமூடனைக்குறித்துச்
சிபாரிசுசெய்தகுற்றத்தை க்ஷமிக்கவேண்டுமென்றுமிகுந்தவணக்கத்
துடனே கேட்டுக்கொண்டாள்.

## எ-வது, குடப்பூசினிக்காயும் நடைக்கிளையும், குழிக்கிணறும் அனுப்பியது.

டில்லிபாச்சாவானவன் இராயரிடத்திலிருக்கிற அப்பாஜியினுடை
யஉபாயதந்திரங்களையும் யுக்திவிசேஷங்களையும் புத்திநுட்பத்தையுங்
கேள்விப்பட்டு அதைப்பரிசோதிக்கும்படியாகக் குடப்பூசினிக்காயு
ம் நடைக்கிளையும் குழிக்கிணறும் சீக்கிரத்தில் அனுப்பவேண்டுமென்
று இராயருக்கு எழுதியனுப்பினான் அந்தநிருபம் இராயரிடத்திற்குவ
ந்தது அவர்படித்துப்பார்த்து அப்பாஜிக்குக்காண்பித்தார் அப்பாஜி
அப்படியேசெய்வோமென்றுசொல்லிவிட்டுப்போய் ஒருபூசினிப்பி
ஞ்சைக் குடத்துள்ளே விட்டுவளர்த்து அது அக்குடத்துள்ளேதானே
பழுக்கும்படிசெய்து ஒருவண்டியின் மேலே முழவுயரம் மண்பரப்
பிப்பாத்திக்கட்டி விளைவிளைத்து அந்தக்குடத்தையும் வண்டியையும்
இராயரிடத்திற்குக் கொண்டுபோய்க்காட்டி இதுகளைப் பாச்சாவுக்கு
அனுப்பி இத்தேசத்திலிருக்கிறகுழிக்கிணறு அத்தேசத்திற்குப்புதிதா
கையால் அத்தேசத்துக்கிணறுகளிலேயொன்றைஅனுப்பினால் பிணைபோ

ட்டு அனுப்புகிறோமென்று எழுதி அனுப்பச் சொல்லிச்சொன்னான்
இராயர்சந்தோஷிப்பட்டு அப்படியேசெய்தார் பாச்சா இந்தஓலையை
யம்பூசிணிக்காய்க்குடத்தையும் கோவண்டியையும்பார்த்து மிகவும்அ
ப்பாஜியின்வல்லமையை மெச்சிக்கொண்டான்.

௮ - வது, விக்கிரகங்களைப்பரிக்ஷித்தது.

டில்லிபாச்சாமறுபடியும்அப்பாஜிவல்லமையை அறிதற்பொரு
ட்டு ஒரேமாதிரியான மூன்று விக்கிரகங்களையும் இதுகளிலே எதைப்
போலிருக்கிறவன்உத்தமன்,எதைப்போலிருக்கிறவன் மத்திமன்,எதை
ப்போலிருக்கிறவன் அதமன், பரிக்ஷித்து அந்தந்த விக்கிரகத்தின்மே
லே எழுதியனுப்புகிறது என்றெழுதிய ஒருதாக்கிதையும் இராயருக்கு
அனுப்பினான் இராயர் அந்தநிருபத்தை வாசித்துப்பார்த்துச்சபையா
ருக்கெல்லாம் அந்த விக்கிரகங்களைக் காண்பித்துக்குணாகுணங்களைச்
சோதிக்கச்சொன்னார் மூன்றும் ஒரேமாதிரியாக யிருக்கிறபடியால் அ
துகளிற்பேதங்கண்டு பிடிக்கமாட்டாமல் மயங்கினார்கள் அப்பாஜிஅந்
தவிக்கிரகங்களுடையகரசரணாதி அவயவங்களை யெல்லாம்உற்றுப்பார்
த்துக்காதுகளிலேசிறுதுளைகள்இருக்கிறதை அறிந்து மெல்லியஈர்க்கை
அத்துளைகளில் நுழைத்துப்பார்த்தான் நுழைத்துப் பார்க்குமளவில்
ஒன்றுக்குவாய் வழியாகப் புறப்பட்டது மற்றொன்றுக்கு மற்றொரு
காதின் வழியாகப்புறப்பட்டது வேறொன்றுக்குவெளிப்படாமல் உள்
ளேபோய்விட்டது உள்ளேபோய்விட்டதைப்போலக்கேட்டசமாசார
த்தை உள்ளடக்குகிறவன்உத்தமனென்றும்மற்றொருகாதின்வழியாகச்
சென்றதைப்போலத் தான் கேட்ட செட்தியை மற்றொருகாதின் வழி
யாகச்செலுத்துகிறவன் மத்திமனென்றும்.வாயின்வழியாகப் புறப்ப
ட்டதைப்போலத் தான்கேட்டசங்கதியை அடக்காமல்வெளியிலேகொ
ட்டிவிடுகிறவன்அதமனென்றும்நிச்சயித்து அந்தப்படியே அந்தந்த
ப்பதுமைகளுக்குமேல்எழுதி அனுப்பிவிடச்சொன்னான்இராயர்அதி
கசந்தோஷத்தையடைந்து பாச்சாவிடத்திற்கு அனுப்பிவிட்டார்.

௯-வது, பாச்சாவினுடையதாசியைவென்றது.

டில்லிபாச்சாவானவன் திரும்பியும் அப்பாஜிசாமர்த்தியத்தை
ப்பரிக்ஷிக்கும்பொருட்டாகப் பரதசங்கீதங்களிலே கெட்டிக்காரியா
கிய ஒருதாசியைஅழைத்து அவளுக்குவேண்டியதிரவியங்களைக் கொ
டுத்து நீ இராயர்சபைக்குப்போய் இன்னவிதமாக அவமானஞ்செய்
துவாவென்று அனுப்பினான் அவள் அப்படியேசம்மதித்து இராயர்ச
பைக்குவந்துசபையாருக்கும் இராயருக்கும் அநேகவிதமானநாட்டி
யங்களைச்செய்துஅநேகவிதமானகீர்த்தனைகளைப்பாடினாள் இராயரு
க்கு அவள்மேலே அதிகவிசுவாசம்பிறந்து உனக்கு வேண்டுவதைக்
கேளு அதையாதொருதடையுமில்லாமல்கொடுப்பேனென்றார் அதை.

க்கேட்டுச்சத்தியசுரூபியாகிய என்ஆண்டவரே எனக்குமற்றொன்றும் வேண்டுவதில்லை உங்கள் சிங்காசனத்தின்மேலேஒருதரம்மலபாதைசெய்யும்படியாக ஒருவரமாத்திரம் அனுக்கிரகஞ்செய்யவேணுமென்று கேட்டாள் இராயர் அந்தச்சொல்லைக்கேட்டு மிகவும்விசனத்தையடைந்து சற்றுநேரம் ஆலோசித்து தான் சொல்லிவிட்ட சொல்லைக்காப்பாற்றவேணுமென்றுதீர்மானித்து நீகேட்டவரத்தைக்கொடுத்தேன் நாளைக்குவந்து அப்படியேசெய்யென்று அவளை அனுப்பிவிட்டு அப்பாஜியை அழைப்பித்து நடந்தசங்கதியைச்சொன்னார் அப்பாஜி நீங்கள் இதற்கு அஞ்சவேண்டுவதில்லை நான்ஒருபாயஞ்செய்து அந்த தாசியை துரத்திவிடுகிறேனென்று மறுநாளுதயத்துக்குஅந்ததாசிவந்தவுடனே அவளைப்பார்த்துநீஇந்தச்சிங்காசனத்தின்மேலே இராயரவர்கள் உத்தரவுகொடுத்தபடிமலபாதைமாத்திரஞ் செய்யவேணுமேயல்லாமல்ஜலபாதைமுதலானதுகள்செய்வாயேயானால் உனக்குச்சிரச்சேதம்வருமென்றுசொன்னான் அப்பாஜிசொன்னபடிசெய்வதுமுடியாதகாரியமாயிருந்தபடியால் அவள்வெட்கி அவமானப்பட்டுப்போய் விட்டாள் இராயர்அதைக்கண்டு அளவற்றசந்தோஷத்தையடைந்தார்.

௰-வது, பாச்சாவின்மந்திரியைவென்றது.

ஒருமுரட்டுத்துலுக்கச்சேவகன் மழைக்காகஒருவீட்டுத்திண்ணையிலேவந்து உட்கார்ந்தான் அவன்பக்கத்திலே ஒரு க்ஷயரோகிவந்து உட்கார்ந்து இருமினான் அந்தத்துலுக்கன் அடா இங்கே இருமாதேயென்றான் மறுபடியும்இருமினான் அந்தமுரடன்கோபத்துடனே கத்தியை உருவிக்கொண்டு அந்தநோயாளியை ஒரேவெட்டாகத்துண்டித்தான் அதைக்கண்டுசமீபத்திலிருந்தவெல்லாருங்கூடிப்பிடித்துக்கொண்டுபோய் இராயரிடத்திலே ஒப்பித்தார்கள் இராயர் அவனை ஏன்வெட்டினாயென்றுகேட்டார் அவன்இருமாதேயென்று சொன்னேன் என்பேச்சைத்தள்ளிக்கொண்டு இருமினான் அதினாலே வெட்டிப்போட்டேனென்றான் இராயர்இந்தமூடத்தனமானபேச்சைக்கேட்டுச்சிரித்துஅப்பாஜியைப்பார்த்துஇவனுக்குஎன்ன தண்டனைவிதிக்கலாமென்றுகேட்டார் இவனைஒன்றுஞ்செய்யாமற்காவலில்வைத்து நாள்தோறும இரண்டுசேர்மாமிசமும் ஒருசேர்நெய்யும் அதற்குத்தக்க சாமான்களுங்கொடுத்துச்சாப்பிட்டுக்கொழுப்பேறும்படிசெய்துவந்தால் நல்லதருணத்திற்குஉதவுவானென்றுசொன்னான் அப்படிசெய்துக்கொண்டுவருகிறகாலத்தில்ஒருநாள்பாச்சாவானவன் தன்னுடையமந்திரிகளைநோக்கிமதியூகியாகிய அப்பாஜியினுடைய வல்லமையினாலேராயர்நமக்குகீழ்ப்படிந்துபகுதிகட்டாமல்இருக்கிறான் அவனைச்செயிக்கிறதற்குயாருக்காவதுவல்லமை உண்டாயிருந்தால் சொல்லுங்களென்று கேட்க அவர்களில்ஒருவன்நான் ஜெயித்துவருகிறேனென்றுசொல்ல அவனுட

னேதன்னுடைய திரளானசேனைகளைக்கூட்டி இராயனைச்செயித்துவ
ரும்படியனுப்பினான் அவன் இராயருடையபட்டணத்திற்குச்சமீபத்தி
ல்வந்திறங்கினான் இந்தச்செய்தியைத்தூதர்களாலே ராயருக்குத்தெரி
வித்தான் அப்போது இராயர்தம் மருகிலிருந்த அப்பாஜியைப்பார்த்து
இவன் ராக்ஷசனைப்போல மகாதுஷ்டனும்மிகுந்தவுபாயக்காரனும்
அதிகசேனைகளோடேகூடிவந்திருக்கிறானே இப்படிப்பட்ட விபரீதம்
ஒருநாளுமில்லையே இதற்கென்னசெய்யலாமென்றுகேட்டார் அதற்
கு அப்பாஜி முன்னாலேகொழுப்பேறவைத்திருந்த முரட்டுத்துலுக்கனை
அழைப்பித்து நான் எவ்வளவு இப்பஞ்சையின்மேலே இப்படியாகத்
தண்டெடுத்துக்கொண்டுவரலாமா நான் பகுதிப்பணத்தைச்செலுத்
திப்போடுகிறேனென்று இராயனைக்கொண்டு சமாதானக்கடிதமெழு
திவித்து அந்தமுரடன்கையில்கொடுத்துப்பாச்சாவின் மந்திரியினிட
த்திற்கு அனுப்பினான் அவன் அந்தச்சமாதானக்கடிதத்தைக்கையிற்பி
டித்துக்கொண்டுபோய் மந்திரிகையிலேகொடுத்தான் அந்தமந்திரிவா
ங்கிப்படித்துப்பார்த்து எவ்வளவுஞ்சௌரியமில்லாத இந்தப்பஞ்சை
யின்மேலே தண்டெடுத்தா நீதாமென்று இராயனை இகழ்ந்துக்காறி
ழேஉமிழ்ந்தான் அந்தமுரட்டுத்துலுக்கன் தன்னை நீர்தித்துக்காறிஉமி
ழ்ந்தானென்று எண்ணிக்கொண்டு தன்கத்தியினாலே மந்திரியை இர
ண்டுதுண்டாகவெட்டிப்போட்டான் அவன்பக்கத்தில் இருக்கிறவர்க
ள் அந்தமுரடனை வெட்டிப்போட்டார்கள் மந்திரியிறந்தும்பாகவே
தண்டுமுறிந்தோடிப்போய்விட்டது இராயர் அப்பாஜி யுக்தியைமிக
வும் புகழ்ந்துகொண்டாடினர்.

௰௧ - வது, அப்பாஜி இராயனைமீட்டுக்கொண்டுவந்தது.

பாச்சாவானவன் அப்பாஜி துணையாயிருக்கிறவரைக்கும் இரா
யனைச் சண்டைபண்ணிவெல்லக்கூடாது ஆகையால் மோசஞ்செய்
துவெல்லவேணுமென்றுநினைத்து விலையுயர்ந்த ஆயிரங்குதிரைகளு
டன் ஆயிரம் சேவகர்களை ஆயுதங்களை மறைத்துக்கொண்டு அக்கு
திரைகளைவிற்கிறவர்களைப்போலப் போய்மோசஞ்செய்து இராயனை
ப்பிடித்துக்கொண்டு வரும்படி அனுப்பினான் அவர்கள் அந்தக்குதி
ரைகளைக்கொண்டுபோய் இராயர் பட்டணத்திற்கு காதவழிதூரத்தில்
இறங்கி இராயருக்குசமாச்சாரம அறிவித்தார்கள் இராயர்ஒருநாள்சா
யங்காலம் சிலபேர்குதிரைப்பரிக்ஷைக்காரரை இட்டுக்கொண்டுவந்துகு
திரைகளைப்பார்த்து இந்தக்குதிரைகள் என்னவிலையென்றார் ஒவ்வொ
ருகுதிரை ஆயிரம்வராகன் எல்லாம் ஒரேமாதிரிநடையாகையால் ஒ
ரேவிலைதான் நீங்கள் பரிக்ஷைபண்ண வேண்டுமானால் ஒருகுதிரையி
ன்மேலேறிக்கொண்டு சவாரிபண்ணுங்கள் மற்றகுதிரைகளையெல்
லாம் அதற்குச்சரியாக விட்டுக்கொண்டு வருகிறோம் பாருங்களென்

ரூர்கள் அப்படியே ஒருகுதிரையின்மேலேறிக்கொண்டு சவாரிவிட்
டார் மற்றக்குதிரைக் காரர்களெல்லாம் அவனவன் குதிரைமேலேறிக்
கொண்டு நாலுநாழிகைவழிபோன பின்பு இராயரை ஒருபல்லக்குள்
ளே எடுத்துப்போட்டுக்கொண்டு பாச்சாவிடத்திற்குக்கொண்டுபோ
ய்விட்டார்கள் அப்பாஜி அதைக்கேள்விப்பட்டு அதிகவிசனத்தையடை
ந்து இதற்கு என்னசெய்வோமென்று ஒருபாயந்தனக்குள்ளே ஆலோ
சித்து அறிந்து பயித்தியக்காரனைப்போல வேஷம்போட்டுக்கொண்டு
பாச்சாவின்பட்டணத்திற்குள்ளேபோய் நானே அப்பாஜி எங்கள் இரா
யரையிட்டுக்கொண்டு பாச்சாவைப்பிடித்துக்கொண்டுபோக வந்திருக்
கிறேனென்று எல்லாருங் கேட்கும்படியாகச்சொல்லி ஒகோவென்று
கூவி எழும்பிக்குதித்துக்கொண்டு திரியத்தொடங்கினன் இப்படியே
பாச்சாவின்சபைக்கு முன்னேயும் அரண்மனைக்குமுன்னேயும் அவர்ச
வாரிபோகிறவிடங்களிலேயும் மந்திரிமுதலானவர்கள் வீட்டிற்குமுன்
னேயும்மற்றும்பலவிடங்களிலேயும் சொல்லிக்கொண்டு திரிகையிலொ
ருநாள்பாச்சாவானவன் இவன் உண்மையாகவே பயித்தியக்காரனோஅ
ல்லது திருட்டு வேஷக்காரனோ இதைபரிக்ஷிக்க வேண்டுமென்கிறதாக
ச்சேவகர்சிலரை இவன் எங்கேசாப்பிடுகிறான் இவன் அறியாமலிவ
ன்பின்னேபோய் சோதித்துவாருங்களென்று அனுப்பினன் வேஷ
க்காரன் இராத்திரி பத்துநாழிகைக்குமேலே பிச்சையெடுத்த அரிசி
யையும் ஒருபாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு சுடுகாட்டுக்குப்போ
ய் ஒரடுப்புவைத்துப் பிணம்வேகிற கொள்ளியினலே சோறாக்கிக்
கொண்டிருக்கும்போது கோட்டுவாவரக்கண்டு விந்தலே நீதி ஆவி
ளிப்புபட்டது பென்கிறவாக்கியப்பிரகாரம் வேவுகாறர்கள்வந்து யிரு
ப்பார்களென்று புத்தியினல்தெரிந்து அங்கேயும்அப்படியே கூவிச்
சோற்றுப்பாத்திரத்தை உடைத்துவிட்டு ஓடிப்போனன் அச்சேவகர்
போய்பாச்சாவுக்குத்தெரிவிக்க பயித்தியக்காறனென்றே நிச்சயித்து
க்கோண்டான்பின்பு அப்பாஜி ஒருபெரியகப்பலின்மேலேசிலவிலையுய
ர்ந்தஇரத்நங்களை ஏற்றிக்கொண்டு விக்கிரயத்துக்குகொண்டுவருகிறது.
போலக்கொண்டுவரும்படி எழுதியனுப்பினன் அப்படியேகொண்டுவ
ந்துகப்பலில்வந்தவர்கள்சிலரத்நங்களை எடுத்துக்கொண்டுபாச்சாவிடத்
திற்குப்போய்க்காண்பித்தார்கள் பாச்சாரத்நபரிக்ஷைக்காரரைக்கொண்
டுமதித்தவிலைக்குஅவர்கள் அதிகமாகவிலைசொல்லிஇப்படிப்பட்டரத்ந
ங்களைவிலைமதிக்க இராயர்ஒருத்தருக்கேதகுமேயல்லாமல் மற்றவர்க
ளுக்குத்தகுமோவென்றார் அதைப்பாச்சாகேட்டுஉங்களிடத்திலின்னு
மிருக்கிறரத்நங்களையெல்லாங்கொண்டு வாருங்களென்றான் அதற்குவர்
த்தகர் நாங்கள் விஸ்தாரம் ரத்நங்கள் கொண்டுவந்திருக்கிறபடியால் நீங்
களே அங்கேவந்தால்பார்த்து உங்களுக்குவேண்டியதுகளை எடுத்துக்

கொண்டுவரலாமென்றார்கள் அப்படியேஆகட்டுமென்று பாச்சா இராயனையும் இன்னுஞ்சிலரத்நபரிக்ஷைக்காரனையும் இட்டுக்கொண்டு கப்பலுக்குப்போனார் பயித்தியக்காரனும் பாச்சாவின்பின்னே தன்வழக்கப்படி சொல்லிக்கொண்டு கூடப்போய்க் கப்பலேறி அங்கேயும் அப்படியே கூவிக்கொண்டிருந்தான் அந்தத்தருணத்தில் கப்பற்காரர்கள் லங்கரைத்தூக்கிப் பாயைவிரித்து விட்டார்கள்கப்பல் இராயர் சீமையில்வந்துசேர்ந்தது பாச்சாவை இராயர் அரண்மனைக்கு இட்டுக்கொண்டுபோய் வெகுமரியாதைகள்செய்து சிலநாள் வைத்துக் கொண்டிருந்தார் பாச்சாதனக்குச்செய்த மோசத்தையறிந்து அப்பாஜி புத்தியுக்திகளை மெச்சிக்கொண்டு இராயனைப்பார்த்து இனிமேல் உன் சோலிக்குவருகிறதில்லையென்று உத்தரவுகொடுத்துவிட்டுப்போய்விட்டார் இராயர் அப்பாஜியைத்தழுவிக்கொண்டு நீயே என்பங்குக்குத் தெய்வமென்றுகொண்டாடினார்.

௰௨-வது, கற்றறிமோழை முதலானபொருள்களைச்சம்பாதித்தது.

ஒருநாள்இராயர் தமதுமந்திரியாகிய அப்பாஜியை அழைத்து கற்றறிமோழை கைந்நட்புச்சேவகன் தாசியிற்சதி சாதியிற்தாசி ஊர்திரிகின்றநாய் மனிதரிற்கழுதை சிம்மாசன மேருகின்றகடா இவ்வேழும் உன்னாலேசம்பாதிக்கக்கூடுமாவென்றுகேட்டார் அதற்குஅப்பாஜிசம்மதித்து உத்தரவுபெற்றுக்கொண்டுவேறொரு இராஜாவின் பட்டணத்தில் ஒருபண்டிதரிடத்திலேபோய்நாலாயிரம்வராகன் கொடுத்துநான்கேட்குஞ்சமயத்தில்கொடுவென்றுசொல்லிப் பின்பு ஒரு தாசியினிடத்திற்குப்போய் ஓர்ராத்திரிபடுக்கைக்கு நீ என்னகேட்பாயென்றுகேட்கத் தாசி ஒருராத்திரிக்கு ஆயிரம்வராகன்கொடுக்கவேணுமென்றாள் அதற்கு அப்பாஜிசம்மதித்துக்கொடுத்துப்படுக்கைவீட்டுக்குப்போகும்போது அவளுடனே நான் உன்னைக்கூடினவுடனே இந்த கட்டாரியினாலே உன்னைக் குத்திக்கொன்றுபோடுவேனென்று சொன்னான் அதற்குத்தாசி ஆயிரம்வராகனவாங்கிக்கொண்டு என்னுடைய தேகத்தை இந்தராத்திரிக்குஉமக்குச்சுவாதீனப்படுத்தினதினாலேஉம்முடைய இஷ்டப்படிசெய்யலாமென்றாள், அப்பாஜி எனக்கு இஷ்டமானநாளில்வருவேனென்றுசொல்லி அவளிடத்திலிருக்கும் நாய்க்குத்தன்கையிலிருந்த பலகாரத்திலே கொஞ்சம்போட்டு அப்புறம்இராஜவீதியிலே போகும்போது அப்பட்டணத்து இராஜாவின்குமாரத்தி அப்பாஜியைக்கண்டு அவன் அதிரூபவானாகவிருக்கையால் அப்பொழுதேதகப்பனிடத்திற்குப்போய் எனக்குஇஷ்டமானபுருஷனைநான் கலியாணம் பண்ணிக்கொள்ள நீர்சம்மதித்தபடி இப்பொழுதுநான்கண்டபுருஷனுக்கு என்னைக்கலியாணம் பண்ணிக் கொடுமென்றுசொல்லத் தகப்பன் அப்படியே அப்பாஜிக்குத் தன்குமாரத்தியைக் கலி

ர்ணம் பண்ணிக்கொடுத்தான் இராத்திரியிற் படுக்கைக்குப் போன
போது பெண்சாதியோடு உன்னோடு கூடினவுடனே இந்தக்கட்டா
ரியினாலே உன்னைக்குத்திப்போடுவேனென்று சொல்ல அவள் கூகூ
வென்று பயந்துகூவினாள் அவள்தகப்பனாகிய இராஜா அந்தக்கூச்ச
லைக்கேட்டுத் தன்குமாரத்தியினிடத்திற்குவந்து என்னவென்றுவிசா
ரிக்க அவள் தன்புருஷனாகியஅப்பாஜிசொல்னதைச்சொல்லினாள் அப்
பொழுது இராஜா மந்திரியுடனே இதற்கென்னசெய்டலாமென்று
ன் மந்திரிஅவனைச்சிரச்சேதம்பண்ணவேண்டுமென்றான் அரசனும் அப்
படியேகொலைசெய்வோனுக்கு உத்தரவுகொடுத்தான் அவன் கட்டியி
ழுத்துக்கொண்டுபோகையில் அந்தச்சேவகருக்கு அனேகஉபசாரஞ்
சொல்லி இந்தராஜாவுடனே ஒருபேச்சு ருசுவிலேபேசவேணும்அத
ற்குச்சாவகாசங்கொடுங்களென்றுகேட்டான் கூடாதென்று இழுத்துக்
கொண்டுபோனார்கள் பண்டிதன்வீட்டண்டையிலேபோம்போது அ
வனை அழைத்து என்னுடைய ஆயிரம்வராகனையும் கொடுவென்றுகேட்க
இவனுக்கு சிரசாக்கினைவந்ததையறிந்து உன்னைக்கண்டவனார் உன்வ
ராகனைக்கண்டவனார்போவென்றான் அப்புறம்தாசிவீட்டண்டையிலே
போம்போது அங்கிருந்ததாய் அப்பாஜியைப்பார்த்து வீட்டுக்குள்
ளேநுழைந்து தாசிகைகாலைச்சுற்றிசுற்றிக்கூவித் தெருவில் அழைத்து
க்கொண்டுவந்தது அந்தத்தாசி அப்பாஜியைப்பார்த்து நடந்தவர்த்த
மானங்களைவிசாரித்து அந்தச்சேவகருக்கு இரண்டுநாழிகைவரைக்கு
ம்கொல்லாமல்வைத்திருக்கும்படியாகப் பேருக்கு நூறுநூறுவராக
ன்கொடுத்து இராஜாவிடத்திற்குப்போய்நீங்கள்கொல்லஉத்தரவுகொ
டுத்தவனை அழைப்பித்துஅவன்வாய்பிறப்புவிசாரித்துச்செய்தால் நல்
லதென்றாள் அப்படியே இராஜா அவனையழைப்பித்து விசாரிக்குமள
வில் இராயர் அருமையான சிலபதார்த்தங்களைச் சம்பாதிக்கும்ப
டி அனுப்பினார் என் அதிர்ஷ்டவசத்தினாலே உமதுபட்டணத்திலே
தானே அவைகளெல்லாங்கிடைத்ததுகள் ஆகையால் இந்தசமாசாரத்
தை இராயரவர்களுக்கு அறிவிக்க உத்தரவுகொடுமென்று கேட்டான்
அவ்வரசன் இராயரால் அனுப்பப்பட்டவனென்றபடியால் அஞ்சி
அப்பாஜிக்கு வெகுமரியாதைசெய்து அனுப்பினான் அப்பாஜிஇராயரி
டத்துக்குப்போய் நடந்தசங்கதியெல்லாம் ஆதியந்தமாகச்சொல்லி
அவ்வரசன்முதலாகிய எழுபேரையும் அழைப்பித்து இப்பண்டிதன்
சகலமுங்கற்றிருந்தும் என்கையில்வாங்கினபணத்தைச்சமயம்பார்த்து
மோசஞ்செய்தபடியால்கற்றறிமோழையாகும் இந்தத்தாசிவீட்டுநா
ய் என்கையிலிருந்து ஒருதரங்கொடுத்தபலகாரத்தின்நன்றிமறவாம
ல் உதவிசெய்தபடியால் கைநன்றிமறவாதநாய் இந்தத்தாசிகுலஸ்
திரீயல்லாதிருந்தும் ஆபத்திலே என்தலையைக்காத்தபடியால் தாசியி

ந்சாதியாகும் இவ்வரசன்மகள் குலஸ்திரீயாகவிருந்தும் தலைக்குஆக்கி
னைநேரும்படியாகச்செய்தபடியால் சாதியிற்ருசியாகும் இச்சேவகர்
நான் என்னசொல்லியுங்கேளாமல் லஞ்சம்வாங்கிக்கொண்டு கேட்டப
டியால்ஊர்திரிகின்றநாயாவார் இம்மந்திரிமனுஷனாயிருந்தும்என்வா
ய்ப்பிறப்பைக்கேளாமல் கொல்லச்சொன்னபடியால் மனிதரிற்கழு
தையாகும் இவ்வரசன்பகுத்தறிவில்லாமல் சிம்மாசனத்தின்மேலேறி
யிருக்கிறபடியால் சிம்மாசனமேறுகிறகடாவாகும்என்றுசொன்னான்
இதுகளைக்கேட்டு இராயர் அதிகசந்தோஷத்தையடைந்தார்.

### ௰௩-வது-மனக்கவலை புலக்குறைச்சலென்றது.

இராயருடைய பட்டணத்தில் தாயால் யாதொருகுறைவுமில்லாமல் போஷிக்கப்பட்டுக்கொண்டு யாதொருகவலையும்இல்லாமலிருந்த ஒருவாலிபனானவன் தனக்குமுன்வருகிறயானைகளுடையகொம்புகளைத் தன்னுடைய கைகளினாலே பிடித்துப் பத்துமார்தூரம்பின்னிட்டுப்போகும்படி நெட்டிவிட்டுப்போகிக்கொண்டிருப்பான் ஒருநாள் இராயர்சவாரிபோகும்போது அவன்ஒருயானையைநெட்டித்தள்ளிவிட்டுப்போகிறதைப்பார்த்து அப்பாஜியைநோக்கி இவனிப்படிசெய்வதென்னகாரணம்இவ்வளவுவல்லமைஇச்சிறுபயலுக்கெப்படியிருக்கலாமென்றுகேட்கக் குடும்பக்கவலை எவ்வளவுமில்லாமையால் இவ்வளவுபலத்துடனிருக்கிறானென்று சொன்னான். பின்பு அவ்விருவரும் அந்தப்பிள்ளையாண்டானுடைய தாயாரையழைப்பித்து உன்னுடைய பிள்ளையாதேனும் சமுசாரகாரியங்களை நிர்வாகம்பண்ணிக்கொண்டுவருகிறானாவென்று கேட்டார்கள் அவள் எனக்கு ஏகபுத்திரனாகையால் அவனுக்குயாதொருகவலைக்கும்இடம்வையாமல்போஷித்துக்கொண்டுவருகிறேனென்றாள் அப்படிசெய்வது நல்லதல்ல அதுபின்னடிக்கு வருத்தத்துக்குஏதுவாயிருக்கும் ஆகையால்அவனுக்குக்கொஞ்சங்கொஞ்சமாகக்கவலையுண்டாக்கவேணும் இன்றைக்குஅவனுக்குச்சாப்பாடு போடும்போது நாளைக்கு உப்பில்லைகொஞ்சம் உப்பு சம்பாதித்துக்கொண்டுவாவென்றுகேளென்றுசொல்லி அனுப்பிவிட்டார்கள் அவள் அப்படியேதன்குமாரனுக்குச்சொன்னாள்அவள் அதுசொன்னதுமுதற்கொண்டு இதைநான்எப்படிசம்பாதிப்பேனென்று பிள்ளையாண்டான் அதிக கவலைபடைந்துகொண்டிருந்தான். மறுநாள் அந்தவாலிபன் தெருவிலேபோகும்போதுஒருயானையை அவனுக்குஎதிரில்வரும்படியாகச்செய்யஅவன்அதன்கொம்பைப்பற்றிநெட்டஅதுஇவனைத்தும்பிக்கையினாலேதூக்கிப்போட்டுவிட்டுப்போய்விட்டது அதை அப்பாஜி இராயருக்குக்காண்பித்ததுவுமன்றியில்அவனுடைய தாயையழைப்பித்து நடந்தசங்கதிகளைவிளங்கச்சொல்லிமனக்கவலையேபலக்

குறைவுக்குக்காரணமென்று அறிவித்தான் அப்பாஜியினுடையயுக்தியைக்குறித்து இராயர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

௰௪-வது-குறிப்பிற்சொன்னவைகளை வெளிப்படுத்தியது.

இராயரும் அப்பாஜியும் ஒரூர் வழியிற்போகிக் கொண்டிருக்கும்போது ஒருவன் உழுதுகொண்டிருந்த கழனியைப்பார்த்து மூன்றுஸ்திரீகளில ஒருத்தி இது முகத்துக்காமென்றாள் மற்றொருத்தி இதுவாய்க்காமென்றாள் வேறொருத்தி இது பிள்ளைக்காமென்றாள் இவர்களிப்படி சொன்னதுகளின்பயன் என்னவென்று அப்பாஜியைக்கேட்க அப்பாஜி முகத்துக்காமென்றது மஞ்சள் பயிரிடுதற்கானநிலமென்றும் வாய்க்காமென்றது வெற்றிலைக்கொடி நடுகிறதற் கானநில மென்றும் பிள்ளைக்கா மென்றது தென்னம்பிள்ளை வைத்தற்கானநில மென்றும் சொன்னதுகளாமென்று சொன்னான் அதைக்கேட்டு இராயர் அந்தஸ்திரீகள் மூன்றுபேரையும் அழைப்பித்து அவர்கள் வாய்ப்பேச்சையும்விசாரித்துஅறிந்து மிகவும்மனமகிழ்ந்தார்.

௰௫-வது, தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு தனக்கில்லது உலகத்திற்குமில்லையென்றது.

ஒருநாள் இராயர் தனக்குக்ஷவரம் செய்துகொண்டிருக்கிற அம்பட்டனைப்பார்த்து இந்தப்பட்டணத்தில்எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறார்களாவென்றுகேட்க அதற்கு அவன் எவ்வளவு எளியவராக இருக்கிறவர்களுக்குள்ளேயும் எலுமிச்சங்காயளவு பொன்னுக்குக்குறைச்சலுள்ளவர்கள் ஒருவருமில்லை என்றான் சமீபத்திலிருந்த அப்பாஜியைப்பார்க்க அப்பாஜிசற்றுநேரம்யோசித்துப்பார்த்துஇராயருக்கு அம்பட்டன்மறைவிலகால்க்ஷவரம்செய்யட்டுபோனபோது தன்னுடைய ஊழியக்காரனொருவனைவிட்டு அவன்அடப்பத்தைச்சோதித்து அதிலிருந்த எலுமிச்சங்காயளவுபொன்னை எடுத்து அம்பட்டன்போனபின்பு இராயருக்குக்காண்பித்து இதனாலேதான் அவன்தனக்குள்ளது உலகத்திற்குமுண்டு தனக்கில்லது உலகத்திற்குமில்லையென்றுநினைத்துஅப்படிசொன்னானென்று தெரிவித்து அதைப்பத்திரப்படுத்திவைத்துஇன்னொருக்ஷவரத்துக்குஅவனை இப்போதுகேட்டதுபோலக்கேட்டால்அப்போது அவன்சொல்லுகிறசங்கதியும் தெரியலாமென்றான் இராயர்அப்படியே அவனை மறுக்ஷவரத்துக்குக்கேட்டபொழுது எப்படிப்பட்ட மகாராஜருக்குள்ளேயும் மேல்டம்பமேயல்லாமல் எலுமிச்சங்காயளவுபொன்னுடையவர்கள் ஒருவருமில்லையென்றான். பின்பு இராயர் அப்பாஜியைப்பார்த்து உன்னைப்போலும் விவேகமுள்ளமந்திரி எந்ததேசத்திலுங்கிடைப்பதுமிகவும்அரிதென்றுமெச்சி அம்பட்டனுக்கு அவன்பொன்னைக்கொடுத்துவிட்டார்.

௪௬-வது-கற்றறிமூடர்களைக்காட்டியது.

ஒருதேசத்திலேபத்துவயதுமுதலாகமுப்பதுவயதுவரைக்கும் தர்க்கசாஸ்திரம் ஒன்றையேபடித்த ஒருதர்க்கிகனும் வியாகரணசாஸ்திரம் ஒன்றையேகற்ற ஒருவையாகரணியும் பரதசாஸ்திரம்ஒன்றையேஅப்பியாசித்த ஒருபாடகனும் ஜோதிர்சாஸ்திரம் ஒன்றையேவாசித்த ஒருஜோஸ்யனும் வைத்தியசாஸ்திரம்ஒன்றையேஆராய்ந்த ஒருவைத்தியனுமாகிய இவ்வைந்துபேரும் கூடிக்கொண்டுதேசாந்தரம்போய்ப் பணம்சம்பாதித்து கலியாணம்பண்ணிக்கொள்ள ஆலோசிக்கும்போது வித்யாநகரில்இராயர்வித்துவான்களுக்கு வேண்டியபடிகொடுக்கிறாரென்று அவரைக்காணும்படியாக அதுவரைக்கும் துணைகூட்டிக்கொண்டுவந்து துணையாகவந்தவர்களை அனுப்பிவிட்டு இராயருடையசபைக்குப்போய் அவரவர் தன்தன்வித்தையின் வல்லபத்தைக்காண்பித்தார்கள் இராயர் அப்பாஜியைப்பார்த்து இவர்கள் மிகவுங்கெட்டிக்காரர்களென்று புகழ்ந்தார் அதற்குஅப்பாஜிஇவர்கள்வித்தையிலே எவ்வளவுகெட்டிக்காரர்களோ அவ்வளவு லௌகீககாரியங்களிலேமூடர்களாயிருக்கலாமென்று நினைக்கிறேனென்றான் இராயர் அந்தமூடத்தனத்தை எனக்குக்காட்டவேணுமென்றுகேட்க அதற்குஅப்பாஜி அப்படியேகாண்பிக்கிறேன இன்றைக்கு இவர்களைச்சாப்பிட்டுவரும்படி அனுப்பிவையுங்களென்றான் அப்படியே இராயர் அனுப்பிவிட்டார் பின்பு அப்பாஜி அவர்களையறியாமல் நடக்கிறகாரியத்தைப்பார்த்துவரச்சொல்லிச் சிலசேவகரையனுப்பினான் அவ்வைந்துபேர்களுக்குள்ளே தர்க்கிகன்நெய்க்குப்போய் ஒருதொன்னையிலேவாங்கிக்கொண்டுவரும்போது கையிலேயிருக்கிற நெய்த்தொன்னையைப்பார்த்து நெய்க்குத்தொன்னை ஆதாரமோ தொன்னைக்குநெய் ஆதாரமோவென்று தர்க்கயுக்திகளைக்கொண்டு நெடுநேரம்யோசித்துப்பார்த்து சந்தேகந்தீராமையால்தொன்னையைக்கவிழ்க்கநெய்முழுதும் ஒழுகிப்போனதைக்கண்டு நெய்க்குத் தொன்னையே ஆதாரமென்றுநிச்சயித்துக்கொண்டுவந்துசேர்ந்தான் வியாகரணவித்துவான் தயிர்வாங்கப்போய் ஓர்இடைச்சி தயிரோவென்று கடைசி ஒகாரத்தைப் பத்துமாத்திரை அளவாக நீட்டி கூவுகிறதைக்கேட்டு இந்த இரண்டுமாத்திரையுள்ள ஒகாரத்துக்கு அதிகமாத்திரை வியாகரணத்துக்கு விரோதமாக உச்சரிக்கிற பைத்தியக்காரியென்று நெடுநேரம் அவளுடனே சண்டைபோட்டுக்கோபித்துக்கொண்டு தயிர்வாங்காமல்வந்தான் பாடகன் உலையில் அரிசியைக்கழுவிப்போட்டு அது தளதளவென்றுகொதிக்கிற ஓசையைக்கேட்டு அதற்குச்சரியாகத் தாளம்போட்டு அத்தாளத்திற்கு ஒத்துவராமையினாலே கோபங்கொண்டு சோற்றுப்பானையை உடைத்துவிட்டான் ஜோதிடசாஸ்திரி இலைபறிக்கப்போய்

ட்பார்திமரத்திலே ஏறும்போதுவெளிசொன்னதைக்கேட்டு ஏறுகற்கும்இறங்குதற்கும்தடையாயிருக்கிறதையறிந்து வெகுநேரம் அங்கே தானேயிருந்து பின்புசும்மாவந்துவிட்டான். வைத்தியன் கறிகாய்வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போய் தன்னுடையவைத்தியநூற்படி அந்தந்தக் கறிகாய்களிலிருக்கிறதோஷத்தையறிந்து அதுகளையெல்லாந் தள்ளிவிட்டு வெறுங்கையனுப்பிவிட்டான். இந்தசமாசாரமெல்லாம் தான் அனுப்பின மனுஷரால் அறிந்து அப்பாஜி இராயனாகக்கொண்டு சேவகனாவிட்டு அவ்வைந்துபேரையும்அழைப்பித்துவிசாரிக்குமளவில் நடந்தசங்கதிகளையெல்லாம் அவர்கள்சொல்லக்கேட்டு இராயர்ஆச்சரியப்பட்டு அப்பாஜியைப்புகழ்ந்துகொண்டாடினார்.

௰எ-வது குறிப்பாகச்சொன்ன உபமானங்களை வெளிப்படுத்தியது.

ஒருநாள் இராயர் வேட்டைக்குப்போனவிடத்திலே தமக்கு வெயிலினாலுண்டாகிய சிரமந்தீர ஒருகுளக்கரையில் உட்கார்ந்திருக்கும்போது வழிப்போக்கர்களாகிய மூன்றுபெண்களுக்குள்ளே ஒருத்தி காலுங்கழியும்ஒன்றடியென்றும்மற்றொருத்தி இறகும் இலையும் ஒன்றடியென்றும் பின்னொருத்தி வாயுங்கனியும் ஒன்றடியென்றும்பேசிக்கொண்டுபோனார்கள் அந்த மூன்றுபேர் சொன்னதுகளையும் இராயர்கேட்டு அவைகளின்பொருளை நெடுநேரம்ஆலோசித்தும் தமக்குத்தோன்றாமையினால் அரண்மனைக்குவந்து பின்பு சபையாரையெல்லாம்கேட்டுப்பார்த்தும் ஒருவருஞ்சொல்லமாட்டாமையினாலே அப்பாஜியை அழைப்பித்து அந்தவாக்கியங்களுக்குத்தாற்பரியம் என்னவென்றுகேட்டார். அவன்சற்றுநேரம் ஆலோசித்துப்பார்த்து அந்தப்பெண்டுகள் கண்ட ஆலமரத்திலிருந்த கிளியைக்குறித்துப்பேசியதுகளாக்கும் காலுங்கழியும் ஒன்றென்றது அக்கிளியின் காலையும் அம்மரத்தின்கழியையுஞ்சொல்லியதென்றும், இறகும் இலையும் ஒன்றென்றது அக்கிளியினிறகையும் அம்மரத்தினிலையையுஞ்சொல்லியதென்றும் வாயுங்கனியும் ஒன்றென்றது அக்கிளியின்வாயையும் அம்மரத்தின்கனியையுஞ்சொல்லியதென்றும் அறிவிக்க இராயர்கேட்டுச் சரிதானென்று மிகவும் சந்தோஷத்தையடைந்தார்.

௰அ-வது-விபசாரிமோசத்தைக்கண்டுபிடித்தது.

ஒருவன்ஸ்திரீகளைக்கலியாணஞ்செய்தால் விபசாரம்பண்ணுவார்களென்று வெகுநாள்வரைக்கும் கலியாணம் பண்ணாமலிருந்தான் ஒருநாள் ஒருவிபசாரிஅவனைக்கண்டு மற்றஸ்திரீகளைப்போலென்னை நினைக்காதே நான்கற்புடையவளாயிருப்பேனென்று தன்னிடத்தில் நம்பிக்கைவரும்படிசொன்னாள் அவள் வாய்மொழிகளை நம்பி அவளைக் கலியாணம்பண்ணிக்கொண்டான் சிலநாள்பொறுத்துத் தன்புருஷ

னுடனேநீவெளியிலேபோய்வருகிறவரைக்கும் கதவைத்திறவாமல்தா
ள்பூட்டியிருப்பதற்கும் நீவருகிறகுறிப்பையறிந்து கதவைத்திறந்து
வைப்பதற்கும் நீஇறைக்கிற ஏற்றத்தில்ஓர்மணிகட்டிவைத்தால்நலமா
யிருக்குமென்றுசொன்னாள். அதுநல்லயோசனையென்று அவன்அப்
படியேசெய்தான் அவள்மணியசைகிறவரைக்கும் எதிர்வீட்டிலிருக்கி
றஒருவனைஉள்ளேஅழைத்து ஏகபோகமாகவிருந்துகொண்டு மணிநி
ன்றால் அவனைவெளியிலே அனுப்பிவைத்துக்கொண்டிருந்தாள் ஒரு
நாள் இராயரும் அப்பாஜியும் அந்தவழியாகவரும்பொழுது ஏற்றத்
தில்மணிகட்டியிருக்கிறது என்னஆச்சரியமென்று அப்பாஜியைக்கே
ட்க அப்பாஜி இதோதெரியப்படுத்துகிறேன் அந்த விசித்திரத்தைப்
பாருங்களென்று ஏற்றத்தின்மேல் மிதிக்கிறவனை அழைத்து இவ்வேற்
றத்தில் மணிகட்டுகிறகாரணமென்னவென்று கேட்க அதற்கு அவன்
என்பெண்சாதி தன்கற்புக் க்குறைவுவராமல்நான்வீட்டுக்குவருவத
றிந்து கதவைத்திறக்கவும்மற்றவேளைமூடிவைக்கவும்செய்யச்சொ
ன்னதென்றான் அதுகேட்டுஅப்பாஜி என் எஜமானனுக்குத்தாகமாகயி
ருக்கிறது உங்கள்வீட்டுக்குப்போய்ஒருசெம்பிலேமோர்கொண்டுவா
வென்றான் அந்தமட்டுக்கும் ஏற்றம்நிற்குமே எப்படியென்றான் அந்
தமட்டும் நான்ஏறிமிதிக்கிறேன் நீபோய்க்கொண்டுவாவென்றான் அப்
படியே அப்பாஜியை ஏற்றத்தின்மேலேற்றிவிட்டுத் தான் வீட்டண்
டையிலேபோய்க் கதவைத்தட்டும்போது தன்பெண்சாதியும் எதிர்வீ
ட்டுக்காரனும் சரசம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்கதவைத்திறந்தா
ல் விபசாரந்தெரிந்துபோமென்று சீக்கிரத்தில் அந்தச்சோரபுருஷ
னை அங்கிருந்தபாயில்வைத்துச்சுருட்டி மோர்ப்பானையண்டையில்
சார்த்திவிட்டுகதவைத்திறந்தாள் இவன்சீக்கிரமாகமோர்கொண்டுவர
வேண்டுமென்கிற அவசரத்தில் செம்பையெடுத்துக்கொண்டுமோர்ப்
பானையண்டையிற்போய் அதின்மேலேசார்த்தியிருக்கிற பாயைத்தள்
ளிவிட்டுமோர்மொண்டான் அந்தபாய்க்குள்ளிருந்தமனிதன்திடீலெ
ன்றுகீழேவிழும்போது அவன்தலை அம்மிக்கல்லிலேபட்டு உடைந்த
து அவன்மிகவுங்கூச்சலிட்டான் அப்புறம் விசாரிக்கும்போது தன்
பெண்சாதிக்குவெச்சக்காரனென்றும் நெடுநாளாக இருவரும் கலப்
பாகவிருக்கிறார்களென்றும் அறிந்து விசனப்பட்டுக்கொண்டேமோ
ர்கொண்டுபோனான் அந்தமோரை இராயர்சாப்பிட்டு ஏனப்பா இந்
நேரமென்றுகேட்டார் அதைச்சொல்லுகிறதற்குவாய்வராமல் மரம்
போல நின்றான் நீஒன்றுக்கும்அஞ்சவேண்டாம் உள்ளத்தைச்சொல்
லென்றார் அப்புறம்தான்கலியாணம்பண்ணுமலிருந்தவிதமும்மறுப
டியும் பண்ணிக்கொண்டசங்கதியும் தன்பெண்சாதி தன்னைமோசஞ்
செய்யயோசித்துத்தன்னை ஏற்றத்தில்மணிகட்டச்சொன்னஉபாயமு

ம் தான்மோருக்குப்போகும்போது பிரத்தியக்ஷமாகத் தான்கண்டசா
க்ஷியுஞ்சொன்னான் அதைக்கேட்டு லோகத்திலே ஸ்திரீகளை நம்பக்கூ
டாது ஆகையால் விசனப்படாதேயென்று சொல்லிவிட்டு இராயரும் அ
ப்பாஜியும் அப்புறம்சற்றிநந்தாண்டின பிற்பாடு இராயர் மெச்சினே
னென்று அப்பாஜியைக்கட்டிக்கொண்டார்.

௰௬-வது-மாறுவேஷத்தைவென்றது.

டில்லிபாச்சாவானவன் இராயரிடத்திலிருக்கிற அப்பாஜியைத்
தம்மிடத்திற்கு அனுப்பவேண்டுமென்று இராயருக்குக்கட்டளையனு
ப்பினார் இராயர் அப்படியே அப்பாஜியையனுப்பினார் அப்பாஜி பா
ச்சாவைக்காணுகிறதுக்கு முன்னே பாச்சாபண்ணின உபாயமாவது
மற்றொருவனுக்குத் தன்னைப்போலேவேஷம்போட்டுத் தன்சிங்காச
னத்தில் உட்காரவைத்துத்தான்மந்திரிவேஷம்போட்டுக்கொண்டு மந்
திரிகள்வரிசையிலுட்கார்ந்திருந்தார் பின்பு அப்பாஜியைவரச்சொல்லியு
த்தரவுபண்ணினார் கண்டபோது அப்பாஜி மந்திரிவரிசையிலிருந்தபா
ச்சா முன்னே நின்று காணிக்கைவைத்து வணங்கிக்கொண்டான் பா
ச்சா அப்பாஜியைப்பார்த்து என்ன என்னவிதமாயறிந்தாயென்றார்
ஆண்டவனே சபையிலிருக்கிறவர்களுடைய பார்வைகளெல்லாம்தங்க
ள்மேலேவிழுந்திருந்ததினாலே தெரிந்துகொண்டேனென்றான்பாச்
சா அதைக்கேட்டு சந்தோஷப்பட்டு வெகுமதிசெய்து அனுப்பிவி
ட்டார் பிறகுபாச்சாஇப்படிப்பட்டமந்திரிஇராயருக்குஇருக்கிறதினா
லேதான் இராயர் மற்றவர்களைப்போலநமக்குப்பகுதிகட்டாமலும்ப
யப்படாமலும் இருக்கிறாரென்று தன்மந்திரிகளுடனே பேசிக்கொ
ண்டார்.

## இராயர் அப்பாஜிகதைமுற்றிற்று.

அத்தியாயம் இரண்டுக்கு கதைகள்-௪௰.

விநாயகர் துணை.

# கதா சிந்தாமணி.

மூன்றுமத்தியாயம்.

## தென்னாலுராமன்கதைகள்.

முதலாவது.

ஆசியக்காரனாகி இராயரைச்சார்ந்தது.

வடதேசத்திலே தென்னாலு என்கிற ஊரிலே இராமனென்று ஒரு
பிராமணப்பிள்ளைபிறந்திருந்தான். அவனை ஒருநாள் வீதியிலேகண்
ட ஒருசன்னியாசி இவனுடையரூபத்தையும் குணாதிசயத்தையுங்கண்

டு ஒருமந்திரத்தை உபதேசம்பண்ணி இந்தமந்திரத்தை மூன்றுகோடி
ஒருராத்திரியில் காளிகோவிலிலேபோய்ச்செபித்தாயானால் காளிஆயி
ரமுகத்துடன் உனக்குப்பிரத்தியக்ஷமாவாள் அப்போது நீ அவளைக்கண்
டு அஞ்சாமலிருந்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்ளென்றார்
இராமன் நல்லவேளை பார்த்துக்கொண்டு தன்னூர்ப்புறத்திலிருக்கிற கா
ளிகோவிலுக்குள்ளேபோய் இப்படி அந்தமந்திரத்தைச்செபம்பண்
ணினான். பத்திரகாளியானவள் ஆயிரமுகமும்இரண்டுகையுமாகப்பெ
ரிய ரூபத்தை எடுத்துக்கொண்டு பிரசன்னமானாள் அப்போதுமிகுந்
த தைரியமுடையவனாகி அந்தராமன் அவள்கோரரூபத்தைப்பார்த்து
அஞ்சாமல் நகைசெய்தான் காளி ஏண்டா நகைக்கிறாயென்றுகேட்
டாள் கேட்டதற்கு இராமன் அம்மா எங்களுக்கொருமூக்குக்கு இர
ண்டுகைகளிருந்தும் ஜலதோஷங்கண்டால் சிந்துகிறது வருத்தமாயி
ருக்கிறது ஆயிரமுகமிருக்கிறபடியால் ஒருவேளைஜலதோஷங்கண்டா
ல் இரண்டுகையினாலே இந்த ஆயிரமூக்குகளையும் எப்படிசிந்துவா
யென்றான் அதற்குப்பத்திரகாளி அடாஐயா நீ என்னைப்பார்த்துவி
கடம்பண்ணினபடியால் நீ இன்றுமுதலாக விகடகவியாகப்போகக்
கடவயென்றாள் ஆ-ஆ-நல்லவரங்கொடுத்தாய் அப்படிப்பார்த்தாலு
ம் விகடகவிதான் இப்படிப்பார்த்தாலும் விகடகவிதானென்றான் அ
தைக்கேட்டு இரக்கம்வந்து உன்னுடைய உபசரணைக்கு இராஜசபை
மெச்சும்படியான விகடகவியாயிருக்கக்கடவாயென்றுமறைந்துபோ
ய்விட்டாள். அதுமுதல் விகடம்பண்ணுகிறதிலே மகாசமர்த்தனாகி
ராயரிடத்திலேபோய்ச்சேர்ந்து ஜீவனம்பண்ணிக்கொண்டிருந்தான்

## உ-வது யானைக்காலில் இடறலுக்குத் தப்பித்துக்கொண்டது.

தென்னாலிராமன் ஒருநாள் ஆசியத்தினாலேவந்த குற்றத்துக்கு
இராயர்கோபஞ்செய்து அவனையானையின் காலிலே இடறும்படியாக
உத்தரவுகொடுத்தார் சேவகர் அவனைக்கொண்டுபோய் ஊருக்குப்பு
றத்திலே மைதானவெளியிலேகுழிவெட்டித்தலைதெரியும்படியாகப்பு
தைத்துத்தலையை இடறும்படியாக யானைகொண்டு வருகிறதற்குப்
போனார்கள் அந்தத்தருணத்திலே கூன்வளைந்த ஒருவண்ணான் அந்த
வழியாகப்போகும்போது என் ஐயா புதைக்கப்பட்டிருக்கிறாயென்று
கேட்டான் அதற்குத்தென்னாலிராமன் எனக்குநெடுநாளாகக் கூன்வ
ளைந்திருந்தது அதுநிமிரும்படியாக ஒருவைத்தியன் என்னை இங்கே
புதைத்துவைத்தான் எனக்குக்கூன் நிமிர்ந்துபோச்சுது என்னைத்தோ
ண்டி வெளியிலேவிட்டுப்பார்த்துக்கொள்ளென்றான் அந்தப்படியேவ
ண்ணான் செய்துபார்த்துக் கூன்இல்லாமல் இருக்கிறதைக்கண்டுஐயா
எனக்கும் கூனிமிரும்படியாகப் புதைக்கவேண்டுமென்றான் தென்னா
லிராமன் அவனைக்குழியிலேவைத்துக் கழுத்தளவாகப் புதைத்து மூ

ட்டையை எடுத்துக்கொண்டுவந்து இராயரைக்கண்டான் அண்டா ஆனையின்காலிலே இடறும்படியாகச்சொன்னேனே அதற்குத்தப்பி எப்படிவந்தாயென்றுகேட்டார் எனக்குப்பதிலாகவன்றான் இடறுண்ணும்படியாகச்சாக்கிரதை செய்துவிட்டு நான் அவன்மூட்டையை வாங்கிக்கொண்டுவந்தேனென்றான் அதைக்கேட்டு இராயர்நகைசெய்து அந்தக்குற்றத்தைமன்னித்துவிட்டார்.

௫-வது. தலைவெட்டுத்தப்பித்துக்கொண்டது.

மற்றொருநாள்தெனாலிராமன் ஆசியத்தில் இராயருக்கு அதிககோபமுண்டாகும்படியாகப் பிரபலமான குற்றம்செய்தான். இராயர்கண்டு இரண்டுசேவகரை அழைத்து அவர்களைசம்பண்ணி இவனை விடாமல் கொண்டுபோய் வெட்டிப்போடுங்களென்றார் அப்படியே அந்தச்சேவகர்கள் அவனைத் தூரக்கொண்டுபோய் வெட்டப்போகிற சமயத்திலே அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி நீங்கள் எப்படியும் வெட்டப்போகிறீர்களே நான் நல்லகதி அடையும்படியாக ஒருகுளத்திலே இறங்கி மார்அளவு ஜலத்திலே ஒருமுகூர்த்தகாலம் கடவுளைத் தியானம்பண்ணிக்கொண்டு இருக்கிறேன் அந்தத்தருணத்திலே நீங்களிரண்டு பேரும் இரண்டுபக்கத்திலேயும் இருந்து ஒரே வீச்சாக என்தலையை வெட்டிப்போடுங்களென்றான் அதற்கு அவர்கள் உடன்பட்டபடியால் அப்படியே ஒருகுளத்திலே யிறங்கி யிருந்து அசதியிலே இரும்மென்று தண்ணீரிலே மூழ்கிவிட்டான் அவர்கள்விசையாக வீசினபடியால் ஒருவர்கத்தி ஒருவர்மேலேபட்டு அச்சேவகரிருவரும் [illegible] வெட்டுண்டார்கள் அதன்பின்பு தெனாலிராமன் சரேலென்று இராயருக்கெதிரேபோய்நின்றான் இராயர் எப்படி தப்பிவந்தாயென்றுகேட்டார் அதற்குத்தெனாலிராமன் அச்சேவகர்கள்ஒருவராலொருவர்வெட்டுண்டு போகும்படிசெய்து நான்தப்பிவந்தேனென்றான் அன்றைக்கும் அந்தக்குற்றத்தைக்ஷமித்துவிட்டார்.

௬-வது, தலைமறைவாகத்திரிந்தது.

திரும்பி ஒருநாள் தெனாலிராமன் ஒருபொல்லாத குற்றம் செய்தபடியால இராயர் அவனை அழைப்பித்துத் தெனாலிராமா இன்றுமுதலாக என்னெதிரே தலையைக்காட்டாமல் மறைவாகத்திரிந்தாயானால் பிழைப்பாய் அப்படிசெய்யாமற்போனால் தலை வெட்டுண்டுபோவாயென்றார் அதுகேட்டுத்தெனாலிராமன் தலையிலேசாலைக்கவிழ்த்துக்கொண்டு சபைக்கெதிரேதிரிந்துகொண்டிருந்தான் இராயர்கண்டு அழைப்பித்துஎன்னடா இந்தஆகாத்தியஞ்செய்கிறாயென்றுகேட்டார் அதற்கவன் ஆண்டவனே நீங்கள்தலைமறைவாகத்திரியச்சொல்லி ஆக்கியாபித்தருளியபடியேதிரிகிறேனென்றான் இராயர்சந்தோஷிப்புற்று அந்தத்தடவையும்பொறுத்தார்.

௫-வது-காவற்காரரை அடிப்பித்தது.

ஒருநாள் தெலுங்கு தேசத்திலிருந்து பாகவதவேஷக்காரர் வந்தபடியால இராயர் அவர்களுக்கு ஆம்படியாக உத்தரவு கொடுத்து அவ்விடத்திலே தென்னாலுராமனை வரவொட்டாமல் இரண்டிடத்துக் காவற்காரருக்கும் திட்டம்பண்ணினார் தென்னாலுராமன் கூத்தாடு இரசமடத்தில் முதற்காவற்கார னிடத்திற்போய் என்னைமாத்திரம் விட்டுவிட்டு எனக்குவருவதிலபாதி உனக்கு கொடுத்துவிடுகிறேனென்று சம்மதிப்படுத்திக்கொண்டு இரண்டாங்காவற்காரனுக்கும் அப்படியே சொல்லி உள்ளேபோய்த் தான்மறைத்துக்கொண்டுவந்த மத்தினாலே கிருஷ்ணவேஷக்காரனை அடித்தான் அவன் ஐயையோவென்று கூவிஅழுதான் ஓ இவ்வளவுதானா அந்தக்கிருஷ்ணன் அநேக இடைச்சிகள்கை மத்துகளால் அநேக அடிபட்டானே நான் ஒருத்தன்மத்தினாலே ஓரடி அடித்ததற்குப் பொறுக்கமாட்டாமல் போனாயேயென்றான் இராயர் பார்த்து இவன் எப்படி உள்ளேவந்தான் குறடாவினாலே இருபத்து நாலடி அடியென்று உத்தரவு பண்ணினார் அந்தப்படியே அடிக்கக் கொண்டுபோகும்போது இரண்டாங்காவற்காரனைப்பார்த்து எனக்கு வருவதிலேபாதி நீ வாங்கிக்கொள்ளச்சம்மதித்திருக்கிறாயல்லவா வென்றான் அவன் மெய்தானென்று சொன்னபடியால் எனக்குவந்தபிரயோசனம் இருபத்துநாலடி அதிலே பாதியாகிய (௰௨) அடி நீபட்டுக் கொள்ளென்று அடிப்பித்து முதற்பாராக்காரனுக்குமற்ற (௰௨) அடியும் அந்தப்படியே கிடைக்கும்படியாகச்செய்து தன்மேல் ஓரடியும் படாமல் தப்பித்துக்கொண்டுபோய்விட்டான்.

௬-வது. இராயபீடத்தில்பிரமாணம் செய்துக்கொண்டது.

ஒருநாள் தென்னாலுராமன் நான் எவ்வளவுகெட்டிக்காரனாயிருந்தாலும் என்னுடைய ஆசியத்தைப் பற்றி இராயருக்கும் அவர்குருவுக்கும் அடிக்கடி கோபம் வருதலால் ஒருவேளைப்போலிராது பிராணச்சேதம் வந்தாலும் வரும் ஆகையால் முன்னதாக ஒரு நம்பிக்கை அவரிடத்திலே பெறவேணுமென்று நினைத்து இராயர்குருவிடத்திற்குப்போய் அந்தரங்கமான சிலபேச்சுகளைப்பேசிச் சிலநாள் ஸ்நேகஞ்செய்துபின்பு வடதேசத்திலிருந்து ஒருஸ்திரீயும் புருஷனும் என் வீட்டில் வந்திருக்கிறார்கள் அந்தஸ்திரீயினுடைய அழகை என்னென்று சொல்வேன் அவளுக்குச்சமானம் இந்த ஐம்பத்தாறு தேசத்திலும்ஒருத்தி இருப்பாளென்று நான் நினைக்கவில்லையென்றான் அதைக்கேட்டு குருவானவர் எனக்கு ஒருவேளைக்கு அப்படிப்பட்டவளை இசையும்படி செய்யமாட்டுவாயாவென்றான் அவள்புருஷன் எப்போதும் பிரியாதிருக்கையினாலே வருத்தந்தான் ஆனால் நீங்கள் இன்றுராத்திரிபத்துநாழிகைக்குமேலே ஸ்திரீவேஷந்தரித்துக்கொண்டு என்வீட்டுக்குவந்தால் அவள்புருஷனுக்குச்சந்தேகந்தோன்றாமல் இணங்கும்படி

செய்கிறேனென்றான் அதன்பின்பு இராயரிடத்திற்குப்போய் ஒரு
ஸ்திரீவந்திருக்கிறாளென்று குருவுக்குச்சொன்னபடியேசொல்லிஇரா
யர் அப்படிப்பட்டவள் எனக்கு ஒருவேளைக்கு உதவும்படி செய்ய
வேணுமென்று கேட்டதற்கு நீங்கள் தனியாக இராத்திரி பதினைந்து
நாழிகைக்குமேலே ஒருஸ்திரீயேஷம்தரித்துக்கொண்டுஎன்வீட்டுக்கு
வந்தால் அதற்குள்ளாக நான் ஜாக்கிரதைபண்ணிவைக்கிறேனென்றா
ன் குருசொன்னகெடிப்படியேவர ஒருஅறைவீட்டிலே கட்டில்மெ
த்தைப்போட்டுப் படுத்துக்கொண்டிருக்கும்படிசெய்தான் இராயர்
அதன்பின்னேவர இந்த அறைவீட்டுக்குள்ளே நான்சொன்ன ஸ்திரீ
யிருக்கிறாள் போகலாமென்றுசொல்லி அவர் உள்ளேநுழைப்பார்
த்துக் கதவையிழுத்துச்சாத்தி வெளிச்சங்கிலிபோட்டுக்கொண்டான்
உள்ளேயிருவரும் ஒருவரையொருவர் ஸ்திரீயென்று நினைத்துச்சரச
முதலானவைகள்செய்யப்போகையில்குருவானவர்இராயரையும் இரா
யரானவர் குருவையும் அறிந்து அதிக அவமானத்தையடைந்து தெ
ன்னாலிராமன்மேல் மிகுந்தகோபங்கொண்டு கதவைத்திறக்கச்சொன்
னார்கள் அவன் வெகுநேரமளவும் திறவாதிருந்தபடியால் நல்லவசன
த்தைச்சொல்லிவேண்டினார்கள் தென்னாலிராமன் அவ்விருவரையும் இ
துமுதலாய்உங்களிருவரிலேயாருக்காவது நான்என்னகுற்றஞ்செய்தா
லும் நாளொன்றுக்குநூறுகுற்றம்வரைக்கும் பொறுத்துக்கொள்ளுகி
றோமென்று நீங்களிருவரும் கடவுள்பேரால் சத்தியஞ்செய்துக்கொ
டுத்தால் கதவைத்திறப்பேனென்று சொன்னான் அவ்விருவரும் அவ
ன் இஷ்டப்படிசெய்துக்கொடுத்தார்கள் பின்புதென்னாலிராமன் கத
வைத்திறந்து அதிகமரியாதையுடன் அவர்களை அனுப்பிவிட்டான்.

எ-வது பிராமணருக்குச் சூடுபோட்டது.

இராயர் தன்தாயார்மரணகாலத்திலேமாம்பழந்தின்னவேண்டுமெ
ன்று சொல்லிவிட்டு அதைவாங்கிவந்து கொடுப்பதற்குமுன்னேஇறந்
துபோய்விட்டாள் இராயர் தன்தாயாருடைய அபீஷ்டத்தை நிறை
வேற்றுதற்கு இல்லாமற்போச்சுதேயென்று விசனத்தை யடைந்
துசிலபேர் பிராமணர்களை அழைப்பித்து என்னுடையதாயார்மாம்ப
ழத்தின்மேல் ஆசைகொண்டு அதைதருவித்துக்கொடுப்பதற்கு முன்
னே இறந்துபோய்விட்டபடியினாலே அந்த ஆத்மாவுக்கு என்னசெ
ய்தால் திருப்தியடையுமென்று கேட்டார் அதற்கு அவர்கள் பொன்
னினாலேமாம்பழங்கள்செய்து சிலபேர்பிராமணர்களுக்குத்திவசகால
த்திலேதானங்கொடுத்தால்அந்தஆத்மாவுக்குத்திருப்தி உண்டாகுமெ
ன்றுசொன்னார்கள் இராயர் அதைநம்பிஅந்தப்படியேதானஞ்செய்
தார் தென்னாலிராமன் அந்தத்தானம்வாங்கினபிராமணர்களையெல்லா

ம் தன்தாயாருக்குத்திவசமென்றுதன்வீட்டுக்கு இட்டுக்கொண்டுபோ
ய்க் கரண்டிகாம்பை காச்சி ஒவ்வொருத்தருக்கு இரண்டுசூடுபோட்டு
விட்டான் அவர்களெல்லாம் அழுதுக்கொண்டுபோய் இராயரிடத்தில்
சொன்னார்கள் இராயர்தென்னாலிராமனை அழைத்து இப்படிப்பட்ட
அக்கிரமம் செய்யலாமாவென்றுகேட்டார் என்தாயாருக்கு அநித்திய
காலத்திலே கைகால் இழுப்புகண்டபடியால் சூடுபோடச்சொல்லிக்கர
ண்டிக்காம்பைக்காய்ச்சிக்கொண்டுவருவதற்குமுன்னமேஇறந்துபோ
ய்விட்டாள் அவளுடைய ஆத்மாவுக்குத்திருப்தி யுண்டாகவேணுமெ
ன்று இப்படிசெய்தேனென்றான்இராயர் அதைகேட்டுவெகுநேரம்பெ
ருநகைசெய்தார்.

அ-வது-குதிரைக்குட்டி வளர்த்தது.

இராயர் சிலகுதிரைக்குட்டிகளை அழைப்பித்துதன்பட்டணத்தி
லுள்ளவீட்டிற்கொன்றாகக்கொடுத்து அதுகளுக்குவேண்டும்புல்லுக்
கும் கொள்ளுக்கும் மசாலுக்கும்மும்மூன்றுவராகன்வாங்கிக்கொண்
டுபோய் சீக்கிரத்திலேபெரியதுகளாக்கும்படியாகவளர்த்துக்கொண்
டுவாருங்களென்றுஉத்தரவுசெய்தார் அப்படியே யெல்லாருங்குதிரை
க்குட்டிகளை வாங்கிக்கொண்டுவெகுநேத்தியாகப் போஷித்துக்கொ
ண்டுவந்தார்கள். தென்னாலிராமன்மாத்திரம் நாலுபக்கமும் சுவர்
வைத்துப்போட்டு அதற்குள்ளே குதிரைக்குட்டியை விட்டு அந்த
ச்சுவரிலே ஒருதுவாரமும் உள்ளே அதன்முகத்துக்கெதிராக ஒருப
ள்ளமுஞ்செய்துவைத்துத் தினம் காலமே ஒருபிடிபுல்லைக்கொண்டு
போய் துவாரத்திலே நீட்டிக்கொடுத்துத் துவாரத்தின்வழியாகத்தா
னே பள்ளத்திலேதண்ணீர்உளற்றிச் சாயங்காலமும் அப்படியேசெ
ய்துக்கொண்டுவந்தான். இப்படியாக நாள்தோறுஞ்செய்துஅந்தக்கு
திரைக்குட்டிக்குக்கொடுக்கிறவராகன்களை தானெடுத்துக்கொண்டுவ
ந்தான் மூன்றுவருஷத்திற்குப் பிற்பாடு எல்லாரையும் குதிரைக்குட்
டிகளைக்கொண்டுவரச்சொல்லி உத்தரவுசெய்தார். அப்படியே எல்
லாருங்கொண்டுவந்தார்கள். குட்டிகளெல்லாம்மினுக்கென்று சதை
பிடித்துமேனிகொண்டு துள்ளுகிறதுகளும் குதித்தோடுகிறதுகளுமா
கயிருந்ததுகள். தென்னாலிராமன்மாத்திரம் குதிரைக்குட்டியைக்
கொண்டுவராமலிருந்தான். இராயர் அழைத்துநீஏன்கொண்டுவரவில்
லையென்றுகேட்டார் என்னிடத்திலிருக்கிற குதிரைக்குட்டியாராலும்
பிடிக்கக்கூடாது உங்களிடத்திலேயிருக்கிற ரவுத்தர்களிலேகெட்டிக்
காரனை ஒருத்தனைஅனுப்பிவைத்தால் கொண்டுவருகிறேனென்றான்.
அப்படியேஒருரவுத்தனையனுப்பினார் அந்தரவுத்தனுக்குஒருமுழநீள
த்திலே [illegible]ங்கைத்தாடியுண்டு அவனையழைத்துக்கொண்டுபோய்
துவாரத்தண்டையில் நிற்கச்சொல்லிக்குதிரையை எட்டிப்பாருமென்

றான் அப்படியே அந்தரவுத்தன் துவாரத்துக்குள்ளே எட்டிப்பார்
த்தான் புல்லென்று குதிரைக்குட்டி எட்டித் தாடியைப் பிடித்துக்
கொண்டது. ரவுத்தன் அல்லவோவென்றுகூச்சலிட்டான் தென்னாலிரா
மன் சீக்கிரமாக இராயரிடத்திற்குப்போய் ரவுத்தனை குதிரைப்பிடித்
துக்கொண்டுவிடயில்லை ரவுத்தன் கூச்சலிடுகிறானென்றுசொன்னான்
இராயர் அப்பாஜியையழைத்துக்கொண்டுவந்துபார்க்கும்போது ரவு
த்தன் தாடியைக் குதிரைக்குட்டிபிடித்துக்கொண்டு விடாமலிருக்
கிறதும் ரவுத்தன் தவிக்கிறதையும்பார்த்துச் சுவரையிடிக்கச்சொல்
லி உத்தரவுசெய்து குதிரையைப்பிடித்துக்கொண்டு தாடியைவாங்கி
இட்டுக்கொண்டுபோகும்போது நடக்கிறதற்குக்கூடப்பெலனில்லாம
ல் மெதுவாக நடந்தது தென்னாலிராமனைப்பார்த்து என்னகுதிரை து
ர்ப்பலமாகயிருக்கிறதென்றுகேட்டார். நான்வெகுஜாக்கிரதையாக எவ்
வளவுமிதத்திலே வைத்திருக்கவேண்டுமோ அவ்வளவுமிதத்திலே வை
த்திருக்கையிலே தானே ரவுத்தனைத்தாடியைப்பிடித்துக்கொண்டதே
அதிகமாகப்போஷித்தால்ஒருவரால் பிடிக்கக்கூடுமோவென்றான் இரா
யர் அவனுகாத்தியத்துக்குச் சரீரமெல்லாம் குலுங்கும்படிசிரித்தார்.

## ௯-வது-பூனைக்குட்டிவளர்த்தது.

இராயர் ஒருநாள் வீட்டுக்கொரு பூனைக்குட்டியும் பசுவுங்
கொடுத்து அந்தப்பசுவின்பாலை பூனைக்குட்டிக்குவார்த்து வளர்க்கச்
சொன்னார் அப்போது தென்னாலிராமன் தானும் ஒருபூனைக்குட்டி
யும் பசுவும் வாங்கிக்கொண்டுபோனான். எல்லாரும் பசுவின்பாலைக்
கறந்து பூனைக்குவார்த்து வளர்த்துக்கொண்டுவந்தார்கள். அவன்முத
னாள் பாலைக்கறந்து கொதிக்கக்கொதிக்கக் காய்ச்சிப் பூனைக்குட்டி
யண்டையில் கொண்டுபோய்வைத்தான் அதிசீக்கிரத்தில்வந்து வாய்
வைத்தது வாய் வெந்தமட்டும்பாலில்அழுந்திற்றே அந்தமட்டும்வெ
ந்துபோய்விட்டது. அன்றுமுதலாகப்பாலைக்கண்டால் அந்தப்பூனை
க்குட்டி தூரஓடிப்போய்விடுகிறது அதற்காகக்கொடுத்தபசுவின்பா
லை அவன் சாப்பிட்டுக்கொண்டுவந்தான் ஆறுமாதம்போனபிற்பாடு இ
ராயர் குடிகளெல்லாரையும்பூனைக்குட்டியைக்கொண்டுவரச்சொல்லி
ப்பார்வையிடும்போது தென்னாலிராமன்பூனைக்குட்டிமாத்திரம்இளை
த்துசாகப்போவதுபோலிருந்தது. இராயர்பார்த்துதென்னாலிராமா
இதுயேனிப்படி யிளைத்துப்போச்சுதென்றார் பாலைக்கண்டால் ஓடி
ப்போகிறது நானென்னசெய்வேனென்றான். இராயர் அப்போது
தானே பாலைக்கொண்டுவந்து வைக்கச்சொன்னார் அதைக்கண்டவு
டனே அது அஞ்சிக்கூவிக்கொண்டு ஓட்டம்பிடித்தது இராயர் அதை
ப்பிடித்துவரச்சொல்லிப் பார்க்கும்போது பாதிவாய் வெந்தவடுவி

ருந்தது இராயர் அதுகண்டு சூடுண்டபூனை அடுப்பங்கரைசேராதெ ன்கிற பழமொழிப்படியே பாலைச் சுடக்காய்ச்சிவைத்துப் பூனைவா யைச்சுடித்துப் பாலைக்கண்டால் அஞ்சி ஓடச்செய்தானென்றுநிச் சயித்து அவனுசாத்தியத்துக்காகச் சந்தோஷிப்பட்டுக் கக்கடக்கக்க டச்சிரித்தார்.

௰-வது-திருடர்களை எற்றம் இறைப்பித்தது.

ஒருநாள் ஆறுபேர்திருடர்வந்து தென்னாலுராமன்வீட்டின் பின்பக்கத்திலிருந்து உள்ளேநுழைந்து திருடச்சமயம்பார்க்கிறஜா டையைத் தென்னாலுராமன் அறிந்துவீட்டுக்குள்ளேபோய்ப் பணங் கள், ஆபரணங்கள், பட்டாடைகள் இதுகள் முதலானதுகளையெல் லாம் பத்திரப்படுத்திப்போட்டுப் பெண்சாதியையழைத்துஊரிலே திருடர் உபத்திரவம் அதிகமாகயிருக்கிறபடியால், நம்மிடவீட்டி லேயிருக்கிற ஆஸ்திகளையெல்லாம் ஒருபெரியபெட்டியிலேபோட்டு வைத்தால் திருடர் உபத்திரவம் தீர்ந்தபிற்பாடு எடுத்துக்கொள்ள லாமென்று அந்தத்திருடர்களுக்குக்கேட்கும்படியாகச்சொல்லிஒரு பெட்டியிலே கல்லடம் கட்டிகளையும்போட்டு அதைப்பெண்சாதி யும்பிள்ளையும் தானுமாகத் தூக்கிக்கொண்டுபோய்த் துரவிலே தடு மெனப்போட்டார்கள் முன்சொன்னபேச்சையும்துரவிலே தடுமெ ன்றுவிழுந்த ஓசையையுங்கேட்டுத்திருடர்கள் நாம்வீட்டுக்குள்ளேகூ டநுழையாமல் தோட்டத்திலேபோய்த் துரவிலேயிருந்து எடுத்துக் கொண்டுபோய்விடலாமென்று சந்தோஷித்துப் பேராசையுடனே துரவில் ஒருவனை இறங்கிப்பார்க்கச்சொன்னார்கள். அவன் இறங்கிப் பார்த்து நிலைகொள்ளாமையால் தண்ணீரை இறைத்துப்போட்டால் எடுத்துக்கொள்ளலாமென்றான். சரிதானென்று அங்கேசாலுடனேயி ருக்கிற இரண்டேற்றத்தையும் மும்மூன்றுபேராக இறைத்தார்கள் தோட்டத்திலேயிருக்கிற வாழை,எலுமிச்சை,நாரத்தை,கிச்சிலி,கமு கு தென்னமரம் இவைமுதலானவைகளுக்கெல்லாம் தென்னாலுராம ன் மறைவாகவந்து மடைமாறிக்கொண்டேவந்தான்.இறைக்கஇறைக் கத் துரவுவடியாமையால்விடாமல்இறைத்துக்கொண்டுவந்தார்கள். விடியற்காலமாச்சுது தென்னாலுராமன்தோட்டமெல்லாம்பாய்ந்தா ச்சுது இறப்பை நிறுத்துங்களென்றுகெட்டியாகச்சொன்னான். அதை க்கேட்டவுடன் இந்தமட்டிலேவிட்டால்போதுமென்றுதிருடர் ஓட் டம்பிடித்தார்கள்.

௰க-வது-சகலசாஸ்திரபண்டிதனைத்துரத்தியது.

இராயர்சமுகத்துக்குஒருநாள்வித்தியாசாகரனென்னும்பெய ருடைய சகலசாஸ்திரபண்டிதர்வந்தார் இராயரிடத்திலிருக்கிறவித்து

வான்களெல்லாம் அஞ்சி அவர் வல்லமைக்கு எங்கள் வல்லமை யெவ்வளவும்போதாதே அவர் ஜெயித்துவிட்டால் நமக்கெல்லாம் அவமானமாகும் இராயரும் நம்மையிகழ்வாரே எப்படியென்று தெனாலிராமனுடன் யோசனைபண்ணினார்கள் தெனாலிராமன் நீங்கள் அஞ்சவேண்டாம் நான் அதற்குத்தகுந்த உபாயம் செய்து வென்றுவிடுகிறேனென்றான் அந்தவித்தியாசாகரர் ஒருநாள் இராயர்சபைக்குப்பிரசங்கத்திற்கு வந்தார் அப்போது தெனாலிராமன் எள்ளுவிறகைப்புஸ்தகம்போல அடுக்காகவைத்து எருமை கட்டுகிற கயிற்றினாலே கட்டி அதன்மேலே ஒருகுட்டையைப்போட்டுச்சுற்றி எடுத்துக்கொண்டு அந்தப்பண்டிதருக்கு எதிரேவந்து உட்கார்ந்தான் சகலசாஸ்திரபண்டிதர்பார்த்து அதென்னபுஸ்தகமென்றார் திலகாஷ்டமகிஷபந்தனமென்றான் அது கேட்டுப்பண்டிதர் திகைத்து நாம் சகலசாஸ்திரமும்வாசித்தும் இந்தப்புஸ்தகம் பாராமற்போனோமே இந்தப்புஸ்தகத்து பெயரைக் கூடக்கேட்டதில்லையே யென்று ஆலோசனைபண்ணிக்கொண்டிருந்தார் தெனாலிராமன் பண்டிதரைப்பார்த்துச் சகலசாஸ்திரபண்டிதரென்று பேர்வைத்துக்கொண்டிருக்கிறீரே இந்தமகாசாஸ்திரம் இதுவரையிலும் பார்த்ததில்லையோவென்றான். அதற்குப்பண்டிதர் இதற்கு நாளைக்கு உத்தரவுசொல்லுகிறேனென்று தாம் இறங்கியிருக்கிற இடத்திற்குப்போய் மிகவும் ஆலோசனைபண்ணிப்பார்த்து ஒன்றும் வகை பிரியாமல் நமக்குப் புஸ்தகத்தின் பெயருக்கே அர்த்தம் ஆகவில்லை அந்தப்புஸ்தகத்தில் என்னசொல்லியிருக்குமோ தெரியாது இங்கிருந்தால் அவமானம் வருமென்று விடியற்காலத்திலே புறப்பட்டுப் போய்விட்டார். சகலசாஸ்திரபண்டிதர் சொல்லாமல் ஓடிப்போன சமாசாரம் இராயர்கேள்விப்பட்டுத்தெனாலிராமனை அழைப்பித்துச் சகலசாஸ்திரபண்டிதனை எப்படிஜெயித்தாயென்றுகேட்டார் இந்தத்திலகாஷ்ட மகிஷபந்தனமென்னும்புஸ்தகத்தைக்கொண்டென்றான் அதையவிழென்றார் மேலேயிருக்கிற குட்டையை அவிழ்த்துக் காட்டினான். இராயர் எள்ளுவிறகை யெருமைகயிற்றால்கட்டியிருக்கிறதைப்பார்த்து எள்ளுக்குத்திலமென்றும் விறகுக்குக்காஷ்டமென்றும் எருமைக்குமகிஷமென்றும் கயிற்றுக்குப் பந்தனமென்றும் பேராகையால் இப்படியா மோசம்பண்ணினாயென்று சிரித்தார்.

௪௯-வது-சங்குசக்கிராங்கிதம் செய்துகொண்டது.

இவனை அடிமையாக்கிக்கொண்டால் மரியாதையாகநடப்பானென்று இராயர் ஆசாரியர் தெனாலிராமனுக்குப்போதித்து நீசமாசிரயணம்பண்ணிக்கொண்டு வைஷ்ணவனாகிவிட்டால் இராயனைக்கொண்டு உனக்குவேண்டியகாரியமெல்லாம் செய்விக்கிறேனென்

றுசொன்னார் அதைக்கேட்டுத் தெனாலிராமன் சுவாமீ அடியேனுக்கு இதைவிடப்பெரிதானகாரியம் ஒன்றுமில்லை தங்களுத்தரவின்படி நடந்துக்கொள்ளுகிறேனென்று மேலுக்குச் சம்மதித்தவனைப்போலச்சொல்லி ஆண்டவரே யிப்போது அவசியமாக ஆயிரம்வராகன் எனக்குவேண்டுமென்றுவாங்கிக்கொண்டு எனக்கு வைஷ்ணவம் கொடுக்கிறதினத்திலே வருகிறவர்களுக்கெல்லாம் சாப்பாட்டுச்செலவும் மற்றைச்செலவுகளுமநீங்களேபோட்டுச்செய்யவேண்டும் நான் ஒருபணந்தான் குருதக்ஷிணைகொடுப்பேனென்றான் அதுகேட்டுஅவ்வாசாரியர் எப்படியாகிலும் இவன்சம்மதித்ததேபெரியகாரியமென்று சீக்கிரத்தில் ஒருநாளைநிச்சயித்துச் சகலசாமான்களும் சேர்மானம்பண்ணி அன்றைதினம் தெனாலிராமனை வரவழைத்தார் அவன்வந்து ஸ்நானம்பண்ணி மடிகட்டிக்கொண்டு நமஸ்காரஞ்செய்தான் ஆசாரியர்சடங்குகளெல்லாம்நடப்பித்துப்பிறகுசங்குசக்கிராங்கிதம்பண்ணுதற்குநெருப்பிலேகாயப்போட்டிருக்கிறதைஎடுத்து ஒருதோளில்வைத்தார் வைத்தமாத்திரத்தில் தெனாலிராமன் ஐயையோவென்று வயிற்றில்அடித்துக்கொண்டு ஓய்ஆசாரியரே அரைப்பணத்திற்குப்போதுமென்றுஓட்டம்பிடித்தான் ஓடுகிறபோது அவ்விடத்தில் கூடியிருந்தவர்களெல்லாம் ஏன்ஓடுகிறாயென்றுகேட்டார்கள். அதற்குத்தெனாலிராமன் இவ்வாசாரியர் நீ வைஷ்ணவனானால் அதிலிருக்கிறசந்தோஷமும் பிரயோசனமும்பிற்பாடுதெரியுமென்றுபோதித்துஒருபணத்துக்குச்சமாசிரயணம்பண்ணச்சம்மதித்து ஒருதோளின்மேல் சூடுப்போட்டார் உபத்திரவம்பொறுக்கக்கூடாமையால் மற்றொருதோளின்மேலும்சூடுவாரென்றுஅஞ்சி அரைப்பணத்திற்குப்போதுமென்றுஓடுகிறேனென்றான் எல்லாரும் கலகலென்றுநகைத்தார்கள் இவன் இப்படியாமோசஞ்செய்தானென்று ஆசாரியர்வெட்கித் தலையிறங்கிக்கொண்டார்.

௧௯-வது-அரங்கேற்றியவித்துவானை அவமானம்பண்ணியது.

ஒருவித்துவான்இராயர்பேரிலேஒருபிரபந்தம்பண்ணிக்கொண்டுவந்தான் தெனாலிராமனுக்கு மரியாதைபண்ணாமல் அலக்ஷியமாயிருக்கையில் ஒருநாள்பிரபந்தம் அரங்கேற்றுதற்குஉத்தரவாய்ப்பிரசங்கம்பண்ணிக்கொண்டு வருகையில் சில சுலோகங்களானபிறகு ஒருசுலோகத்தில் ஒருஅடிவிட்டுப்போயிருந்தது அதுமுதலாக ஐந்து ஏடுகளுக்கும் நெருக்கப்பிடித்து எழுதியிருந்தமையால் எழுதவிடமில்லாமல் விட்டவிடத்தில் ஒருஅடையாளம்பண்ணி அவ்வடையாளத்தை ஆறுவது ஏட்டில்வைத்து முன்விட்டஅடியை எழுதியிருந்தது பிரபந்தம்படிக்கிறவன் அந்தவிட்டுப்போயிருந்தசுலோகத்தை

ய்படிக்கத்தெரியாமல்மயங்கினான் அப்போது வித்துவான் ஆறுவதுவ
ட்டிலேயெழுதியிருக்கிறதைக்காண்பித்தப்படிக்கச்சொன்னான் அப்ப
டியேபடித்து அந்தப்பிரயத்தமுழுதும் நிறைவேற்றி மறுநாள் வெகு
மதிவாங்கிக்கொள்ளப்போகையில் தென்னாலிராமன் க்ஷவரம்பண்ணி
க்கொண்டு குடுமியைவாங்கிப்போட்டுக் குடுமியிருந்தவிடத்திலஇர
ண்டுமூன்றுகட்டைமயிரை அடையாளமாக விட்டுவைத்து ஒருகக்ஷ
த்திலேயிருக்கிறமயிரைச்சுற்றிலும்வாங்கி நடுவிலேகுடுமியைப்போ
லவிட்டு அதின்பக்கத்தில் இரண்டுமூன்றுகட்டைமயிரை அடையாள
மாகவைத்துக்கொண்டு இராயர்சமுகத்திலே அந்தவித்துவானுக்கு
எதிராக உட்கார்ந்து தலைப்பாகையைவாங்கிவைத்துத் தலையைத்தடவி
ப்பார்த்துக் கக்ஷத்திலிருக்கிறமயிரைக்கையினாலேஉருவினான்இராயர்
பார்த்து இதென்னகுடுமியைவாங்கிப்போட்டுக்கக்ஷத்தில்மயிரைவை
த்துக்கொண்டதென்றுகேட்டார் க்ஷவரம்பண்ணிக்கொள்ளுகிறபோ
து மறந்து குடுமியைவாங்கிப்போடச்சொன்னேன் பிற்பாடுஞாபக
ம்வந்து அந்தவிடத்தில் அடையாளம்பண்ணி அவ்வடையாளத்தோ
டுகுடுமியைக் கக்ஷத்தில்விட்டுக்கொண்டேனென்றான் இராயர்தலையி
லிருக்கிறகுடுமியைக்கக்ஷத்தில் விடலாமாவென்றார். விடலாம் வித்து
வான்களெல்லாம் ஒத்துக்கொண்டதுதானேயென்றான் யார் ஒத்துக்
கொண்டதுயென்றுகேட்டார் இதோ தங்களிடத்தில் வந்திருக்கிறாரோ
வித்துவான் அவர்நேற்று அரங்கேற்றியபுஸ்தகத்தில் ஒருசுலோகத்தில்
விட்டுப்போன குறையை அதற்குஆறுவது எட்டிலெழுதியிருக்கிறா
ரோ அந்தப்பிரமாணத்தைக்கொண்டு நான்இப்படிசெய்தேனென்றா
ன் அதனால் வித்துவானுக்குத் தலையிறக்கமும் இராயருக்குச்சிரிப்பும்
உண்டாயிற்று.

## ௰௪-வது-மல்லகஜெட்டியை மோசம்பண்ணினது.

அதிசூரனென்னும்பெயரையுடைய ஒருமல்லகஜெட்டி அனே
கசமஸ்தானங்களிலிருக்கிறமல்லகஜெட்டிகளையெல்லாம் ஜெயித்துக்
கொண்டுஅனேகவிருதுகளோடு இராயர்சமஸ்தானத்துக்கு வந்தான்
இராயரிடத்திலிருக்கிறமல்லகஜெட்டிகளெல்லாம்திகிலடைந்துமயங்
கிக்கொண்டிருக்கிறதைப்பார்த்துதென்னாலிராமன் என்னவிசனமெ
ன்றுகேட்டான் இதுவரைக்கும்மகாராசாவினிடத்திலே சன்மானத்து
டனேஜீவனம்பண்ணிக்கொண்டிருந்தோம்இப்போதுஎங்களுக்கு அ
வமானமும் ஜீவனஆனிடம்வரும்படியாகஒருமல்லகஜெட்டிவந்திருக்
கிறான என்னசெய்வோமென்றார்கள்தென்னாலிராமன் பயப்படாதே
உங்களுங்கள் விருதுகளெல்லாம் கொடுத்து என்னை யஜமானனாக
வைத்துக்கொண்டு எனக்குப்பின்னே நீங்களெல்லாம்வாருங்களென்றுதிட்

டஞ்செய்து தான் அந்தவிருதுகளெல்லாம் தரித்துக்கொண்டு வீரகேசரியென்னும்பெயருடன் அவர்களை அழைத்துக்கொண்டு அந்த அதிசூரன் இறங்கியிருக்கிற கூடாரத்துக்கெதிரே கூடாரம் அடித்து இறங்கினான் அந்தமல்லகஜெட்டிநமக்குஎதிரிபோலிருக்கிறதே நாம் போய் நிர்வாகத்தையறியலாமென்று எண்ணிக்கொண்டு நான் உம்மிடத்திற்கு வருகிறேனென்று சொல்லி அனுப்பினான் தென்னாலுராமன் இங்கேவரவேண்டுவதில்லை நாளைக்கு மகாராஜாஅவர்கள் முன்பாக எல்லாக்காரியங்களையுந் தெரியப்படுத்தலாமென்றான் அதைக் கேட்டுஅதிசூரன் எதிரி எப்படிப்பட்டவனோவென்று அவன்பேரைக்கேட்டுப் பயங்கொண்டிருந்தான் மறுநாளைக்கு இராயர்வந்துஅதிசூரன் வீரகேசரி இருவருக்கும் யுத்தம்பண்ண உத்தரவுகொடுத்தார் வீரகேசரி அதிசூரனைப்பார்த்துநீயுத்தப்பண்ணுகிறகெருடிசாஸ்திரப்படியாகவா அல்லதுமுரட்டுத்தனமாகவாவென்றுகேட்டான். அதிசூரன் சாஸ்திரப்படிதானென்றான் வீரகேசரி ஆனால் சிலகைவரிசைகள் காண்பிக்கிறேன் அதுகளைக்கெருடி சாஸ்திரப்படி சரியாக இன்ன இன்னவரிசையென்று சொல்வையேயானால் பிற்பாடு யுத்தம்பண்ணலாமென்று சொன்னான் அதிசூரன் அந்தப்படியேஆகட்டுமென்றான் வீரகேசரிஅவனுக்கு எதிரிலேவந்துநின்று ஆள்காட்டிவிரலினாலேதன்னைச்சுட்டிக்காட்டிஅவனைச்சுட்டிக்காட்டிநடுவிரல்மூன்றையுஞ்சேர்த்துத்தன்மார்பிலேகுத்திக்காட்டிஇரண்டுகைகளையும் தோளின்மேலாகவிரித்துக்காட்டிஆள்காட்டிவிரலினாலே கழுத்தைச்சுற்றிக்காட்டி வலதுகையைஇடுப்பளவில்கவித்துக்காட்டி அங்கையைப் பிடியாகப்பிடித்துக்கொண்டு அசைத்துக்காட்டினான் மல்லகஜெட்டிஇதுகளையெல்லாம் பார்த்து ஒன்றுந்தோன்றாமல் தான்கற்ற சிலம்பவரிசையெல்லாம் ஞாபகம்பண்ணி மயங்கி ஒன்றுஞ்சொல்ல மாட்டாமல் நின்றான் தென்னாலுராமன் விருதுகளைப் பிடுங்கிக்கொண்டு அவனைத்துரத்திவிட்டுச் செயபேரிகை அடித்துக்கொண்டு தன்கூடாரத்திற்குப் போனான் இராயர் மறுநாள் தென்னாலுராமா நீ நேற்றுக்காட்டின கைவரிசைகள் என்னவென்றுகேட்டார் தென்னாலுராமன் முன்காட்டியபடி கைவரிசைகளைக்காட்டி அதிசூரா நான் உன்னிடத்தில்வந்தால் நீ என்னைக்கட்டாரியினாலே மார்பிலே குத்திக்கொன்றுவிடுவாய் நான் இப்படி மல்லாந்துக்கொள்ளுவேன் பிறகு என்பெண்சாதியையும் பிள்ளையையும் யார் சம்ரக்ஷணை பண்ணுவார் சொல்லென்று கேட்டேனென்றான் இராயர் அதுகேட்டுச்சந்தோஷித்தார்.

௰௫-வது பார்ப்பானை அவமானம்பண்ணினது.

தென்னாலுராமன் ஒருநாள் ஓரக்கிரகாரத்திலே வீடுதோறும் போய்த்தாகத்துக்கு கேட்டதற்கு இல்லையென்றபடியால் அதைமன,

தில் வைத்துக்கொண்டு ஒருநாள் உதயகாலத்தில் அந்தஅக்கிராரத்துப் பிராமணர்களெல்லாம் மலபாதைக்குப் போயிருக்கிற விடத்திலேபோய் இன்றைக்கு இராயர் சர்வமானியதானம்பண்ணுகிறதற்கு உங்களையெல்லாம் சீக்கிரமாக அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரென்று சொன்னான் மலபாதைக்குப் போனோமே கால்சுத்தி பண்ணிக்கொண்டு வருகிறோமென்று சொன்னார்கள் நீங்கள் அதற்குப்போனால் இரண்டு நாழிகைசெல்லும் அதற்குள்ளே இராயருடையசித்தவிர்த்தி எப்படியிருக்குமோ தெரியாது ஆகையால் சீக்கிரமாகப் புறப்படுங்களென்று சொன்னான் இப்படியேவந்தால் இராயர் அசங்கியப்படுவாரோ எப்படிவருவோமென்றார்கள் அவ்விடத்திலிருக்கிற எருக்கம்பழுப்புகளை ஆசனத்தில்வைத்துக்கோவணத்தை இழுத்துக்கட்டிக் கொண்டுவேஷ்டியை உடுத்திக்கொள்ளச்சொல்லி ஒருவருக்கொருபழுப்பு மற்றொருவருக் கிரண்டுபழுப்பு இந்தப்படியே எழுபேருக்கும் எழுபழுப்பு வரைக்கும் பொறுக்கிக்கொடுத்து அவர்கள் அப்படிசெய்தபின் அழைத்துக்கொண்டுபோய் இராயருக்கு எதிரேவிட்டான் இராயர்பார்த்து இவர்களை ஏன் அழைத்துவந்தாயென்றார் இந்த எழுபேரும் மகாயோக்கியர்கள் நீங்கள் எந்தகாலத்திலே எந்தப்பிரயோசனஞ் செய்தாலும் இவர்களுக்கே செய்யவேண்டுமென்றான் அதெப்படியென்றார் இவர் ஒருபழுப்புப்பட்டர் இவர் இரண்டுபழுப்புப்பட்டர் என்றுதனித்தனி அவரவரையும் காட்டி எல்லாரையும் கோவணத்தை அவிழ்த்துச் சோதிக்கும்படியாகச்செய்தான் சோதிக்கும்போது கோவணத்துளிருந்து வரிசைப்படி எருக்கம்பழுப்புகள் அசங்கியத்துடனே கீழேவிழுந்ததுகள் அதைப்பார்த்து இராயர் அசங்கியப்பட்டு அவர்களை அப்புறம்போகச்சொல்லித் தென்னாலுராமனை அழைத்து இவர்களுடைய நடத்தை யென்னவென்று கேட்டார் அதற்குத் தென்னாலுராமன் இவர்கள்மிகுந்த அனுசாரக்காரர்கள் மலபாதைக்குப் போனவர்கள் சுத்திசெய்யாமல் எருக்கம்பழுப்புவைத்துக் கட்டிக்கொண்டுவந்தார்களே இவர்கள் எப்படிப்பட்ட அசங்கியத்துக்குத்தான் சம்மதிக்கமாட்டார்களென்றான் இராயர் கோபித்துக்கொண்டு அந்தப்பிராமணர்களுக்குவிட்டிருந்தமானியங்களையெல்லாம் கட்டிப்போடச்சொல்லிஉத்தரவுசெய்தார்.

### ௫௬-வது. கறுப்புநாயைவெள்ளைநாயாக்கிறேனென்றது.

ஒருநாள்இராயர் உதையமாகி நாலுநாழிகைவரைக்கும் நித்திரைசெய்துக்கொண்டிருந்தார் அன்றைக்கு க்ஷவரம்பண்ணிக்கொள்ளுகிற தினமகையால் அம்பட்டன்வந்துபார்த்து நித்திரைபங்கம்வரவொட்டாமல் படுக்கையிலேதானே மெதுவாக க்ஷவரம்பண்ணி விட்டுப்

போனான் இராயர் நித்திரைதெளிந்தபிற்பாடு எழுந்து நிலைக்கண்ணாடியைப்பார்த்தார் க்ஷவரம்வெகுநேர்த்தியாகச் செய்திருக்கிறது தெரிந்தது அதனாலே மிகவுஞ்சந்தோஷமடைந்து அம்பட்டனை யழைத்து உனக்கு என்னவேண்டுமென்றார் சுவாமி என்னைப்பிராமணனாக்கவேண்டுமென்றான் பிராமணர்களை யெல்லாம் அழைப்பித்து ஆறுமாதத்திற்குள்ளே இந்த அம்பட்டனைப் பிராமணனாக்கிப்பந்தியிலே வைத்துக்கொண்டுசாப்பிடாமற்போனால் உங்களுக்கு விட்டிருக்கிற மானியங்களையெல்லாம் ஜப்திசெய்துவிடுவேனென்றார் பிராமணர்களெல்லாம் விசனப்பட்டுக்கொண்டு வெளிக்குநல்லதென்று அழைத்துக்கொண்டுபோய் நித்தியமும் மூன்றுகாலம் ஸ்நானம்பண்ணுவித்து நித்தியாக்கினிசந்தியாவந்தனம் செபதபங்கள்முதலாகியசமஸ்தகாரியங்களை நடப்பித்துக்கொண்டுவருகையில் ஆறுவதுமாசக்கடையில் இராயர் பிராமணர்களுடையபந்தியில் அம்பட்டன் கூட உட்கார்ந்து சாப்பிடுகிறதைப் பார்க்க வேண்டுமென்று அக்கிராரத்துக்குப் போகும்போது அந்தப்பிராமணர்கள்தெனாலுராமனிடத்தேபோய் அழுதார்கள் அதற்கு நீங்கள் அஞ்சவேண்டாம் நான் உபாயஞ்செய்து தப்புவிக்கிறேனென்று இராயருக்கு முன்னே தெனாலுராமன் ஒருகறுப்புநாயின் கழுத்திலே கயிற்றைக்கட்டி இழுத்துக்கொண்டுபோய் அக்கிராரத்தின்சமீபத்திலிருக்கிற ஒருகுளக்கரையில் ஓமகுண்டம்போட்டு நாலுபேர் பிராமணர்களைவைத்து ஓமம்பண்ணச் சொல்வித்தான் கொண்டுவந்தநாயை முழுகப்படுத்தி அதுவாள்வாளென்றுகத்தஅதையிழுத்துக்கொண்டுஓமகுண்டத்தைச் சுற்றிச்சுற்றிவந்து மறுபடியும்நாயை யிழுத்துக்கொண்டுபோய்முழுகப்படுத்தி ஓமகுண்டத்தைப்பிரதக்ஷணம் செய்வித்தான் இப்படியாகச்செய்துகொண்டிருக்கையில் இராயர்வந்து இந்தநாயை ஏன் இப்படிசெய்கிறாயென்று கேட்டார் தெனாலுராமன் இந்தக் கறுப்புநாயை வெள்ளைநாயாக்கப்போகிறேனென்றான் இராயர் அடாபித்தனே எங்கேயாகிலும் கறுப்புநாய்வெள்ளைநாயாகுமா ஆகமாட்டாதென்றார் அதற்குத்தெனாலுராமன் அம்பட்டன்பிராமணனாகிறபோது கறுப்புநாய்வெள்ளைநாயாகிறது ஆச்சரியமாவென்றான் அதைக்கேட்டவுடனே இராயர் சரிதான்யோசனைபண்ணாமற்சொன்னோமென்று மனதுக்குள்ளேவைத்துக்கொண்டு அக்கிராரத்துக்குப்போகாமல் அரண்மனைக்குவந்து அம்பட்டனை யழைப்பித்து வேறொருவிதத்தில் சமாதானம் பண்ணி அனுப்பிவிட்டார் அதைக்கேட்டு பிராமணர்களெல்லாம் சந்தோஷித்தார்கள்.

௰௭-வது அப்போது முளைக்கிறகீரைவிரைவிரைக்கச்சொன்னது

ஒருநாள். இராயர் அந்தப்புரத்திலே பாரியாளுடனே பேசி

கொண்டிருக்கும்போது பாரியாளுக்குவாயுபறிந்தது அதனாலேஇராயர் அசங்கியப்பட்டு அந்தப்புறத்துக்குப்போகாமல் நெடுநாளாகயிருந்துவிட்டார் அதைக்காற்றுவிசேஷமாகத் தெனாலி ராமன்கேள்விப்பட்டு உழக்குக்கிளைவிளையை ஒருதுணியிலேமுடிந்துக்கொண்டு இராயரிடத்தில்வந்து எதிர்வைத்தான் இது என்னவென்று கேட்டார் மகாராஜாவே இக்கீளைவிளை ஒருதீவிலிருந்துவந்தது இதை விதைத்த நாழிக்கு முளைத்துக் கறிக்காகுமென்றான் ஆனால்நமதுசிங்காரதோட்டத்தில விதைப்போமாவென்றுஇராயர்கேட்டார்தெனாலிராமன் அப்படியேசெய்யலாமென்று சொன்னான் மறுநாள் இராயர் தோட்டக்காரருக்குப் பாத்திகட்டச்சொல்லி இவ்வாச்சரியத்தைத் தெரியப்படுத்தி வெகுபேரை அழைத்துக்கொண்டுதானும் வந்துசிங்காரதோட்டத்தில் யிருந்துக்கொண்டுதெனாலிராமனை யழைப்பித்துக்கிளைவிளையை விதைக்கச்சொன்னார் தெனாலிராமன் அந்தவிளையைஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு அங்கிருக்கிறவர்களை யெல்லாம் ஒவ்வொருத்தராகச்சமீபத்திலே அழைத்து இரகசியமாக இந்தவிளையை அபானவாயு விடாதவர்கள் விதைத்தால் முளைக்குமாம் உமக்கு அதில்லாமலிருந்தால் விதையுமென்று கேட்டான் எல்லாரும் தங்கள் தங்களுக்கு உண்டென்றுசொன்னார்கள் அதற்குமேல் இராயரிடத்திற்குப்போய் அபானவாயுவில்லாதவர்கள்விதைக்கவேண்டிதலால் இங்கே அப்படிப்பட்டவர் ஒருவருமில்லை நீங்கள்விதைக்கலாமென்றான்இராயர் எனக்கும் உண்டென்றார் தெனாலிராமன் ஆனால் நீங்களேன் அந்தப்புரத்துக்கு அனேகதினமாகப் போகாமலிருக்கிறீரென்றான் இராயர் தெரிந்துகொண்டு அதுமுதற்கொண்டு எப்போதும் போல அந்தப்புறத்துக்குச்செல்லவாரம்பித்தார்.

௰௮-வது-சித்திரங்கள் எழுதிவைத்தது.

இராயர்அலங்காரமாகஒருமெத்தைவீடுகட்டிவைத்து அதில் ஒரு சித்திரக்காரனையழைப்பித்து விநோதமாக சித்திரங்கள் எழுதச்சொல்லிக்கட்டளையிட்டார்.சித்திரக்காரன்எழுதித்தீர்ந்தவுடனே இராயருக்கறிவித்தான் இராயர்மந்திரிமுதலானவர்களுடனேகூடப்போய்ச்சித்திரங்களைப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டு வருகையில் தெனாலிராமன் அர்த்தமுகமாகவிருந்த ஒரு சித்திரத்தைப்பார்த்து மஹாராஜாவேஇதற்குஒருபுறத்துஅவயவமாத்திரமிருக்கிறதே மற்றப்பாதியும் எங்கேயென்றான்இராயர் அஃதுஅந்தப்பக்கத்திலிருக்கிறதாகப்பாவனை உனக்கு இதுதெரியாதாவென்றுநகைத்தார் இப்போதுதெரியவந்ததென்றான் பிறகுசிலமாதங்கழித்து ஒருநாள்தெனாலிராமன் இராயனைப்பார்த்து நான் அன்றுமுதலாகச சித்திரவேலை

யில் அப்பியாசம்பண்ணிக்கொண்டுவந்து இப்போது அதில் கைதேர்ந்திருக்கிறேன். என் வேலைத்திறத்தைத் தாங்கள் பார்க்கவேண்டுமென்றான் இராயர் அப்படியாகவென்று சந்தோஷிப்பட்டுத்தன் அரண்மனையிலிருக்கிற சித்திரங்கள் சற்று பழசாயிருந்ததினால் அவைகளையெல்லாம் துடைத்துப்போட்டு நீ யோக்கியமானசித்திரங்கள் எழுதென்று தாம்பூலங்கொடுத்து அந்தவீட்டையொழித்துவிட்டு தான் மற்றொருவீட்டில்குடிபோனார். தெனாலிராமன்முன்னிருந்த அலங்காரமுள்ள சித்திரங்களையெல்லாம் கழுவித்துடைத்துவிட்டு ஓரிடத்தில் ஒருநகரமும் ஓரண்டையொருவிரலும்ஓரிடத்தில்ஒருகையும் இப்படி ஒவ்வொருரூபமாக வீடுநிறையயெழுதி வீட்டைக்கெடுத்துப் பின்பு இராயரண்டைவந்து சித்திரமெல்லாம் எழுதித்தீர்ந்தது தாங்கள்கடாக்ஷிக்கவேண்டுமென்றான் இராயர் மெய்யென்றுநம்பிவெகுபெயருடனேவந்துநுழைந்துபார்க்கையில் இராயர் தெனாலிராமா இதென்னஒவ்வொருரூபமாத்திரம்யிருக்கிறதேயென்றார்மற்றவையெல்லாம் அந்தப்பக்கத்திலிருக்கிறதாகப்பாவனை இப்போது மறந்துபோனீர்களோவென்றான் இராயர் ஓகோ மோசம்போனேனே கெடுத்தாயே என்றுசொல்லி வெட்கத்துடனே தலையிறங்கிக்கொண்டுகோபமாகவந்துவிட்டார்.

### ௰௬-வது-குடும்பசவரக்ஷணை பண்ணச்சொன்னது.

தெனாலிராமன் ஒருநாள் மிகவும் விசனமாகயிருக்கிறதை இராயர்தெரிந்துகொண்டுநீயேன் துக்கிக்கிறாய் உனக்கு என்னகுறைபாடென்றார் அப்போது தெனாலிராமன் ஐயாஜோதிஷர்கள் என்னை இரண்டொருமாதத்தில் இறந்துபோவாய் என்கிறார்கள். ஆனால் இறப்பைக்குறித்து யாதொன்றும் நான்சிந்திக்கவில்லை எனக்குப்பிற்காலத்தில் என்குடும்பத்தை என்னைப்போல் ஆதரிப்பார் ஒருவருமில்லையே என்றுகிலேசப்படுகிறேனென்றான் இராயர்அதைக்குறித்து எவ்வளவும்நீயஞ்சாதே உன்னிலும்பதின்மடங்கு அதிகமாகஉன்சமுசாரத்தைக்காப்பாற்றுவேன் எனக்குஇதுஒருபெரிதாவென்றுநம்பிக்கையாகச்சொல்லினார்பின்புதெனாலிராமன் அன்றுமுதலாகவரவரநோய் அதிகரிக்கிறாப்போல்பாசாங்குபண்ணிக்கொண்டிருந்துஒருநாள்இறந்துபோனதாக எல்லாரும்நம்பும்படி யேதோ ஒருபாயம் பண்ணித்தன்பெட்டியிலிருந்தபணங்களையும் ஆபரணங்களையும்பாத்திரங்களையும் வேறேஓரிடத்தில்வைத்து அதில் தான்புகுந்துகொண்டிருந்தான் இவன்இறந்தானென்றசேதிஇராயர்கேட்டமாத்திரத்தில்தெனாலிராமனிடத்தில்திரவ்வியம்அதிகமாயிருக்கிறதென்று கேள்விப்பட்டபடியினால்அப்போதேசிலசேவகர்களையனுப்பி அவன்வீட்டுப்

பணப்பெட்டியைச்சீக்கிரத்தில்எடுத்துவரச்சொல்லிக்கட்டளையிட்டார்அவர்கள்அவ்வாறே அதைத்தன் அரண்மனையிற் கொண்டுவந்தமத்திரத்தில்ஆசையோடுஅப்பெட்டியைத்திறந்துபார்க்கையில் தென்னாலிராமனைப்பார்த்துஒகோநீசெத்துப்போனாயென்றார்களே யென்றார் அவன் உங்களைநப்பிச்சாகலாமா நீர் தானா என்குடும்பத்தைக்காப்பாற்றுகிறவர்என்றான் இராயர் வெட்கிப்பேசாமல்யிருந்துவிட்டார்

## தென்னாலிராமன்கதை.

## முற்றிற்று முற்றிறும்.

அத்தியாயம்-௩-க்கு-கதைகள்-௫௧

---

கடவுள் துணை.

K. CHIDAMBARANAT

# சதாசிந்தாமணி.

நான்காமத்தியாயம்.

# கோமட்டி கதைகள்.

முதலாவது.

## பந்தலில்ஒளித்திருந்ததிருடனை வெளிப்படுத்தியது.

ஒரு திருடன் ஒருநாள் ராத்திரி ஒருகோமட்டி வீட்டு அவனைப்பந்தலில் ஒளித்துக்கொண்டிருந்தான் அந்தவீட்டுக்கோமட்டி கைகழுவப்போய்த் திருடனிருக்கிற ஜாடைகண்டு பெண்சாதியைஒரு பெரியதவலைநிறையத் தண்ணீர்கொண்டுவரச்சொன்னான் அவள் அப்படியே கொண்டுவந்து கொடுக்க அதனை அவன் வங்கிக் கொண்டு கொப்பளித்துக் கொப்பளித்துத் திருடன்மேலே உமிழ்ந்து தண்ணீர்முழுதும் செலவானபின்பு மறுபடியும்ஒருதவலைத்தண்ணீர்கொண்டுவரச்சொல்லி அதனைக்கொப்பளித்துக் கொப்பளித்து உமிழ்ந்தான் அதற்கு அவன்பெண்சாதி என் இப்படிவீணாகக் கொப்பளித்துக் கொப்பளித்து உமிழ்கிறாயேயென்று கேட்டாள் கேட்கவே அவள்மேலே நாலுவாய்த்தண்ணீரைக்கொப்பளித்துஉமிழ்ந்தான் அவள் அதுகண்டு தன்புருஷனுக்குப் பித்தகுணம் கண்டதாக நினைத்துப் பயந்து தெருவிலே ஓடிப்போய் பலபேரைக் கூவிக்கூட்டிக் கொண்டு உள்ளேபோனாள் அவர்கள்கோமட்டியண்டையில் வந்துஉனக்கென்ன பித்தம்பிடித்ததா உன்பெண்சாதிமேலேஎன்கொப்பளித்து உமிழ்ந்தாயென்றுகேட்டார்கள் அதற்கு அவன்ஐந்துவயதிலே

இவளைக்கலியாணம்பண்ணி ஆயிரம்வராகன் உடைமையும்போட்டு இதுவரையிலே சுகத்திலேவைத்துக்கொண்டிருக்கிற நான் இப்போது நாலுவாய்த்தண்ணீரைக் கொப்பளித்து உமிழ்ந்ததற்கு இவள்சகிக்காமல் உங்களுடனேவந்து சொல்லிக்கொண்டாளே இந்த அவளைப் பந்தலின்கீழே யிருக்கிறமனிதனுக்கு நான் ஒரு உபகாரமுஞ்செய்ததுமில்லை அறிந்ததுமில்லை அப்படியிருக்க இரண்டுதவலைத்தண்ணீரையெல்லாம் கொப்பளித்துக் கொப்பளித்து மேலே உமிழ்ந்தேன் அதற்கு அவன் சகித்துக்கொண்டிருந்தான் இதுமெய்பொய் அறியவேண்டுமானால் அவனைருசுவிலேகேட்டுக்கொள்ளுங்களென்றான் அதற்குமேல் திருடனைப்பிடிக்கிற தற்காக இந்தவுபாயஞ்செய்தானென்று அந்தத்திருடனை கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டார்கள்

உ-வது பரணில்ஒளித்திருந்ததிருடனை வெளிப்படுத்தியது.

ஒருதிருடன் ஒருநாள்ராத்திரிஒருகோமட்டிவீட்டுப்பரணின்மேலே பதுங்கிக்கொண்டிருந்தான் அந்தவீட்டிலேகோமட்டியும் அவன்பெண்சாதியும்படுத்துக்கொள்ளுமபோது கோமட்டி பரணின்மேலே திருடன் இருக்கிறஜாடையைக்கண்டு ஒரு உபாயம் நினைத்துக்கருப்பமாயிருக்கிறதன் பெண்சாதியைப்பார்த்து உனக்குப்பெண்பிறந்தால் நீயென்னசெய்வாயென்றான் சீதையென்று பேரிட்டுஒருபிள்ளையை வீட்டிலேவைத்துக்கொண்டு விவாகஞ்செய்துகொடுத்துஎன்னுடையஉடமையெல்லாம் அந்தப்பெண்ணுக்குப்போடுவேனென்றாள் அதைக்கேட்டு உன்னெண்ணப்படிக்கு நடக்கமாட்டாது ஆண்பிள்ளையேபிறக்கும் அந்தப்பிள்ளைக்கு இராமனென்று பேரிட்டு அவனுக்கு எல்லாவுடமைகளும் இட்டு பள்ளிக்கூடத்தில் படிக்கவைப்பேன் அவன்சாப்பாட்டு வேளைக்குவராவிட்டால்இராமாராமாவென்று கெட்டியாகக்கூவிக்காட்டி இப்படி அழைப்பேனென்று சொன்னான் அண்டைவீட்டிலிருக்குந் தலையாரிராமன் எழுந்துபத்துப்பேரைக் கூட்டிக்கொண்டுவந்து ஏன் அழைத்தாயென்று கோமட்டியைக்கேட்டான் நான் உன்னை அழைக்கவில்லையென்று தனக்குந்தன்பெண்சாதிக்கும் பேச்சு மூலமாக நடந்தசங்கதியைச்சொல்லி இதுகளிலே எவ்வளவும் வித்தியாசமில்லை உனக்கு ஒருவேளை சந்தேகமாயிருந்தால்அதோ பரணின்மேலே ஒருபொதுமனுஷன் இருக்கிறான் அவனை ஆதிம்பாடந்தமாகக் கேட்டுக்கொள்ளுங்களென்று பரணின்மேலிருக்கிறவனைக்காட்டினான் அதற்குமேல் அவர்கள் திருடனென்றறிந்துபிடித்துக்கொண்டு தகுதியானதண்டனைசெய்வித்தார்கள்.

௩-வது. இதுவுமது.

ஒருதிருடன் ஒருநாள் ராத்திரி ஒருகோமட்டி வீட்டுப்பரணின்மேலே குந்திக்கொண்டிருந்தான் அந்தவீட்டுக்குள்ளே கோமட்

டிபடித்துக்கொள்ளப்போனான் அப்போது திருடனிருக்கிற அரவங்கண்டு ஒரு உபாயம்பண்ணநினைத்துப் பெட்டிகளெல்லாம்பூட்டியிருக்குதுகளாவென்று பார்க்கிறவனைப்போலத் தொட்டுத்தொட்டுப்பார்த்துக் கையிலே தேள்கொட்டி விட்டதுபோல ஐயையோ தேள்கொட்டிவிட்டதே என்னசெய்வேனென்றுஉரக்கக்கூவியழுதான் அவன் பெருங்குரலிட்டு அழுகிறதைக்கேட்டு அண்டைவீட்டுக்காரரெல்லாம்வந்துபார்த்து மந்திரித்துவிஷம்யிறங்கிற்றாவென்றுகேட்டார்கள் விஷம்இறங்கிற்று அந்தப்புண்ணியவான் மாத்திரம் இன்னம்பரணைவிட்டு இறங்கவில்லையேயென்று பரணின்மேலிருக்கிறவனைக்காட்டினான் அவர்கள் அந்தத்திருடனைப் பிடித்துக்கொண்டு கோமட்டியுக்தியைக்குறித்துப் புகழ்ந்தார்கள்.

௨-வது. விளக்குநின்றபோது சினேகிதன்கையைப் பிடித்துக்கொண்டது.

ஒருகோமட்டிக்கு மிகுந்த ஆப்தனானசினேகிதன் ஒருநாள்ராத்திரிவந்தான் அப்போதுகோமட்டி காசுப்பையைக்கொட்டி எண்ணிக்கொண்டிருக்கையில் விளக்குநின்றுபோய்விட்டது அப்போது பணத்தை எடுத்துக் கொள்ளப் போகிறானென்று சந்தேகப்பட்டுக் கோமட்டி ஒரு உபாயஞ்செய்தான் அதாவது சினேகிதனுடைய இரண்டுகைகளையும் தான்கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நான் ஒருவாக்குக்கேட்கிறேன் இதுவரைக்கும் நீஎன்னிடத்தில் அதிகவிசுவாசமுடையவனாக இருந்ததுபோல உன்னுயசுவரைக்கும்இருக்கவேண்டும் அந்தப்படிக்கு இதோ தீபம்வருகின்றது அத்தீபமறியக்கைபோட்டுக்கொடென்று சீக்கிரமாகத் தன்பெண்சாதியைத் தீபங்கொண்டுவரச்சொல்லிக் கொண்டுவருகிறவரைக்கும்கைவிடாமலிருந்துகொண்டு வந்தவுடனே தீபம் அறியக்கைபோட்டுக் கொண்டு கையைவிட்டான்.

௩-வது ஒருகிளிப்பிள்ளையைவளர்த்துவிற்றது

ஒருகோமட்டி ஒருகிளிப்பிள்ளையை வளர்த்துத் தான் எதுகளைக்கேட்டாலும் அதுகளுக்கெல்லாம்பதிலுத்தரவாக அதற்குச்சந்தேகமில்லையென்று சொல்லும் படியாகக்கற்பித்துத் தன்னிடத்திலிருந்த நூறுவராகனைப் பிரதிதினம் ஒவ்வொருயிடத்திலே புதைத்துவைத்துப்பிறர் அறியும்படியாகக் கிளியே இவ்விடத்திலே புதையலுண்டாவென்று கேட்டு அதற்குச் சந்தேகமில்லையென்று அதுசொல்ல அதன் சொல்லைக்கேட்டு எடுக்கிறவனைப் போலத்தோண்டி எடுத்துக் கொண்டுவந்தான் அதை ஒருவன் பார்த்து இந்தக்கிளிமாத்திரம் ஒன்றிருந்தால் நாம்குபேரனாகலாமென்று பேராசைகொண்டுவிலைபேசி ஆயிரம்வராகன்கொடுத்து அதைத்தன் வீட்டுக்குவாங்கிக் கொண்டு

போய் நாலைந்திடங்களிலே புதையலுண்டாவென்றுகேட்டு அதற்குச்சந்தேகமில்லையென்று அதுசொல்லுகிறசொல்லைநம்பித்தோண்டிப்பார்த்துப்புதையல் அகப்படாமையினாலே மோசம்போனேனென்று துன்பமடைந்து ஒப்பிளியே என்வாயிலேமண்ணைப்போட்டையாவென்றான் அதற்குச்சந்தேகமில்லை யென்றுதன்வழக்கப் படியே சொல்லிற்று அந்தச்சொல்லைக்கேட்டு நகைசெய்து அதைமாற்ற யுக்தி பண்ணினான்.

௬-வது பெப்பெப்பேயென்றது.

ஒருகோமட்டி பத்துப்பேரிடத்தில் ஆயிரம் ஆயிரமாசவராகன்கடனவாங்கிச்சிலநாள் வியாபாரஞ்செய்து பின்புபத்திரப் படுத்திவைத்துவிட்டுத் தன்வீட்டில்திருடாநுழைய அதனாலே மிகுந்தநஷ்டத்தைஅடைந்ததாகக் கூச்சலெழுப்பி அந்தக்கடன்காரரில்ஒருவனாகிய தனசிநேகிதனைத் தனியேஅழைத்துத் தனக்குகளவின்வறுமை வந்ததாகச்சொல்லி அழுதான் அவன் இவன் விசனத்தைப் பார்த்து மற்றக்கடன்காரரெல்லாம் உன்னைதொடராமற்போகும் படியாக ஒருபுத்தி உனக்குச்சொல்லுகிறேன் என்டணத்தைமாத்திரம் கொடுத்து விடுகிறாயா வென்றான் அதற்குக் கோமட்டி ஐயா அவ்வளவு உபகாரம் இத்தருணத்தில செய்வாயானால் உன்னுடைய பணம் வட்டியு முதலும பூமேல் வைத்துக் கொடுத்து விடுகிறேனென்றான் சிநேகிதன் மெய்தானென்று நம்பி உன்னை யார்வந்து கேட்டாலும் பெப்பெப்பேயென்று சொல்லிக்கொண்டிரு வேறொன்றுஞ் சொல்லாதேஅவர்கள்உனக்குப்பித்தம்பிடித்ததென்றுபோய்விடுவார்களென்றான் கோமட்டி அந்தயுக்தியைக்கொண்டு கடன்காரரையெல்லாம் ஏமாற்றினான் கடன்காரர் உபத்திரமெல்லாம் நீங்கிப் போனபின்பு அவனுக்குயுக்திசொல்லிக்கொடுத்த சிநேகிதன்வந்து என்கடனைக்கொடுவென்று கேட்கப் பெப்பெப்பேயென்றான் சிநேகிதன் எனக்குகூடவாவென்றான் அதற்கு அந்தகோமட்டி உனக்கும்பெப்பெப்பேதான் உன்பாட்டனுக்கும் பெப்பெப்பேதானென்றான்.

௭-வது. சண்டையின்சமாசாரம்சொன்னது.

ஒருராஜாவானவன் தன்பகையாளிசண்டைக்கு வருகிறசமாசாரத்தைக்கேள்விப்பட்டுத் தன்பட்டணத்திற்குப்பத்துநாழிகைவழிதூரத்திலே இருக்காகப்போய் மடக்கிச் சண்டை பண்ணும்படியாகச் சேனைகளைக்கூட்டி மந்திரியை அனுப்பினான் அந்தஊர்க்கோமட்டி சிலசரக்குகள் எடுத்துக்கொண்டு தண்டிலேவிக்கிரயம் பண்ணும்படி கொண்டுபோனான் அங்கேமந்திரிதோற்று ஓடிப்போன படியால் கோமட்டிபயந்து கடையைச்சுருட்டிக்கொண்டு ஓடிவந்தான்வரும்போது அந்தராஜாசண்டைசமாசாரத்தைப்பற்றிய அங்கிருந்துயாராவது

ருதிரயேர் உண்டாமென்று மெத்தையின்மேலிருந்துபார்த்துக் கோமட்டியைக்கண்டு அழைப்பித்து ஜயம் யாருதென்றார் ஜயம்நம்மிடவருதேயென்றான் அதற்குராஜா எவ்விதத்துலேயென்றுகேட்டார் கோமட்டிசுவாமி எதிரிகள் தங்களாலே கூடியமட்டும்வருத்தப்பட்டும் நம்முடையவர்களோட்டத்தைப் பிடிக்கமாட்டாமற்போனார்களென்றான் அதைக்கேட்டு இராஜா தான் அடையவேண்டியவிசனத்தோடுகொஞ்சம் சந்தோஷத்தையும் அடைந்து அவனை மெச்சினார்.

அ-வது கண்சிமிட்டியகுற்றம்தப்பித்துக்கொண்டது.

ஒருகோமட்டி ஒருநாள் இராஜாவின் அரண்மனைக்குச்சமீபமாகப்போகும்போது அதிகரூபவதியாகிய இராஜாவின் பெண்சாதி மெத்தைமேலிருந்து ஜன்னலாலே தெருவைப்பார்த்துக்கொண்டுநின்றாள் கோமட்டி அவள் தன்னைவிரும்பிப்பார்க்கிறாளென்று நினைத்து அவளை உற்றுப்பார்த்துக்கண்களைசிமிட்டிச் சைகைபண்ணினான் அவள் அதை அன்றுராத்திரி தன்புருஷனுக்குத்தெரிவித்து நாளைக்குச்சாயுங்காலம இந்த ஊரிலிருக்கிறகோமட்டிகளை யெல்லாம் அரண்மனைக்கெதிரேவந்து நிற்கும்படியாகச்செய்தால் அவனையின்னானென்று காட்டுகிறேனென்றாள் இராஜா மறுநாள் உதையத்தில் இன்றைக்கு மூன்றுஜாமத்துக்குமேல் ஐந்துவயதுப்பிள்ளை முதலாக இந்தவூரிலிருக்கிற கோமட்டிகளெல்லாம் அரண்மனைக்கு முன்பாக வந்துசேருகிறது வராதவனுக்குப் பெரிதானதெண்டனை கிடைக்குமென்று பறைசாற்றுவித்தான் உடனேகோமட்டிகளெல்லாம் ஓரிடத்திலேகூடி நமக்குள்ளே யாராவது இராஜாவுக்குக்குற்றஞ்செய்தவர்களுண்டாமென்று விசாரித்துக் கண்சிமிட்டினவன் தான்செய்தகுற்றத்தைசொல்லக் கேட்டுத்திகிலடைந்து ஆலோசித்து அங்கேயிருந்தலாசனிடத்திலே தப்பிவருமளவும் ஓயாமல்கண்ணைச் சிமிட்டிக்கொண்டு இருமென்றுகற்பித்துக் கெடுவின்படியெல்லாரும் அரண்மனை எதிரேபோய்ச்சேர்ந்தார்கள் இராஜாதன்பெண் சாதியினாலே அவனை அறிந்துசபையிலேவந்து உட்கார்ந்து அழைப்பித்துநேற்று நீ என்கண்ணைச்சிமிட்டினாயென்றார் அதற்கு ஒன்றும்சொல்லாமல் கண்ணைச்சிமிட்டிக்கொண்டே நின்றான் அவன்பின்வந்த கோமட்டிகள் சுவாமியிவனுக்கு இருந்தாற்போலிருந்து ஒவ்வொருகாலத்திலே நேத்திரவாயு வருகிறதுவுண்டு அது இந்தத்தடவை மூன்றுநாளாகக்கண்டிருக்கிறதென்றார் அதைக்கேட்டு இராஜா அவனிடத்தில் யாதொருகுற்றமும் இல்லையென்று நிச்சயித்தார்

கூ-வது. இரண்டுபேருக்குச்சாக்ஷிசொன்னது,

ஒருகிராமாதிபதியினுடைய குதிரையைச்சமீபத்திலிருக்கிற ஒருபாளையக்காரன் திருடிக்கொண்டுபோய் வாலைக்கத்தரித்துப் போ

ட்டுத்தன் வீட்டிலேவைத்துக் கொண்டான் கிராமாதிபதி போகடிபி டித்துஇராஜாவினிடத்திலேபோய்ப்பிரியாதுசெய்தான்இராஜா அது உன்னுதுதானென்பதற்குச்சாக்ஷி உண்டாவென்றார் என்கிற மதத்தில் கடைக்காரகோமட்டி யிருக்கிறானென்றான் பாளையக்காரனை ய ழைத்துவிசாரணைசெய்ய அதுதன்குதிரையேயென்றும் தனக்கும்பி ரதிவாதியின்சாக்ஷியே சாக்ஷியென்றுஞ்சொன்னான். அரசனகோம ட்டியையும் குதிரையையும் அழைப்பித்துக் கோமட்டியைப் பார்த் து இதுகிராமாதிபதிகுதிரையா பாளையக்காரன்குதிரையாவென்று கேட்டார் கோமட்டிகிராமத்தானுதென்று மெய்சொன்னால்தன்வீ டுகொள்ளைபோமென்றும் பாளையக்காரனுதென்று சொன்னால்கிரா மத்தைவிட்டு ஓடிப்போக வேண்டியதல்லாமலும் அந்தப்பொய் வெளிப்பட்டால் தெண்டனைகிடைக்குமென்றும சற்றுநேரம்ஆலோ சித்து இரண்டுபேருக்கும் அனுகூலம்போலே தோன்றும்படியாகவு ம் உண்மைவெளிப்படும்படியாகவும் உபாயந்தெரிந்துகொண்டுஇ ராஜாவைப்பார்த்துசுவாமியிந்தக்குதிரையைமுன்னேபார்த்தால் கிரா மத்தான்குதிரைபோலவும் பின்னேபார்த்தால் பாளையக்காரன்குதிரை போலவும் தோன்றுகினறதென்றான் இராஜாமிகுந்த புத்திசாலியான படியால்அவன் உபாயமாகச்சொல்லியதற்குமுன்னே யென்றதால் தி ருடிவருவதற்குமுன்னேயென்றும்முகம்பழையபடி யிருக்கிறதென் றும்பின்னே யென்றதனால்திருடிவந்தபின்னேயென்றும் வால்நூதன மாகக்கத்தரிக்கப்பட்டதென்றும்பொருள்கொண்டு அந்தக்கோட்டிபு த்தியை மெச்சிக்கொண்டு கிராமத்தான்பக்ஷம் தீர்ப்புச் செய்தான்.

## ௰-வது. கோமட்டி தானஞ்செய்தது.

ஒருகோமட்டி தன்கடையில்வந்தபூனையின்மேலே ஒருநிறைக்க ல்லைவீசினான் போதியிலேபட்டு அது இறந்துபோய்விட்டது கோம ட்டி அது மகாபாதக மாச்சுதேயென்று பயந்து மறுநாள்தன்வீட் டுக்குவந்த புரோகிதனைப்பார்த்துச் சுவாமிஒருவன் பூனையைக்கொன் றானேயானால் அதற்குப்பிராயச்சித்தம் என்னசெய்கிறதென்றான் பு ரோகிதன் பொன்னினாலே பூனையைப்போல ஒருவுருவஞ்செய்து தா னம்பண்ணவேண்டுமென்றான் கோமட்டி அவ்வளவுக்குச் சக்தி இல் லாதவனாக யிருந்தாலோவென்றான் புரோகிதன் வெள்ளியாலாவது செய்யவேண்டுமென்றான் கோமட்டி அவ்வளவுக்கும் திடமில்லாதிரு ந்தாலோவென்றான்புரோகிதன் தாம்பிரத்தாலாவது செய்ய வேண்டு மென்றான் கோமட்டி அதுவுஞ்செய்யமாட்டாத எளியனாயிருந்தா லோவென்றான் புரோகிதன் வெங்கலத்தினாலாவது செய்யவேண்டுமெ ன்றான் கோமட்டி அதற்கும் வழியில்லாதவனாக யிருந்தாலோவென்

றான் புரோகிதன் கொஞ்சம் வெல்லமாவது சம்பாதித்துப் பூனை உருவத்தைச் சிறியதாகச்செய்தாகிலும் தானம்பண்ணவேண்டுமென்றான் அதைக்கேட்டுக்கோமட்டிச்சரியென்று உள்ளே எழுந்துபோய் ஒருகொட்டைப்பாக்களவு வெல்லமெடுத்துப் பூனையுருவஞ்செய்து தாம்பூலத்துடனே பிராமணன்கையிலே தத்தம்பண்ணிப் பூனையைக்கொன்றபாவம் போச்சுதென்று புரோகிதன்வாயினாலேமுக்காலுஞ்சொல்லிவித்துப் பிற்பு அசதியிலே அந்தவெல்லத்தைப்பிடுங்கித்தன்வாயிலேபோட்டுக்கொண்டான் புரோகிதன் ஏய்செட்டி இப்படிசெய்யலாமாவென்றுகேட்டார் அதற்கு அந்தக்கோமட்டி ஐயா சுவாமி கோபித்துக்கொள்ளாதேயும் பூனையைக்கொன்றபாவம் உம்முதாகவும் வெல்லந்தின்றபாவம் என்னுதாகவும் இருக்கட்டுமென்றான்.

௰௧-வது-வரங்கேட்டது.

நித்தியதரித்திரனாகியும் பிறவிக்குருடனாகியும் கலியாணமில்லாதவனாகியும் இருந்த ஒருகோமட்டி ஒருதெய்வத்தைக்குறித்து நெடுநாளாகத்தபசுசெய்தான் அந்தத்தெய்வமானது இவன்கோமட்டியாகையால் எத்தனைவரங்களைக் கேட்பானோவென்று யோசனைசெய்துஇவனை முன்னுதாகத்திட்டம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்று நினைத்து ஓய்கோமட்டி உன்தபசுக்காகமிகவும் சந்தோஷிப்பட்டேன் உனக்குவேண்டியதுஎதாவதுஒருவரங்கேளு அதிகமாகக்கேட்டால்கொடுக்கமாட்டேனென்று சொல்லிற்று கோமட்டிநான்அநேகவரங்களை வாங்கவென்றிருந்தேனே சுவாமி இப்படிச்சொல்லிவிட்டாரோ இதற்கு என்னசெய்வதென்று ஆலோசித்துத் தெய்வத்தைப்பார்த்து என்னாண்டவனே உம்முடைய திருவுள்ளத்தின்படியே கேட்கிறேன்என்பேரனுக்குப்பேரன் எழுநிலைமாடத்திலிருந்து பொன்கலத்திலே பாலும் அன்னமுமாகச்சாப்பிட என்கண்களிக்கப்பார்த்துவிட்டுச்சாகும்படியாக இந்த ஒருவரமாத்திரம் அநுக்கிரகம்பண்ணினால் போதுமென்றுகேட்டான் இப்படி இவன்கேட்டதிலேசம்பத்தும் புத்திரபௌத்திரபாக்கியங்களும் பூர்ணாயுசும் மேலானவீடும் நேத்திரமும் என்கிற இவைமுதலாகிய சமஸ்தவரங்களும் அடங்கியிருக்கையினாலே தெய்வம் அவன்யுக்திக்காகச் சந்தோஷத்தையடைந்து அப்படியே கொடுத்தருள்செய்தது.

௰௨-வது-செம்பைத்திருடவெத்தனித்தது.

ஒருகோமட்டிஒருசெம்பிலேதண்ணீர்கொண்டுபோய் அதைச்சற்றேஎட்டவைத்துவிட்டு ஒருசெடிமறைவிலே சலோபாதைக்கு உட்கார்ந்தான் அங்கேசிலதிருடர்அந்தச்செம்பைத்திருடத் தாப்புக்

கொண்டிருந்தார்கள் கோமட்டி அதையறிந்து ஒகோ நாம் அந்தப்ப தக்கத்தைப்போட்டு வாராததினாலேயல்லவோ மலசுத்தியாகவில்லை அதைப்போட்டுக்கொண்டு வருவோமென்று தன்னிலேபேசுகிறாப்போல அவர்களுக்குக் கேட்கும்படியாகச்சொன்னான் திருடர்மறுபடி இவன் அப்படிவருவானென்று சும்மாயிருந்தார்கள் கோமட்டி செம்பையெடுத்துக்கொண்டுவந்துவிட்டான் பிறகு ஊரிலேசொல்லித் திருடனையும் பிடிக்கச்செய்தான் ஆதலால் யோசனையுள்ளவன் ஆபத்துக்காலத்திலே தப்பித்துக்கொள்வான்.

## கோமட்டிகதை

முற்றிற்று.

அத்தியாயம்-௪க்கு-கதைகள்-௭௧.

---

கடவுள் துணை.

# கதாசிந்தாமணி.

ஐந்தாம்அத்தியாயம்.

## வேடிக்கைக்கதைகள்

### முதலாவது.

சினேகிதனுக்குவீடுகாண்பித்தது.

ஒருபாக்கியவான்விஸ்தாரம்பணஞ்செலவழித்து ஒன்றின்பின்னொன்றாக எட்டுக்கட்டுவீடுகட்டி எட்டாவதுகட்டிலே தான் எப்போதுமிருக்கும்படியாகக்குளோப்புகண்ணாடி இரசகுண்டுசித்திரப்படம் இதுகளாலே அலங்கரித்துவைத்துக்கொண்டிருந்தான் அப்படியிருக்கிறகாலத்திலே இருகாதவழிக்கப்புறம் ஓரூரிலேயிருக்கிறஇவனுடையசினேகிதன் மிகவும் வறுமையடைந்திருக்கையால்தன்குமாரனைச் சாப்பாட்டுசெலவுக்கு எவ்வளவாவதுகேட்டு வாங்கிவாவென்று இவனிடத்தில் அனுப்பினான் அந்தப்பிள்ளையாண்டான் பசிதாகவிளைப்புடன்வந்தான் வந்தவனைப்பாக்கியவான் க்ஷேமம்விசாரியாமல் இட்டுக்கொண்டுபோய்த் தான்கட்டியவீட்டை ஒவ்வொருகட்டாகக்காண்பித்துத் தனக்கிருப்பிடமாகச்செய்த கடைசிக்கட்டையுங்காண்பித்தான் அதுகண்டு அந்தப்பையன்கோபத்தை உள்ளேயடக்கிக்கொண்டு ஐயா உனக்கு யிடம் இந்தக்கடைசிக்கட்டிலே வைத்திருக்கிறாயே ஒருவேளை நீ நின்றாற்போலச்செத்தால் இத்தனைவாசற்படிகளிலே வளைந்துவளைந்து எடுத்துப்போகிறது சங்கடமாச்சுதேயெ

ன்றான் வீட்டுக்காரன் நாம்குடிப்போவதற்கு முன்னே பொல்லாத
அசுபவார்த்தையைப்பேசினானென்று வந்தகோபத்தைமனதில் அட
க்கிக்கொண்டு வந்தகாரியத்தைவிசாரித்து எல்லாத்துக்கும் உன்தக
ப்பனைவரச்சொல்லுபோவென்று அனுப்பினான் அப்படியேகுமார
ன்போய்ச்சொல்லக்கேட்டு அந்தச்சினேகிதன் காதடைத்துக்கொ
ண்டுவந்தான் அவனையும் தாகத்துக்குச் சாப்பிட்டீரோயாவென்றுகூட
விசாரிக்காமல் வீடுமுழுதும் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டி
இப்படி உன்மகனுக்குக்காண்பித்தபோது இப்படிப்பட்ட பொல்
லாதசொல்லைச்சொன்னானென்று பையன்சொன்னபடிசொன்னான்
அதுகேட்டுச்சினேகிதன் அந்தப்பாக்கியவானைப்பார்த்துஅவன்சிறு
பிள்ளையாகையால் ஆலோசனைசெய்யாமற்சொல்லிப்போட்டான் அ
தை நீயெவ்வளவும் மனதிலேவைக்கவேண்டியதில்லை அப்படி நீயே
இந்த உட்கட்டில இறந்துபோனால் இந்தக்கட்டின்பின்புறத்துச்சுவ
ரை இடித்துப்போட்டுத்தாராளமாக எடுத்துக்கொண்டுபோகலாமெ
ன்றுசொன்னான் பணக்காரன் அதுகேட்டுப் பையனாவது எனக்கு
மாத்திரம்சாவுகோரினான். இவன்வீட்டுக்கும் அழிவுநினைத்தானென்
று அதிகதுக்கத்தையடைந்துசற்றுநேரம்ஆலோசித்து உடம்பினிலை
யாமையையும் செல்வநிலையாமையையும்அறிந்துசினேகிதனுக்குவே
ண்டியபொருள்களைக்கொடுத்து உபசாரஞ்சொல்லியனுப்பினான்.

## உ-வது உமேதுவாரி பாக்கியவானானது.

ஒருமனுஷியன்சிலதிரவியங்களையெடுத்துக்கொண்டுபோய்
ஒருமகாராஜாவின் சமுகத்திலே உமேதுவாரிகளுடனே கூடித்திரி
ந்துக்கொண்டிருக்கும்போது சிலகாலங்களிலேதான்கொண்டுபோ
னதிரவியமெல்லாம் செலவாகிப்போனதினாலே விடியச்சாமத்துக்கு
எழுந்துரொட்டிக்கிடங்குக்குப்போய் மாவரைத்து அதில்வருகிறகூ
லியைச் செலவுசெய்துக்கொண்டு பத்துமணிக்குமேல் உமேதுவா
ரிகளுடனேகூடஉமேதுபண்ணிக்கொண்டிருந்தான் ஒருநாள்ரொட்
டிக்கிடங்குத் தெருவழியாகஅந்தமகாராஜாவானவர் சவாரிபோகும்
போது அவன்மாவரைப்பதைக்கண்டு சாயங்காலம் தமதுசமுகத்தில்
அந்த உமேதுவாரியைக்கண்டு வலதுகையை மூடிக்கொண்டு பிரத
க்ஷணமாகச்சுற்றிக்காட்டி மாவரைக்கும்படியாக நேரிட்டதென்ன
வென்று கேட்டார் அதற்குப்பதிலுத்தரவுஉமேதுவாரி குழிப்பாகவ
யிற்றைக்காட்டிப்பின்புகையைவிரித்துக்காட்டிப் பிறகு இரண்டுவிர
லைக்காட்டி வயிற்றுக்கில்லாமையினாலேகூலிவேலைசெய்து இரண்டு
பணம்சம்பாதித்துச் சாப்பிட்டுக்கொண்டு உம்முடையசமுகங்காக்
கிறேனென்றறிவித்தான் இந்தச்சைகைகளைச் சமுகத்திலேயிருக்கிற

மந்திரிமுதலாகிய உத்தியோகஸ்தர்களெல்லாம்கண்டு இராஜாவினிடத்திலே இவனுக்கு மிஞ்சின அந்தரங்க ஆலோசனைக்காரன்வேறில்லையென்று அந்த உமேதுவாரிவீட்டுக்கு அன்றைக்குஇராத்திரிபோய்முதர்சட்டிலேநின்றுக்கொண்டு மந்திரியைமாத்திரம் உட்கட்டுக்கு அனுப்பினார்கள் உமேதுவாரி மந்திரியைப்பார்த்து எங்கேவந்தீரென்றுகேட்டான் உத்தியோகஸ்தரெல்லாம் தங்களுக்குள் அடங்கினவரேயல்லாமல்வேறில்லை. தங்களிஷ்டப்படிக்கு நடப்பார்கள் தங்களுக்கும் இராஜாவுக்கும் நடந்த சைகையைத் தெரிவிக்கவேண்டுமென்றான் கையைமூடிக்கொண்டது சமாசாரத்தை வெளிப்படுத்தவேண்டாமென்றும் பிரதக்ஷிணமாகச்சுற்றிக்காட்டினது தேசத்தைச்சுற்றிப்பார்த்தீராவென்றும்கேட்டது அதற்குப்பதில் நான்வயிற்றைக்காட்டினது சகலசமாசாரமும் என்வயிற்றுக்குள்ளேயிருக்கிறதென்றும் கையைவிரித்துக்காட்டினது ஒருசமாசாரமும் வெளிப்படுத்தவில்லையென்றும் இரண்டுவிரலைக்காட்டினது இரண்டுநாளைக்குள்ளே எல்லாம் விவரமாகத்தெரியப்படுத்துகிறேனென்றும் சொன்னதென்றான் இதைக்கேட்டவுடனே மந்திரி அஞ்சித் தானும் எல்லாருமாக இருபதுலக்ஷம்வராகன் வரிபோட்டுக்கொண்டு அதைக்கொண்டுபோய் உமேதுவாரியினிடத்திற் செலுத்தி எங்களையெல்லாங்காப்பாற்றவேண்டுமென்றுவேண்டிக்கொண்டான்மறுநாளையதினம்உமேதுவாரி பல்லக்கேறிக்கொண்டு ஒருதெருபோதுவழியிலே இராஜாகண்டு தன்சவாரியைநிறுத்தி இவ்வளவுசம்பத்து என்னவிதமாகவந்ததென்று இரகசியமாகக்கேட்டார் உமேதுவாரி உங்களிஷ்டத்திலேநடந்த சைகையினாலே வந்ததென்றுதெரிவித்தான் அதைக்கேட்டு இராஜா சந்தோஷித்துத் தன்னிடத்தில் அவனை மந்திரியாகவைத்துக்கொண்டார் ஆகையால் வல்லவனுக்குப் புல்லும்ஆயுதமென்கிற பழமொழியை உமேதுவாரி ஒருசிறியகாரியத்தைப் பெரியகாரியமாக்கித்தெரிவித்தான்.

## ௫-வது-புகழ்ச்சம்பாதிக்கப்போய்ப்பழிசம்பாதித்தது.

மதுராபுரியென்னும்பட்டணத்தில் பாண்டியராஜன்சபையிலே இருபதுவருஷகாலம் தினந்தோறும்போய் வந்துகொண்டிருந்து அந்தராஜாவின்தயவு சம்பாதித்திருந்த ஒருகுடித்தனக்காரன் வீதியிலேபோகையில் எதிரே அவசரமாகவந்த ஒருவன்கை தன்மேல் பட்டபடியால் ஏண்டாமுட்டாளே ஒற்றிப்போகலாகாதாவென்றான் அதற்கு அவன் நீ ஒதுங்கிப்போகலாகாதா தேவடியாள்மகனேயென்றான் உடனே அந்தக்குடித்தனக்காரன் அரசனைக்கண்டு என்னை ஒருவன் தேவடியாள்மகனேயென்று தூஷணம்செய்தானென்றுசொல்

ல் அரசன் உம்முடைய பெருமைக்கு அதை ஒரு காரியமாக நினைக்கலாகுமாவென்றான் அதுகேட்டு அந்தக்குடித்தனக்காரன் மகாராஜாவே நெடுங்காலமாக உங்கள் சமுகம் காத்திருக்கிற என்மேலே உங்களுக்கு ஏதோ தயவு தப்பியிருக்கிறதாகத் தோன்றுகின்றது அப்படியே லேசாக விடவேண்டாம் உங்கள் சபையில் அவனை அழைப்பித்து விசாரணை செய்யவேண்டுமென்றான் அரசன் நகைசெய்து அவனை அழைப்பித்து நீ இந்தப்பெரிய மனுஷனைத் தேவடியாள்மகனேயென்று சொல்லலாமாவென்றார் அதற்கு அவன் நான் அவசரமாகப் போகும்போது இவர் சந்தித்தார் அப்போது என்கை இவர்மேலே பட்டது அதற்கு இவர் முட்டாளேயென்றார் அந்தக்கோபத்தினாலே தேவடியாள்மகனேயென்றேனென்றான் அரசன் அந்தக்குடித்தனக்காரனைப் பார்த்துத் தான்சொல்லியது மெய்தானென்று சொல்லுகிறான் இனிநடக்கவேண்டியதென்ன சொல்லென்றார் அதற்கு அவன் நேற்றுப்பலபேர் நடந்த வீதியிலே சொல்லியது இன்றையதினம் உங்களுடைய மகாசபையிலே தானே ருசுவாச்சுதே மகாராஜாவின் சபையிலிருக்கிற குலஸ்திரீமகனாகிய இன்னானை இன்றுமுதலாகத் தேவடியாள்மகனென்று யாவரும் சொல்லவேண்டியதில்லையென்று பட்டணமெங்கும் பறைசாத்திவிக்கச்சொல்லி கேட்டுக்கொண்டான் அப்படியே அரசன் உத்தரவு செய்தார் அப்பறைசாத்துதல்கேட்டு எல்லாரும் அவனைத்தேவடியாள் மகனென்றே நினைத்தார்கள் ஆகையால் புத்தியீனர்கள் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுவார்கள்

[illegible]-வது. கடன்காரனுக்குப்போக்குக்காட்டியது.

ஒருசெட்டிகையில் ஒருகுடித்தனக்காரன் ஆயிரம்வராகன் கடன்வாங்கிக்கொண்டான் செட்டிவந்து கெடுவிலே கடனைக் கேட்டான் குடித்தனக்காரன் வருஷக்கெடுவாகச் சிலவருஷங்கள் சொல்லிக்கொண்டுவந்து அதன்பின் வருந்திக்கேட்டவிடத்து மாசக்கெடுவாகச் சிலமாசங்கள் சொல்லிக்கொண்டுவந்து பிறகு வாரக்கெடுவாகச் சிலவாரங்கள் சொல்லிக்கொண்டுவந்து கடைசியில் தினக்கெடுவிட்டான் அதுவாயில் நாற்பது வருஷகாலமாகத் திரிந்துதிரிந்து இளைத்துச்செட்டி இன்றைத்தினம் எப்படியுங்கொடுப்பானென்று நம்பிக்கொண்டுவந்தான் தெருக்கோடியில் கடன்காரன்வருகிறதைக்கண்டு குடித்தனக்காரன் சீக்கிரமாக எழுந்து ஒருபுட்டிற்கூடையில் புளியங்கொட்டையை எடுத்துக்கொண்டு ஒருகரண்டிக்காம்பாலே வேலிக்காலில் குழி தோண்டி வரிசையாகப்போட்டுக்கொண்டிருந்தான் செட்டிவந்து வீட்டுக்காரன் எங்கேயென்றுகேட்டான் வீட்டுமனிதர் கொல்லையிலே இருக்கிறானென்று சொன்னார்கள் அதைக்கேட்டுக்கொண்டு கொல்லையிலிருந்த கடன்

காரனிடத்தில் செட்டிபோய்நிற்கக் கடன்வாங்கினவன்பார்த்துச் சீக்கிரம சீக்கிரமாகப் பின்னையும் புளியங்கொட்டைகளைப்போட்டுத் தண்ணீர்வார்த்துக்கொண்டேயிருந்தான் செட்டி நான்வந்த காரியத்தைப்பாராமல பராமுகமாயிருக்கிறீரோ என்னவென்றான் குடித்தனக்காரன் உம்மிடகாரியத்திலேநான் அதிகஜாக்கிரதையாயிருக்கிறேன் உமக்குக்கண்தெரியவில்லையாவென்றான் ஆனால்சந்தோஷம்வராகனைக்கொடுமென்றான் இதோபுளியங்கொட்டைகளைப்போட்டுக்கொண்டிருக்கிறேனே அதுகளெல்லாம்வளர்ந்து மரமாகிகாய்த்தவுடனே முதற்காய்ப்பிலே ஆகிறபுளியைவிற்று உம்மிடகடனைச் செலுத்திப்போடுகிறேனென்றான் அதைக்கேட்டுச் செட்டி உள்ளேவயிற்றெரிச்சலுடனே சிரித்தான் அதுகண்டு குடித்தனக்காரன் கடனுக்கு வழிபிறந்ததே இப்போதுநீ சிரிக்கமாட்டாயாவென்றான்.

## ௫-வது. குருவுக்குமோசஞ்செய்தது.

ஒருசிஷ்யனை அவனுடையஆசாரியார்வருஷாவருஷம் தக்ஷிணைக்காக நெடுந்தூரத்திலிருந்துவந்து கண்டுகொண்டேவந்தார் வந்தபோதெல்லாம் தனக்குக்கையிலில்லாமலிருக்கிறதாக இதவாகப்பேசி வருகிறவருஷத்திற்குக்கொடுக்கிறேன் தயவுபண்ணிப் போய்வாருங்களென்று உபசாரஞ்சொல்லிக்கொண்டேவந்து பின்புஒருதடவைமேலைவருஷத்துக்கு அவசியமாகக்கொடுப்பேனென்று அனுப்பினான் இந்ததடவை தப்பாமற்கொடுப்பானென்று ஆசாரியர்வந்தார் உடனே சிஷ்யன்எழுந்து ஆசனங்கொடுத்து உட்கார்ந்தபிற்பாடு சேவித்துக்கொண்டு சாப்பாடுவிசாரித்துச் சுவாமியிருங்கள் சீக்கிரமாகவந்து அனுப்புகிறேனென்று தான்போய் சாப்பிட்டுப்போட்டுப்பொட்டியை எதிராகக்கொண்டுவந்துவைத்துத்திறந்து உள்ளேவலதுகையைப்போட்டு மூடிப்பிடியாகப் பிடித்துக்கொண்டு ஆசாரியரிடத்திற்குவந்து இனிசுவாமி எழுந்திருங்களென்றான். ஆசாரியர் இத்தனைநாளகொடாமல் கெடுவுவைத்துக்கொண்டுவந்தாலும் இப்போது ஒருபிடிவராகன்கொடுக்க எடுத்துக்கொண்டுவந்தானென்றுபொங்கிக்கொண்டு பறப்பட்டார் பின்னாலே சிஷ்டனும்போனான் நாலுநாழிகைவழிதூரம்போனபிற்பாடு சிஷ்யன் சுவாமி இது என்னமாசமென்றான் ஆசாரியர்இதுமார்கழிமாசமென்றார் சிஷ்யன்மூடிக்கொண்டுவந்தகையைமார்கழிமாசமுதல் பதினைந்துமாசவரைக்கும் விரலைவிட்டு எண்ணிக்காட்டிப் பதினைந்தாமாசத்தில் வரச்சொல்லிக்கெடுவிட்டான் ஆசாரியர் எண்சாணுடம்பும் ஒருசாணுடம்பாகக்குன்றித்திகிலடைந்து வெட்கிப்போய்விட்டார் ஆகையால் பொய்யானபொருளாசை மெய்யானவருவாசையை விலக்குமென்பது உண்மையே.

## ௬௰-வது-குடிமக்கள் அதிகாரம்பண்ணியது.

அம்பட்டன், குயவன், வண்ணான் இம்மூன்றுபேரும் ஒருராஜா
வினுடைய தயவுசம்பாதித்தார்கள் ராஜா உங்களுக்குவேண்டுவதென்
னவென்றுகேட்டார். தங்களுக்கு உத்தியோகம்வேண்டுமென்றார்கள்
ராஜா அம்பட்டனுக்குத் தற்பதாரர் உத்தியோகமும் குயவனுக்கு
பேஷ்காரர் உத்தியோகமும் வண்ணானுக்கு அமுல்தார் உத்தியோகமும்
நியமித்துச் சன்னதுகொடுத்தார் அப்படியே அவர்கள் அதிகாரம்ப
ண்ணிக்கொண்டு வருகையில் ஒருகுடித்தனக்காரனை ஒருபோக்கிரி அ
டித்துப்போட்டான் அந்தக்குடித்தனக்காரன் தற்பதாரனிடத்தில்வந்
து நடந்தவர்த்தமானத்தைச் சொல்லிச் சகலமுந்தங்களுக்கு அறிக்
கையிட்டேன் தாங்கள்பார்த்து இனிவைத்தால்குடுமி சிரைத்தால்மொட்
டையென்றுலோகாபிரமமாகச்சொன்னான் அம்பட்டன்தன் தொழிலை
காட்டித்தன்னை நிந்திக்கிறதாக நினைத்து அவனைப்பன்னிரண்டடி அடிக்
கச்சொன்னான் அதைப்பட்டுக்கொண்டுபேஷ்காரிடத்திற்போய்நடந்த
வர்த்தமான மெல்லாஞ்சொல்லிச சகலமும் தங்களுக்குத் தெரிவித்
தேன் தாங்கள்பார்த்து இனிசட்டியாகப்பண்ணினாலுஞ்சரி பானையா
கப்பண்ணினாலுஞ் சரியென்று உலகவழக்கமாகச்சொன்னான் தன்
தொழிலைக்காட்டிக் குயவனென்று பழிக்கிறதாகநினைத்துக் கோபங்
கொண்டு இருபத்துநாலடி அடிக்கச்சொன்னான் அதைப்பட்டுக்கொ
ண்டு அமுல்தாரனிடத்திற்குப்போய் நடந்தவர்த்தமானங்களைச்சொ
ல்லி எல்லாம்விவரமாகத் தங்களுக்குத்தெரியப்படுத்தினேன தாங்க
ள்பார்த்து இனிவெளுத்துவிட்டாலுஞ்சரி சும்மாவிட்டாலுஞ்சரியெ
ன்றுசொன்னான் தன்தொழிலைக்காட்டித் தன்னைவண்ணானென்றுஇக
ழுகிறதாக நினைத்து முப்பத்தாறடி அடிக்கச்சொன்னான் அதைப்ப
ட்டுக்கொண்டு ராஜாவினிடத்திலேபோய்ப் பிரியாதுசெய்தான் ரா
ஜா அடித்தவனையும் சாக்ஷிக்காரரையும் அழைப்பித்துவிசாரணைப்ப
ண்ணும்போது பிரியாதுபண்ணிக்கொண்டவன் யோக்கியனென்றும்
அடித்தவன்போக்கிரியென்றும் ருசுவாச்சுது இப்படிநியாயமிருக்க
அநியாயமாக உத்தியோகஸ்தர் அடித்தகாரணம் என்னவென்று அ
ந்தமூன்றுபேரையும் அழைப்பித்துக்கேட்கத் தங்களை நிந்தித்ததாக
அந்தக்குடித்தனக்காரன்சொன்னபழமொழிகளைச் சொல்லிக்காட்டி
னார்கள் ராஜா தெரிந்துக்கொண்டு குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுமெ
ன்னும் குறும்பிவுள்ளகாது தினவுதின்னும் என்கிற பழமொழிப்ப
டியே தங்கள்குற்றத்தை நினைத்துக்கொண்டு அநியாயஞ்செய்தார்க
ளென்று கோபித்துக்கொண்டு இனிமேலெப்போதும்குடிமக்களை
உத்தியோகத்தில் வைக்கக்கூடாதென்று நிச்சயித்தார்.

### ௭-வது வீணையைச்சேவகன் ஒடித்தது.

ஒருராஜாவானவர் சுந்தரமிழைத்து ரத்தினம்பதித்த அருமை
யான ஒருவீணையை அப்பியாசம்பண்ணிக்கொண்டேவருவார் அவர்
ஒருநாள் சுதிக்குத்தந்திகளைச் சரிப்படுத்தும்படியாக முறுக்காணிக
ளைப்பிடித்துப் பலதரமுறுக்கிப்பார்த்தார் அப்போது அவர்பக்கத்தி
லேநின்ற ஒருமூடசேவகன் அதைப்பார்த்து இவர்இந்தவீணையை
ஒடிக்க மிகவும் வருத்தப்படுகிறாரென்று நினைத்து ராஜா எழுந்து அ
ந்தப்புரத்துக்குப்போய் வருகிறதற்குமுன்னே வீணையையொடித்து
ப்பொடிப்பொடியாக்கிவிட்டு அதிகசந்தோஷத்துடன் ராஜாவின்வ
ரவை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தான் ராஜாவந்துபார்த்து இப்ப
டிபொடிப்பொடியாகும்படி எப்படி ஒடித்தாயென்றுகேட்டார்சே
வகன்தன்னைமெச்சுகிறதாகநினைத்து இது சுவாமிதங்கள் அல்லவி
சேஷித்தால் எளிதிலே ஒடிக்கத்தக்க வல்லமை அடியேனுக்கு வந்த
தென்றான்ராஜாபுத்தியீனர்கள் பத்தியாகச்செய்வதும்விபரீதமாமெ
ன்றுசொன்னார்.

### ௮-வது மாட்டிடையன்சங்கீதவித்துவானைச்சூடியது.

ஒருமாட்டிடையன் லக்ஷ்மீவராகன் புதையல் அகப்பட்டுப்பாக்
கியவானானான் ஒருசங்கீதவித்துவான் அவனிடத்துக்குப்போய் கீர்த்
தனங்கள்பாடினான் பாடும்போது இசைக்குத்தக்கபடி கை தலைக
ண்களை அசைத்தான் அதைக்கண்டு இவனுக்குவலிப்புகண்டதென்று
நினைத்து இடையன் உட்கட்டுக்குப்போய்ச் சூட்டுக்கோலைக் காயப்
போட்டுவிட்டுவந்து அழைத்தான் பாடகன் தனக்கு வெகுமதிகொடு
க்க அழைக்கிறானென்றுபோனான் அவ்விடையன் இரண்டாள்களை
விட்டுப் பிடித்துக்கொள்ளச்செய்து சூடிவிட்டான் சங்கீதவித்துவா
ன் திகிலடைந்து அலறி அழுதுக்கொண்டே தன்வீடுபோய்ச்சேர்ந்து
ரணவைத்தியனால் குணப்படுத்திக்கொண்டு இனிமேல்யாரிடத்திலு
ம்போகலாகாதென்று நிச்சயித்துக்கொண்டு இருக்கும்போது சங்கீத
வித்துவானுக்குப் பழக்கமான ஒரு இலக்கணவித்துவான் அவனைப்
பார்த்து நீர் சங்கீதத்தில் வல்லவராயிருந்தும் வறுமையை அடைந்தி
ருக்கவேண்டியதென்ன போக்கியமான ஒருராஜா எனக்கு இஷ்ட
னாயிருக்கிறான் அவனிடத்தில் உமக்குச் சிபாரிசுபண்ணுகிறேன் வா
ருமென்று அழைத்துக் கொண்டுபோய்ச் சிபாரிசுபண்ணிப் பாடச்
சொன்னான் பத்துராகங்களில் ஆலாபித்து கனநயதேசியங்களைப்பா
டினான் ராஜாகேட்டு மிகுந்த சந்தோஷத்தை அடைந்து சகலவெகு
மானமும் செய்ய நினைத்து எடுப்பித்துக்கொண்டுவர எழுந்து உட்க
ட்டுக்குப்போனான் அப்போதேசங்கீதவித்துவானுக்குச் சந்தேகம்பி

றந்து ஒருநாழி ஆலசியப்படவே இதுவும் சூட்டுக்கு எத்தனந்தா னென்று ஒட்டம்பிடித்தான் எத்தனைபேர்போய் உபசாரஞ்சொல்லி அழைத்தாலும் திரும்பிப்பாராமல் வீட்டுபோய்ச்சேர்ந்தான் இராஜா வந்து இலக்கணவித்துவானைப்பார்த்துச் சங்கீதவித்துவான் எங்கே யென்றான் அவர் என்னமோ ஒருபயத்தினாலே ஒடிப்போனானென் றான் இராஜா இப்படிப்பட்ட அச்சம் என்னாலே வரவேண்டியதென் னவென்று விசனப்பட்டுச் சகலவெகுமதிகளையும் எடுப்பித்துக் கொண்டு சங்கீதவித்துவான் வீட்டிற்குப்போய் அதிகமரியாதையுட ன்கொடுத்து வித்துவானைச் சந்தோஷிப்பித்தி என்னத்தினாலேஒ டிவந்துவிட்டீரென்றுகேட்டார் முன்னேதன்னைச்சூடியசெய்தியைச் சொல்லிஇப்போதும் அப்படியேநடக்குமென்று ஓடிவந்துவிட்டே னென்றான் அதுகேட்டுஇராஜா ஆச்சரியப்பட்டுமூடர்களுக்குப்பாக்கி யப்பவத்தால் செய்காரியம் தவிர்காரியம் அறிந்துசெய்யமாட்டார்க ளென்றுசொன்னார்

௯-வது. ஆட்டிடையன் கீர்த்தனம்பாடுகிறதைப்பார்த்து அழுதது.

ஒருபாடகன் தான்போகிறகாட்டுவழியில் ஆட்டுமந்தைவைத்து க்கொண்டிருந்த ஒரு இடையனைக்கண்டு இவனிடத்திலேகீர்த்தனைபா டிப் பாக்குகேட்டுவாங்கிக்கொண்டு போவோமென்று நினைத்துப்போ ய்க்கடவுள்விஷயத்திலே உருக்கமாகப்பாடினான் பாடுகிறதைப்பார் த்து இடையன்தாரைதாரையாகக் கண்ணீர்விட்டுஅழுதான் பாடகன் அழுகிறவனைப்பார்த்து எனப்பா அழுகிறாயென்றுகேட்டான் நீதொ ண்டி முடம் கிழமல்லவே நல்லபௌவனமும் அழகும் உடையவனு ச்சே உனக்கு நேரிட்டிருக்கிற அனியாயத்தை என்னென்றுசொல் லுவேனென்றான் பாடகன் யோசிக்கவேண்டியதில்லை அதைச்சொல் லுமென்றான் நேற்று விடியற்சாம முதற்கொண்டு சூரியோதயம்வ ரைக்கும் ஆடொன்று இப்படிதான்கதறிக்கொண்டிருந்து தலைவீங்கி ச்செத்தது ஆகையால் நீ நாலுநாழிகையாகக் கத்துகிறாயே இன்னம் நாலுநாழிகைபோனால் தலைவீங்கிச்செத்துப்போவாயென்று அழுகி றேனென்றான் பாடகன்வெட்கப்பட்டு அருமையறியாதவனிடத்தில் போனால் பெருமைகுன்றந்துபோமென்கிறபழமொழிக்கு உதாரண ங்கண்டோமென்று சொல்லாமற்போய்விட்டான்.

௰-வது. கற்றுக்குட்டிவயித்தியம்பண்ணினது.

ஆயுர்வேதமென்கிற வைத்தியநூல்தெரிந்த ஒருவயித்தியன் ஒ ருபட்டணத்தில் கீர்த்தியுடனே வைத்தியம்பண்ணிக் கொண்டுவந்தா ன் அவனிடத்திலேவைத்தியம் கற்றுக்கொள்ளஒருவன்வந்துசேர்ந்து மருந்துப்பை எடுத்துக்கொண்டு அவன்பின்னேபோய்க்கொண்டுஒ

ருமாதமிருந்தான் உடனேவயித்தியனுக்கு அந்தியகாலம் நேரிட்டுஇ
றந்துபோய்விட்டான் பிற்பாடு அந்தமருந்துப்பையைநோயின்கு
ணமும் மருந்தின்குணமும் செவ்வையாகத்தெரியாத அந்தக்கற்றுக்
குட்டி எடுத்துக்கொண்டு தன்னிடத்திலே வயித்தியங்கற்றுக்கொள்ள
ஒருவனைவைத்துக்கொண்டு வைத்தியம்பண்ணப்புறப்பட்டான்பிரப
லமான வயித்தியனிடத்திலிருந்தவனாகையால் இவனும் கெட்டிக்கா
ரனாயிருக்கலாமென்று ஒரு அதிசாரக்காரனுக்கு வயித்தியம் பண்ண
அழைத்துக்கொண்டுபோய்ச் சீக்கிரத்திலேகுணப்படுத்தும்படி வெ
கு உபசாரஞ்சொன்னார்கள் அந்தமூடன் அப்படியே ஆகட்டுமென்
று இந்தநோய்க்கு இந்தமருந்தென்று தெரியாமையால் மருந்துப்
பையில் பேதிக்கு யாராவதுகேட்டாற் கொடுக்கும்படி மேலேவை
த்திருந்த நேர்வாளமாத்திரைகளில் சுமார்பத்துமாத்திரை மட்டுக்கும்
உரைத்து உள்ளுக்குக் கொடுத்துவிட்டான் உடனேரோயாளி அதிக
பேதிகண்டு இறந்துபோய்விட்டான் அந்தவீட்டிலேவேறே ஆண்தி
க்கில்லாமையால் பெண்டுகள் வயித்தியனுக்கு உபசாரஞ்சொல்லி இந்
தப்பிணஞ்சுடுகாடுபோய்ச்சேரவேண்டுமே உங்களைவிடவேறேசகாய
ம் இல்லையென்று வேண்டிக்கொண்டார்கள் அதற்குஉடன்பட்டுப்பா
யிலேசுருட்டித் தலைமாட்டில்வயித்தியனுங்கால்மாட்டில்கற்றுக்குட்
டியும் எடுத்துக்கொண்டு போம்போது ஆசனத்துவாரம் திறந்து
போய்விட்டபடியால் மலந் தாரைதாரையாகக் கற்றுக்குட்டிமேல் வி
ழுந்தது அந்நாள் அவ்விருவரும் ஒருசீமான் வீட்டில் வைத்தியம் பண்
ணப்போனார்கள் அங்கேவைத்தியன் பையை அவிழ்த்து மாத்திரை
யை இழைக்கப்போனான் கற்றுக்குட்டி தலைமாட்டில் என்னை எடுக்க
ச்சொல்லிக் கால்மாட்டில் நீ எடுக்கிறதாக இருந்தால் அவிழ்த்துக்
கொடு இல்லாவிட்டால் கொடாதேயென்று மறித்தான் அதென்னவ
டணமென்று வீட்டுக்காரர்விசாரித்தார்கள் நேற்று ஒருவனுக்கு அ
விழ்த்துக்கொடுத்துச் சீக்கிரத்திலே சாகும்படி செய்து இவர் தலைமாட்
டில் எடுத்துக்கொண்டு கால்மாட்டில் என்னை எடுக்கச்சொல்லி என்
னுடம்பை அசுத்தமாக்கினார்ஆகையால்இன்றைக்கும் அப்படிசம்ப
விக்கப்போகுமென்று முன்சாக்கிரதை செய்கிறேனென்றான் அது
கேட்டு அந்தவீட்டுக்காரர்கள் அஞ்சி அவ்விரண்டுபேரையும் நீக்கிவி
ட்டார்கள் ஆகையால் ஒருவன் தெரியாத காரியத்திலே தெரிந்தவனாக
ப் பிரவேசித்தால் பழிக்கும்பாபத்துக்கும் அவனுக்கு இடமுண்டா
கும்.

௰௧-வது. செட்டிவீணாலோசனைசெய்தது.

ஒருசெட்டிகடையிலே உட்கார்ந்துக்கொண்டு தன்வியாபாரத்
தைக்கூட முக்கியமாக எண்ணாமல் பெரிதாகிய ஆலோசனைபண்ணி

க்கொண்டிருந்தான் ஒருவன் நூறுவராகன் சரக்குக்கொள்ளவந்தான் அதைக்கூடச் சட்டைபண்ணாமல் ஆலோசனையில் மூழ்கியிருந்தபடியால் சரக்குக்கொள்ளவந்தவன் என்னசெட்டியாரே மெய்மறந்து ஆலோசனை பண்ணுகிறீரென்றான் செட்டி ஒருகல்யாணத்தைக்குறித்து ஆலோசனைபண்ணுகிறேனென்றான் சரக்குக்கொள்ளவந்தவன் ஆலோசனைமுடிந்ததாவென்றான் செட்டி பாதிமுடிந்தது இன்னம்பாதிமுடியவேண்டுமென்றான் சரக்குக்கொள்ளவந்தவன் அதுஎப்படியென்றான் செட்டி யிந்தப்பட்டணத்து இராஜாமகள் புஷ்பவதியாய்மிகவும் அழகுள்ளவளாயிருக்கிறபடியால் எனக்கு அவளைக்கலியாணம் பண்ணிக்கொள்ளச் சம்மதிதான் எனக்குச் சம்மதியானபோதே என்குடும்பத்தாருக்கும் சம்மதியாயிருக்குமேயல்லாமல் வேறில்லை ஆகையால் பிள்ளைவீட்டுக்காரர்சம்மதித்தபோது பாதிவிவாகம் முடிந்தாற்போலத்தானே பெண்வீட்டுக்காரர் சம்மதியானால் மற்றைப்பாதியும்முடியுமென்றான் சரக்குக்கொள்ளவந்தவன் நகைத்து (கிட்டாதாயின்வெட்டென மற) என்பதைவிட்டுக் கிட்டாதபொருளைக்குறித்து ஆலோசனைபண்ணுகிறவனைவிட வீணன்வேறில்லையென்று எகத்தாளி செய்துவிட்டுப்போனான்.

## ௰௨-வது உடைமையிலாதவர்கள் உடைமையிட்டுக்கொண்டது.

எளியவராயிருந்த மூன்றுபேர்களில் தெய்வானுகூலத்தினாலே கிடைத்தது ஒருவன் பொன்மோதிரமும் ஒருவன் வெள்ளி அரைநாணும் ஒருவன் முத்துக்கடுக்கனும் அணிந்துகொண்டார்கள் இந்தமூன்றுபேரும் ஒருபொதுவிடத்திலே உட்கார்ந்துகொண்டு மனமகிழ்ச்சியுடன் இருக்கும்போது ஒருவன் அங்கேவந்து என்பசுவின்கன்றைப்பார்த்தீர்களாவென்றான் மோதிரம்போட்டுக்கொண்டவன் எழுந்திருந்து அதுதெரியும்படியாகக் கையைநீட்டிவிரலெண்ணி நாலுநாழிகையாகக் காணோமல்லவாவென்றான் அரைநாணிட்டுக்கொண்டவன் எழுந்து அதுதெரியும்படியாக அரையில்கையைவைத்து இவ்வளவு உயரமல்லவாவென்றான் கடுக்கன்போட்டுக்கொண்டவன் எழுந்து அதுதெரியும்படியாக இப்படித்தான்போச்சுது இப்படித்தான்போச்சுதென்று தலையையசைத்தான் கேட்டவன் இவர்கள் அற்பர்கள் இந்த உடைமைகிடைத்தது இந்திரப்பட்டம்கிடைத்ததுபோலநினைத்தார்களென்று பரிகாசம்பண்ணிக்கொண்டு போய்விட்டான்.

## ௰௩-வது படித்தவன் பிரயோசனப்பட்டது.

ஒருத்தனுக்கு இரண்டுபிள்ளைகள் யிருந்தார்கள் அவர்களில் இளையபிள்ளை தாய்தகப்பன்சொன்ன புத்தியைக்கேட்டு வித்தையைக்

கற்றுக்கொண்டான் மூத்தப்பிள்ளை அவர்கள்சொன்னபுத்தியைக்கேளாமல் முட்டாளாய்ப்போனான் அந்த இரண்டுபிள்ளைகளும் ஒருநாள்காட்டிலே இலைபறிக்கப்போனார்கள் அப்போது அங்கே மூத்தப்பிள்ளையானவன் ஒருகல்லில் எழுதியிருக்கிறதைக்கண்டு படிக்கத்தெரியாமல் தம்பியை அழைத்து இந்தக்கல்லைப்பாரென்று சொன்னான் அவன் அதைப்பார்த்து அதின்கீழே பதினாயிரம் வராகன்யிருக்கிறதென்றறிந்து அண்ணனுக்கு வேறென்றைச்சொல்லிமறைத்துப்பிற்பாடு அவனைக்காணாமல்வந்து தோண்டியெடுத்துக்கொண்டுபோய்ப்பாக்கியவானாயிருந்தான் ஆகையால் வித்தையை முக்கியமாகக்கற்கவேண்டும்.

௰௪-வது-வணக்கமுள்ளவன் மரியாதைபெற்றது.

இரண்டுபேர் அண்ணன் தம்பிகள் அவர்களில்மூத்தவன் எல்லாரிடத்திலும் வணக்கமுள்ளவனாயிருந்தான் இளையவன் துஷ்டனாய் எல்லாரையும் திட்டிக்கொண்டிருந்தான் அப்படியிருக்க ஒருநாள் அந்தஇரண்டுபேரும் ஒருஊருக்குப்போகிறபோது நாலுபேர்திருடர்கள் அவர்களைமடக்கிக்கொண்டார்கள் அப்போது சின்னவன் அவர்களைத்திட்டினான் அவனைப்புரட்டிப்புரட்டி உதைத்துக்கையிலேயிருந்ததையெல்லாம் பிடுங்கிக்கொண்டார்கள் பெரியவன் மிகவும்வணக்கமுடன்பேசினான் அவனை ஒன்றுஞ்செய்யாமல் தங்கள்கையிலிருந்த நூறுவராகன் பெறத்தக்க ஒருநகையுங்கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

௰௫ வது குணவானாலே குறும்பன் சாபம்நீங்கினது.

ஒருவனுக்கு இரண்டுபிள்ளைகளுண்டு அவர்களில்மூத்தவன் ஒருகுறும்புஞ்செய்யாமல்யோக்கியனாயிருந்தான் இளையவன் துஷ்டப்பயல்களுடனேகூடிக்கொண்டு எந்நேரமுங் குறும்புசெய்துக்கொண்டேயிருந்தான் அந்த இரண்டுபிள்ளைகளும் ஊரண்டையிலிருந்த ஒருகாட்டிலே யிலைபறிக்கப்போனார்கள் அங்கே சின்னபையன் ஒரு ஆலமரத்தின்மேலேறினான் அந்தமரத்தினுடையபொந்தில் ஒருரிஷி கண்ணைமூடிக்கொண்டு தபசுபண்ணிக்கொண்டிருந்தார் ஒருகிளையை வளைத்து அவர்சடையைமுடிந்துவிட்டான் அது அவரைத்தூக்கிக்கொண்டு மேலே எழும்பவே அவர் கண்ணைத்திறந்துபார்த்து அவனுக்குச்சாபங்கொடுத்தார் பெரியவன்வந்து அவிழ்த்துவிட்டான் அவனுக்கு நல்லசெல்வமும் கல்வியும உண்டாகும்படி வரங்கொடுத்து இன்னம என்னவேணுமென்றார் என்தம்பி சாபம் நீங்கும்படிவரங்கொடுக்கவேணுமென்றான் அப்படியே வரங்கொடுத்தார் ஆகையினாலே குறும்புபண்ணலாகாது.

௩௬-வது-மரத்தாலே மாமியார் பண்ணிவைத்துக்கொண்டது

ஓரூரிலே தம்பி தமையன்மாராகிய இரண்டுபேர்பிராமணர் வர்த்தகத்தைக்குறித்து ஒவ்வொருத்தன் பெண்சாதியினிடத்தில் அவ்வாறுமாசத்திற்குச்சாப்பாட்டுக்குக் கொடுத்துவிட்டுத்தூரதேசத்துக்குப் போனார்கள் மூத்தவன்பெண்சாதி வெகுசிக்கனமாக அன்றாடம் சாப்பாட்டுச்செலவிலேகூடக்கொஞ்சம் மீதியாக்கிக்கொண்டுவந்தாள். இளையவன்பெண்சாதி அண்டைவீட்டுக்காரியினிடத்திற்போய் என்புருஷன்வர்த்தகத்திற்காகப்போயிருக்கிறார் எனக்குப்பெரியவர்களொருத்தருமில்லை நானெவ்விதமாகக் குடித்தனப்பண்ணுவேனென்றாள் அதற்கு அண்டைவீட்டுக்காரிபரியாசமாக மரத்தாலே மாமியார்பண்ணிக்கொண்டாயேயானால் குடித்தனம் செம்மையாய்ப்பண்ணலாமென்றாள் அது நிசமென்றேநம்பி ஒரு தச்சனால் மரமாமியார்செய்துக்கொண்டு அந்தமாமியாருக்கு ஒருகை யிரண்டுவிரல்காட்டிக்கொண்டிருக்கச்செய்திருக்கிறபடியால அந்த இரண்டுவிரலைப்பார்த்து இரண்டுபடி அரிசி சமையல்பண்ணி மாமியாருக்கு ஒருஇலைபோட்டு வட்டித்துப்போட்டு மற்றதைத் தான்சாப்பிட்டுக்கொண்டுவந்தாள் மாமியாருக்கு வட்டித்திருக்கிறதை மூத்தவன்பெண்சாதி வேளைக்குவேளைத் திருடிச்சாப்பிடடுக்கொண்டேவந்தாள் இப்படி இருக்கும்போது வர்த்தகத்துக்குப்போனவர்கள்வந்துவிட்டார்கள் மூத்தவன்பெண்சாதி தனக்குக்கொடுத்ததை அதிகமாகச் சேர்த்துவைத்துக்கொண்டிருந்தாள் இளையவன்பெண்சாதி அன்றையத்தினமேமுறமெடுத்துக்கொண்டு கடன்வாங்கப்புறப்பட்டாள் இளையவன்கோபித்துக்கொண்டு உனக்குக்கொடுத்த அரிசியெல்லாம் என்னமாகப் போய்விட்டுதென்று அடித்தான் என்மாமியாரும் நானும் சாப்பிட்டதேயல்லாமல் மற்றொருவருக்குங்கொடுத்ததில்லையென்றாள் அவன்ஆச்சரியப்பட்டு மாமியாரேதடிமுண்டாயென்றான் மாமியாரைக் காட்டினாள் இதுவந்தகாரணமென்னவென்றுகேட்டான் வந்தவரலாற்றைச்சொன்னாள்கோபம்வந்துதிட்டிஉன்மாமியாரை எடுத்துக்கொண்டுபோவென்று அடித்துத்துரத்திவிட்டான்அவள் அழுதுக்கொண்டே மாமியாரை இடுப்பிலேவைத்துக்கொண்டு ஊருக்கப்புறம்பிடாரியார் கோயில்வண்டையிற்போகையில் இருட்டிப்போச்சுது அங்கிருந்த ஆலமரத்தின்மேலேறி மாமியாரையும்வைத்துக்கொண்டு ஒரு கிளைமேல் உட்கார்ந்துக்கொண்டிருந்தாள் அன்றுராத்திரி சிலதிருடர்கள் தாங்கள் திருடிய துகளைக்கொண்டுவந்து அந்தமரத்தின்கீழே வைத்துக்கொண்டு கைக்கணிசமாகப் பங்குபிரித்துவைக்கும்போது மேலேயிருந்தவள் தூக்கத்திலே மாமியாரைக் கைநழுவவிட்டாள் திருடர்கள்மத்தியிலே பொத்தென்றுவிழவே திருடர்கள் எல்லாத்

தையும்போட்டுவிட்டுப் பிடாரியார்கோயிலிருக்கிற பூதம் இதுவெ
ன்றுதிடுக்கிட்டு அஞ்சி ஓடிப்போய்விட்டார்கள். மரத்தின்மேலிருந்
தவள் தூக்கந்தெளிந்து மாமியாளைக்காணாமல் வருந்திக்கீழேவந்தா
ள் மாமியாரும்பணங்களும் உடமைகளுமாக இருக்கக்கண்டு பணங்
களையும் உடைமைகளையும் வாரிமூட்டையாகக்கட்டிக்கொண்டு மா
மியாரை எடுத்து இடுப்பிலேவைத்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்தா
ள் புருஷன் சந்தோஷிப்பட்டு இதுகளெல்லாம் எவ்விதமாகக்கிடை
த்ததென்றான் என்மாமியார் மரத்தின்மேலிருந்து கீழேவிழுந்தாள்
எடுக்கப்போனேன் இத்தனையும் வைத்துக்கொண்டிருந்தாளென்றா
ள்மாமியாரில் என்னமோ ஒருதெய்வீகமிருக்குதென்று புருஷன்
கூடநம்பினான். அதைக்கேட்டு மூத்தவன்பெண்சாதி அன்றுராத்தி
ரி மாமியாரை எடுத்துக்கொண்டு பிடாரியார் கோயிலண்டையிலே
போய்ச்சேர்ந்தாள் அப்போது அங்கே கும்புகூடியிருந்ததிருடர்க
ள்இவளுடைமையெல்லாம்பறித்துக்கொண்டடித்துத்துரத்திவிட்டா
ர்கள். ஆகையினாலே தானொன்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைக்
குமென்பது சரியாச்சுது.

௰௭-வது-தென்னமரத்தின்மேலேறியது.

ஒருவனுடையதோட்டத்தில் இருந்ததென்னமரத்திலேதேங்
காய்திருடவேண்டி ஒருதிருடன் அதன்மேலேறினான் மரத்துக்கார
ன்சத்தடியறிந்து வீட்டிலிருந்து அதட்டிக்கொண்டே ஓடிவருகை
யில் திருடன் அதையறிந்து மரத்தைவிட்டு இறங்கிவந்தான் மரக்கா
றன் அவனைப்பார்த்து அடா என்மரத்தின்மேல்ஏறினையென்றான் அண்
ணே நான்கன்றுக்குட்டிக்குப் புல்லுபிடுங்க ஏறினேன் என்றான்
ஆ தென்னமரத்திலே புல்லிருக்குமாவென்றான் இல்லாமையாலேதா
ன் இறங்கிவருகிறேன் இதுதெரியாதாவென்று பரியாசம்பண்ணிக்
கொண்டுபோய்விட்டான்.

௰௮-வது-மாப்பிள்ளையைதோழன் அவமானப்படுத்தியது.

ஒருமாப்பிள்ளைதோழமாப்பிள்ளையாகஒருவனை இட்டுக்கொ
ண்டு மாமியார்வீட்டுக்குப்போனான் ஆனால் அவன் தலைப்பாகைத்த
விர மற்றவஸ்திரங்களெல்லாம இரவலாகையாலே மாமியார்வீட்டில்
இதைச்சொல்லாதேயென்று தோழனுக்குத் திட்டம்பண்ணியிருந்தா
ன்இவர்கள்போய் உட்கார்ந்தவுடனேமாமியாரும்மாமனாரும்தோழ
னைப்பார்த்து தம்பி யோகக்ஷேமம் என்னவென்றார்கள் இவன் மாப்பி
ள்ளைக்குப் பாகைமாத்திரஞ்சொந்தந்தான் மற்றைத்துணிகளைக்குறி
த்து என்னைக்கேளாதேயுங்களென்றான் மாப்பிள்ளை அவமானப்பட்
டான் புத்தியீனன் சிநேகம் இப்படியிருக்கும்.

### ௰௯-வது-மூடனும் பணம்பறிகொடுத்தது.

ஒருமூடன்ஒருசெட்டிபின்னே கூடிக்கொண்டுஊர்ப்பிரயாணம்போனான் போகும்போது மத்தக்கிருக்கலானபடியினாலே ஒரு மைதானத்திலே இவன்வழியிற்படுத்துக்கொண்டான் செட்டிசமீபத்திலேயொருசெடிமறைவிலே படுத்துக்கொண்டான் இப்படிஇருக்கச்சே வழியிற்போகிற திருடர்காலிலே மூடன்கால்தட்டுப்பட்டது ஒருதிருடன் இதென்னகட்டைபோலிருக்குதேயென்றான் மூடனுக்குக்கோபம்வந்து போபோ உன்வீட்டுக்கட்டையிடுப்பிலேயைந்துபணங்கூடமுடிந்துக்கொண்டு சட்டமாய்ப்படுத்திருக்குமோவென்றான் திருடரவனைப்பிடித் தந்தப்பணத்தைப்பிடுங்கிக்கொண்டு போகிறபோது இந்தப்பணஞ்செல்லுமோசெல்லாதோவென் றுபேசிக்கொண்டார்கள் மூடன் ஆசன்பணம் அப்படிப்பட்டதாவேண்டுமானால்செல்லுஞ்செல்லாத்துக்கிதோசெட்டியாரிருக்கிறார் காட்டுங்களென்று அந்தசெட்டியைச்சுட்டிக்காட்டிச்சொன்னான் அவர்கள்செட்டியிடத்திலிருந்தநூறுவராகனையும் பறித்துக்கொண்டுபோனார்கள் ஆகையால் மூடர்கள்சேர்க்கையாற் றப்பாமற்கெடுதிவரும்.

### ௨௰-வது.குடியானவன்பயிரிட்டது.

ஒருகுடியானவன்பத்தேர்வைத்துழுது பயிரிட்டுச்சீவனம்பண்ணிக் கொண்டிருந்தான் அந்ததடவை யுழுதபுழுதிக்குஞ் சாவிக்குந்தீர்வையிட்டுத் திவாணத்தார் பணம் வாங்கினார்களப்போது பத்தேர்குண்டைகளையுந்தானியதவசங்களையும் துணிமணிகளையும்விற்றுத்தெண்டமிறுத்தான் பின்னும்பழமுதல்பாக்கிக்காகத்தரவுகாரன்வந்தான் அவனைக்காணாமற்கட்டின நீர்ச்சீலையோடே யோடுகிறபோதுவழியிலேவருகிற வேறொருசேவகனைக்கண்டு பயந்தங்கிருந்தஜயினியகோவிலிலேபுகுந்தான் ஜயினியவிக்கிரகம் நிர்வாணியாயிருக்கிறதுகண்டு அப்பாநான் பத்தேர்வைத்துப்பயிரிட்டு குளிசீலையுடனே ஓடிப்போகிறேனே நீ எத்தனையேர் பயிர்வைத்துக்கெட்டா யுனக்கிந்த கோவணமுமில்லாமற்போச்சுதேயென்று கட்டிக்கொண்டழுதான்.

### ௨௧-வது-விறகுதலையன் எமதூதனைப் பரியாசம்பண்ணியது.

ஒருவிறகுதலையன் பிறந்துஅறுபதுவருஷமாக விறகுவிற்றுச்சீவனஞ்செய்துவருகையில் ஒருநாள்காட்டில் விறகொடித்துக்கட்டுகிறபோது தான்படுந்துன்பத்தைநினைத்துஐயையோஎத்தனைநாளைகாக்கவதிப்படுவேன் அடாபாவிஎமதூதா என்னைக்கொண்டுபோகலாகாதாவென்று மனஞ்சலித்துச்சொன்னான் அவன் சொல்லுகையில் அவ்வழியாகவந்த எமதூதனென்னும் பெயரையுடையவன் யாதுகா

ரணமாக என்னையழைத்தாயடா விறகுதலையாவென்றெதிராக வந்தான் அப்போது ஐயா கோபங்கொள்ளாதே இந்தவிறகுசுமையைத்தூக்கிவிட அழைத்தேனென்றான்.

௨௨-வது. விவேகிநாற்குலப்பயன்சொல்லியது.

சகலகலைவல்லவனென்னும் ஒருவித்துவான் இராஜசபையில்வந்து முதல்மந்திரியைப்பார்த்து நாற்குலத்திற்கும் பலன்சொல்லவேண்டுமென்றான் மந்திரியுண்டாகிற்பலனுண்டாகுமென்றான் அச்சபையிலெளியசேவகனாகிய விற்பனன் வேதியர்க்குவேதமும்வேந்தர்க்குவீரமும் வியாபாரிகட்குப் பொருளும் சூத்திரர்களுக்கு ஆசாரமும் பலனென்றான் அரசன்கேட்டுச்சேவகனுக்கு மந்திரிபட்டமும்மந்திரிக்குச் சேவகபட்டமுங்கொடுத்தான்.

௨௩-வது. பெண்பிள்ளை ஒருவனையிகழ்ந்தது,

ஒருபெண்பிள்ளை கழுதையோட்டிக்கொண்டு தன்னூர்க்குப்போகும்பொழுது அவள்வடிவமும் எவ்வனமுங்கண்டிச்சித்த ஒருநாயகன் அப்பெண்ணருகிற்சென்று கேளுமளவ்வனமாதே உன் தாயாரையும் உன் தகப்பனையும் நான்கண்டுநெடுநாளாயிற்று நீ அவர்களுக்கு நான் சொன்னதாகச்சொல்லவேண்டியதென்னவென்றால் உனக்கொருமுத்தமிடுகிறேன் இவ்வண்ணமுத்தமிட்டேனென்றுசொல்லவேண்டுங்கண்ணேயென்றான் அவள்சொன்னது இதோநடக்கின்ற கழுதைக்குமுத்தமிட்டா லிதுமுன்னம்போய்ச் சொல்லுமையாவென்றாள் அவன்வெட்கிப்போயினான் தன்னையிகழ்ந்தவர்களைப்புகழ்ந்து நீக்கவும்.

௨௪-வது, மடையன்கோடாலியைப் பெட்டியிற்பூட்டியது.

ஒருமடையன் தனதுபெண்சாதி ஒருகாசுக்கு மீன் வாங்கிவந்து வைத்தாள் அதைப்பூனைத்தின்றுவிட்டது அப்பூனை தின்னும்போது பார்த்திருந்தமடையன்தான் காடுவெட்டுங்கோடாலியைப் பெட்டியில்வைத்துப்பூட்டிட்டுவருவான் அவன்பெண்சாதி கோடாலியைத்தினந்தோறும் பெட்டியிற்போட்டு பூட்டுவதேனென்றாள் ஒருகாசுமீனைத்தின்றபூனை நாலுபணத்துக் கோடாலியைத் தின்றுவிட்டால் நாமென்னசெய்யலாமென்றான்.

௨௫-வது குருடனுக்குங்கூனனுக்கும்நடந்தசம்பாஷணை-

ஒருகண்குருடன்வரும்போது அவனைக்கண்டகூனன் இகழ்ச்சியாகவாருமையா ஒருகண்பார்வைக்காரரோ வென்றான் குருடன் கூனனுக்குச்சொல்கின்றான் மெய்தானையா முதுகு மூட்டைக்காரரோ தா

ன்ஒருவனையொருகண்ணும் மற்றொருவனைஒருகண்ணுமாய்ப்பார்க்கி
றதில்லையாவனையுமொருகண்ணாகப் பார்ப்பேனென்றான.

### ௨௬-வது. வேங்கடரொட்டிதிருப்பதிக்குப்போனது.

ஒரூர்க்குடியாகிய வேங்கடரொட்டி யென்பவன் தன்பெண்சா
திக்கு நான்குவருஷகாலமாய்த் திருப்பதிக்குப்போக வேண்டுமென்
று சொல்லிக்கொண்டிருக்கையில் ஒருநாள் உண்மையாகத்தான்கொ
ல்லையிற் காவலிருந்தபடி திருப்பதிக்குப்போய்விட்டான் அவன்போ
னபோது நெருப்புச்சட்டியை அக்கொல்லையிலிருந்தகன்றுக்குட்டி
வைக்கோல்போரின்பக்கத்திற்கவிழ்த்துவிட போர்பற்றிக்கொண்டெ
ரிந்து கன்றுக்குட்டியிறந்துவிட்டது அது இறந்ததும் வேங்கடரொட்
டி திருப்பதிக்குப்போனதும்அறியாமல் ஊரார்வந்து வைக்கோல்
போர்பற்றிக்கொண்டு வேங்கடரொட்டி வெந்துபோனானென்றுபோ
னாக்கலைத்துப் பார்க்கும்போது சாம்பலுடனேகன்றெலும்பிருக்கஅ
தை இரொட்டி எலும்பென்றுநிச்சயித்துப்பால்முதலியவைதெளித்து
க்கருமஞ்செய்து அவன்பெண்சாதிக்குத் திருமங்கலம்வாங்கிவிட்டார்
கள் தாலியறுத்தபத்தாநாள் வேங்கிடரொட்டித்திருப்பதி மொட்டை
யிட்டுக்கொண்டு நாமத்தைச்சாத்தி தடியெடுத்துத் தோளில்வைத்து
க்கொண்டு தன்வீட்டுத்தோட்டத்து வழியாக தீபம்வைக்கிறவேளையி
ல் வந்ததை ஒருபெண்பிள்ளைப்பார்த்துக் கைநடுங்கி மெய்நடுங்கி
வாய்குழறிவீரிட்டழுது இறந்துபோன வேங்கிடரொட்டிபிசாசாகவந்
தானென்றுநெடுங்குரலிட்டுக்கூவினாள் அந்தவார்த்தையைக்கேட்டுவந்
துபார்த்தவர்கள் நாவுலர்ந்து நாபிவறண்டு திகிலிட்டுக் கண்களைமூ
டிக்கொண்டு மண்ணோடுமண்ணாய் நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையானா
ர்கள்வேங்கிடரொட்டி நம்மைப்பார்த்தவர்களெல்லாம் பிசாசென்று
பயப்படுகிறார்கள் காளிகோயில் பூசாரி மந்திரக்காரன் அவன்பயப்ப
டானவனிடத்திலேநான் திருப்பதிக்குபோய்வந்தேனென்றாலவன்
யாவருக்குஞ்சொல்லிப் பயந்தெளிவிப்பானென்று கோயில் வாயற்
படியில் நின்றிருந்தான் பூசாரிதீபம்வைக்கப்போம்போது வேங்கி
டரொட்டிப்பிசாசுஇங்கேவந்து விட்டாலெப்படியென்று நினைத்
துக்கோயில் வாயற்படியில் நின்றிருந்தவனைப் பார்த்துப் பயந்
துபேதியாகி விழுந்திறந்தான் வேங்கிடரொட்டி ஊரில்வந்து வீட்
டுக்குவீடு கதவைத்தட்டி ஊராரேகதவைத்திறவுங்கள் என்பேர் வே
ங்கிடரொட்டி நான்திருப்பதிக்குப்போய்வந்தேன் இதோ எனதுதடி
யைப்பாருங்கள் இதோஎனதலை மொட்டையைப்பாருங்கள் இதோஎ
ன்னாமத்தைப் பாருங்களென்றுசொல்லி அழைத்தான் யாவரும்பயந்
து பிசாசுவீட்டுக்குவீடு கதவையிடிக்கின்றதென்று அன்றிரவுமு

ற்று நித்திரை யில்லாம லிருந்தார்கள் பொழுதுவிடிந்தவனைக் கண்டு தெரிந்துகொண்டு பயந்தெளிந்து ஊரிற்சேர்த்துக்கொண்டார்கள்

உஎ-வது, கொள்ளுவருத்து வாயிற்கொட்டியது.

ஒருகள்வன் ஒருசெட்டிவீட்டிற்போய் கொள்ளுத் திருடினான் அக்கொள்ளை அவ்வீட்டினடுப்பிற் சட்டிவைத்துவறுக்கும்வேளையில் அங்ஙனம்படுத்துநித்திரைசெய்கிறவன் குறுகுறுவென்று குறட்டைவிட்டான் அதைக்கேட்டுத்திருடன் கூவாதே கூவாதே உனக்கும்வறுத்துத்தருகிறேனென்று சொன்னான் அவன் மற்றுங்குறட்டைவிட்டான் அதற்கவன் ஆ ஆ என்னசொன்னாலும் கேட்கமாட்டேனென்கிறாய் இன்னஞ்சற்றுநேரம் பொறுத்திரு பாதிதருகிறேனென்றான் அப்படிச்சொல்லும்பொழுது மறுபடியுமுச்செறிந்தான் திருடன் என்னடா வறுப்பதற்குள்ளே இத்தனை ஆத்திரப்படுகிறாய் நீதான் முன்பாகத்தின்னென்று வறுத்தகொள்ளைத் தூங்குகின்றவன்வாயிற்கொட்டினான் அவன்வாயிலடித்துக்கொண்டு ஓலையைவாரி சுருட்டி யெழுந்திருந்து பெருங்குரற்கொண்டழத்தொடங்கினான் எல்லாரும்விழித்துக்கொண்டு என்னப்பா அழுகின்றாயென்றார்கள் திருடன்வறுப்பதற்கு முன்னம் வாய்பதட்டமாகச் சுடச்சுடவாயிற்கொட்டிக்கொண் டழுகிறானென்றோடிப்போய் விட்டான்.

உஅ-வது கழுதைநாயைப்போல்நேசம்பண்ணப்போனது.

ஒருவன் வீட்டிற்சுமைபெடுத்துத் திரியுங்கழுதை ஒருநாள்வேளையிற் றானெத்தனைப் பிரயாசப்பட்டாலுந் தன்னெசமானன் றன்னையடித்து வருத்தப்படுகிறதையெண்ணி இதென்னகாரணம் இந்த வீட்டிலே நாயொன்றிருக்கிறது அதுவோவொருவேலையுஞ் செய்கிறதில்லை எசமானனோ அதன்பேரிலேவெகுபக்ஷமாய்க் கூடவைத்துக்கொண்டு தன்சாப்பிடுகிறதிலே யதற்கும்போட்டு வளர்க்கின்றான் நாமென்னசெய்தாலும் நமக்குக்கொஞ்சம் வைக்கலைப்போடுகிறான் அதுவும்வயிற்றிற்கெட்டவில்லை இந்தவித்தியாசமேனென்றால் அந்தநாய்க்குட்டி எசமானனெசமானியிடத்திலும் அவர்கள்பிள்ளைகளிடத்திலுஞ் செல்வங்கொஞ்சிக்கொண்டு வருகிறது இரண்டுகாலையுமெடுத்தவர்கள் கைம்மேலு மடிமேலும் வைக்கிறது அவர்களுக்கு முத்திக்கொடுக்கிறது அவர்களோடுகூடக் கட்டிலின்பேரிற் படுத்துக்கொண்டிருக்கிறது இதனாலேதானவர்களுக்குப் பக்ஷம்பிடித்ததென்று நாமுமப்படிசெய்தால் நம்முடையபேரிலும் பக்ஷமாயிருப்பார்களிது தானல்ல வுபாயமென்று கழுதையெண்ணிக்கொண் டொருநாள் வேளையில் வீட்டுக்குடையவன் படுத்து நித்திரைபண்ணுகிறபோது கழுதைபோய் அவனுடையமடியிற்படுத் திரண்டுகாலையுந்தூக்கி அவன்ற

லைமேல்வைத்து முகத்தோடு முகநெருங்க முத்தமிட்டது எசமானன் வாரிச்சுருட்டி யெழுந்திருந்து தடியெடுத்து நன்றாயடித் துத்துரத்தினான் அடாதுசெய்தவன் படாதுபடுவான்.

### ௨௯-வது மூடத்தனத்தால்வீட்டைக்கொளுத்தியது.

ஒருகிராமத்திலிருக்கும் ஒளிபவன் தன் மைத்துனன் வெகுதூரத்திலிருக்கும் பட்டணத்தில்வாசம்பண்ணுகிறது அறிந்து அவன் வீட்டுக்குப்போய்த்தன்னை இன்னானென்றறிவித்து அன்றிராத்திரியவனுடனேகூட உட்கார்ந்து போசனம்பண்ணுகையில் அந்தவீடுமுழுதும் வெளிச்சமாயிருக்கும்படி மாடத்திலேரிகிற விளக்கைப்பார்த்து தனக்குள்ளேயாச்சரியமடைந்து பக்கத்திலிருக்கிற மச்சானைப் பார்த்து இப்படி வெளிச்சம்பண்ணுகிற விதுவென்னவஸ்து நான்பார்த்ததில்லையென்றான் அவன்பரிகாசமாயிது சூரியன்குஞ்சு தீவுகளிலிருந்திங்கே கப்பலிற்கொண்டுவருகிறதென்றான் அப்படியோவென்று சும்மாயிருந்துவிட்டான் பிறகு அந்த வீட்டுமனிதர் சற்றப்புறம் போகப்பார்த்து அந்தச்சூரியன்குஞ்சை தன்னூர்க்குத்திருடிக்கொண்டுபோகநினைத்துச் சீக்கிரமாயதையெடுத்து வீட்டிறப்பிலொளித்துவைத்துவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான் அதுவைக்கோற்கூரைவீடாகையினாலே உடனேபற்றிக்கொண்டது பற்றிவிழுந்துசற்றவிந்தவுடனே மற்றைமனிதர்களதிலேமறைந்துகிடக்கிறபண்டங்களை கோலாற்கிளறிபெடுக்கையிலிந்தநாட்டுப்புறத்துமூடனும் அந்தப்பண்டங்களையெடாமற் கிளறிக்கொண்டிருந்தான் அதுபார்த்தவர்கள் நீயென்னதேடுகிறாயென்றார்கள் இங்கே சூரியன்குஞ்செடுத் தொளித்துவைத்தேன் அதைத்தான்பார்க்கிறேனென்றான் ஓகோ நீயாமோசம்பண்ணினாயென்று அடித்துதைத்துத்துரத்தினார்கள் ஆதலால் மூடர்களுடைய கூட்டுறவிப்படியேயிருக்கும்

### ௩௰-வது மூக்கிறையன் தன்னைப்போலாக்கியது.

ஒரூரிலிருந்த மூக்கிறைய னொருவன் றன்னைப்பார்க் கும்பலரு நகைக்கிறதை யாறறக்கூடாமற் றனக்கு ளோருபாயத்தையெண்ணிச்செய்ததாவது ஒவ்வொருவேளையி லிருந்தாற்போலிருந்துவானத்தை யேறெடுத்துப்பார்த்து லோககற்தாவே யும்மைச் சிந்திக்கிறேன் வாழ்த்துகிறேன் வணங்குகிறேன் இப்பாடமாளபிரபஞ்சத்திற் கிடந்துவருந்துகிற விந்தக்கொடியோனுக்குமது திருக்கைக் கொடுத்தருளு முமது திருமேனிப்பிரகாசத்தை யெதிற்கொப்பிடுவேனென்றிவ்வாறுகண்ணீர் ததும்ப வுடம்புசிலிர்த்து நடுங்கவாய்குளறிச்சொல்லிப்பின்பு சூழ்ந்துநிற்கிற சனங்களைநோக்கிச் சனங்களே யிதோ நிற்

கிற கடவுளைப்பாருங்கள் ஜயோ வீணாகநின்று காலங்கழிக்கிறீர்களேயென்றிரங்குவான் இதைச்சிலர்நம்பி ஐயா எங்கள் கண்கட்குஞ்சுவாமியைத் தெரிவிக்க வேண்டுமென்று காலில்விழுந் திறந்தபோது மூக்கறையன் சுவாமி வெளிதிற்தெரிவாரோவென்னைப்போல்மூக்கில்லாமலிருந்தாற் காணலாமென்று சொல்ல அவர்களப்படி மூக்கறுத்துக்கொண்டபிறகுஞ் சுவாமிதெரியாமல் இவன்மோசஞ்செய்தானெனத்தெரிந்துமூக்கிருக்கிறவர்கள் தங்களையும் நகைப்பார்களேயென்றுநினைத்துச சுவாமி எங்கள்கண்ணுக்கு நன்றாகத்தெரிகிறார் கொஞ்சநஷ்டத்தினாலேயெவ்வளவு பெரியலாபம்பெற்றோமென்றும்ஆனந்தத்தையநுபவிக்கிறோமென்றும் சொல்லிக்கொண்டார்கள் இதைநம்பி அவ்வூராரெல்லாருஞ் சிலநாளையில் மூக்கறுத்துக் கொண்டார்கள் ஆதலாற் கெட்டமார்க்கத்திலிருக்கிற ஒருவன் மற்றவர்களையும் அதிலிழுக்கப்பிரயாசப்படுவான்.

௫௧-வது-கழுதைவுபகாரம்நினைக்கப்போய்தடியடிபட்டது.

ஒருபெருங்கிராமத்துப் புடவைகள் வெளுக்கும்வண்ணான் அவ்வுடைமைகளைச் சுமக்கிறதற்கு ஒருகழுதையையுந் தன்வீட்டுக்குக்காவலாக ஒருநாயையும் வைத்திருந்தான் இப்படி இருக்குங் காலத்தில் ஒருநாள் இரவில் நல்லகருக்கலிலே ஆறுபேர்திருடர் அவன் வீட்டிற்கன்னமிடவந்தார்கள் அப்பொழுதங்கிருந்தநாய்குலையாமல்சும்மாயிருந்தது கழுதையானது நாயே நீயேன் சும்மாவிருக்கிறாய் நம்முடைய எஜமானன்வீட்டில் திருடுகிறதற்குக் கள்ளர்வந்து உள்ளேபதுங்கி யிருக்குறார்களே நம்முடைய வசத்திலிருக்கிற விலையேறப்பெற்றஆடைகளெல்லாம்போய்விட்டால்எஜமானனொந்து போவானேயென்றது அதற்கந்தநாயானதுகழுதையேஇட்டடிஇவர்கள் அனேகமுறைதிருடவந்தார்கள் அப்பொழுது நான் குலைத்துக்குலைத்து எஜமானனையெழுப்பிவிட்டேன்கள்ளர்ஓடிப்போனார்களே அதைநீயுமறிவையேஅந்தநன்றியறிகிற குணம் நம்முடைய எஜமானனிடத்திலில்லை ஆதலால் அவர்கள் புகுந்துதிருடிக்கொண்டுபோனால்போகட்டும் நமக்குநிமித்தியமில்லையென்று நாய்சொல்லிற்று இந்தமுறை நானாகிலும் கூப்பிட்டுத் தன் எஜமானனை எழுப்பிவிடுவோமென்று கழுதைஇடிமுழக்கம்போலக் கதறிக்கூப்பிடத்தொடங்கிற்று திருடர் அப்புறம்பதுங்கியிருந்தார்கள் வண்ணான் அவ்விரைச்சல்பொறுக்கமாட்டாமல் எழுந்தோடிவந்து கொழுத்தகழுதையேயென்றுவைது தடியாலிடிப்பொடிய அடித்துவிட்டு கோபத்துடனேபடுத்துக்கொண்டான் திருடர் மீண்டு உள்ளேவந்துபுகுந்து துணிமணிகளையெல்லாம் வாரிகட்டிக்கொண்டு போய்விட்டார்கள். பார்த்திருந்தநாய் கழுதையை

ப்பார்த்து நான்சொல்லியுங்கேளாமற்போனையே நீ செய்த நன்றிக்கு நம்மாண்டவன்செய்த நன்றியைக்கண்டாயே ஆகிலும் நான்செய்யும்வேலையை நீசெய்தால் இப்படிவந்தது ஆதலால் அவனவன்வேலையை அவனவனேசெய்யவேண்டும் ஒருவன்செய்கிறவேலையை ஒருவன்செய்தால் இப்படியேவந்துநேருமென்றது.

### ௯௨-வது - புளியமரத்தைவெட்டப்போய் எள்ளைசம்பாதித்துக்கொண்டது.

ஒருகுடியானவன் கலப்பைக்காக அந்தவூரில்நெடுநாளாகவிருக்கிறபுளியமரத்தைவெட்டப்போய் அடியிலொருவெட்டுப்போட்டான் அதில் வெகுநாளாகவிருக்கிற சிலபேய்கள் இறங்கிவந்தையா இதையேன்வெட்டுகிறீரென்றதுகள் அவன் எள்ளுக்குழக்கலப்பைபண்ணவேணுமென்றான் உமக்கு வருஷந்தோறும்வேண்டிய எள்ளுகொடுத்துக்கொண்டுவருகிறோம் இதைவெட்டாமல் தயைசெய்யவேண்டுமென்றதுகள். அதற்கவன் நல்லதிஷ்டத்தினாற் சம்மதித்துவருஷத்தில் நூற்றுக்கலமெள்ளுவாங்கிக்கொண்டுவந்தான் அப்படியிருக்கையில் அந்தப்பேய்களிடத்திற்குஒருஉறமுறைப்பேய்வந்தது அது அங்கேயிருந்தபேய்களைப்பார்த்து என்ன வியசனமாகவிருக்கிறீர்களென்றது நாங்களென்னசொல்லப்போகிறோம் இந்தவூரிலிருக்கும் ஒருகுடித்தனக்காரனுக்குத் தினந்தோறும் எள்ளுதிருடிக்கொண்டுவருவதே காரியமாயிருக்கிறது அதனால் அலுத்துப்போகிறோமென்றதுகள் இதுகேட்ட அந்தப்புதுப்பேய் நீங்கள்ஒருசிறுமனிதனுக்குப் பயப்படலாமோ இதோ அவனை நான் கொல்லுகிறேனென்றுபோய் அவன்மாட்டுத்தொழுத்தின் துலத்திற்றெரியாம லுட்கார்ந்திருந்தது. அப்போது அந்தக்குடியானவன் சிலமாடுகளுக்குச் சூடுபோட்டுக்கொண்டிருந்தமையால் புதுப்பேயென்கிற ஊரில் வாங்கிவந்தஒருதையுஞ் சூடநினைத்து அடா அந்தப்புதுப்பேயைக்கட்டுங்கள் சூடவேணுமென்றான் இந்தப்பேய்தன்னையென்றுநினைத்துக் கீழேகுதித்துவந்து காலில்விழுந்தென்னைச் சூடாதேயுமென்றது இவன் மேல்கிரகித்துக்கொண்டு எங்கேவந்தாய் சீக்கிரத்திற்சொல்லென்றான் இவ்வூர்ப்பேய்கள் இத்தனைநாளும்போல்உங்களுக்கு எள்ளாகவேணுமா எண்ணையாகவேணுமாவென்றுகேட்டுவரச்சொன்னதுகளென்றது அவன் நீயுங்கூடயிருந்தின்றுமுதல் எண்ணையாகக்கொண்டுவாருங்களென்றான் அதுநல்லதென்று அதை ஊர்ப்பேய்களுடனே சொல்லிமுறையிட்டது. அதுகள் அப்பா இது நீசெய்த உபகாரமா ஓட்டமருந்துண்டுறங்கி விழுந்தையேயென்று வெறுத்துக்கொண்டு அதுமுதல் இதனுடனேகூட எண்ணைகொண்டுவரத்துவக்கினதுகள்.

### ௯௩-வது-ஒரு ஸ்திரீ தன்புருஷனையும் பூதத்தையும் துடைப்பக்கட்டையினால் அடித்தது.

ஒரூரில் ஒரு பிராமணன் பிக்ஷையெடுத்துக்கொண்டுவந்து பெண்சாதிகையிற்கொடுப்பான் அவள்சமையல்பண்ணி அன்னமிட்டுத்துடைப்பக்கட்டையாலே புருஷனை ஓரடி தினமடித்துவருவாள். இவள் பொல்லாதவள் எத்தனைநாளைக்கு இவள்கையில்அடிபடுகிறதென்றுநினைத்து பத்துநாளைக்கு அண்டைகிராமத்துக்குப்போய்வருகிறேனென்று பெண்சாதியுடனேசொன்னான். நீர்போனால் துடைப்பக்கட்டையாலே யாரை அடிக்கிறதென்றுகேட்டாள் நான்வளர்த்தஅரசமரமிருக்கிறத்தைஅடியென்றுசொன்னான் அவன் அப்படியேபோனவுடனே புருஷனுக்குவைக்கிற அன்னத்தைவைத்துத் துடைப்பக்கட்டையாலே அந்தமரத்தைஅடித்தாள் அதிலே வெகுநாளாய்வாசமாயிருக்கிற அந்தப்பூதத்தின்மேலே அந்தஅடிபட்டபடியினாலே நமக்குசமபெரியபூதமிவளென்று ஓடிப்போகிறபோது அந்தப்பிராமணனைக்கண்டு நான் ஒருநாள்அடிபட்டதினாலே சரீரம்நோகுதே நீயெத்தனைநாளாய் அடிபட்டாயோவென்றுசொல்லி அவள் உபத்திரவமில்லாமல் நானுனக்கொருஉபகாரம்பண்ணுகிறேன் அதென்னவென்றால் இந்தவூர் இராஜாவினுடைய பெண்ணைப்பிடித்துக்கொள்ளுகிறேன் ஆர்வந்துமந்திரித்தாலும்போகேன் நீவந்தால் நான்போய்விடுவேனென்றுசொல்லி அந்த இராஜாவினுடைய பெண்ணைப்பிடித்துக்கொண்டது இராஜா வெகுமந்திரவாதிகளை அழைப்பித்துப்பார்க்கும்போது இந்தப்பிராமணனும்போய் இராஜாவினுடையபெண்ணை நீவிட்டுப்போவென்று மந்திரிக்கிறவன்போலச்சொன்னான் அந்தப்பூதம் நான்போகிறேன் இனிமேல் நீ நானிருக்கிறவிடத்திற்குவந்தாற்கொல்லுவேனென்று போய்விட்டது இராஜாவும் பூதம்போய்விட்டதென்று பிராமணனையழைப்பித்து அவனுக்குவேண்டியதிரவியத்தைக்கொடுத்துவைத்துக்கொண்டிருந்தான் அப்படியிருக்க அந்த இராஜாவின் மந்திரியினுடையபெண்ணை அந்தப்பூதம்போய்ப்பிடித்துக்கொண்டது. அதை இராஜாவறிந்து அந்தப்பிராமணனையனுப்பினான் அப்படியேஅந்தப்பிராமணன்அவ்விடத்திற்குப்போகஅந்தப்பூதம் ஏன்வந்தாயென்றுகோபித்துக்கொல்லவரும்போது என்பெண்சாதி துடைப்பக்கட்டையெடுத்துக்கொண்டுவந்தாள் அதுசமாசாரம்சொல்லவந்தேனென்றுசொன்னான் அவள் எங்கேவந்திருக்கிறாளென்றுகேட்டது இதோ தெருவிலேவந்திருக்கிறாளென்று சொல்லக்கேட்டுப் பயந்தோடிப்போய்விட்டது.

### ௯௪-வது-இராஜாசிநேகவாஞ்சனையைக்குறித்து வினவியது.

சந்தானகருவென்னும்பட்டணத்தில் அரசுசெய்துக்கொண்

டிருந்த் போகசித்தனென்பவன் தனதுதேசத்திலே ஒருவருந்தீமைசெய்யாமல் நன்மைசெய்தொழுகும்படி அதிகாரஞ்செலுத்திவரும் நாளில் மதிபூகி அதிபூகியென்கிற இருவரும் அவ்விராஜாவைக்கண்டுகொண்டார்கள் அப்போது அவர்களைப்பார்த்து ஆருடனே சினேகிக்கலாம் யாருடனே சினேகிக்கலாகாதென்று வினவினான். அதற்குமதிபூகிசொல்லுகிறான் ஆற்றூரென்கிறஒருகிராமத்திலிருந்த ஒருதருமசீலனென்னுங்குடியானவன் ஒருநாயைவளர்த்தான் அன்னாய் அவனைவிட்டுப்பிரியாமலேயிருக்கும்போது ஒருநாள் நீராடவேண்டுமென்று குளத்துக்குப்போயினான் நாயானதுமுன்னேயோடி நீரிலேமுதலையிருக்கின்றவரவங்கண்டுகுலைத்துத்திரும்பஓடிவந்தது தன்னைவளர்த்தவனைப்படியிலே நடந்துபோகாமற்றடுத்தது அதைத்தள்ளிப்போட்டுத் தண்ணீரிலே யிறங்கப்போகும்போது அவனுடுத்தியிருந்த உடையைக்கவ்வியிழுத்துத்தடுத்த அந்தநாயைக்காலால்உதைத்துத்தள்ளித்தண்ணீரில் இறங்கினான் தனக்கன்னங்கொடுத்துவளர்த்தவனை இந்தநீரிலிருக்கிற முதலைப்பிடித்துத் தின்றுவிழுங்கிப்போட்டால்ஆரன்னங்கொடுப்பார்களென்றுஞ் சினேகித்தவனைக்காக்கவேண்டுமென்றுநினைத்துத்தண்ணீரிலே முன்னேபோய்விழுந்த அந்தநாயைமுதலைபிடித்திழுத்துக்கொண்டுபோகும்போதுகண்டு என்னிமித்தமாக் இந்தநாய் தன்னுடலைக்கொடுத்துப் பிராணனைப் போக்கடித்துக்கொண்டதென்று துன்பமுற்றானாகையால்நாயையொத்தவனுடனேசினேகிக்கவேண்டுமென்றுசொன்னான் அதிபூகிசொல்லுகிறான் ஒருராஜாவானவன் தன்யானையைவளர்க்க நல்லபாகனாய் ஒருவனைவைத்தான் அந்தயானைப்பாகன் தினந்தினம் ஆற்றிலேபோய்க் குளிப்பாட்டி அதற்குவேண்டியகவளங் கொடுத்துவருநாளில் ஒருநாள் ஒருகவளமறைத்தெடுத்துக்கொண்டான் கவளந்திருடினானென்று அவன்தன்னை நாடோறும்வளர்த்தவனென்று எண்ணாமல்கொன்றதாகையால் யானையைஒத்தவனுடைய சினேகஞ்செய்யலாகாதென்றுசொன்னான் இராஜாகேட்டு மிகவுங்களிப்படைந்து அவர்களை சம்மானம்பண்ணினானாதலால் ஒருவனுடைய குணத்தைப்பரிசோதித்து நட்புச்செய்யவேண்டும்.

௬௫-வது-தங்களுக்குள்ள பொறாமையினால் இருவர்கண்ணுங்கெட்டது.

ஒரு ஏழைப்பிராமணன் தனக்குப்பாக்கியம்வேண்டுமென்கிறவாசையினால்ஒருகுளத்தின்மேற்பக்கத்திலிருந்துகொண்டுசுவாமியைநோக்கித்தபசுபண்ணினான் அதைப்பார்த்தவனுக்கு பக்கத்துவீட்டுப்பிராமணனும் அந்தக் குளத்தின்கீழ்ப்பக்கத்திலிருந்து சுவாமியைக்குறித்துத்தவஞ்செய்தான் இவ்வாறு சிலநாள்போனபிறகு சுவாமிய

வர்களில் ஒருவனிடத்திற்குவந்து உனக்கென்னவேண்டுமென்றார் அவன் அந்தப்பக்கத்திலிருந்து தவஞ்செய்கிறவன் உம்மை என்னகேட்டானோ அதற்கிரண்டுபங்கு எனக்குண்டாகவேண்டுமென்றான் பின்பு சுவாமி மற்றொருவனிடத்திற்குப்போய் உனக்குவேண்டுவதென்னவென்றார் அவன் அந்தப்பக்கத்திலிருக்கிறவன் உம்மைக்கேட்டதென்னவென்றான அவன் நீகேட்பதற்குஇருமடங்குதனக்குண்டாகவேண்டுமென்றானென்றார். இவனும் அவனுக்குத்தன்னிலும அதிகபாக்கியம் வரலாமென்கிற பொறாமையினாலே சுவாமி எனக்கொரு கண்கெட்டுப்போகவேண்டுமென்றான் சுவாமி நகைத்து நல்லதென்றார் அதனால் இவனுக்கு ஒருகண்கெட்டவுடனே மற்றவனுக்கு இரண்டுகண்ணுங்கெட்டுப்போய்விட்டது. ஆதலால் பொறாமைக்குணமுள்ளவனொருவன் கெடுகிறதையே தனக்குப்பாக்கியமாகநினைப்பான் தன்னுடைய நஷ்டமும்பாரான்.

௯௬-வது-காகசாஸ்திரம்பார்க்கப்போய் உதைபட்டது.

விடியற்காலத்தில் தூங்கியெழுந்திருக்கும்போது முன்னே சோடுகாக்காய்களைப்பார்த்தவனுக்கு அன்றைக்குநல்லலாபமுண்டாகுமென்றுஒருவன்கேள்விப்பட்டான்பிறகவன் தன் வேலைக்காரனையழைத்துஅடா நீவிடியற்காலத்தில்சோடுகாக்காய்களைப்பார்த்துவந்துஎன்னையெழுப்பென்றான் வேலைக்காரன் அப்படியே சோடுகாகங்களிருக்கப்பார்த்துவந்துஎஜமானனை எழுப்பினான் எஜமானன்யெழுந்துபோய்ப்பார்க்கும்போது ஒருகாகயோடிப்போய் மற்றொருகாகமாத்திரமிருந்தது அப்போது எஜமானன் ஒன்றுபோகிறதற்குமுன்னேதானே என்னையெழுப்பாமற்போனாயென்று கோபித்துக்கொண்டு வேலைக்காரனை அடித்து உதைத்தான் அப்போது வேலைக்காரன் ஐயா இரண்டுகாகத்தையும்பார்த்த எனக்குவந்தலாபத்தை இதோநீங்கள்பார்க்கவில்லையாவென்றான் அதுகேட்டு எஜமானன் வெட்கப்பட்டான்.

௯௭-வது-புருஷனைப் பெண்சாதி அடித்தது.

ஒருமூடச்சேவகன்தன் மனைவியை நாடோறுமடித்துக்கொண்டிருக்கையால் அவள் சற்றுங்குற்றஞ்செய்யாத நம்மைக்காரணமில்லாமலடிக்கிறஇம்மூடனுக்கு நல்லபுத்திவருவிக்கவேண்டுமென்றுநினைத்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் அவன்வழக்கப்படியடித்தான் அவள் நீயெதற்காக இப்படியடிக்கிறாயென்றுகேட்க அவன் நானேதாகிலும் ஒன்றுசொன்னபடியே செய்யாமையால் அடிக்கிறேனென்றான் அவள் இனிமேல்நீசொன்னபடி செய்வேன் அப்படி செய்யும்போது என்னையடியாமல் திட்டாமல்பக்ஷமாயிருக்க வேண்டுமென்-

றுசத்தியம் பண்ணிவித்துக்கொண்டாள் பின்பு ஒருநாள் அடியடி எங்கேபோகிறாயென்று அழைத்தான் அவள் ஓடிவந்தொரு தடியால் அவனையடித்தாள் அவன் என்னகாரியஞ்செய்தாயடியெனப் பின்னுமொருதிரமவனையடித்து நீசொன்னபடியேசெய்தேனென்றாள் மற்றொருநாள் புருஷனுக்குக்கலத்திற் சோறிடும்போது அவன் அடிதலைமேலே உமியென்றான் அவள் அவனை ஒருதிரமடித்துத் தலைமேலே எச்சிலையுமிழ்ந்தாள் பின்னொருநாள் இந்தப்பணத்தை வீட்டுக்குள்ளேவையென அவள் மூர்க்கனுடையபணமே மூடனுடையபணம் மடையனுடையபணமே என்று வைத்துக்கொண்டிருந்தாள் பின்பு அவன் இவையெல்லாம் பார்த்தறிந்து வெட்கப்பட்டுக் கோபத்தை விட்டு அவளை யுபசரித்து அவள்புத்திகேட்டு நடந்துநல்லவனானான் ஆகையால் அறிவில்லாதவன் பெண்டுகளிடத்திலும் தாழ்வுபடுவான் உமிழ் உமியெனக்கொடுந்தமிழில் வழங்கும்.

### ௫௮-வது குருதன்னிடத்திற்கற்கவந்தபெண்ணின்பேரி விச்சைகொண்டுஉயிர்விட்டது.

ஒருகனவர்த்தகன் தன்பெண்ணைஒருபிராமணனிடத்திற் படிப்பித்தான் படித்துவருகையில் அந்தப்பெண்திரண்டாள் அதைத்தகப்பனறிந்து மகளையழைப்பித்து அம்மா நீ படித்துக்கொண்டவுபாத்தியாயருக்குக் கொடுக்கவேண்டிய தக்ஷணைகொடுத்துச் செலவுவாங்கிக்கொண்டு வீட்டில் இருமென்றான் அப்படியே யவள் உபாத்தியாயரிடத்திற்குப்போய்த் தாம்பூலந் தக்ஷணைகொடுத்து நமஸ்காரம் பண்ணித் தன்பிதாச்சொன்னதைச் சொல்லிச் செலவுகொடுமென்றாள் இந்தச்சாடல்லிய வுபாத்தியாயர் திடுக்கிட்டு எழுந்து பெண்ணே இந்தப்பிரயோஜனம் பணத்துக்காகவா உனக்கு நானிதுவரைக்கும் பாடுபட்டேன் உன்பிதாக்கொடுத்தபணம் விஸ்தாரமிருக்குது உன்னுடைய ஆலிங்கனத்தை வெகுநாளாக விரும்பியிருக்கிறேன் அதைத்தட்டாமல் நிறைவேற்றுவாயென்று வாயிழந்துசொன்னான் இது கேட்ட அந்தமானமுள்ளகுலத்திற்பிறந்தபெண்ணுடம்புநடுங்கமனப்புழுங்கிஅடா நன்றிமறந்ததுரோகி என்னைஇச்சிப்பது உனக்குமுறைமையாகத்தறிமோஅழைப்பே நீஉடனேகெட்டுப்போவாயென்றவைதுவிட்டுத் தப்பித்துக் கொண்டு வெளியேவந்து ஓடிப்போய்விட்டாள் பிராமணனுக்குப் பின்புத்தியாகையால் கோபத்துடனே அந்த வர்த்தகனிடத்திற்குப்போய் ஐயா நீர் இன்னுமிருக்கிறீரோவென்று அழுதான் அதென்னவென்றான் உன்குமாரத்திபெரியமனுஷியானாள் அப்படியிருக்குதென்றான் செட்டிஅவிவேகியாகையால்பயந்து அதற்கென்னசெய்யலாமென்றான் உடனேஅவளை ஒருபெட்டியில்வைத்துநதியில்விட்டுவிடுவதேகாரியமென்றான் அவன் இதன்வர்த்தனை

பைநம்பிஅப்படியேஆற்றில்விட்டுவிட்டான் அந்தப்பெட்டிஅதில்மிதந்துபோகிறதை அங்கேவேட்டைக்குவந்த ஒருராஜாகண்டெடுத்துப்பெண்ணைப் பல்லக்கில்வைத்துக்கொண்டு வேட்டையிலகப்பட்ட ஒருபுலியை அந்தப்பெட்டியிலடைத்து நதியில்விட்டுப் போய்விட்டான் பின்பு அந்தஉபாத்தியாயர் இரகசியமாக ஆற்றுக்குவந்து அதில்மிதந்துபோகிற பேழையைத்தடுத்து இழுத்துக்கொண்டுவந்துசில ஆள்களின் தலையிலெடுப்பித்து வந்து தன்னறையில்வைத்துக்கொண்டான் பிறகுதான்போஜனம்பண்ணிச் சந்தனம்புஷ்பமுதலான திரவியங்களை யணிந்துக்கொண்டு துராசையின் அவசரத்தினால் இப்போதுஎன்னசொல்லுகிறாய்பெண்ணேயென்று பெட்டியைத்திறந்தான் அது அடைபட்டிருக்கிற புலிபாகையால் பொக்கென்றுபாய்ந்து ஊட்டியைக்கடித்து இரத்தத்தையுறிஞ்சி இவனுசை தீர்வதுபோப் புலிபசிதீர்ந்து ஊரில் விழுந்து ஓடிப்போய்விட்டது ஆகையால்மோசஞ்செய்தவனைநாசம்பண்ணும்.

வேடிக்கைக்கதை.

முற்றிற்று.

அத்தியாயம் ௫ க்கு கதைகள் ௩௨

கடவுள் துணை.

# கதாசிந்தாமணி.

௧ - அத்தியாயம்.

## கட்டுவாக்கியகதைகள்.

### முதலாவது.

வரவரமாமி கழுதைபோலானது.

ஒருத்தி தன்புருஷின் அதிகமோகனைத்தன்சொற்படிநடக்கையினாலே தன்மாமிசெய்கிற ஒறுவேதனைகளுக்குப்பொறுக்காமல்அவளை நீக்கிவிட ஆலோசனைசெய்து புருஷினுக்குப்பார்சாதமூட்டையும் கிழவிக்குக்களிமண்மூட்டையும்கொடுத்து அக்கிழவியைகொண்டுபோய்ஒருகாட்டுக்குள்ளேவிடும்படிபாகப்புருஷினுக்குப்போதித்

து அனுப்பினாள் அப்பாதகன்பெண்சாதிபோதனைக்குட்பட்டுத்தா
யைவஞ்சனைசெய்து அழைத்துக்கொண்டுபோய் நடுக்காட்டிலே ஒரு
குளக்கரையிலே இறங்கி அவள் முகங்கழுவப்போன சமையத்திலே
அவள்மூட்டையைமாறுட்டமாக எடுத்துக்கொண்டுபோய்விட்டான்.
பின்பு சற்றுநேரம்கூப்பிட்டுப்பார்த்துக் கிழவி மகனைக்காணாமல் அ
ழுதாள் அப்போது நீராடவந்த ஒருதெய்வகன்னிகைக்கண்டு கிழவிச
மாசாரத்தைவிசாரித்துத் தேற்றிக் கட்டுச்சாதத்தைத் தானுங்கிழவியு
மாகச் சாப்பிட்டுப்பிறகு மனமகிழ்ந்து அக்கிழவியை அழகுள்ளகு
மரிபாகச்செய்து வேண்டியரத்தினாபரணவஸ்திரங்களையும் கொடுத்த
ருளி அவள்வீட்டுக்குப்போகும்வழியையுங்காட்டினாள் அவள் தனக்கு
க்கிடைத்த சிறப்பையெல்லாம் தன்மகனுக்கும்மருமகளுக்கும் அறி
வித்தாள் மகன் அளவற்றசந்தோஷத்தையடைந்தான். மருமகள் மி
கவும் பொறாமைகொண்டு முன்போலவே பாற்சாதமூட்டையைப்
புருஷன்கையிலும் களிமண்மூட்டையைத் தன் தாய்கையிலுங்கொடு
த்து முன் மாமியைவிட்டவிடத்திலே தாயையும்விட்டுச் செடிமறைப்
பிலிருந்துதெய்வகன்னிகையின் அருள்பெற்றபின்பு அழைத்துக்கொ
ண்டுவாவென்றாள் அந்த மூடன் அப்படியே அழைத்துக்கொண்டு
போய் முன்னே தன்தாயைவிட்டவிடத்திலேவிட்டுச் செடிமறைப்பிலி
ருந்து தெய்வகன்னிகை வந்துபார்த்து நீயார் அம்மா அதென்னமூ
ட்டையென்றுகேட்டாள் கட்டுச்சாதமூட்டையென்றாள் அதையெ
டுத்துக்கொண்டுவரச்சொல்லி அவிழ்த்துப்பார்க்கும்போது களிம
ண்ணாயிருக்கக்கண்டு அத்தெய்வகன்னிகைக்குக் கோபம்பிறந்து
அடிமுழுமோசக்காறி நீ வீடுபோய்ச்சேர்வதற்குள்ளே கழுதையாகி
ப்போகக்கடவாயென்று சபித்தாள் உடனே கிழவிபுறப்பட்டுக்குள
க்கரையேறக் கைகால்களிலே குளம்பு உண்டாகி அப்புறம்போகக்
கொஞ்சமாகக் கழுதையின் அவயவங்களெல்லாம் உண்டாகிக்கொ
ண்டேவந்து வீட்டண்டையிலேபோகும்போது முழுதுங்கழுதைரூ
பமாய் வள்வாளென்று கத்தத்தொடங்கியது. அந்தவோசைகேட்டு
உள்ளேயிருந்தபெண்சாதி ஓடிவந்து இதேதுகழுதையென்றாள் அத
ற்குப்புருஷன் வரவரமாமிகழுதைபோலானாளென்றான் அதுவேகட்
டுவாக்கியமாகவழங்கியது ஆகையினாலே வாராதுவாராது என்னபட்
டும் வருகிறதும்போகாது நம்மைவிட்டும் என்கிறபழமொழியே உண்
மையாச்சுது.

## உ-வது-பஞ்சமாபாதகன் பரிசுத்தனானது.

ஒருவன் அனேகபாவங்களைச் செய்துகொண்டிருக்கும்போ
தொருபெரியவர்வந்து நரகத்துக்கேதுவாகிய இந்தப்பாபங்களைவிட்
டுவிடென்றார் அவன் விடமாட்டேனென்றான் பெரியவர் பொய்யைமா

த்திரமாகிலும்விட்டுவிடென்றார்பஞ்சமாபாதகன்நல்லதென்று அன்
றுமுதலாகப்பொய்யைவிட்டுவிட்டு ஒரு நாள்ராத்திரியில் இராஜாவீட்
டிலே திருடப்போனான் மாறுவேஷங்கொண்டு நகர்சோதனைக்குவரு
கிறராஜா திருடனைப்பார்த்து நீ எங்கேபோகிறாயென்றுகேட்கத்திரு
டன்பொய்சொல்லக்கூடாமையால் நான்இராஜாவீட்டில்திருடப்போ
கிறேனென்றான் இராஜா ஆச்சரியப்பட்டு நானுங்கூடவரவாவென்று
கேட்கவாவென்று இட்டுக்கொண்டுபோய்இராஜாவைவெளியிலேகாவ
லவைத்துக்கன்னமிட்டு உள்ளேபோய்ஒருபெட்டியைத்திறந்து அதி
லேயிருந்த மூன்றுரத்தினத்தில் பங்குபிரியாதென்று ஒன்றைவைத்
துவிட்டு இரண்டு எடுத்துக்கொண்டுவந்துஇராஜாவிற்குஒன்றுகொடு
த்துத் தான் ஒன்றெடுத்துக்கொண்டான் அதன்பின்பு இராஜாஉள்ளே
போய் அந்தரத்தினமிருக்கக்கண்டுசந்தோஷித்துமந்திரியைஅழை
ப்பித்துஇராத்திரிவீட்டுக்குள்ளேதிருடன்வந்தாற்போலிருக்குதே எ
ன்னகளவுபோச்சுதோ பார்ப்பாயென்றான் மந்திரி பெட்டியைத்
திறந்துபார்த்து அதிலிருந்த ஒருரத்தினத்தையும் எடுத்துக்கொண்டு
மூன்று ரத்தினமும்போய்விட்டதென்றான் அதைக்கேட்டமாத்திரத்
தில் மந்திரியை அயோக்கியனென்று நீக்கிவிட்டுத்திருடனைச்சத்திய
முடையவனென்று நம்பிமந்திரித்தனங்கொடுத்தான் ஆகையால்நிச
மொன்றிருந்தால் பலதீங்குகளையும் நீக்கும்.

### ௫௰-வது யாராத்தாள்செத்ததும் பொழுதுவிடிந்தால் தெரியுமென்றது.

ஒருவனுக்குத்தாயாரும் மாமியாருமிருந்தார்கள் அவன்பெண்
சாதிக்குத் தன்தாயார்மாத்திரம் இருந்தால் தன்மனதின்படி நடக்க
லாம் தன்மாமியா ரிருந்தால் அதற்கு விரோதமா யிருக்குமென்று
யோசித்து அதைவெளிப்படுத்தாமல் புருஷனுடனே என்தாயாரை
உன் தாயார் இருக்கவொட்டாமல் எப்போதும் கலகம்பண்ணுகிறா
ளென்றுசொன்னாள் ஆனால் அதற்கு என்னசெய்யலாமென்றான் என்
தாயாரைக் கொன்றுபோடென்றாள் நான்கொல்லமாட்டேன் நீ என்
தாயாரைக்கொன்றுபோடென்றான் இது உண்மைதானாவென்றாள் அ
வள்கொடுமையை அறிவோமென்றுமனத்திலே எண்ணிக்கொண்டுமெ
ய்க்கு உண்மைதானென்றான் இன்றைக்குராத்திரிதூங்கும்போது அ
ம்மிக்கல்லை தூக்கிக்கொண்டுவந்து தலையிலேபோட்டுக்கொல்லுவே
னென்றாள் ஆனால் அப்படிசெய்யென்றான் பாதிராத்திரியில் எழுந்
திருந்து விளக்கு ஏற்றிக்கொண்டுவந்து பார்த்தபோது தாயாரும்மா
மியாரும் ஒரு வீட்டிற்குள்ளே படுத்துக்கொண்டிருந்தார்கள் அவர்
களைப்பார்த்துத் தன்மாமியார்காலிலேவைக்கோற்பழுதையை அடை
யாளமாகக் கட்டிப்போட்டு விளக்கைநிறுத்திப்போட்டு அம்மிக்கல்

லையெடுத்துக்கொண்டுவரப்போனாள் இதுகளையெல்லாந் தூங்குகிறவனைப்போலப் பார்த்துக்கொண்டிருந்த அவள்புருஷன் சீக்கிரமாக எழுந்து அந்தவலைக்கோல்புரியையவிழ்த்து அவள்தாயார்காலிலேகட்டிப்போட்டுத் தன்தாயாரைச்சற்றே அப்புறத்திலே தள்ளிவைத்துவிட்டான் அவள் அம்மிக்கல்லைக்கொண்டுவந்து வைக்கோற்பழுதை அடையாளத்தைப்பார்த்து அவள் தலைமேல்போட்டுவிட்டுப் புருஷனைத்தட்டியெழுப்பி உன்தாயாரைக் கொன்றுபோட்டே னென்று சந்தோஷமாகச்சொன்னாள் அவன் யாராத்தாள் செத்ததும் பொழுது விடிந்தால் தெரியுமென்றான் ஆதலால் அதுவேகட்டுவாக்கியமாகவழங்கியது.

## சு-வது. பெருமாளென்கிறபேரைத்தள்ளப்போய் பெரியபெருமாளானது:

ஒரு குடித்தனக்காரன் அடிமைப்பறையனை வைத்துக்கொண்டு அவன் உன்பேரென்னவென்றுகேட்டான் ஐயாவென்பேர் பெருமாளென்றான் அந்தக்குடித்தனக்காரன் வைஷ்ணவனாகையால் இந்தப் பறையனைப்பெருமாளென்று அழைக்கச்சம்மதியாமல் நீவேறேபேர் வைத்துக்கொள்ளுகிறாயா வென்றுகேட்டான் ஐயாவைத்துக்கொள்ளலாம் கொஞ்சம் செலவுபிடிக்குமென்றான் அதற்கு எவ்வளவுபிடிக்கும் சொல்லென்றான் என் தகப்பனிருக்கையில் பத்துவராகனும் பதின்கலநெல்லுஞ்செலவழித்து நாலுபறைச் சேரிகளுக்கும் சாப்பாடுபோட்டு இந்தப்பேரிட்டான் இப்போது இதைத்தள்ளுகிற தற்கும் வேறே பெயரிடுகிறதற்கும் முன்செலவுக்கு இரட்டத்தனைச் செலவுபிடிக்குமென்றான் அந்தப்படிசம்மதித்து இருபதுவராகனும் இருபதின் கலநெல்லுங்கொடுத்தான் அதைவைத்துக்கொண்டுசாஸ்தமாகச் சிலமாசம் சாப்பிட்டுப்போட்டுப் பெரியபெருமாளென்று பெயரிட்டுக்கொண்டுவந்தான் வைஷ்ணவன் அடிமையைப்பார்த்து என்னபெயரிட்டுக்கொண்டு வந்தாயென்றுகேட்டான் சாமீயிப்போது இட்டுக்கொண்டுவந்தபேயர் பெரியபெருமாளென்றான் அதைக்கேட்டுஆண்டை வெட்கிப்போனான் ஆதலால் வீண்விபரீதத்தால் பேதையர் வீண்செலவுசெய்யவுடன்படுவார்கள்.

## ரு-வது. கண்டுசெத்தபிணமானாலல்லவோசுடுகாடறியுமென்றது.

ஒருத்திவிபசாரஞ்செய்துக் கொண்டிருந்தாள் அதைச்சகியாமல் அவள்புருஷன் தெண்டித்துக்கொண்டுவருவான் இப்படியிருக்கையில் தினந்தோறும் சாயங்காலவேளையில் ஊர்ப்புறத்திலிருக்கிறபத்திரகாளியினுடைய கோவிலுக்கு அவள்போய்வந்துக்கொண்டிருக்கிற சமாசாரம் தெரிந்து அவள்புருஷன் அந்தக்கோயிலின் சுவர்மறை

ப்பிலே நின்றான் அவள் அந்தத்தெய்வத்தைப் பார்த்து அம்மா
என்புருஷனுக்குக்கண் கெட்டுப்போகும்படி செய்வாயேயானால் உ
னக்குப்பொங்கலிடுகிறேனென்று பிரார்த்தித்துக்கொண்டு போனாள்
மறுநாள் அவன் எனக்குப்பார்வைதெரியவில்லையே யென்றுசும்மா
தானேசொல்லிக்கொண்டு தடுமாறிக்கொண்டு திரிந்தான் அவன்பெ
ண்சாதி பிரார்த்தனைபலித்ததென்று சந்தோஷித்துடனே தன்கள்ளப்
புருஷராகிய கிராமத்தானையும் பாளையக்காரனையும் கணக்கனையும் த
றப்புதாரனையும் இராத்திக்குச்சாமத்துக்கு ஒவ்வொருவராக வரச்
சொல்லி அனுப்பிவிட்டு அவர்களுக்காக வெகுநேர்த்தியாகச் சமைய
ல்பண்ணிக்கொண்டிருந்தாள் அவள்புருஷன் அவளுக்குத் தெரியாம
ல் வசநாபியைக்கொண்டுவந்து சாப்பாட்டிலேகலந்து வைத்தான் பி
றகுமுதற்சாமத்துக்குக்கிராமத்தான்வந்து சப்பிட்டுவிளக்கொளிக்கு
ஆசைகொண்ட வீட்டிற் பூச்சியைப்போலச் சீக்கிரத்திலே தன்னுயி
ரையிழந்துவிட்டான் அவனையெடுத்து ஒரு அறையிலே மறைத்து
வைத்தாள் பிற்பு மூன்றுபேரும் அந்தப்படியே அவள்சொன்னவே
ளைகளிலே ஒவ்வொருவராகவந்து சாப்பிட்டுத்தன்தன் உயிரையிழ
ந்துவிட்டார்கள் இந்தமூன்றுபேரையுங்கிராமத்தானை வைத்த அறை
யிலேசீக்கிரமாகமறைத்து ஒருபிணத்துக்குப் பட்டைநாமஞ் சாத்தி
வைத்து ஒருகூலிக்காரனை யழைத்து இந்தப்பிணத்தை ஊருக்குவெ
ளியிலே எடுத்துக்கொண்டுபோய் இரகசியமாகக்கிணற்றிலே போட்
டு விட்டுவந்தால் உனக்குப்பத்துபணங் கொடுக்கிறேனென்றாள் அ
ப்படியே ஒருபிணத்தை எடுத்துக்கொண்டுபோய்ப்போட்டுவந்தான்
அவன்வருவதற்குமுன்னமே மற்றொருபிணத்துக்கு முன்போலவே
பட்டைநாமஞ்சாத்திவைத்து அந்தக்கூலிக்காரன்வந்தவுடனே நீகொ
ண்டுபோனபிணம் உனக்குமுன்னே ஓடிவந்து உட்கார்ந்துகொண்ட
து இதைக்கொண்டுபோய்க கிணத்திலேபோட்டு மேலேஒருகல்லைப்
போட்டுவாவென்றாள் அவன்தூக்கிக் கொண்டுபோய் அப்படியே
செய்து வருவதற்குள்ளே மற்றொருபிணத்தைஅப்படியே வைத்துக்
கொண்டிருந்து அவன்வந்தவுடனே முன்போலவேசொல்லிஇதைக்
கைகால்களைக்கட்டிப்போட்டு வாவென்றாள் அந்தமூடன் அப்படி
யே செய்துவரப்போனான் மறுபடியும் அவன்வருவதற்கு முன்னே
இவள் மற்றொருபிணத்தையும் முன்போலவ்வைத்துக் கொண்டிரு
ந்து அவன்வந்தவுடனே ஐயையோ இந்தப்பாழும்பிணம்உன்னையெ
ந்தவிதத்திலேயோ மோசம்பண்ணிப் போட்டுவந்துவிடுதே இந்தத்
தடவைமாத்திரம் கொண்டுபோய்க் குண்டுகட்டாகக் கட்டிப்போ
ட்டுமேலேஒருபெருங்கல்லைப்போட்டுவாவென்றாள் அவனுக்குக்கோ
பம்பிறந்து அந்தப்பிணத்தையெடுத்துக்கொண்டுபோய் அவள்சொன்
னபடியேசெய்துகிணற்றிலே போட்டுவிட்டுத்திரும்பும்போது சூரி

யோதயசமயமாச்சுது அப்போது ஒருசாத்தானிபன்பாசகத்துக்குப்
போகும்படியாகப் பட்டைநாமம போட்டுக்கொண்டு இவன்பின்
னாலேவந்தான் அவனை இவன்பார்த்து நாமம்போட்டபிணந்தான்
எழுந்துவருகிறதென்று ஓடிப்போய் அவன கழுத்தைக் கட்டிக்
கொண்டு வெட்கங்கெட்டபிணமே நாலுதரங்கொண்டுபோய்க் கிண
ற்றிலேபோட்டும மறுபடியும எழுந்துவருகிறாயா இப்போதுகொ
ண்டுபோய் உன்னை நையநரிக்கி ஒருபெரிய பாழுங்கிணற்றிலேபோ
ட்டுவிடுகிறேனென்று இழுத்தான் அச்சாத்தானிடம் நம்நங்கிக்குப்
போமுறையேயென்று பெருங்கூசலிட்டழுதான் அதைத்தலையாரிக
ள் கேட்டுவந்து இதென்னவென்று விசாரித்தார்கள் கூலிக்காரன் இந்
தப்பிணத்தை நாலுதரங்கொண்டுபோய்க்கிணற்றிலேப்போட்டேன் ம
றுபடியும் எழுந்துவருகிறதென்றான் தலையாரிகள்பிணமானால் சுடு
காட்டிலே யல்லவோவைக்கிறதென்றார்கள் கூலிக்காரன் கண்டுசெத்
தபிணமானாலல்லவோ சுடுகாடு அறியுமென்றான் ஆதலால் அதுவேக
ட்டுவாக்கியமாக வழங்குகின்றது.

௬-வது-பிரமசாரி ஓடங்கவிழ்த்தது.

நிறைவெள்ளமாகிய ஒரு ஆற்றினுடைய இக்கரையிலிருந்து
ஓடத்தில் நிறைய மனிதரையேற்றிக்கொண்டு அக்கரைக்குப்போகஎத்த
னமாயிருக்கையில் துடைப்பக்கட்டைவைத்திருக்கிற ஒருகளஞ்சாறு
ப்பறைச்சியும் ஒருபாம்புப்பிடாரனும் ஒருகுரங்காட்டியும்வந்தேறி
க்கொண்டார்கள் உடனே ஒருபிரமசாரி ஓடிவந்து என்னையுமேற்றிக்
கொள்ளவேண்டுமென்றான் ஓடத்திலேயிருக்கிறவர்கள் குறம்புசெ
ய்கிறதிலே ஒருபிரமசாரி நூறுகுரங்குக்கு ஒப்பென்றுசொல்லுவார்
கள் அவனை ஏற்றலாகாதென்றார்கள் ஓடக்காரன் காசுக்காக ஆசை
ப்பட்டு அந்தப் பார்ப்பாரப் பையலைக் காலையுங் கையையுங் கட்
டி ஏற்றிக்கொண்டு ஓடத்தைவிட்டான் நட்டாற்றிலேபோகும்போ
து பிரமசாரிதன்சமீபத்திலிருக்கிற துடைப்பக்கட்டில் ஒருஈர்க்கை
ப் பல்லாலேகடித்துப்பிடுங்கிக்கொண்டு குறங்கின் குத்திலே குத்தி
னான் குறங்குகுதித்துவிழுந்து பாம்புப்பெட்டியைத்திறந்துவிட்ட
து பாம்பு சீத்காரபூத்காரத்துடனேபடமெடுத்துக்கொண்டு புறப்ப
ட்டது எல்லாரும்பயந்து ஓடத்திலொருபக்கத்திலே ஒதுங்கிப்போனா
ர்கள் ஓடங்கவிழ்ந்துவிட்டது. அதுமுதலாகவே பிரமசாரிஓடங்கவி
ழ்த்தகதையாக முடியுமென்று உலகத்திலே சிலசமயங்களிலே சொ
ல்லுகிறார்கள்.

௭-வது-வண்ணானுக்குப்போனான் வண்ணாத்திக்கு
வந்தானென்கிறது.

ஒரு குறம்புக்காரப்பையனை அவன்தகப்பன் அடித்துத்துர
த்திவிட்டான் அவன் அழுதுகொண்டேபோகையில் ஒருதலையாரிகண்டு

உன்பெயரென்னவென்றான் என்பேர் போர்சுட்டுப் பொரிபொறுக்கியென்றான் என்னிடத்திலிருவென்று அழைத்துப்போய்த் தான் காக்கிற நெற்போரிடத்திலே காவல்வைத்துச் சாப்பிடப்போனான்அவன்வருவதற்குமுன்னே இவன்போரைக்கொளுத்திவிட்டுச் சுற்றிலுங்கிடக்கிற பொரிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கித்தின்றுக்கொண்டிருக்கையிலே தலையாரிவந்துபார்த்து ஏண்டாபாவி இப்படிசெய்தாயென்றான் என்பெயரோபோர்சுட்டுப்பொரிபொறுக்கியென்று முன்னமேசொன்னேனேயென்றான் தலையாரிக்குக் கோபம்பிறந்து அடித்துத்துரத்திவிட்டான் அவன் அழுதுகொண்டேபோகையில் ஒருவாழைத்தோட்டக்காரன்கண்டு உன்பெயரென்னவென்றான் தோலிருக்கச்சுளைவிழுங்கியென்றான் இவனை அழைத்துக்கொண்டுபோய்த் தன் வாழைத்தோட்டத்துக்குக் காவல்வைத்தான் அந்தப்பையன்தோட்டக்காரனில்லாத சமயம்பார்த்துக் குலைகளிலே பழுத்திருந்த பழங்களை உரித்துத் தித்திப்பாகியசுளைகளையெல்லாம் முழுங்கிவிட்டுத்தோல்களைமூடிவைத்தான்தோட்டக்காரன்வந்துபார்த்து என்னடாபாவி இப்படிசெய்தாயென்றுகேட்டான் முன்னமேதோலிருக்கச் சுளைமுழுங்கியென்று சொன்னேனேயென்றான் வாழைத்தோட்டக்காரனுக்கு அதிககோபம்பிறந்து நன்றாய் அடித்துத்துரத்திவிட்டான் அவன் அழுதுகொண்டேபோகும்போது ஒருவண்ணானைகண்டு உன்பெயரென்னவென்றான் என்பெயர் போனானென்றான் அவன்தன்வேலைக்கு உதவியாகவைத்துக்கொண்டான் பிற்பாடு வண்ணாத்திவந்து உன்பெயரென்னவென்றாள் என்பெயர்வந்தானென்றான்மறுநாள் துறைக்குப்போகும்போது கூட அழைத்துக்கொண்டுபோய்ச் சலவைபண்ணின சீலைகளை ஒருமூட்டைகட்டி அவன் தலையிலேவைத்து நீமுன்னேகொண்டுபோவென்று அனுப்பினார்கள் அவன் அந்தமூட்டையை எடுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான் வண்ணான் போனான் போனான் என்று கூவித்தேடிக்கொண்டு ஓடினான் வண்ணாத்தி ஒருபக்கத்தில் நின்றுக்கொண்டு வந்தான் வந்தானென்று கூப்பிட்டாள் வண்ணான் வண்ணாத்தியினிடத்தில் வந்துபார்த்துப் பொய்சொல்லுகிறாயாவென்று அடித்துப்போட்டு மற்றொருபக்கத்திலேபோய் அவனைக கூப்பிட்டான் முன்போலவே அவளொருபக்கத்தில் நின்று வந்தான்வந்தானென்றுகூப்பிட்டாள் மறுபடியும்வந்து அடித்தான் இப்படி கலகமானதை ஒருமனிதன் கண்டுவிசாரித்து அவன்பெயர் மாறாட்டமாகச்சொல்லி மோசஞ்செய்தவுபாயத்தை தெரியப்படுத்திவிட்டான் ஆதலால் அதுவே கட்டுவாக்கியமாக வழங்கியது.

## ௮-வது-மதுபிந்து கலகமென்றது.

ஒருதுலுக்கன் ஒருபெரிய ஊரிலே கடைக்குப்போய்த்தேன்வாங்கும்போது ஒருதுளித்தேன்கீழேசிந்தியது அதின்மேலே ஒரு

ஈவந்துமொய்த்தது அந்தஈயை அங்கிருந்தபல்லிபிடித்துக்கொண்டது அந்தப்பல்லியைக்கடைக்காரனுடைய பூனைபிடித்துக்கொண்டது அந்தப்பூனையைத்துலுக்கனுடையநாய்கடித்துப்போட்டது அந்தநாயைக்கடைக்காரன் அடித்துக்கொன்றுபோட்டான் அந்தக்கடைக்காரனைத் துலுக்கன்வெட்டிப்போட்டான் அந்தத்துலுக்கனைமற்றைக்கடைக்காரர்கள்வெட்டிப்போட்டார்கள் அந்தக்கடைக்காரர்களை துலுக்கர்கள்வந்து சுற்றிக்கொண்டார்கள் துலுக்கர்சூழ்ந்துகொண்டதைப்பார்த்துக் கடைக்காரருக்காக வெகுபேர் கூடினார்கள் அவர்களும் இவர்களும் கைகலந்து சண்டைசெய்து அந்தப்பக்கத்திலே நூறுபேர் இந்தப்பக்கத்திலேநூறுபேர்சாகவேபட்டணத்துஜெனமெல்லாம்பயந்துஅல்லகல்லோலப்பட்டுவலசைவாங்கியதுஅப்போது ஒருமனிதன் இதுயாராலேவந்தகலகமென்று கேட்டான் அந்தகடையிலிருந்துவருகிறவன் இது மதுபிந்துகலகமென்றான் ஆதலால் அதுவே கட்டுவாக்கியமாகவழங்கியது,

௯-வது-வாய்க்கொழுப்புச் சீலையால் வடிகிறதென்கிறது.

ஒருவன் ஊர்ப்பயணம்போகையில் அதிக பசியுடனே ஒருகிழவியினிடத்திற்குப்போய்மிகவும்இளைப்பாகவிருக்கின்றது. அரிசிகொடுக்கிறேன் தயவுபண்ணிச் சீக்கிரத்தில் சமையல்செய்தும்போடவேண்டுமென்று வேண்டிக்கொண்டான் அந்த அம்மையார் இரக்கப்பட்டுஅடுப்பைமூட்டிச்சமையல்பண்ணும்போதுஅடுப்புஅவிந்துபோய்விட்டது சீக்கிரமாக அந்த அம்மையார்குனிந்து அடுப்பைஊதும்போது அபானவாயுபறிந்ததுஅதற்குஇவன் நான்பசியுடனேயிருக்கிறேனென்கிற பாதகரத்தினாலே அம்மையாருக்கு வாயும்சூற்றும் அடுப்பூதுகின்றதுகளென்றான் அம்மையாருக்குக் கோபப்பிறந்து கொதிக்கிறசாதத்தைத்தூக்கிக்கொண்டுவந்து போக்கிரிசாவான்முந்தாணியைப்பிடியென்று அதிலேகொட்டிவிட்டுப்போகச்சொன்னாள் அவன் தூக்கிக்கொண்டுதெருவிலேவருகிறபோதுசாதத்திலிருக்கிறகஞ்சிகாலிலேவடிய ஐயோஅப்பாவென்று கூவிக்கொண்டுபோகும்போது ஒருவன்கண்டு என்னடா அப்பா காலெல்லாம் கொப்புளிக்கும்படியாக் வடிகிறதென்றான் ஐயா வாய்க்கொழுப்புச் சீலையாலேவடிகின்றதென்றான் ஆனபடியல் அதுவே கட்டுவாக்கியமாகவழங்கியது.

௰-வது-சன்னியாசிகோவணத்துக்கிச்சித்து
சமுசாரமேவிட்டது.

ஒருசன்னியாசி ஓரிடத்திலேயிருந்தார் அவர்கோவணத்தைஎலிகடித்துப்போட்டது எலிவராமலிருக்கிறதற்காகஒருபூனையைவளர்

த்தார் அந்தப்பூனைக்குப் பால்வார்க்கிறதற்காக ஒருபசுசம்பாதித்தார் அந்தப்பசுவைமேய்க்கிறதற்காக ஒருபையனைச்சம்பாதித்தார் அவன் சுவாமி அடியேனுக்குக் கலியாணஞ்செய்யவேண்டுமென்றான் அப்படியே ஒருபெண்ணை விசாரித்துக் கலியாணஞ்செய்வித்தார் அந்தப்பெண்வயிற்றிலே நாலுஆண்பிள்ளைகளும் நாலுபெண்பிள்ளைகளும்பிறந்தன சன்னியாசி அந்தக்குடும்ப சம்ரக்ஷணைக்காகத்தினந்தோறும் சூரியோதயமுதற்கொண்டு சாயங்காலவரைக்கும் பலபேரிடத்திலும் யாசித்துவருகிறார் அப்படியிருக்கும்போது எல்லாரும் வலசைவாங்கும்படியாக ஒருபெரிய கலகம்வந்து நேரிட்டது அப்போது அந்தப்பையன் சன்னியாசியைப்பார்த்துச்சுவாமி இதுவரைக்கும் என்குடும்பத்தைக்காப்பாற்றியது பெரிதல்லஇப்போதுகாப்பாற்றவேணுமென்று அழுதான் சன்னியாசிஅவனையும் அவன் பெண்சாதிபிள்ளைகளையும் இட்டுக்கொண்டு ஒருகாட்டுவழியை நோக்கிப்போகும்போது வழியிலே சன்னியாசிபசிக்கு இரணபிள்ளைகளை யெடுக்கும்படியாகவந்துநேரிட்டது அப்போதுசன்னியாசி விசனப்பட்டுக்கௌபீனத்துக்கிரசித்துச சமுசாரம்மேவிட்டதல்லவாவென்றுஎல்லாத்தையும் ஒழித்துவிட்டுத் திகம்பரியாய்ப்போய் விட்டார் ஆனபடியினாலே அதுவேகட்டுவாக்கியமாக வழங்குகின்றது.

௯௧-வது. நான்பிடித்தமுசலுக்கு மூன்றுகாலென்கிறது.

ஒருசித்தபுருஷனிடத்தில்ஒருசிஷ்யனிருந்தான் குரு ஒருமுசல்பிடித்துவந்துசமைத்து அதின்கால்களைச் சுடடுக்கொண்டுவாவென்றான் சிஷ்யன் அதின்கால்களிலே ஒன்றைத்தான்சுட்டுத் தின்றுவிட்டுமூன்றுகால்களைக் குருவுக்குவைத்தான் குரு இன்னொருகால் எதோவென்றான் சிஷ்யன் நான்பிடித்தமுசலுக்கு மூன்றேகாலென்றான் குருபொய்தான்சொன்னனே அதையானாலும் காப்பாற்றுகிறதிடமுண்டா சோதிப்போமென்று அனேகதருணங்களிலே சந்தோஷிப்பித்தி நீ பிடித்தமுசலுக்கு எத்தனைகாலென்று கேட்டுக்கொண்டுவந்தால் கேட்டபோதெல்லாம் நான்பிடித்தமுசலுக்கு மூன்றேகாலென்றுசாதித்தான் பின்புகுரு அநேகதருணங்களிலே அச்ச முறுத்திகேட்டான் சிஷ்யன் முன்சொன்னதையேசாதித்தான் குருவின்னொருபரிசை செய்யநினைத்து ஆனுடையநெற்றியிலே அவன்வடிவம் ஒருவர்கண்ணுக்கும் தெரியாதிருக்கும்படி ஒருதிலதமிட்டு இராஜாவுக்கு வைக்கிற சாப்பாட்டைக்கொண்டு வரச்சொன்னான் சிஷ்யன் தினந்தோறும் போட்டிட்டுக்கொண்டுபோய் எடுத்துக்கொண்டுவந்துகொடுத்துக்கொண்டிருந்தான் இராஜாதினந்தோறும் என்சாப்பாட்டைத்திருடிக்கொண்டுபோகிறவனைப்பிடித்துக் கொடுத்தவர்களுக்கு நல்லவெகுமானம் கொடுக்கிறேனென்று பிரசித்தம் பண்ணினான் சாதந்

கறி குழம்பு முதலானவைகளெல்லாம் சுடசுட வைத்துக்கொண்டிருந்தால் திருடன் அகப்பட்டுக் கொள்ளுவானென்று குரு அரசனுக்கு உபாயஞ்சொல்லி விட்டுப்போனான் அன்றைக்குச் சிஷியன் போய்ச் சுடச்சுட ஒருபாத்திரத்திலே சாதங்கறிகள் முதலானதுகளெல்லாமெடுத்துவைக்கிறதற்குள்ளே ஆவிபட்டு நெற்றியிலிருந்த பொட்டுவேர்வையினாலே கரைந்துபோய்விட்டது அந்தப்பொட்டு அழிந்துபோகவே இவன் ரூபந்தெரிந்தது அரசன் அவனைப் பிடித்துத் தலையை வெட்டிப்போடும்படி உத்தரவுகொடுத்தான் கொலைசெய்வோர் கொண்டுபோகையில் குருவந்து அடா சிஷியா நீபிடித்தமுசலுக்கு எத்தனைக்கால்கள் உண்மையைச்சொல்லு உன்னைக்கொல்லவொட்டாமல் தப்புவிக்கிறேனென்றார் அப்போதும் நான்பிடித்த முசலுக்கு மூன்றேகாலென்றான் குரு அவன்மனதிடத்தைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அவனைக்கொல்ல வொட்டாமல் இராஜாவினிடத்திலே உத்தரவுவாங்கி அழைத்துக்கொண்டுபோய் உபதேசம்பண்ணினான் ஆனபடியினாலே அதுவே கட்டுவாக்கியமாகவழங்கியது.

௯௨-வது வீணாவுடைந்தசட்டிவேணதுண்டு என்தலையிற்
பூணாரம்பூண்டபுதுமைகளைக்கண்டதில்லை.
என்கிறது.

ஒருவன் தன்பெண்சாதி செய்கிற தப்புகளிலே மூன்று வரைக்குஞ்சொன்னால் பொறுத்துக்கொள்ளுவாள் அதற்குமேற்படச்சொன்னால் அப்போது அவள் கையிலிருக்கிற சட்டியை அவன் தலையிலே போட்டுஉடைப்பாள் அப்படியாகப்பட்டுப்பட்டுத்தலைமொட்டையாய்ப்போனதுபோதுமென்று வெறுத்துக்கொண்டு எங்கேயாகிலும் போய்விடுவோமென்றுபோகும்போது அவனை அவன் சினேதனாகியவொருதப்பைக்கேட்டமாத்திரத்திலேசட்டியைதலையிலேபோட்டுஉடைக்கிறவளுடையபுருஷன் கண்டு தன்வீட்டுச் சாப்பாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அனுஷ்டானம் பண்ணிக்கொண்டு அவனுடனேசாப்பிடஉட்கார்ந்தான் வீட்டுக்காரன்பெண்சாதி சட்டியிலேசாதமெடுத்துக்கொண்டுவந்து முன்னேதன்புருஷனுக்கு வட்டித்துப்பிற்பாடு விருந்தாளிக்கு வட்டித்தாள் புருஷன்முன்னே அவருக்குவட்டித்துப் பிற்பாடு யெனக்கு வட்டிக்கலாகாதாவென்றான் அந்தசட்டியைப் புருஷன்தலையிலேபோட்டுவுடைத்தாள் அதுஉடையும்போது கலவடை எழும்பி விருந்தாளி கழுத்திலேமாட்டிக்கொண்டது இவளைப்பார்க்கிலும்தன்பெண்சாதிபெருகுணசாலியென்றுமனதிலேயெண்ணிக்கொண்டு வீணாவுடைந்தசட்டி வேணதுண்டு என்தலையிற் பூணாரம்பூண்டபுதுமைதனைக்கண்டதில்லையென்றான் ஆதலால் அதுவே கட்டுவாக்கியமாகவழங்கியது.

## ௯௫-வது ஆய்ந்துபாராதான்காரியஞ்சாந்துயரந் தருமென்கிறவாக்கியத்தைவிலைக்குக் கொண்டது.

ஒருவன் ஆய்ந்து பாராதான்காரியஞ் சாந்துயரந்தருமென்கிற வாக்கியத்தைஒருநறுக்கிலேஎழுதிவைத்துக்கொண்டுஒருபெரியபட்டணத்திலேஇது ஆயிரம்வாராகனென்றுதெருத்தோறும்விலைகூறித் திரிந்தான்பெரியயுத்தத்துக்குப்போகஎத்தனமாயிருந்த ஒருராஜகுமாரன்இதன்பலனைஅறிவோமென்று ஆயிரம்வராகன்கொடுத்துஅந்தநறுக்கைவாங்கித் தன்படுக்கைவீட்டிலே தூக்கிட்டிருக்கிறகட்டாரியை உருவி அந்தவுறைக்குள்ளே போட்டுகட்டாரியைச்சொருகி முன்னிருந்தபடியே தூக்கிட்டுப்போட்டுத் தான் நெடுந்தூரத்திலே யுத்தத்துக்குப்போய்ப்பதினாறுவருஷம் யுத்தம்பண்ணிவெற்றிக்கொண்டு தன்வீட்டிற்குவந்து தான்போனபோது பிள்ளையுண்டாயிருந்த தன்பெண்சாதி பெற்றபிள்ளைக்குப் பதினாறுவயதாச்சுது அந்தப்பிள்ளையும் அவளுமாககட்டிலின்மேலே படுத்துக்கொண்டிருந்தார்கள்அதைப்பார்த்துத் தன்பெண்சாதிசோரபுருஷனை வைத்துக்கொண்டிருக்கிறதாக நினைத்து இரண்டுபேரையுங் குத்திப்போடுகிறதற்கு முன்தூக்கிட்டிருந்த கட்டாரியை உருவினான் அப்போது அதற்குள்ளிருந்த சீட்டுகீழ விழுந்தது அதையெடுத்து ஆய்ந்துபாராதான்காரியம் சாந்துயரந்தருமென் றிருக்கிறதைப்பார்த்துக் கோபமடங்கி இதுகாரியத்தைப்பொறுத்து ஆய்ந்துபார்ப்போமென்று விசாரித்துத் தன்பெண்சாதி பக்கத்திலேபடுத்திருந்தவன் தன்புத்திரனென்று அறிந்து என்னருமைப்பிள்ளையையும்பெண்சாதியையும் வீணாகக்கொல்லநினைத்தது இந்தக்கட்டுவாக்கியத்தினாலேயல்லவா தப்பியதென்று அளவற்றசந்தோஷத்தையடைந்து இந்தச் சீட்டுக்கு நான்கொடுத்தது தகுதியானவிலையல்ல இன்னம் அதிகமாகக்கொடுக்காலாமென்று மெச்சினான்.

## ௯௬-வது கழுவுக்கேற்றகோமட்டிஎன்கிறது.

அதிபாயபுரமென்கிற பட்டணத்திலே துன்மார்க்கனென்கிறஇராஜா துர்ப்புத்திஎன்கிற மந்திரியைவைத்துக்கொண்டு இராஜ்யீகம்பண்ணிக்கொண்டிருக்கையிலே ஒருநாளிராத்திரி திருடர்கள்வந்துஒருவீட்டிலேகன்னம்போட்டு நுழையும்போது ஒருவன் பாதிபுடம்புஉட்பக்கதிலும் பாதிபுடம்புவெளிப்பக்கத்திலும் இருக்கையில் சுவர் இருத்திக்கொண்டு செத்தான் மற்றத்திருடர்கள்இராஜாவினிடத்திற்குவந்துஇந்தப்பட்டணத்திலே திருடப்பிழைப்போமென்றுவந்தால்ஊச்சுவரை வைத்துக்கொன்றுபோட்டார்களென்று பிரியாது பண்

ணினார்கள் இராஜா அந்தவீட்டுக்காரனை அழைப்பித்து ஈரச்சுவரை
வைத்துஒருவனைகொன்றுபோட்டபடியால் அந்தக்குற்றத்துக்குநீதா
ன்உத்திரவாதியென்றார்எனக்குநிமித்தியமில்லை அந்தக்குற்றத்துக்கு
சிக்கிரத்திலுலராதஈரச்சுவரைவைத்தக்கொல்லத்துக்காரனேஅதற்குஉ
த்திரவாதியென்றான் அவனையழைத்துக் கேட்கும்போது எனக்குநிமித்
தியமில்லை மிகவும் இளகலாகச்சேர்கூட்டிக்கொடுத்தபெரியாளே உ
த்திரவாதியென்றான் அவனையழைத்துக்கேட்கும்போது அதிகமாகத்த
ண்ணீர்கொண்டுவந்துவார்த்தசிற்றாளேஉத்திரவாதியென்றான் அவனை
க்கேட்கும்போதுகுடத்தைப் பெரியதாகச்செய்துக்கொடுத்த குயவ
னேஉத்திரவாதியென்றான் அவனையழைத்துக்கேட்கும்போதுஒருதே
வடியாள் என்தெருவிலேஅலங்காரத்துடனேபோயிக்கொண்டிருந்தா
ள் அவளைப் பார்த்துக்கொண்டேசெய்தேன் அதினாலேகுடம்பெரி
தாகிப்போயிற்று ஆகையால் அவளே உத்திரவாதியென்றான் அவளை
யழைத்துக்கேட்கும்போதுதட்டானுடைமைப்பண்ணிக் கொடாம
ல் திருப்படித்தபடியால் அந்த வழியிலேபோகவேண்டிவந்தது ஆ
கையால் தட்டானே உத்திரவாதியென்றாள் தட்டானைக்கழுவிலேஏற்
றும்படிநிச்சயித்துத் தழுவுக்கண்டாத கழுமரமொன்றுசெய்வித்து
அதினிட்த்திலேதட்டானைக் கொண்டுபோனார்கள் அவன் கழுமரத்தை
ப்பார்த்து அரசனிடத்திலேபோய்ச்சுவாமி கழுமரமிருக்கிறபருமனு
க்கும் நானிருக்கிற ஒல்லிக்கும் இசைவாயிருக்கவில்லை எல்லாருமபரி
யாசம்பண்ணுவார்கள்ஆகையால் தகுந்தபடிசெய்யவேண்டுமென்று
ன் இராஜாபிள்ளையார் அதற்குத்தகுந்தவனென்றான் கழுவுக்கேற்ற
கோமட்டி மேலண்டைத்தெருவிலே பருமனாயிருக்கிறானென்றான்த
ட்டான்சொன்ன துயுக்திதானென்று கொமட்டியைக் கழுவிலேற்றிவி
ட்டான் ஆகையால்அதுவேகட்டுவாக்கியமாகவழங்கியது.

௰௫ வது-அங்கே தப்பி இங்கேதப்பி அகப்பட்டுக்
கொண்டான் தும்முட்டிப்பட்டனென்கிறது.

ஒருவன் இராஜாவுக்குஆரூடம்சொல்லி அனேக வெகுமானங்
களைப்பெற்றுக்கொண்டுவந்தான் அதைப்பார்த்து மனம்பொறாமல்
அவன்பக்கத்து வீட்டுக்காறி தும்முட்டிப்பட்டனென்கிற தன்முட்
டாள்புருஷனைப்பார்த்து எங்கேயாகிலும்போய் ஆரூடம்கற்றுக்கொ
ண்டுவாவென்று கட்டுச்சாதங்கட்டிக்கொடுத்தாள் அந்தமூடன அதை
வாங்கிக்கொண்டுபோய் ஒருகுளத்தண்டையிலே சாப்பிட்டுப் போட்
டு அங்கிருக்கிறமரத்தினிழலிலே படுத்துக்கொண்டிருக்கையில் வளை
தோண்டிக்கொண்டிருந்த ஒரு எலியைக்கண்டு எலி வளைதோண்டக்
கண்டேனென்றும் புற்றின்மேலே மிழித்துக்கொண்டிருந்த ஒரு ஆ
ந்தையைக்கண்டு புற்றிலே ஆந்தைமிழிக்கக்கண்டேனென்றும் ஒரு
பனைமரத்தைக்கண்டு நெட்டைப்பனைமரம் நிற்கக்கண்டேனென்று

ம் ஓடிய ஒருமானைக்கண்டு மானோடக்கண்டே னென்றும் பாடம்ப
ண்ணிக்கொண்டு வீட்டிற்குப்போய் ஆரூடம் கற்றுக் கொண்டு வந்
தேனென்றான் அன்றுராத்திரி அவனும் பெண்சாதியுமாய்ப்படுக்கை
வீட்டிலிருக்கையில் திருடன்வந்து அந்தவீட்டுச்சுவரிலே கன்னம்
போட்டுக் கொண்டிருந்தான் அப்போது அவள்தன்புருஷனை நீகற்
றுக்கொண்டுவந்த ஆரூடத்தைச் சொல்லவேண்டுமென்றாள் எலிவளை
தோண்டக்கண்டேனென்றான் அதைக்கேட்கவே கன்னமிட்டுக்கொ
ண்டிருந்த திருடன் தான்தோண்டுகிறதை அவன் மறைபொருளாகச்
சொன்னானென்று திடுக்கிட்டுவிழித்தான் புறத்திலே ஆந்தைவிழிக்கக்
கண்டேனென்றான் தான் விழிக்கிறதை அவன்சொல்லுகிறானென்று
எழுந்துநின்றான் நெட்டைப் பனைமரம் நிற்கக் கண்டேனென்றான்
தானிற்கிறதை அவன்சொல்லுகிறானென்று ஓட்டப்பிடித்தான் மா
ன் ஓடக்கண்டேனென்றான் தான ஓடுகிறதை அவன்சொல்லுகிறானெ
ன்று காற்றாய்ப்பறந்தான் இதுகளைப்பார்த்துக்கொண்டிருந்த ஒரு
வனால் அந்தமுட்டாள் உள்ளது உள்ளபடி ஆரூடஞ் சொல்லுகிறவ
னென்றபெயர் பட்டணமெல்லாம்பரவிற்று அதைக்கேட்டிருந்தவ
ண்ணான் தன்கழுதைகாணாமற்போனதைக்குறித்துஆரூடங்கேட்டான்
அதற்குக் கழுதைமறைந்தால் குட்டிச்சுவர்தானென்றான் அந்தப்ப
டியே வண்ணான் ஒருகுட்டிச்சுவரை எட்டிப்பார்த்தான் அங்கிருந்து
கழுதை அகப்பட்டது அந்தசமாசாரத்தைவண்ணான்இராஜாவுக்கு
த்தெரியப்படுத்தினான் அரசன் வீட்டிலிருந்த உடைமைப்பெட்டி
யை மூக்கி என்கிறவெள்ளாட்டியும் நாக்கி என்கிறவெள்ளாட்டியும்
திருடிக் கிணற்றிலே போட்டுவிட்டு அறியாதவர்போலிருந்தார்கள்
இராஜா தன்வீட்டிற்போன திருட்டைக்குறித்து அந்தமூடஜோசிய
னை அழைத்துக்கேட்டான் எட்டுநாளையிலே பிடித்துக்கொடுக்கிறே
னென்று கெடுவுசொல்லிவந்து ஏழுநாள்மட்டும்சும்மாயிருந்து எட்
டாநாள்காலமே கெடுவு ஆய்விட்டதே இனி எனக்கு நாக்கேபோ
மோ மூக்கேபோமோவென்று சொல்லிக்கொண்டே குளக்கரையி
லே பல்விளக்கிக்கொண்டிருந்தான் திருடின இரண்டுபெண்களும்
தண்ணீருக்குவருகிறபோது அவன்சொல்லுகிறதைக்கேட்டுத்திடுக்கி
ட்டுத் தாங்கள் திருடினதைத் தெரிந்துகொண்டு தான்சொல்லுகிறா
னென்று சமீபத்திலேவந்து ஐயா உடைமைப்பெட்டியைத்திருடின
வர்கள் நாங்களே அதைக்கொண்டுவந்துகொடுத்துவிடுகிறோம் எங்
களுக்கு ஒருதண்டனையுமில்லாமல் காப்பாற்றவேண்டுமென்றுவே
ண்டிக்கொண்டார்கள் அவன் நல்லதென்று அவர்களையும் உடமை
ப்பெட்டியையும் அரசனிடத்திலேகொண்டுபோய்ச்சேர்த்துஇவர்க
ள்குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்றான் அப்படியே அரசன் மன்
னித்து ஜோசியனுக்கு வெகுமானமுஞ்செய்து சம்பளமபண்ணித்த

ன்னிடத்திலேவைத்துக்கொண்டு பிற்பாடு ஒருநாள் தானும் ஜோசியனுமாக வேடிக்கைபார்க்கப்போகிறபோது ஆற்றங்கரையிலே ஒருசின்ன தும்முட்டிக்காயைப் பறித்து ஜோசியனுக்குத்தெரியாமல் தன்கைக்குள்ளேவைத்து மூடிக்கொண்டு இது என்னவென்று கேட்டான் ஜோசியன் தான் அகப்பட்டுக்கொண்டேனென்று நினைத்து அங்கே தப்பி இங்கேதப்பி அகப்பட்டுக் கொண்டான் தும்முட்டிப் பட்டனென்றுசொன்னான் அதுகேட்டு அரசன் தும்முட்டிக்காயென்றுகண்டுபிடித்தானென்று மிகவுஞ்சந்தோஷப்பட்டு வேண்டியவெகுமதிகளைக்கொடுத்தனுப்பிவிட்டான் ஆகையால்அதுவேகட்டுவாக்கியமாகவழங்குகின்றது.

௰௬-வது உலகம்பலவிதமென்கிறது.

குதிரையைப்படைத்த ஒருகிழவன் தானேறிக்கொண்டு பன்னிரண்டுவயதுடைய தன்பிள்ளையை நடத்திக்கொண்டுபோனான் அதுகண்டவர்கள் இவன்மகாபாவி அறியாதபிள்ளையை நடத்திக்கொண்டு தான் குதிரைமேலேறிக்கொண்டு போகிறானென்றார்கள் தான் குதிரையைவிட்டிறங்கிப் பிள்ளையை ஏற்றிக்கொண்டுபோனான் அதுகண்டவர்கள் தள்ளாதகிழவனல்லவோ குதிரைமேல்யேறவேண்டும் ஓடிசரத்தக்க பையனை ஏற்றிக்கொண்டு தான்நடந்துபோகிறானே இதென்ன அனியாயமென்றார்கள் பிற்பாடுதானும் ஏறிக்கொண்டுபிள்ளையையும் ஏற்றிக்கொண்டுபோனான் அதுகண்டவர்கள் இது இவரதுசொந்தக்குதிரையேயல்லா அதினாலேதான் எப்படியாகிலும் போகட்டுமென்று இரண்டுபேராக ஏறிக்கொல்லுகிறார்களென்றார்கள் பின்பு தாங்களிரண்டுபேரும் இறங்கிக்குதிரையை நடத்திக்கொண்டுபோனார்கள் அதுகண்டவர்கள் இவர்கள் குதிரைமேற்போகும் எதிர்வாழ்ந்தவர்களல்லதோபுதிதாகப் பேடிகையிலே இரம்பை அகப்பட்டாற்போல் அகப்பட்டதென்றார்கள் அப்புறம்குதிரையினுடைய நாலுகாலையுங்கட்டித்தண்டுபோட்டு எடுத்துக்கொண்டுபோனார்கள் அதுகண்டவர்கள் இதுவரைக்கும் குதிரைமனுஷரைஎடுக்கிறது அறிவோம் மனுஷர் குதிரையை எடுத்துக்கொண்டுபோகிறது ஆச்சரியமென்று கூக்குரலிட்டுச்சிரித்தார்கள் அதுகளைக்கேட்டுக் குதிரைக்காரன் ஒருவிதத்துக்காவது சம்மதியாதபடியினாலேஉலகம்பலவிதமென்றுசொல்லிப்பின்பு தன்மனதின்படியே நடந்தான் ஆதலால் அதுவே கட்டுவாக்கியமாக வழங்குகின்றது.

௰௭-வது. பழையகறுப்பன் கறுப்பனே பழையமண்கிண்ணி
மண்கிண்ணியேயென்கிறது.

ஒருபையன் ஒருநாள் ஒருமலையின்மேலே மாடுமேய்த்துக்கொண்டிருக்கும்போது ஒருகல்லைப்புரட்டினான் அதின்மேலே ஒருதவலை நிறையவராகனிருக்கக்கண்டு பின்னையாராகிலும் அறியப்போகிறு

ர்களென்றுஎப்பொழுதும்போலவே அந்தக்கல்லை மூடிப்போட்டுமன மகிழ்ச்சியுடனே உடம்புபூரித்துக் கொண்டு சாயங்காலம் எஜமான் வீட்டுக்குமாட்டையோட்டிக்கொண்டு போகும்போது எஜமானன் அடாகறுப்பா மாடுகளையெல்லாம் வயிறுநிரம்ப மேய்த்துக் கொண்டு வந்தாயாவென்றான் இவன்கோபித்துக்கொண்டு சும்மாகறுப்பா வென்று கூப்பிடுங்கள் அடாவென்றுமரியாதைக் குறைச்சலாகக் கூப்பிடவேண்டாமென்றான் எஜமான் என்னமோ ஒரு அதிசயமிருக்கிறது அறிவோமென்று மனதிற்குள்ளே எண்ணிக்கொண்டு பேசாம லிருந்தான் மறுநாள்காலமேமாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் அந்தமலையடிவாரத்திலே மேய்த்துத்தான்கண்ட புதையலையும் இருக்கப் பார்த்துக்கொண்டு களிப்புடனே வந்தான் எஜமான் கறுப்பா மாடுகளையெல்லாம் செம்மையாக மேய்த்துக்கொண்டு வந்தையாவென்றான் அதற்கு அந்தப்பையன் கறுப்பண்ணுவென்று கூப்பிடலாகாதோவென்றான் மறுநாள்சாயங்காலம் எஜமான் கறுப்பண்ணுவென்று கூப்பிட்டான் அதுகேட்டுஇன்றுமுதலாக என்னைக்கறுப்பண்ணு பிள்ளையென் றழையுங்க ளென்றான் மறுநாள் அப்படியேகறுப்பண்ணு பிள்ளையென்றழைக்கும்போது அதென்ன எனக்குமண் கிண்ணியிலே சாப்பாடுபோடுகிறது வாழையிலையிலேபோடலாகாதோ வென்றான் அப்படியே வாழையிலையிலே போட்டு எஜமான் இதை அறியவேண்டுமென்று மறுநாள்காலமே அவன்மாடுகளை ஓட்டிக் கொண்டு போகும்போது அவனுக்குத்தெரியாமல் அவன்பிறகே தொடர்ந்துபோய்ப்புதையலைத்திறந்துபார்த்துமூடி அதின்மேலே உட்கார்ந்து ஏஞ்சிரிப்புக்கொண்டிருந்து அப்புறம்போய்விட்டான் போனபிறகு எஜமான்போய்த் திறந்துபார்த்து வராகனைக்கண்டுயிதனாலே யல்லவா இவனுக்குஇத்தனைதைரியமும்செருக்கும் உண்டாயிருந்ததென்று தெரிந்துபுதையலையெடுத்துக்கொண்டுபோயத்தன் வீட்டில்வைத்துக் கொண்டு கறுப்பனுக்கு மரியாதையாகச் சாப்பாடு விசாரித்தான் மறுநாள் கறுப்பன் புதையலைக் காணாமையினாலே ஏக்கப்பிடித்து ஒன்றுந்தோன்றாமல் வியசனத்துடனே சாயங்காலம் மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குவந்து அசதியாகப்படுத்துக்கொண்டிருந்தான். எஜமான் கறுப்பண்ணுபிள்ளையவர்களே இன்றைக்குவெள்ளிக் கிண்ணி வைத்திருக்குது சாப்பிடவாருமென்று அதிகமரியாதையாக அழைத்தான் அப்போதுபழையகறுப்பன் கறுப்பனேபழைய மண்கிண்ணி மண்கிண்ணியே யென்றான் ஆதலால் அதுவேகட்டுவாக்கியமாகவழங்கியது.

கட்டுவாக்கியகதை.

முற்றிற்றுமுற்றும்.

அத்தியாயம்-௬௫-கதைகள்.௱௰௪.

உ

ஏழாமத்தியாயம்.

# மூடர் கதைகள்.

முதலாவது

## சாதத்துக்கல்லைச்சாமியென்றது.

### க-வது சாதத்துக்கல்லைச்சாமியென்றது.

இரண்டுபேர் மூடர்கள்ஒரு ஆலயத்திலே சிவதரிசனம் பண்ணப்போனவிடத்தில் மைத்துனா சுவாமிசுவாமி என்கிறார்களே இதுதானேசுவாமிகல்லாச்சுதே யென்றான் கோவிலதிகாரி அதைக்கேட்டுச் சுவாமியை நிந்திக்கிறாயாவென்று நன்றாக அடித்துத் துரத்தி விட்டான் அதைப்பட்டுக்கொண்டு மைத்துனனுந்தானுமாகஒரு வீட்டிலேபோய்ச்சாப்பிட்டார்கள் அந்தச்சாப்பாட்டிலே கல்லிருப் பதைக்கண்டு மைத்துனாசாதத்திலே கல்லிருக்குதென்றான் முன்னடிபட்டவன் அதைக்கேட்டுக்கோபித்துக்கொண்டு அடாபுத்திகெட்டவனே கல்லென்றுசொல்லாதே இப்போதுநான் அடிபட்டதைப்பார்க்கவில்லையா சின்னசுவாமி யென்றுசொல்லடாவென்று கைகொண்ட மட்டுக்கும் இரண்டறைகொடுத்தான் இரண்டறையும் நன்றாகப் பட்டபடியால் இனிமேலிப்படி சொல்லமாட்டேனென்றான்.

### உ-வது. கோலடித்தழும்பாற்கொழுக்கட்டையறிந்தது.

ஒருமூடன்மாமியார் வீட்டுக்குப்போனான் மாமியார்வெல்லமிட்டகொழுக்கட்டைசுட்டுக்கொடுத்தாள் சாப்பிட்டவுடனே இதென்னவென்றுகேட்டான் கொழுக்கட்டையென்றாள் தன்வீட்டிலேபோனவுடனே அதைப்பண்ணச்சொல்லிச் சாப்பிடவேண்டுமென்கிறஇச்சையினாலே அதின்பேர்மறந்துபோகாம விருப்பதற்குக் கொழுக்கட்டை யென்றுசொல்லிக் கொண்டேவந்தான் வழியிலே ஒருவாய்க்கால்நிறையத் தண்ணீர்வருகிறதைக்கண்டு ஒருவழிப்போக்கன் அத்தேரிபாச்சாவென்று பெழும்பித்தாண்டினான் அதைப்பார்த்துத்தானும் அத்தேரிபாச்சாவென்று எழும்பித்தாண்டும்போது கொழுக்கட்டையைமறந்துபோய் அத்தேரிபாச்சா வென்றுபேர் மாறாட்டமாகச்சொல்லிக்கொண்டுவீடுவந்துசேர்ந்து பெண்சாதியை அழைத்து அத்தேரிபாச்சாசுட்டுக்கொடென்றான் அதுயெனக்குத் தெரியாதென்றாள் உன்தாயார்சுட்டுக்கொடுத்த அத்தேரிபாச்சாஉனக்குத் தெரியாதா பொய்சொல்லுகிறாயாவென்றுஒருகோலாலே கை சலிக்க அடித்தான் அவள் அந்த அடியைப்பார்த்து இவன்பல்லுக்கருக் அடித்

தவடி கொழுக்கட்டைபோல உடம்பெல்லாம் எழும்பியதுகளோவெ
ன்று அழுதாள் இப்போது நீ சொன்னதைத்தானடி சுட்டுக்கொடுக்
கச்சொன்னேனென்றான் அதுகேட்டு அவள் அவன்மூடத்தனத்துக்
காக இரங்கி அப்படியேசெய்தாள்.

௫-வது. அரிவாள் சூட்டைப்போலக்காய்ச்சல்
தணிக்கப்போனது.

ஒருமூடன் நெல்லறுக்கப்போய் அறுப்புவிட்டவுடனே குளத்
துப்படியில் அரிவாளைவைத்துப்போட்டுத் தான் இறங்கிக்குளித்தா
னவுடனே அந்த அரிவாளையெடுத்து வெயிலிலேகாய்ந்திருந்தபடியி
னாலே அந்தசூடு கைபொறாமல் கீழேபோட்டான் அதுதண்ணீரிலே
விழுந்தது அதைத்தடவியெடுக்கும்போது சில்லென்று இருப்பதை
க்குறித்துசந்தோஷிப்பட்டு ஒருவருக்குந் தெரியாத காரியந்தனக்
குத்தெரிந்ததாக எண்ணிக்கொண்டு ஆறுமாதமாக விடாத காய்ச்ச
லுடனே கிடையாய்க்கிடக்குற தன்தாயாரைத்தண்ணீரிலே முழுகப்
பண்ணினால் அரிவாளிலிருந்தகாய்ச்சல் போய்விட்டதுபோலத் தன்
தாயாருக்குங்காய்ச்சல் போய்விடுமென்று தன்தாயாரை யெடுத்துக்
கொண்டுவந்து குளத்துத்தண்ணீரிலே உட்காரவைக்கப்போனான் அ
க்கம்பக்கத்திலுள்ளவர்கள் அதென்னடாபித்தாவென்றார்கள் அரிவா
ளிலே தான் கண்ட அனுபவத்தைச்சொல்லி இப்படியே யென்
தாயாருக்குக்காய்ச்சல் சூட்டைப்போக்கடிக்கப்போகிறேனென்றான்
அவர்கள் பரிகாசம்செய்து விலக்கினார்கள்.

௬-வது குருவுக்குப்பசுவாங்கிக்கொடுத்தது.

சில மூடர்கள் தங்கள்குருவுக்கு பசுவாங்கிக்கொடுக்கவேண்டு
மென்று ஆலோசித்துக்கொண்டு ஒருமந்தை யிடத்துக்குப்போய் இ
டையனைக்கண்டு எங்கள்குருவுக்குப்பசுவேண்டும் அகப்படுமா வென்
றார்கள் அந்தஇடையன் இவர்களுடைய நிர்வாகத்தைத் தெரிந்துக்
கொண்டு தன்வீட்டிலிருக்கிற உதைகாலிப்பசுவை இவர்க ளிடத்தி
லேவிற்கலாமென்று யோசித்துக்கொண்டு எம்மந்தையிலே ஒருபசு
சனைபிடித்துமேனியிட்டிருக்கிறதுநீங்கள் குருவுக்கென்று கேட்கிற
படியினாலேஎவ்வளவுவிலைகொடுப்பீர்களென்றான் ஐந்துவராகன் தான்
கொண்டுவந்தோம் அதைவாங்கிக்கொண்டுகொடுக்கவேண்டுமென்றா
ர்கள் அதைவாங்கிக் கொண்டு பசுவைக்கொடுத்து நீங்கள் கறக்கும்
போது காலையணைந்து கொம்பைப்பிடித்துக் கறவுங்க ளென்றுசொ
ன்னான் அப்படியே அவர்கள் குருக்கள்வீட்டிற்குக்கொண்டுபோய்க்
கட்டி ஒருவன்குடுவையை யெடுத்துக்கொண்டுவந்தான ஒருவன் கா
லையணைபசொன்னான் மற்றொருவன் கையிலெடுத்துக்கொண்டுவர
நேரஞ்சொல்லுங் குருக்களை அழைபடாவென்றான் குருக்கள் சீக்கிர
மாகஎழுந்துவந்தார் அவரைப்பசுவின்கிட்டஉட்காரச்சொல்லி அவ

லையிலிருக்கிற இரண்டுநெறிஞ்சடைகளாலே காலைப்பிணைந்து கறந்தான் அப்போது பசுவுலைத்துக்கொண்டது பின்னையொருவன் இடையன் கொம்பைப்பிடித்துக் கறக்கச்சொன்னானேயென்று ஞாபகப்படுத்தினான் மற்றொருவன் சக்கிலியை ஊதுகொம்பையெடுத்துக்கொண்டுவந்து பசுவின் முன்னே பிடிக்கச்சொன்னான் அவன் அப்படியே பூ பூ வென்று பிடித்தான் பசுவு கொடுமையான படியால், வெருண்டு கட்டுத்தறியைப் பிடுங்கிக்கொண்டு இரண்டு மூன்று பேரைப் பார்த்துவிட்டுக் குருக்களை முள்ளிலுங்கல்லிலும் இழுத்துக்கொண்டுபோய்ப்போட்டுவிட்டது குருக்கள் பிழைத்ததே மறுபிறப்பாச்சுது-

௫-வது, மத்தளத்தைக் கிழித்தது,

இரண்டுபேர் மூடர்கள் சுவாமிக்குத் தீபாராதனைகாலத்திலே மத்தளம் அடிக்கிறதைப்பார்த்து அவர்களிலே ஒருவன் மைத்துனா இதற்குள்ளே ஆளில்லாமல் இப்படிபேசமாட்டாதென்றான் ஆம் எனக்குமப்படியே தோன்றுகின்றது சோதிப்போமென்றான் தீபாராதனையானபின்பு தூணிற்கட்டியிருக்கிற மத்தளத்தண்டையில் இரண்டுபக்கத்திலும் இரண்டுபேர் நின்றுகொண்டு மைத்துனா இந்தப்பக்கத்திலே துவாரம்பண்ணி நான்கையைப்போடுகிறேன் அந்தப்பக்கத்திலே துவாரம்பண்ணி நீகையைப்போடு உள்ளேயிருக்கிறவனை விடாமற்பிடிப்போமென்றுசொன்னான் அதன்பின்பு அப்படியேமுதற்சொன்னவன் மத்தளத்தினொருபக்கத்துத் தோலைக்கிழித்து உள்ளே கையை நுழைத்தான் மற்றொருவன் மற்றொருபக்கத்திலே கையைநுழைத்து முன்னே நுழைத்தவன் கையைபிடித்துக்கொண்டு அகப்பட்டுக்கொண்டான் விடாதேயென்றான் இப்படியாகயிருவரும் ஒருவர்கையை ஒருவர்பிடித்துக்கொண்டு நிற்கிறபோது கோவிலதிகாரிகண்டு அவர்கள் சந்தேகத்தைக்கேட்டுநிவர்த்திசெய்து நன்றாயடித்து அவர்களிடத்திலிருந்த பத்துவராகனையும் அபராதமாகவாங்கிக்கொண்டு துரத்திவிட்டான் அவர்கள் ஓடும்போது பத்துவராகன் தெண்டம் இறுத்தாலுமிறுத்தோம் பாரிசந்தேகம்நிவர்த்தியாச்சுதென்று சொல்லிக்கொண்டு போனார்கள்.

மூடர்கதைமுற்றிற்றுமுற்றும்.

அத்தியாயம் ௭-கதைகள்-௱௰௧,

கடவுள் துணை.

எட்டாமத்தியாயம்.

## யுக்திவார்த்தைகள்

௧-வது-பாவாயே யாவுரா தெலுங்கிலே மைத்துனா எந்தப்பசுவடா வென்று பொருள்கொண்ட இந்தவாக்கியத்தை ஐந்துசொல்லாக்கு

ம்போது முறையே-கன்னடம்-தமிழ் - மராஷ்டகம் - இந்துஸ்தான் தெலுங்கு என்கிற ஐந்திலும் வாவென்னும் பொருளைத் தருதல் காண்க.

௨-வது - அவ்வதிகாரி உன்னை யடிக்கச் சொன்னானா என்னையடிக்கச்சொன்னானா இவ்விரண்டுவினாக்களுள் கேட்டோன் எந்தவினாவிற்கு உத்தரவுசொன்னாலும் அந்த உத்தரவைத் தானடிக்கும்படி செய்வதாக்குதல்காண்க.

௩-வது-சகோதரராகிய இரண்டு இராஜகுமாரர்களில் மூத்தவர் களை தடியையும் இளையவர் அம்பையும் தூரவிழச்செலுத்தினவனே வல்லவனென்று ஒருவித்துவானை மத்தியஸ்தனாக வைத்துக்கொண்டு செலுத்தினபொழுது அம்புயெள்ளளவு அதிகமாகவிழுந்தது அவ்விருவரும எது அதிகமாகவிழுந்ததென்றுகேட்டதற்குவித்துவான் அவ்விருவருக்கும் சந்தோஷமாகவிருக்கும்படிக்கு வளைதடிக்கம்பதிகமென்றான் அது வளைதடியாகிய கம்பு அதிகமென்றும் வளைதடிக்கு அம்பு அதிகமென்றும் பொருள்படுதல்காண்க.

௪-வது) வெண்பா பாடுகிற ஒருகைக்குளவித்துவானை ஒரு கருமாரவித்துவான்பார்த்து வெண்பா நன்று யிசைப்பீரோ யென்றான் அதற்கு அவன் இவனைப்பார்த்து ஆம் இசைப்பேன் வாருமிரும்படியமென்றான் இதில் சாதித்தொழிலைச்சிலேஷையாகக்காட்டி ஒருவனை யொருவ னிகழ்ந்தது காண்க.

௫-வது - ஒருவித்துவான் தன் மூத்தபெண்சாதி திவசத்துக்குச் சிலசாமான் மூட்டையைத் தலைமே லெடுத்துக்கொண்டு போனான் அப்போது ஒருபாக்கியவான்கண்டு இப்படிசுமையெடுக்கும்படிக்குக்காரணம என்னவென்றான் அதற்கு வித்துவான் தலைவிதிவசமென்றான் அது தலைவிக்குத் திவசமமென்றும்தலையின் விதிவசமென்றும் பொருள்படுதலால் மகிழ்ந்து அந்தப்பிரபு அனேகமவெகுமதிகள் செய்தான்.

௬-வது-எட்டப்ப னென்கிற ஒருபிரபு தன்னை அடுத்திருந்த ஒரு வித்துவான் மரணாவஸ்தையை அடைந்திருக்கும்போது பார்க்கப் போனான் அந்தத் தருணத்திலே அந்தவித்துவானுக்கு வாயிலேபால்வார்க்க அது உள்ளுக்குப்போகாமல வெளியிலேவழிந்துபோகையால் ஒருகசக்காதசீலையினாலே துடைத்துக்கொண்டிருந்தார்கள் அந்தப்பிரபுகண்டு துன்பத்துடனே உமக்குப்பாலுங்கசந்துபோகின்ற காலம்வந்ததாவென்றான் அதற்கு வித்துவான் பாலுங் கசக்கவில்லை பாலைத்துடைக்குஞ் சீலையுங்கசக்கவில்லையென்றான் அதுகேட்டு அந்த

ப்பிரபு தன் உத்தரீயத்தினாலே துடைத்தான் அப்போது அந்தவித்துவான்மகன்வந்து அப்பாபோய்விடுகிறாயே எனக்கெப்படியென்றான் நான்ஒரப்பன்போனால் உனக்கு எட்டப்பனிருக்கவில்லையாவென்றான் அந்தப்பிரபுசந்தோஷிப்பட்டு அப்படியேஅவன்குடும்பத்தைக்காப்பாற்றினான்.

௭-வது-ஒரு அரசன் காரைக்காட்டுவழியிலேபோகும்போது ஒரு பெரிய உத்தியோகஸ்தனாகிய இடையன் தனக்குவிரோதியாகக்கூடவருகிற ஒருகாரைக்காட்டுவெள்ளாழனைக்குறித்து அரசனுடனேகாரையை வெட்டிக் கருணைபோட்டால்நன்றாகப்பயிராகுமென்றான் அதற்குஅந்தவெள்ளாழன் அரசனைப்பார்த்துச்சுவாமிஅப்படிசெய்தால் இடைஒருகாசுபெறாதென்றான் இப்படிஒருவனையொருவன்ஜாதியைக்குறிப்பாகக்காட்டி இகழ்ந்தமையை அரசன் அறிந்துகொண்டான்

௮-வது-ஒருவன் என்னொருகைக்குள்ளடங்கியது எவ்வளவு மண்ணென்று வினவி அதுகேட்டவன் எண்ணலளவைக்கொண்டுமயங்கக்கண்டு பிடிமண்ணென்று சொல்லென்றான்

வெகுஜனங்கள் கூடியிருக்கின்ற ஒருமகாசபையில் பிரயோசனகாலத்தில் கெந்தம் புஷ்பம்தாம்பூலமுதலியவைகள் வழங்கிவரும்போது எஜமானனவர் எழுந்து மகாஜெனங்களைப்பார்த்து முடியத்தாம்பூலம்வந்ததாவென்றுகேட்டார் அதில்ஒருவித்துவான் உட்கார்ந்துகொண்டிருந்தவர் எழுந்துநின்று கையிலிருந்தசொற்பதாம்பூலத்தை பிரபுகையில்கொடுத்து முடியவல்லை முடியவல்லையென்று கூப்பிட்டான் அந்தச்சாடையைப் பிரபுசூசனையால்அறிந்து பின்னையும்விசேஷமாய்க்கொண்டுவரச்சொல்லி அவருடையஉருமாலைக்குட்டையில்போட்டுக்கொடுத்தார் அதை அந்தவித்துவான் சேர்த்துமுடிஞ்சுக்கொண்டுமூட்டையைத் தூக்கிக்காட்டி யிப்போமுடியவந்தது இப்போமுடியவந்தது யென்று கெட்டியாகச் சொன்னான் யெல்லாரும் அதற்கு சந்தோஷிப்பட்டுமனமகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒருகச்சேரியில் ஒருஉத்தியோகஸ்தனாகிய நீயோகிப்பார்ப்பான் இராமையவாருகாமையவாருமென்று தங்களவர்கள் பேர்களையெல்லாம் பெருமையாகச்சொல்லிக்கொண்டிருந்தான் அதைக்கேட்டமற்றொரு உத்தியோகஸ்தனாகிய இடையன் இத்தனைவாருங்கூடி ஒருசெருப்பாமாவென்றான் அதற்குஅவன் பிள்ளைவாறில்லாமலாகாதென்றான் இதில்ஒருவனையொருவன்குறிப்பாகஇகழ்ந்தமைகாண்க.

ஒருராஜாவிடத்தில் எண்ணாயிரத்தாரிற்சேர்ந்த ஒரு பார்ப்பான் நான் உயர்வென்றான் ஆறாயிரத்தாரிற்சேர்ந்த மற்றொருபார்ப்பான்

நானே உயர்வென்றான் அரசனெப்படியென்று வினவ எண்ணாயிரமவராகனை ஒருதட்டிலும் ஆறாயிரம் வராகனை மற்றொரு தட்டிலும் வைத்துநிறுத்து ஆறாயிரத்தட்டு உயர்ந்ததைக்காட்டி இப்படியே நான்உயர்வென்றான்.

### குள்ளநரியுங் காக்கையும்.

ஒருகாக்கை தன்னுடைய தள்ளாத வொரு பால்கட்டித் துணிக்கையையெடுத்துக்கொண்டு உயர்ந்த வொருமரத்தின்மேலேறினது அதைப்பார்த்து இந்தத் திருட்டுக்காக்கையை மோசஞ்செய்ய இச்சித்த வொருகுள்ளநரிக்குட்டியானது இளமையாயிருந்துங் கெட்டதிருடனையுத்தான்செய்திருக்கத்தக்க தந்திரங்களைப்பார்க்கிலும் அதிகமான பொல்லாததந்திரங்களை யறிந்துக்கொண்டிருந்தது ஆனதால் அந்தக்காக்கையோடுபேசினதாவது எனக்குமிகவும் அன்பான பெண்ணே நீகரியைப்போலக் கறுத்திருக்கிறாயென்று மனிதருன்னைக்குறித்துப்படிப் பொய்சொல்லுகிறதுஎன்னவெட்கமாயிருக்கின்றது அதுவுன்னுடையமிருதுவான இறகுகள் பனிக்கட்டியைப்போலிருக்கிறதை இப்பொழுதென் கண்களினாற்பார்க்கிறேன் நீகரியைப்போற் கறுத்திருக்கிறாயென்றுசொல்லுகின்றமனிதர்களெல்லாம் பிறவிக்குருடர்களென்றெண்ணும்நினைக்கவேண்டும் அம்மம்மா நீஎன்னரூபத்தையுடைத்தாயிருக்கிறாய் எவனும்உன்னைக்கண்டமாத்திரத்திலேயுன்னிடத்தில்மோகங்கொள்ளாமலிருக்கமாட்டானென்று என்னிருதயத்திலெண்ணுகிறேன் உனக்கொருதெளிவானதொனியிருந்தால் நீயொரு நல்லபாட்டுப்பாடுவாயென்றுநானிச்செயித்துக்கொண்டிருக்கிறேன் அப்படியேபாடமாட்டுவாயாகில் உனக்கு நிகரென்றுசொல்லத் துணிதற்கு ஆகாசப்பறவைகளிலே ஒன்றுமிராதென்று சொல்லினது காக்கையானது ஒருபயித்தியமபிடித்ததுபோலக் குள்ளநரிசொன்னதையெல்லாம் நிசமென்றெண்ணிக்கொண்டு தன் குரலைக்காட்ட விரும்பினது ஆனாலந்தப்படிக்கூப்பிட்டமாத்திரத்திலே அந்தப்பால்கட்டி கீழேவிழ அதைக்குள்ள நரி தன்னுலானவிளைவிலேகவ்வியெடுத்துக் கொண்டு வேகமாயோடிப்போய் காக்கையினுடைய அறிவின்மையைக் குறித்துப் பரியாசப்பண்ணினது.

தேங்காய்க்காய்க்குநெல்விமரம் ஒருகொப்பு ஐங்குறுணிகாய்க்கும் நெல்விமரமென்றான்.

சாசாடாடாவவ நீகொண்டுவந்தகாய் தாதாயிருசாயிருடா இருநாழிநீகொண்டுவந்தகாய் பெரிதா சிறிதா வனவரும்.

குகுகுதககசகுதக்குச்செட்டிமகள் அஅஅஅஅஅஅஅஅஅக்கு ஆசைப்பட்டாள் முமுமுமுமுமுமுமுமுமு மூன்று பணி.

செசெசெசெசெசெசெசெசெசெட் கட்டியனுப்பு,
ரூப்பத்துச்செட்டிமகள் அப்பத்துக்காசைப்பட்டாள் முப்பத்து
மூன்றுபணியாரஞ்செப்பத்துட்கட்டியனுப்பு,

யுக்திவார்த்தையுந் தந்திரமும் முற்றிற்று.

தூணடரவிடடைவாகக்கட்டினன் காச்சடுபோடடிமிரகை- அய
ஓாாராறுபேராரார்கலவரகளபதரளவாதே உரலேமதகில வலவரது
ஆடடரக்காடடராது ளைவாசித்துக்காண்க.

மலைவுவாக்கியம்- முற்றிற்று.

---

விடுகதைகள்

குசவன்பண்ணாதபாண்டம்-வண்ணான்வெளுக்காதவெள்ளை-மழை
பெய்யாததண்ணீர்-தேங்காய்,

அண்ணனுக்கெட்டாது தம்பிக்கெட்டும், மேழுதடு-

பச்சைபச்சென்றிருக்கிறது பாவக்காயுமல்ல பக்கமெல்லா முள்
ளாயிருக்கிறது பெலாக்காயுமல்ல உள்ளேவெளுத்திருக்கிறது தேங்கா
யுமல்லஉருக்கினால்நெய்வடியும் நெய்யுமல்ல ஆமணக்காய்,

உமியைப்போலமலரும் சிமிழைப்போலக்காய்க்கும் நெல்லிமரம்

காயுங்கோணற்காய் கொள்ளடாமைத்துனா கதையும்விடுவித்தேன்
சொல்லடாமைத்துனா, கொள்ளுக்காய்,

விடுகதைமுற்றிற்று முற்றும்

---

கதாசிந்தாமணி

ஆக-அத்தியாயம்-௰௨ஞ-கதைகள்.௱௪௰௨;